
# 135 ஆவது ஆண்டு நிறைவு

# சிறப்பு மலர்




## 1876 - 2011

## யா / விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

## யா/ விக்ரோறியாக் கல்லூரி
## சுழிபுரம்

# 135ஆவது ஆண்டு நிறைவு
# சிறப்பு மலர்

# 1876 - 2011

# MOTTO

"MANNERS MAKYTH THE MAN"

# VISION

Producing good citizens, conserving our cultural traditional ethics; Understanding the scientific and technological changes of the modern world.

# தூரநோக்கு

மாறிவரும் நவீன உலகின் அறிவியல், தொழிநுட்ப மாற்றங்களைப் புரிந்து, எமது பாரம்பரிய விழுமியங்களைப் பாதுகாத்துப் பேணக்கூடிய நற்பிரஜைகளை உருவாக்குதல்.

# MISSION

Producing good citizens to our nation adapting the modern methods of learning and teaching finding the capability of the students by enhancing their proficiency who could obtain better profession, protecting our social, cultural and traditional ethics.

# பணிக்கூற்று

நவீன கற்றல் கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்தி, மாணவர் திறன்களை இனம்கண்டு அவர்களின் தேர்ச்சி மட்டத்தை உணர்த்துவதனூடாகச் சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய திறமைமிக்க, எமது சமூக கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் அவற்றின் சிறப்புக்களையும் பேணிப் பாதுகாக்கக்கூடிய நற்பிரஜைகளை எமது பிரதேசத்திற்கும், நாட்டுக்கும் வழங்குதல்.

“அவன் அருளாலே அவன் தாள் வணங்கி”



கல்லூரியின் றிச்வே மண்டபத்தில் வீற்றிருந்து அருள் சுரக்கும்

## சிவகாமி சமேத நடேசப் பெருமான்

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராடும் வதனமெனத்
திகழ் பரதக் கண்டமதில்
தக்க சிறு பிறை நுதலும்
தரித்த நறுந் திலகமுமே
எக்கணமும் அதிற் சிறந்த
திராவிட நற் திரு நாடும்
அத்திலக வாசைன போல்
அனைத்துலகும் இன்பமுற
எத் திசையும் புகழ் மணக்க
இருந்த பெரும் தமிழ் அணங்கே
பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்து துடைக்கினுமோர
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்த படி இருப்பது போல்
கன்னடமுங் களி தெலுங்கும்
கவின் மலையாளமும் துளுவும்
உள்ளுதரத் துதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக்
கழித்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துமே.

# எங்கள் அதிபர்



வரதராஜ சர்மா ஸ்ரீகாந்தன்

# பாடசாலை தொடர்பான விபரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | பாடசாலையின் பெயர் : | யா/ விக்ரோறியாக் கல்லூரி |
| 2. | பாடசாலை ஸ்தாபித்த ஆண்டு : | 1876 |
| 3. | பாடசாலையின் ஸ்தாபகர் : | அமரர். நிச்சிங்கம் கனகரத்தினம் முதலியார் |
| 4. | பாடசாலையின் முதலாவது முகாமையாளர் : | அமரர் கனகரத்தினம் முதலியார் செல்லப்பா |
| 5. | பாடசாலையின் முதலாவது அதிபர் : | Prof.J.Willoughby Small ஆங்கிலேயர் (இங்கிலாந்து) |
| 6. | பாடசாலையின் தற்போதைய அதிபர் : | திரு. வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் |
| 7. | அரச பாடசாலையாக மாற்றப்பட்ட ஆண்டு : | 1892 |
| 8. | முகவரி : | பிரதான வீதி, சுழிபுரம். |
| 9. | கிராம உத்தியோகத்தர் பிரிவு : | J/173 சுழிபுரம் மத்தி |
| 10. | மாகாணம் : | வடக்கு |
| 11. | நிர்வாக மாவட்டம் : | யாழ்ப்பாணம் |
| 12. | தேர்தல் தொகுதி : | வட்டுக்கோட்டை இல 80 |
| 13. | பிரதேச செயலாளர் பிரிவு : | வலிகாமம் மேற்கு |
| 14. | கல்வி வலயம் : | வலிகாமம் |
| 15. | கோட்டம்: | சங்கானை |
| 16. | இணையத்தள முகவரி: | www.victoriacoll.sch.lk |
| 17. | மின்னஞ்சல் முகவரி: | victoriacollege@yahoo.com |
| 18. | தொலைபேசி இலக்கம்: | 021 225 0170 / 021 321 3553 |
| 19. | தொலை நகல் இலக்கம்: | 021 225 0170 |
| 20. | பாடசாலை இலக்கம்: | 1011002 |
| 21. | பாசாலை தொகைமதிப்பு இலக்கம் : | 09066 |
| 22. | பாடசாலை பரீட்சை இலக்கம் : | 11424 |
| 23. | பாடசாலையின் தற்போதைய தரம் : | 1AB |
| | | 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் இரண்டாம் நிலைக் கல்விக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை |
| 24. | பாடசாலையின் போதனா மொழி : | தமிழும் ஆங்கிலமும் |
| 25. | தற்போதைய மாணவர் எண்ணிக்கை : | 1184 |

26. தற்போதுள்ள வகுப்புகளும் பிரிவுகளும் :

| | | |
|---|---|---|
| தரம் 6 | பிரிவுகள் 5 | |
| தரம் 7 | பிரிவுகள் 5 | |
| தரம் 8 | பிரிவுகள் 4 | |
| தரம் 9 | பிரிவுகள் 4 | |
| தரம் 10 | பிரிவுகள் 4 | |
| தரம் 11 | பிரிவுகள் 4 | |
| தரம் 12 | பிரிவுகள் | விஞ்ஞானம் 1 |
| | | வர்த்தகம் 1 |
| | | கலை 1 |
| தரம் 13 | பிரிவுகள் | விஞ்ஞானம் 1 |
| | | வர்த்தகம் 1 |
| | | கலை 1 |


27. தற்போதுள்ள ஆசிரியர் எண்ணிக்கை : ஆண்கள் 14, பெண்கள் 37 மொத்தம் 51

28. அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை : 56

29. கல்விசாரா அலுவலர்களின் எண்ணிக்கை : 06


30. அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா அலுவலர்களின் எண்ணிக்கை : 11

## எங்கள் பிரதி அதிபர்



இளையதம்பி கைலைவாசன்

## எங்கள் உதவி அதிபர்



செல்லையா சிவகுமாரன்

# எங்கள் பிரிவுத் தலைவர்கள்



அரியமலர் சற்குணசிங்கம்



இந்திரா தவநாயகம்



நாராயணபிள்ளை திருக்குமாரன்



திருநாவுக்கரசு சிவயோகலிங்கம்



**பாடசாலை அபிவிருத்திக் குழுவின்**
**வலயக்கல்வி அலுவலகப் பிரதிநிதி**
**திரு.இ. தமிழ்மாறன் அவர்கள்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

# மலர்க்குழு

தலைவர்

திரு. வ. ஸ்ரீகாந்தன் (அதிபர்)

உறுப்பினர்கள்

திரு. இ. கைலைவாசன் (பிரதி அதிபர்)

திரு. செ. சிவகுமாரன் (உதவி அதிபர்)

திருமதி இ. தவநாயகம் (பிரிவுத்தலைவர்)

திருமதி செ. தேவராஜா

திரு. ஆ. பிரபாகரன்

செல்வி பூ. ஜெயமலர்

திருமதி சி. கண்ணதாசன்

# மலர்க்குழு அறிக்கை

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண் விடல்"**

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலில், புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்று முழங்கினான் புதுயுகக் கவிஞன் பாரதி. அவன் பிறப்பதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே இம்மண்ணில் நிறுவப்பட்டதுதான் எமது விக்ரோறியாக் கல்லூரி.

தனிமனிதனின் முயற்சியில் தோன்றித் தழைத்தோங்கி வலிமேற்கில் தன்னிகரற்ற பெரு நிறுவனமாக, வளமும் வனப்பும் ஒருங்கேபெற்றுத் திகழ்கின்றது எமது கல்லூரி.

ஆவணப்படுத்தல்களற்று வரலாறுகளைத் தொலைத்து விட்டுத் தொன்மைப்புகழ் இழந்துவிட்ட ஏக்கப்பெருமூச்சுடன் வாழும் நிலையில் தமிழினம் உள்ளது. ஆனால் தகவற்பரிவர்த்தனையும், ஆவணப்படுத்தல்களும் நவீனமயப்படுத்தப்பட்டு வளர்ச்சி கண்ட இன்றைய நிலையில் எமது கல்லூரியின் 135ஆவது ஆண்டு நிறைவில் இத்தகைய மலர் ஒன்றை வெளியிடுவது அவசியமானதொன்றே.

இக்கல்லூரியின் முதலாவது மலர் 125ஆம் ஆண்டு நிறைவில் வெளியிடப்பட்டது. அம்மலரில் 2001ஆம் ஆண்டுக்கு முந்திய பல பதிவுகள் பொறிக்கப்பட்டன. அதனால் இம்மலரில் அதற்குப்பிந்திய சாதனைகளும், அச்சாதனையாளர்களின் அனுபவப்பகிர்வுகளும் இடம்பெறுகின்றன. குறிப்பாக இக்காலத்தில் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற திருமதி.அ.வேலுப்பிள்ளை அவர்களின் அனுபவப்பகிர்வுகளும், அறுவடைகளும் இடம்பெறுவது முக்கியமாகும். அத்தோடு மாணவர்களின் பாடவிதானங்களோடு ஒன்றிய பல ஆக்கங்களும், கற்பனைகளின் வெளிப்பாடும் இடம்பெறுகிறது.

"கல்லூரி எனக்கென்ன செய்தது என்று கேட்காது எனது கல்லூரிக்கு நான் என்ன செய்தேன்?" என்ற வினாவுக்கு இதுபோன்ற முயற்சிகள் பதிலிறுக்கும் என்பது வரலாற்றுண்மை. இவ்வுண்மையை வெளிப்படுத்துவதான நற்பயனைத் தருவதே இதுபோன்ற நூல் வெளியீடுகள்.

அந்த வகையில் இம்மலர் வெற்றிகரமாக வெளிவருகின்றதென்றால் அதற்கான ஆக்கங்கள் முக்கியமானதாகும். அவ்வாக்கங்களைத் தந்துதவிய அறிஞர்கள், வாழ்த்துச்

செய்திகள் வழங்கிக் கௌரவித்த தகவோர், தமது அனுபவங்களையும் உள்ளார்ந்த பற்றினையும் வழங்கிய முன்னாள் அதிபர், மற்றும் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இவ்வாக்கங்களையும், வரலாற்றுப்பதிவுகளையும், சாதனைகளையும் ஒழுங்கமைத்து உதவிய மலர்க்குழு அங்கத்தவர்களுக்கும், இந்நூலை வடிவமைத்துத் தந்த அன்ரா நிறுவனத்தார்க்கும், விளம்பரங்களை வழங்கிய நிறுவனத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மாறிக்கொண்டிருக்கும் உலகத்தோடு நாமும் ஒட்ட ஒழுகுகின்றோமா இல்லையா என்பதை உணர்த்துவன இத்தகைய நூல்களே. பிறந்து – வாழ்ந்து – மடியும் – மனிதன் இறவா வரம்பெறுவது தன் படைப்பாற்றலால் படைக்கும் சாதனைகள் மூலமே. அவ்வாறானதொரு நிகழ்கால சமூகத்தை எதிர்காலத்துக்கு எடுத்துக்கூறும் பணியைச் செய்தமையையிட்டு இம்மலர்குழு மிகவும் பெருமைப்படுகின்றது.

மலர்க்குழு

# அதிபர் தரும் கருத்துக்கள்

விக்ரோறியா அன்னையின் புதல்வன் என மார்தட்டிக் கூறும் ஆயிரக் கணக்கானவர்களில் நானும் ஒருவன். கற்பித்தல் பணியிலும் அன்னை மடியில் பத்தாண்டுகள் கழித்தேன். நிறைவுக்காலத்தில் அன்னை மீண்டும் அணைத்தாள். கல்லூரியில் வீற்றிருக்கும் சிவகாமி சமேத நடேசப் பெருமானைப் பணிந்து அன்னைக்கு என் நன்றிகள்.

135வருடங்கள் என்பது ஒரு நிறுவனத்திற்கு பெருவிருட்சமாக வளர்ந்திருக்கும் காலமாகும். இலங்கையின் வடபால் அமைந்த பெரும் கல்விச்சாலைகளில் விக்ரோறியாக் கல்லூரியும் ஒன்றாகும். இங்கு கற்க, கல்வி கற்பிக்க, அதிபர் கடமை செய்ய வாய்ப்புக் கிடைத்தவர்கள் பாக்கியவான்கள்.

135வருட நிறைவைக் குறிக்குமுகமாக மலர் ஒன்றினை வெளியிட மனம் கொண்ட போது மகிழ்வுடன் ஆதரித்தோர் அனேகம் பேர். மலர்குழுவுடன் இணைந்து ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பல தரப்பட்டவர்களின் அன்பும் ஆதரவும் ஒன்று சேர்ந்ததன் மூலமாக மலர் மலர்ந்தது.


ஒரு பாடசாலையின் வரலாற்றுப்படிகளை எடுத்துக் காட்டும் பதிவுகள் காலத்திற்குக் காலம் எழுதப்பட வேண்டும். அதனூடாக எதிர்காலச் சந்ததியினர் எத்தனையோ விடயங்களை அறிந்து கொள்ள முடியும். எமது கல்லூரியைப் பொறுத்த வரையில் இவ்வாறான பதிவுகள் ஒழுங்கமைக்கப்பட்ட நிலையில்லை. 125வது ஆண்டு நிறைவின் போது வெளியிடப்பட்ட மலர் ஒன்றே கல்லூரியின் வரலாறுகளில் சிலவற்றை வெளிக் கொண்டு வந்தது.

இந்நிலையில் இம்மலரும் சில பதிவுகளையாவது நிலைநிறுத்தும் என நம்புகிறேன். இதன் வெளிவருகைக்காக உழைத்த அத்தனை உள்ளங்களையும் வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன்.

என்றும் விக்ரோறியா மாதாவின் உயர்வுக்காக ஒன்றுபட்டு உழைப்போம்.

**வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்**
*அதிபர்*

# ஆசிச் செய்தி



யா/சுழிபரம் விக்ரோறியாக் கல்லூரி 135ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவது பற்றி மிகவும் சந்தோசமடைகிறேன். இக்கல்லூரியின் கல்வி கற்றோர் இன்று பல துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். உள்நாட்டிலும் வெளிநாட்டுகளிலும் பொறியலாளர்கள், வைத்தியர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள் எனப் பல துறைகளிலும் பெருமைக்குரியவர்களாக உள்ளனர். இக்கல்லூரியின் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணாக்கர்களிடையே பெரும் மதிப்பு பெற்று விளங்குகிறார்கள். கிராம மக்களிடையேயும் அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. கல்லூரியின் நிறுவுனருக்கு சிலை அமைத்து அவரை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றார்கள். விளையாட்டத்துறைஇ சங்கீதம், நடனம், ஆன்மீகம் முதலிய துறைகளில் கல்லூரி சிறந்து விளங்குகிறது. இனி வருங் காலங்களிலும் சகல துறைகளிலும் புகழ் பெற்ற மாணவர்களை உருவாக்கி இக்கிராமத்திற்கும் யாழ் மாவட்டத்திற்கும் புகழ் சேர்த்து விளங்க முருகனை வேண்டுகிறேன்.

**பிரம்மஸ்ரீ. மு. பாலகுருசாமி சர்மா,**
பிரதமகுரு,
*பறாளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்*

# வடமாகாண முன்னாள் தலைமைச் செயலாளர் வாழ்த்துச் செய்தி



"மனிதனுக்குள் ஏற்கெனவே புதைந்து கிடக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி. எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தன் சொந்தக் காலில் நிற்கும்படி செய்கின்றதோ,அதுதான் உண்மையான கல்வியாகும்." என்று கல்விக்கு இலக்கணம் வகுத்தான், வீரத்துறவி விவேகானந்தன். இத்தகைய மேலான கல்விப்பணியில் மெல்லென வளர்ந்து, 135 ஆண்டுகளை நிறைவு செய்து, விழாவெடுக்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, தன் நீண்ட வரலாற்றுப்பாதையில் தடம் பதிக்கக்கண்டோம்.

தனியார் கல்லூரியாக அரும்பி, இன்று அரசாங்கமத்திய கல்லூரியாக மலர்ந்து நிற்கும் இக்கல்லூரியின் நிறுவுநரையும், இன்றைய வளர்ச்சிக்கு காலத்துக்குக்காலம் தமது அர்ப்பணிப்புடனான சேவையினால் அடித்தளம் அமைத்திட்ட அதிபர்கள், ஆசிரியர்கள்,நலன் விரும்பிகள் அனைவரையும் நன்றியறிதலுடன் நினைவுகூரும் நேரமிது.இக்கல்லூரியில் தமது கல்விக்கு வித்திட்ட எத்தனையோ கல்விமான்களும், நற்பிரஜைகளும் கல்லூரியின் பெருமைக்குச் சான்றாக விளங்குகின்றனர்.

கல்விச்சமூகமெனக் காலங்காலமாய்ப் போற்றப்பட்டு வந்த எமது யாழ்மண்ணின் கல்வி, கடந்த காலங்களில் பல பின்னடைவுகளைக் கண்டு, மீண்டும் நிமிரும் இவ்வேளையில், கல்வி பற்றிய விழிப்புணர்வு மிகவும் அவசியமாகின்றது. ஒழுக்கத்தை ஓம்புவதாயும், மனதை ஒருநிலைப்படுத்துவதாயும், தன்னம்பிக்கையை வளர்ப்பதாயும், பரீட்சைகளை மட்டும் மையப்படுத்தாததாயும் உள்ளகல்வி முறைமையொன்று, இன்று எமக்கு அவசியமாயுள்ளது. இத்தகைய கல்வி முறையினால் மட்டுமே மீண்டும் எமது அடையாளத்தை மீட்டிட முடியும்.

நவீன தொழில்நுட்ப வசதிகள், பௌதீக வளங்கள் என்று காலத்தின் வளர்ச்சியோடு வளர்ந்து வரும் இக்கல்லூரியின் வளங்கள், இங்கு பயிலும் மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமையக்காண்கின்றோம்.

மனித நேயமும், சமூகப் பொறுப்புணர்வும் மிக்கதொரு சமுதாயத்தை உருவாக்கி, உலகுக்களிக்கும் வகையில், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி தனது கல்விப்பணியைத் தொடரவும், இக்கல்லூரி தனது சேவைகளை வழங்குகின்ற கிராமங்களின் கல்வி மேம்பாட்டில் அக்கறையுள்ளவன் என்ற வகையில், இக்கல்லூரியின் 135ஆவது நிறைவுவிழா நிகழ்வுகள் சிறக்கவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**'விக்ரோரியன்'**
**திரு. சி. ரங்கராஜா**
*முன்னாள் தலைமைச் செயலாளர்,*
*வடமாகாணம்.*

# கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் - வாழ்த்துச் செய்தி



யா/சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி 135 ஆண்டுகள் அப் பகுதியில் வாழும் மாணவச் செல்வங்களின் அறிவுக் கண்ணைத் திறப்பதற்கும் மேம்பாடடைவதற்கும் அர்ப்பணிப்பான சேவையினை வழங்கியுள்ளது.

இப் பாடசாலை "இசுறு" திட்டத்தின் கீழ் உள்ள ஒரு 1AB பாடசாலையாகும். இப் பாடசாலை அண்மைக் காலமாக இணைபாட விதானச் செயற்பாடுகளில் அபாரமான சாதனைகள் படைத்துள்ளமை அறியக் கூடியதாக உள்ளது. அச் சாதனைகள் மெருகேற்றப்பட்டு தொடர்ந்தும் நிலைநிறுத்தப்பட வேண்டும். மாணவர்கள் பங்குபற்றல் அதிகளவில் உள்ள இப் பாடசாலையில் கலைத்திட்டச் சாதனைகள் சிறப்பாகப் படைக்க முடியும். தற்போதுள்ள அதிபரும் அவரது ஆசிரியர்களும் பல முயற்சிகளையும் ஒழுங்குபடுத்திச் செயற்படுவது பாராட்டிற்குரியது.

**"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல**
**நெஞ்சத்து நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு"**


இவ்வாறு சமண முனிவர்களால் பாடப்பெற்ற நாலடியாரில் கல்வியின் சிறப்பு வர்ணிக்கப்படுகின்றது. இத்தகைய சிறப்பு மிக்க கல்விப் பணியினை அதிபர், ஆசிரியர்கள் தமது கடமையென்று கருதிவிடாது கடமைக்கப்பால் சமூகப் பொறுப்புணர்ந்து செயலாற்றி எதிர்காலத்தில் ஒழுக்கத்திலும் எமது பாரம்பரியங்களைப் பேணுகின்ற வகையிலும் பொறுப்புள்ள மாணவர் சமூகத்தினை உருவாக்க முடியும். இதற்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதே எனது எதிர் பார்ப்பாகும்.

இக் கல்லூரியின் 135 ஆண்டுகள் தளராத கல்விச்சேவை நிறைவு பெறுவதையிட்டு மனம் பூரிப்படைகின்றேன். அறிவூட்டல் பணியிலும் புறக்கலைத்திட்ட செயற்பாடுகளிலும் மேலும் வளர்ந்து வலிகாமம் வலயத்திற்கு பெருமையை ஊட்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இம் மலரானது மாணவர்களின் ஆக்கங்களையும் மாணவர்களின் தேடல்களையும் தாங்கி வர வேண்டும் என்பதுடன் இக் கல்லூரிக்காக அல்லும் பகலும் உழைத்த அதிபர்களையும், ஆசிரியர்களையும், பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றை பாராட்டுவதோடு மலர் வெளியீடு சிறப்புற அமைய எனது நல்லாசிகளையும் வழங்குகின்றேன்.

**திரு. இ. இளங்கோவன்,**
*செயலாளர்,*
*கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,*
*வடமாகாணம்.*

# மாகாண கல்விப்பணிப்பாளர்
# வாழ்த்துச் செய்தி



விக்ரோறியாக் கல்லூரியின் 135 வருட நிறைவினைக் குறிக்கு முகமாக மலர் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்நாட்டின் கல்வி வரலாற்றில் தனித்துவமான நிறுவனமாக விக்ரோறியாக் கல்லூரி விளங்குகின்றது.

தலைசிறந்த அதிபர்கள் ஆசிரியர்களின் வழிப்படுத்தலினாலும் ஈடுபாடு கொண்ட சமூகத்தினாலும் தன்னை வளர்த்துக் கொண்ட இக்கல்லூரி கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் தனிமுத்திரை பதித்து உயர்ந்து வருகின்றது.

இப்பிரதேச மாணவர்களின் உயர்வுக்காக உழைத்துவரும் விக்ரோறியாக் கல்லூரியின் 135ஆவது நிறைவுமலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்தும் கல்லூரி அனைத்துத் துறைகளிலும் சிறந்து வளர இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. ப. விக்கினேஸ்வரன்**
*மாகாண கல்விப்பணிப்பாளர்*
*வடக்கு மாகாணம்.*

# கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிச்செயலாளர் - வாழ்த்துச் செய்தி



யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 135ஆண்டுகள் கல்வித்தொண்டாற்றி எமது சமூகத்தை ஈடேற்றியுள்ளது. கல்லூரி தொண்டாற்றியது என்னும் போது அங்கு கடமையாற்றிய, கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களையே குறிக்கும். அக்காலத்தில் இக்கல்லூரியிலிருந்து பொறியியல் வைத்திய பீடங்களில் பல எண்ணிக்கையானோர் கற்றமை எனக்கு நன்கு தெரியும். பல முன்னணிப் பாடசாலைகளுக்குச் சரிசமனாகச் சேவையாற்றி இக்காலத்திலும் மெருகு குறையாது மிளிருகின்றது. அண்மைக் காலங்களில் இணைபாடவிதானச் செயற்படுகளில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களிற் பல சாதனைகளைப் புரிந்துள்ளமை பாராட்டுதற்குரியதாகும். அத்துடன் கல்வி அடைவுகளிலும் மேன்மை பெற்றுள்ளது. இவற்றிற்குக் காரணமான ஆசிரியர்களையும் அதிபரையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 'இசுறு' பாடசாலைத்திட்டத்தின் கீழ் இப்பாடசாலை பல வளங்களையும் பெற்று தற்போதய அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் வழிகாட்டலிலும் அர்ப்பணிப்பான சேவையிலும் உயர எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



**திரு. வே. தி. செல்வரத்தினம்**

*பிரதிச்செயலாளர்,*

*கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு*

*வடமாகாணம்.*

# வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 135 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இக்கல்லூரியின் நலனில் அக்கறையுள்ள அனைவருமே இச்செய்தி குறித்துப் புளகாங்கிதமடைவர். இக்கல்லூரியின் நீண்ட வரலாற்றுப்பாதையில் இடர்கள் பல களைந்து பல சவால்களை வெற்றிகொண்டு தனது முன்னைய பழம்பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது. தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் செல்வதற்கான அவாவை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இக்கல்லூரி தனித்துவமான பல பண்புகளைக் கொண்டது. அதற்கேற்ப தனது இலக்குகள், கொள்கைகளை வகுத்துள்ளது. சுழிபுரம் மற்றும் அதனைச்சார்ந்துள்ள கிராமங்களின் ஏழைச் சிறார்களுக்குத் தரமான கல்வியை வழங்கிவருகின்றது. இக்கல்லூரி தன்வாழ்வில் ஒளியேற்றும் என்ற தளராத நம்பிக்கையுடன் சாரிசாரியாக இக்கல்லூரியைநாடி மாணவர்கள் வருவது நல்லதொரு காட்சியாகும். நம்பிக்கையுடன் இக்கல்லூரி வளவினுள் காலடிவைக்கும் மாணவர்களின் நம்பிக்கையை இக்கல்லூரி கவனத்திற் கொண்டுள்ளது.

எமது நாட்டின் கல்விக் கொள்கைகளாக கல்வியிற் சமவாய்ப்பு யாவர்க்கும் தரமான கல்வி திறமை அடிப்படையிலான கல்விவாய்ப்புக்கள் என்பவற்றைக் குறிப்பிடுவர். கொள்கையளவில் இவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பினும் யதார்த்த நிலையில் அவற்றைக் காண்பது அரிது. ஆனால் இக்கொள்கைவழியிலேயே கிராமப்புறப் பாடசாலைகளின் அபிவிருத்தி நோக்கிலேயே 'இசுரு' பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் இக்கல்லூரியும் இணைத்துக் கொள்ளப்பட்டு வளப்படுத்தப்பட்டு வருகின்றது. தொடர்ந்து ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்திலும் இக்கல்லூரி இணைத்துக் கொள்ளப்பட்டமையானது இக்கல்லூரியின் வளர்ச்சிக்குத் துணையாக அமையும்.

இக்கல்லூரியில் சிறந்த ஒரு அதிபர் உள்ளார். பாடசாலையின் வளர்ச்சியில், மாணவர் கல்விசார் நலனில் அக்கறையுள்ள ஆசிரியர் குழாம் கடமையில் உள்ளது. பாடசாலை நுழைவுக்கான அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்ட போதும் இப்பாடசாலையின் மீதான அதீத நம்பிக்கையுடன் இக்கல்லூரியை நாடிவரும் மாணவச்செல்வங்கள் உள்ளனர். இக்கல்லூரியின் நலனில் என்றும் அக்கறையுடன் தொழிற்படும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்ட பாடசாலைச் சமூகம் ஒன்றுள்ளது. எனவே, இக்கல்லூரியின் வளர்ச்சி என்றும் ஏறுமுகமாகவே இருக்கும். விக்ரோறியா அன்னை தனது 135 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்நாளில் இக்கல்லூரியை மனமார வாழ்த்தும் பல நல்ல உள்ளங்களுடன் நானும் இணைந்து கொள்கின்றேன்.

**திரு. ஆ. ராஜேந்திரன்,**
*வலயக்கல்விப் பணிப்பாளர்,*
*வலிகாமம் கல்வி வலயம்.*

# சங்கானைக் கோட்டக்கல்விப் கல்விப்பணிப்பாளர் வாழ்த்துச் செய்தி



ஒருபாடசாலை 135 வருடங்களைக் கடந்து வந்துள்ளதென்பது நீண்ட வரலாறு. இவ்வரலாற்றில் அந்நிறுவனம் நின்று நிலைக்க நீண்ட தடம் பதித்தவை பலப்பல பற்பல. இவ்வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் யாவரதும் பங்களிப்புக்கள் மலையென உயர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கல்வி அமைச்சின் அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டத்தின் முதலீடுகளைப்பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்படும் மஹிந்த சிந்தனைப் பத்தாண்டு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் அமுற்படுத்தப்பட்டுள்ள "இசுரு" பாடசாலைகளுக்கான திட்டத்தின் மூலம் முன்னோடி அடிப்படையில் விசேட கல்வி அபிவிருத்திநிதி விக்ரோறியாவுக்குக் கிடைத்தமை பெரிய கொடை எனலாம். இதன் மூலம் பாடசாலை உச்சவளங்களால் நிறைவுபெறும். இவ்வளங்களைச் சகல பிள்ளைகளும் உயர்வாகப்பயன்படுத்த பெற்றோரும் கல்விச்சமூகமும் நிறைவாக உழைக்க வேண்டும்.

எதிர்காலத்தில் சங்கானைப் பிரதேசத்தில் சகலரையும் உள்வாங்கும் அதிஉன்னத பாடசாலையாக வளர வாழ்த்துவதோடு பாடசாலையின் வரலாற்று அம்சங்கள் உள்ளடங்கிய மலர் ஒன்று வெளிவருவதையிட்டும் அதற்கு வாழ்த்துத் தெரிவிப்பதையிட்டும் நான் மனநிறைவெய்துகின்றேன்.

**திரு. துரை எங்கரசு**
*கல்விப்பணிப்பாளர்*
*சங்கானை கல்விக் கோட்டம்.*

# வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் வாழ்த்துச் செய்தி



எழுமையும் ஏமாப்புடையது ஒருவன் பெற்ற கல்வியறிவு. இத்தகைய விழுப்பம் மிக்க கல்வியறிவையூட்டும், உருவாக்கும் கல்விச் சாலைகள் கடவுள் ஆலயங்களிலும் மேலானவை. அவ்வாறான விழுப்பமும், வளப்பமும் கொண்டு வலிகாமம் மேற்கில் தனக்குத்தானே இணையாக விளங்கும் வலிமை கொண்டது சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. 135 வருட கால வரலாற்று வாழ்வு என்பது சாமானியப்பட்ட ஒன்று அல்ல. இம்மண்ணில் இந்து கலாசார, தமிழ் விழுமியங்களைப் பேணிக்காக்க, நவீன உலகின் புதிய தேவைகளை வளரும் சந்ததிக்கு உரிய வகையில் வகுத்துக் கொடுக்க எம்முன்னோரால் தொடக்கப்பட்ட இக்கல்லூரி விண்உள்ள மட்டும் வாழ்வில் நிலைக்கும். வளம் பல காணும்.

காலத்தைக் கடந்து கல்வியின் கற்பக விருட்சமாக இக்கல்லூரி கல்வி உலகில் மிளிர கலைவாணி அருளைப் பிரார்த்தித்து, அதன் சித்திக்கும், சீர்மைக்கும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி. தேவந்தினி பாபு,**
*பிரதேச செயலாளர்,*
*வலி மேற்குபிரதேச செயலகம்*
*சங்கானை*

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை செயலாளர் வாழ்த்துப்பா



நூறோடு முப்பத்தைந்து ஆண்டின்முன் முதலாய்த் தோன்றி
வீறோடு விரிந்தெமக்காய் சுழிபுரத்தாய் மடியமர்ந்து
ஆறோடு கடல் போலும் அள்ள அள்ளக் கல்வி தந்தாய்
விக்ரோறியாத் தாயே உன்னை வாழ்த்துவோம் வாழி வாழி.

தக்கதோர் காலந்தன்னில் தரணியில் நீயுதித்துத்
திக்கெட்டும் புகழ் பரப்பிப் பொது மொழிப் பெயரும் தாங்கி
மிக்கதோர் உயர்நிலையில் சுழிபுரத்தே மடிவிரித்தாய்
விக்ரோறியாத் தாயே உன்னை வாழ்த்துவோம் வாழி வாழி.

சமயமும் தமிழும் மட்டும் தரித்திங்கு வாழ்ந்த வேளை
கமபுலம் மட்டுமிங்கே தொழிலதாய் இருந்த வேளை
நமக்கிங்கு ஆங்கிலமும் அரசோச்சி அளிக்க வந்தாய்
விக்ரோறியாத் தாயே உன்னை வாழ்த்துவோம் வாழி வாழி.

கிணற்றினுள் தவளையாகிக் கைகட்டி வாயும் பொத்தி
உணர்வற்றுக் கிடந்த மக்கள் உரியதை உரத்துக் கேட்க
கணமெல்லாம் கல்வியோடு கனமொழி வளமும் தந்தாய்
விக்ரோறியாத் தாயே உன்னை வாழ்த்துவோம் வாழி வாழி.

எத்தனை தலைவரோடு எத்தனை அறிஞர் தானும்
இத்தரை தன்னில் தோன்றி முத்திரை பதித்து வைக்க
முத்தென வந்தே எங்கள் முற்றத்தில் அமர்ந்திருந்தாய்
விக்ரோறியாத் தாயே உன்னை வாழ்த்துவோம் வாழி வாழி.

எத்தனை அதிபரோடு எத்தனை ஆசான் மாரும்
சுத்தமாய் உன்பணிக்கே தம்மையும் அர்ப்பணிக்க
கொத்தோடு மலரும் போல குழந்தைகள் கோடியீன்றாய்
விக்ரோறியாத் தாயே உன்னை வாழ்த்துவோம் வாழி வாழி.

வித்தகம் பல படித்து நித்தமும் அதை வளர்த்து
உத்தம மனிதராகி உலகினுக் குயர்ந்து காட்ட
சித்தமாய் வந்தே அவற்றைச் சிறப்புற எமக்களித்தாய்
விக்ரோறியாத் தாயே உன்னை வாழ்த்துவோம் வாழி வாழி.

கலியுகம் மெல்ல வந்து கிலியதைத் தந்த வேளை
வலியதோர் தாயாளாகி புவியதில் நிமிர்ந்து நின்று
நலிவுற்ற நம்சமூகம் மெலிந்திடா வண்ணம் காத்தாய்
விக்ரோறியாத் தாயே உன்னை வாழ்த்துவோம் வாழி வாழி.

வாழி நம் சுழிபுரத்தார் விக்ரோறியாத் தாயே வாழி
வளம்நிறை அதிபர் ஆசிரியர் மாணவர் சேர வாழி
எண்ணிறைந்த மன்றங்கள் சங்கங்கள் வாழி
எழிலார்ந்த தாயே நீ அகவை நூற்று முப்பத்தைந்தில் வாழி வாழி.

**திரு. சு.புத்திசிகாமணி**
*செயலாளர்*
*வலி மேற்கு பிரதேச சபை.*

# முன்னாள் அதிபர்
# வாழ்த்துச் செய்தி



சைவப்பாரம்பரியத்தில் ஆங்கிலக்கல்வியை வழங்கும் நோக்குடன் நிற்சிங்கம் கனகரத்தினம் முதலியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, அவர்தம் புதல்வர் செல்லப்பா முதலியார் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட விக்ரோறியா அன்னை தனது இலட்சியத்தையும், பாரம்பரியத்தையும் கைவிடாது நாட்டின் முன்னணிக்கல்லூரிகளில் ஒன்றாக 135 ஆண்டுகாலமாக சமூகத்தின் தேவையை நிறைவுசெய்து வருவது வரலாற்றுச் சாதனையாகும்.

இக்கல்லூரியின் 135ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு, கல்லூரி அதிபரின் ஊக்கத்தினாலும், ஆசிரியர்களின் விடாமுயற்சியினாலும், மாணவர்களின் ஒத்துழைப்பினாலும் வெளிவரும் இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.


இத்தகைய முயற்சிகள் மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கவும், எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களை உருவாக்கவும் உதவுகின்றன. அத்துடன் கல்லூரியின் பெருமைகளையும் சாதனைகளையும் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டும் சான்றாதாரமாகவும் விளங்குகின்றன.

இவ்வாறான மலர்கள் காலத்திற்குக் காலம் வெளிவர வேண்டும். அதற்கப் பழையமாணவர்களும் கல்லூரிச் சமூகமும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இக்கல்லூரி தொடர்ந்து பல நூற்றாண்டுகள் காலத்திற்கேற்ப சமூகத்தேவைகளை உணர்ந்து செயற்பட்டு வெற்றிநடைபோட கல்லூரியில் வீற்றிருந்து அருள்பாலித்துக்கொண்டிருக்கும் சிவகாமி சமேத நடராசப் பெருமானை வணங்கி எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

**திருமதி. அ. வேலுப்பிள்ளை**
*முன்னாள் அதிபர்*

# பழைய மாணவர் சங்கத் தலைவர் வாழ்த்துச் செய்தி



"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னவை யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

- பாரதி

கல்விக்கண்திறக்கும் கல்லூரியைவிட பெரிய பொக்கிஷம் வேறொன்றிருக்க வியலாது. கல்வித்தானமே தானங்களுள் சிறந்தது. அந்த வகையில் எமது தாயாக விளங்கும் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி பலவழிகளிலும் சிறந்ததொரு கலைக்கோவிலாகும்.

வித்தாகத்தோன்றி வேர்விட்டு விழுதுபரப்பி இன்று நூற்றுமுப்பந்தைந்து ஆண்டுகளைத் தொட்டு நிற்கும் எமது கல்லூரித்தாயை நினைக்கும் போது மனம் இறும்பூதெய்துகின்றது. எத்தனை ஆயிரக்கணக்கான மாணவர்கள், எத்தனை நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் எத்தனையோ அதிபர்களை எமது கல்லூரித்தாய் சுமந்து விட்டாள். இவள் பிள்ளைகளெல்லாம் எத்தனை எத்தனையோ உயர்ந்த பதவிகளில் எத்தனை எத்தனையோ நாடுகளில் இருந்தார்கள். இப்பொழுதும் இருக்கின்றார்கள். இத்தனை பேரும் எமது விக்ரோறியா அன்னையின் விளைச்சல்கள் அல்லவா!

ஆம்! பெருமையாக, பெருமிதமாக இருக்கின்றது. கல்லூரி நிர்வாகமும் வாழ்வும் ஒரு அஞ்லோட்டம் போலவே தான், மாறிமாறி கையளிக்கப்பட்டு வருவது தான். ஆனால் திறமையாக திறமை கொண்டவர்களிடம் கையளிக்கப்பட்டு வருவதனாலேயே இன்னும் புகழோடு எம் தாய் நிமிர்ந்து நிற்கின்றாள். அந்த வகையில் இக்கல்லூரியின் பழைய மாணவரான இன்றைய அதிபரும், அவரது நிர்வாகமும், பிரதி அதிபர், மற்றும் நிர்வாகக் குழுவினரும் செய்யும் பணி நிறைவானது. போற்றுதற்குரியது.

பழைய மாணவர்களாகிய எமக்கு எம் கல்லூரி வளாகத்துள் கால் வைக்கும் போது பெற்ற தாயின் மடியில் தலைவைக்கும் உணர்வே தோன்றும் அத்தகைய உணர்வோடு தாய்க்குத் தொண்டு செய்யும் தலைமகனாகவே நானும் எனது சங்கத்தினரும் உணர்கின்றோம். கடமையாற்றுகின்றோம். மேலும் எனது தந்தையார் தனது வாழ்நாள் முழுவதும் இக்கல்லூரியிலேயே கடமையாற்றிய வகையில் எமது குடும்பத்தை வாழவைத்த பெருமையும் இக்கல்லூரிக்கே சேரும். இக்கல்லூரிக்குப் பணிசெய்யும் பேறு எனக்கும் கிடைத்தது நான் செய்த புண்ணிய பலனாகும்.

பாடசாலையின் கற்றல், கற்பித்தல், உட்கட்டுமானப்பணிகள், விளையாட்டுத்துறை அபிவிருத்தி, அழகியல்கலை அபிவிருத்தி போன்றவற்றில் பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க, வெளிநாட்டிலுள்ள எமது பழைய மாணவர்களின் உதவிகளையும் பெற்று சேவை செய்யக்கிடைத்தமையை பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

இன்றைய நிலையில் 135 வயதைத் தொட்டுவிட்ட எம் அன்னை, மூதாட்டி விக்ரோறியாவை, அவள் நடந்த பாதச்சுவடுகளின் பணிகளைக் குறிக்கும் மலர் வெளிவருவது போற்றுதற்குரியது, வாழ்த்துதற்குரியது. இதற்காக எமது பழைய மாணவர் சங்கத்தின் சார்பிலும், ஊர்மக்கள் சார்பிலும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழ்க எம் கல்லூரித்தாய்!
வளர்க அவள் புகழ்!
சிறக்க இந்த மலர்!

கல்லூரித்தாயின் காலடியில்
கனிவுடன்
**வீ. உமாபதி**
*பழையமாணவர் சங்கத்தலைவர்*

# கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரி தனது பதின்மூன்று தசாப்தங்களை மகிழ்வாக நிறைவு செய்து தனது 135வது ஆண்டுவிழாக் காணுகின்றது. அதன் வரலாற்று ஆவணமாக மிளிரும் மணமிக்க மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

நான் வாழ்க்கைப் பாதையில் நல்லவாறாக வாழ மாதா பிதா குரு தெய்வம் என்ற நான்கு வழிகாட்டிகளும் சீராக கிடைத்தமையை எண்ணி மகிழும் பொழுது. பெற்றோருக்கு அடுத்த தாய் கல்லூரித்தாய், ஆம் அன்று அரிவரியில் அணைத்த நல்லாசிரியைகளை இன்றும் மறக்கமுடியவில்லை. இவ்வாறான அன்புசால் ஆசிரியர்கள் பலரைத் தன்னகத்தே கொண்டு பல அதிபர்களை ஈர்த்து அதன் மூலம் எத்தனையோ விக்ரறிகளைத் தன் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுத்து வருபவள் எமது கல்லூரித்தாய் என்பதை எவரும் மறக்கவோ மறுக்கவோ மாட்டார்கள்.

எமது கல்லூரியில் சேவையாற்றிய அதிபர்கள் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களில்லை என்ற வகையிலேயே அவர்களது ஆற்றல், ஊக்கங்கள் மூலம் பௌதீக, கற்பித்தல் வளங்களை அபிவிருத்தி செய்து வந்துள்ளார்கள். இந்தத் தொடரில் தற்போதுள்ள அதிபர் எமது கல்லூரியில் கற்றவர், கற்பித்தவர், மீண்டும் தற்போது ஆற்றல் மிக்க ஒரு அதிபராக சேவையாற்றிக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.


இவ்வேளையில் கல்லூரித்தாயின் புகழ்பூத்த பழைய மாணவர்கள் உலகெங்கும் மதிப்பான விக்ரோறியன்களாக வாழ்கின்றார்கள். இவர்கள் தாய் மீது கொண்ட பாசத்தினால் தமது பிற்சந்ததியினர் வளமாகக் கற்று நற்பிரஜைகளாக மிளிரவேண்டும் என்ற பெருநோக்கில் பலவிதமான உதவிகளை வேண்டிய பொழுதெல்லாம் வழங்கி வருகின்றார்கள்.

தொடர்ந்து எமது கல்லூரியானது மென்மேலும் சிறப்பான நிர்வாகக் கட்டமைப்புக்கள் மூலம் எதிர்காலச் சந்ததியினரை பண்பாட்டு அறிவியலாளர்களாக உருவாக எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானது அருட்பார்வை கிடைக்கவேண்டும் என்று வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**பா. விஜயகுமார்**

*கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர்*

# கல்லூரி அபிவிருத்திக் குழுச் செயலாளர் வாழ்த்துச் செய்தி



1876ஆம் ஆண்டில் நிறுவப்பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 2011ஆம் ஆண்டு 135 ஆண்டுகளைளைப் பூர்த்தி செய்வதையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வி, கலாசார, சமய, பண்பாட்டு ஒழுக்கநெறி பேணுகின்ற உன்னத நிலையமாக இக் கல்லூரி திகழ்கின்றது. அர்ப்பணிப்புடன் கூடிய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள், கல்லூரியின் பழைய மாணவ சங்க உறுப்பினர்கள் ஆகியோரின் அயராத உழைப்பினால் இன்று இக் கல்லூரி யாழ் மாவட்டத்தில் உயர்ந்தவோர் இடத்தைப் பிடித்திருப்பதுடன், சங்கானைப் பிரதேச எல்லைக்குட்பட்ட சகல வளங்களையும் கொண்ட முதன்மைப் பாடசாலையாக மாற்றியமைக்கும் "இசுறு" பாடசாலை அபிவிருத்தித் திட்டத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளது.

வைத்திய மேதைகள், கணித மேதைகள், அறிஞர்கள், ஆசிரியப் பெருந்தகைகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் போன்றோரை உருவாக்கிய பெருமையுடன் மனிதநேயமுள்ள நற்பிரஜைகளையும் இக் கல்லூரி உருவாக்கியுள்ளது.

கல்வியிலும், இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கும் மாணவச் செல்வங்கள் பல்வேறுபட்ட போட்டிகளிலும் சிறப்பாகச் செயற்பட்டு மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் வெற்றியீட்டி கல்லூரி அன்னைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இனிவரும் காலங்களிலும் நல்ல கல்விமான்களை உருவாக்கி நமது சமூகத்திற்கும், பிரதேசத்திற்கும், நம் நாட்டிற்கும் பெருமை சேர்க்க சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானின் நல்லாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. செ. ஸ்ரீரங்கன்**
*பாடசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளர்*

# Message
## Past President Old Students' Association



I am very proud indeed for being asked to give a message to the Souvenir which is to be published at the commemoration of the 135th year of the J/Chulipuram Victoria College.

In fact, the need and the necessity for me to pen down the pertinent facts have risen now. The main purpose and the theme objective of my writing this is to bring to the lime light how our earlier Principals, namely, Mr.K.Santhirapalan and also Mrs.Arunthavachelvi Veluppillai organized the Old Students' Association, considered its affairs and encouraged it in many ways to develop it.

It has to be remembered now and forever that every possible sources were tapered to achieve their indented goals with great results – no doubt on that.

At this happiest moment I would like to mention how the Old Students' Association was started functioning from 1992. It is the idea of Mr.K.Santhirapalan, Principal of our College during that period. He thought in a correct way and pointed out the needs of the Old Students' Association with the Old Students who were within the Island. At that time, it was a dark and crucial period in Jaffna Peninsula due to the disturbances prevailed. He tried his level best to activate the O.S.A. with a small number of old students and teachers who had shown interest and started going house to house visit and explained the necessity of activation of this Association which was dormant for a long period. I would like to say here that though a number of Principals who have done yeoman service to this college in the past, Mr.K.Santhirapalan's period could be considered as the 'Golden Era' without even an iota of doubt.

After his departure from the College on promotion, Mrs.Arunthavachelvi Veluppillai was promoted as first woman principal from the Post of Deputy Principal in our college's history. At the beginning she was little reluctant to accept the Post of Principal. Because of her ability of getting all the supports from the entire community of the College, she was able to tackle all the matters in a peaceful manner without any problems. She was able to promote our College in various ways. I need not to tell each

and everything here about her achievements for the upliftment of our college. Her services were appreciated in many places in the Education Circle and also among the parents.

During this period we were able to open many branches in abroad and we were able to obtain periodical contributions from the branches from all countries and from Colombo Branch which helped the former Principals, Mr.K.Santhirapalan and Mrs.A.Veluppillai to carry out their routine financial needs, etc. In fact, it has to be stated here and I feel proud to say that our branches have wide spread wings all over the world.

In fact I am glad to say that I served as a Member in the Administrative Committee at the beginning, then as Assistant Secretary/ Secretary and President for about 15 years. I am satisfied by serving my college through this Organization which is a golden opportunity.

At this valuable opportunity, I also have to bring to our minds where my old memories lingering to remember the outstanding English Tutor/Principal Late A.M. Spencer, whose academic contributions worth talking about and to be remembered for ever.

On behalf of the well wishers and the Alumni Circle I extend my best wishes for further development with glorious future. At this great occasion of the $135^{th}$ commemoration function of our esteemed College, I pray Sivagamay Sametha Nadarajah Peruman to shower blessings to produce more and more good scholars.

Once again I sincerely thank the Principal and others who are engaged in publishing this Magazine for being given this fine opportunity to write some lines to this $135^{th}$ year anniversary issue.

**T. Uthayasurian, J.P.**
*Immediate Past President,*
*Old Students' Association,*
*J/Chulipuram Victoria College.*

# Message from :
# President of Chulipuram Victoria College OBA, Melbourne Australia

I have been asked to send a message to the magazine which Victoria College is releasing next month. I have great pleasure in responding to their request. Rich Victoria College has a long history and during its very early days when it was the only institution that catered for the Hindu students in the whole peninsula. That was in the years 1876 when it was founded, and continued for almost three decades. There were very famous principals who were not only educationist but known for their public services. I am glad since of late that it is doing very well both in academic studies and in extracurricular activities. We were very fortunate in having very able principal's to extracurricular activities. We were very fortunate in having very able principal's to lead the school. Mr. Srikanthan in continuing the very good work done by his predecessor Mr. Velupillai. In fact in the short time he was principal, he has many achievement to his credit. I'm sure he will raise Victoria to its former period of glory.

We here in Melbourne too have become very active recently. The old boys here are contributing to the successful association in many ways. Whenever there was a call from Chulipuram we helped them. Recently there were calls to buy materials for cricket and to put up a cycle shed. We responded immediately. We helped the school in many other ways. Some of our members have individually We will continue to do our best to help alma mater.

**Mr. Eliathamby Elankumaran**
*President, OBA,*
*Melbourne, Australia.*

# கனடா பழைய மாணவர் சங்கத் தலைவர் வாழ்த்துச் செய்தி



இன்று எமது அன்னை விக்ரோறியா கல்லூரி 135 ஆண்டுகளைக் கடந்து தொடர்ந்தும் பல ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கி வெற்றி நடை போடுவதைக் கண்டு எமது மனம் மிகவும் குதூகலிக்கின்றது.

சிறிய கல்விக்கூடமாக திரு.நி.கனகரத்தினம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று ஆயிரக்கணக்கான மேதைகளை உருவாக்கியதோடு தொடர்ந்தும் கல்விச் செல்வத்தை ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டே இருக்கிறது.

எமது கல்லூரியின் வளர்ச்சியில் எமது கனடா பழைய மாணவர் சங்கம் ஆற்றும் பங்களிப்பு எம்மைப் பெருமைப்பட வைக்கின்றது. மைதான விஸ்தரிப்பு, சிவபாத சுந்தரனார் கேட்போர் கூட புனருத்தாரணம் மற்றும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

கல்லூரியின் வளர்ச்சி கண்டு பெருமைப்படும் நாம் தொடர்ந்தும் இயன்ற உதவிகளைச் செய்வோம் என்று இச்சந்தர்ப்பத்தில் உறுதி கூறுகின்றோம்.

எமது கல்லூரியின் 135ஆவது ஆண்டு நிறைவினைச் சிறப்பாகப் பதிவு செய்ய வெளியிடப்படும் இம்மலர் நன்றாக வெளிவர வாழ்த்துக்களை மலர்க்குழுவிற்கும் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினருக்கும் தெரிவிப்பதோடு, தொடர்ந்தும் பல நூறு ஆண்டுகளைக் கடந்து எமது கல்லூரி சேவை செய்வதற்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**இ. முரளிதரன்**
*தலைவர்,*
*பழைய மாணவர் சங்கம், கனடா*

# விக்ரோறியாக் கல்லூரியின் உயர்ச்சிக்காக உழைத்த உத்தம அதிபர்கள்

| | | |
|---|---|---|
| 1. | பேராசிரியர் ஜெ. விலோபி சிமோல் | 1896 – 1918 |
| 2. | திரு. எஸ். நரசிங்கநாயுடு | 1918 - 1924 |
| 3. | சைவப் பெரியார் எஸ்.சிவபாதசுந்தரம் | 1924 – 1932 |
| 4. | திரு. சிதம்பரப்பிள்ளை | 1932 – 1933 |
| 5. | திரு. முத்துக்குமாரு | 1933 – 1934 |
| 6. | திரு. கே. நவரட்ணராஜா | 1934 – 1935 |
| 7. | கலாநிதி கே. சிவப்பிரகாசம் | 1935 – 1936 |
| 8. | திரு. கே. சிவராஜா | 1936 – 1937 |
| 9. | திரு. சண்முகராஜா | 1937 – 1938 |
| 10. | திரு.பி.ஜீ. தம்பியப்பா | 1938 – 1947 |
| 11. | திரு. டீ.சி. அருளானந்தம் | 1948 – 1949 |
| 12. | திரு. எஸ். சுப்பிரமணியம் | 1949 – 1960 |
| 13. | திரு. சி. இரட்ணசபாபதி | 1961 |
| 14. | திரு. கே. கந்தையா | 1961 |
| 15. | திரு. ஏ. ரீ. சபாரட்ணம் | 1961 – 1962 |
| 16. | திரு. பி. தம்பு | 1963 – 1968 |
| 17. | திரு. வி. கே. தியாகராஜபிள்ளை | 1968 |
| 18. | திரு. எஸ். சிவசுப்பிரமணியம் | 1969 – 1972 |
| 19. | திரு.என். சிவஞானம் | 1972 – 1974 |
| 20. | திரு. வி. இராஜசுந்தரம் | 1974 – 1977 |
| 21. | திரு. ஏ.எம். ஸ்பென்சர் | 1977 – 1978 |
| 22. | திரு.பி. சங்கரப்பிள்ளை | 1978 |
| 23. | திரு.கே. அருணாசலம் | 1978 – 1987 |
| 24. | திரு. வி. விஜயரத்தினம் | 1987 |
| 25. | திரு. கே. கே. நடராஜா | 1987 – 1989 |
| 26. | திரு. பி. செல்வரத்தினம் | 1989 |
| 27. | திரு. எஸ். பத்மநாதன் | 1989 – 1992 |
| 28. | திரு. கே. சந்திரபாலன் | 1992 – 1998 |
| 29. | திருமதி. அ. வேலுப்பிள்ளை | 1998 – 2010 |
| 30. | திரு. வ. ஸ்ரீகாந்தன் | 2010 - |

## J/Victoria College, Chulipuram.
# Staff Name List - 2011

1. Mr.V. Srikanthan (SLPS I) (Principal)
2. Mr.E. Kailaivasan (SLTS I) (Deputy Principal)
3. Mr.C. Sivakumaran (SLTS I) (Asst. Principal)
4. Mrs.A. Satkunasingam (SLTS I) (Sectional Head)
5. Mrs.I. Thavanayagam (SLTS I) (Sectional Head)
6. Mr.T. Sivayogalingam (SLTS I) (Sectional Head)
7. Mr.N. Thirukumaran (SLTS 2.I) (Sectional Head)
8. Mrs.C.N. Shanmuganathan (SLTS I) (Rtd on 16.10.2011)
9. Mrs.K. Kulanayagam (SLTS I)
10. Mrs.S. Thevarajah(SLTS I)
11. Mrs.L. Dharmadevan (SLTS I)
12. Mrs.N. Thanabalasingam (SLTS I)
13. Mrs.N. Mariathasan (SLTS I)
14. Mrs.J. Mathivathanan (SLTS I)
15. Mrs.G. Maheswaran (SLTS I)
16. Mrs.K. Thevasuthan (SLTS I)
17. Mrs.P. Kumaraguru (SLTS I)
18. Miss.P. Jeyamalar (SLTS I)
19. Mr.A. Prabakaran (SLTS I)
20. Mrs.T. Kathirkamanathan (SLTS 2.I)
21. Mrs.N. Piranavaruban (SLTS 2.II)
22. Mrs.S. Kannathasan (SLTS 2.II)
23. Mrs.P. Mugunthan (SLTS 2.II)
24. Mrs.J. Sutharsan (SLTS 2.II)
25. Mr.K. Ganeshamoorthy (SLTS 2.II)
26. Mrs.J. Athithan (SLTS 2.II)
27. Mrs.T. Ramanan (SLTS 2.II)
28. Mrs.A. Kannan (SLTS 2.II)
29. Mrs.P. Bavapriyan (SLTS 2.II)
30. Mrs.V. Kanakenthiran (SLTS 2.II)
31. Mrs.P. Yohanathan (SLTS 2.II)
32. Mrs.J. Selvachandran (SLTS 2.II)

33. Mr.R. Rajamugunthan (SLTS 2.II)
34. Miss.K. Tharany (SLTS 2.II)
35. Mr.W. Mathitharan (SLTS 2.II)
36. Mr. F.G. James Bastian (SLTS 2.II)
37. Mrs.K. Senthilkumaran (SLTS 2.II)
38. Mrs.D. Pathmanathan (SLTS 2.II)
39. Mrs.Y. Sathiyaseelan (SLTS 3.I)
40. Mrs.T.Theepan (SLTS 3.I)
41. Mrs.R.Balamurali (SLTS 3.I)
42. Mr.S.Niranjathurkan (SLTS 3.I)
43. Mr.G.Sriskanthamoorthy (SLTS 3.I)
44. Mrs.S.Balakumar (SLTS 3.I)
45. Mrs.K.Nitharsan (SLTS 3.I)
46. Mrs.A.Kuhaparan (SLTS 3.I)
47. Miss.K.Kiyogini (SLTS 3.I) (Transferred from 11.08.2011)
48. Miss.S. Malaimagal (SLTS 3.I)
49. Mr.K. Thirukumaran (SLTS 3.I)
50. Mrs.U. Vijayaruban (SLTS 3.I)
51. Mr.P. Suthakaran (SLTS 3.I)
52. Mrs.S. Sriskantharasa (SLTS 3.I)
53. Mrs.M. Thasanbabu (SLTS 3.I) (Temp. At)
54. Miss.V. Rathika (SLTS 3.I)
55. Mr.S. Kobinath (Internship Teacher)
56. Mr.B. Bakirparan (Internship Teacher)
57. Miss.V. Abirami (Internship Teacher)
58. Mr.T. Puspakanth (Internship Teacher)

## Non Teaching Staff

1. Mr. T. Suthamaran
2. Mr. A. Pushparajan
3. Mr. P. Sivam
4. Mr. T. Pakeerathan
5. Miss. V. Susikala
6. Mr. M. Raveendran

# மலர் தாங்கும் இதழ்கள்...

ஆசிச் செய்தி

வாழ்த்துச் செய்திகள்

- விக்ரோறியாக் கல்லூரியின் முதலாவது பெண் அதிபரின் பொற்காலப் பதிவுகள் 1
- யா/ விக்ரோறியாக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் 12
- First Day at Victoria College 16
- திக்கெல்லாம் புகழ் பரவட்டும் 21
- பயின்ற பொழுதினிலே 21
- Education in Sri Lanka 23
- ஞாபகம் 24
- அந்த ஒன்பது வருடங்கள் 29
- விஞ்ஞானத்தின் விந்தை 31
- My Visit to Malaysia 33
- கற்றலை வழங்கும் தாயே! சுழிபுரம் விக்ரோறியாவே! 36
- சுனாமி 38
- அன்னையின் அரவணைப்பில் ஆற்றிய பணிகள் 41
- நனோ தொழில்நுட்பம் 48
- இந்து தத்துவ நோக்கிற் கலைகள் 51
- தேசியமட்ட விளையாட்டுப் போட்டியின் நினைவாக 60
- Teachers as Builders of New Nations 62
- விக்ரோறியா அன்னையின் செல்வி 64
- சிங்கராஜவனம் 66
- நன்னெறியில் புது செல்நெறி 70
- தீயவையாவினும் சிறந்த தீயாள் 72
- எனது நினைவில் நின்றவை சில... 75

- Our Tongue Needs Control 81
- வரலாற்று நாயகர்களில் என் மனதைக் கவர்ந்த இருவர் 83
- காலத்தால் அழியாத பள்ளி நினைவுகள் 86
- பற்று அட்டை 88
- போதையைப் போக்க ஒரு பாதை சமைப்போம் 91
- Life without an Ambition 94
- தாய்மைக்குச் சமர்ப்பணம் 95
- ஒளித்தொகுப்பு 96
- வெற்றியும் விருதும் விளைவது எதனால் 98
- ஆயிரம் திறமைகள் இருந்தும் 101
- The Aim of Education 102
- மொழித்தேர்ச்சியின்மையும் கற்றலும் 104
- தக்கோராக்கும் தனிப்பெரும் செல்வம் 108
- விழுதில்லா விருட்சங்கள் 110
- கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் இன்று நாம் காணும் அதிபர் 114
- மௌன தவமுனிவர் அளவெட்டி திரு.பொ.கைலாசபதி B.Sc. 120
- வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் 123
- நினைவுகளுடன் என் அதிபர் 131
- Recalling the Memories 132
- ஏன் அதிகளவில் தொலைக்காட்சி பார்க்கக்கூடாது 135
- அரும் தவச்செல்வி 137
- இந்து சமயம் காட்டும் வாழ்வியல் 138
- உதவி செய்து வாழ்வோம் 142
- ஏன் 144
- A Salute to Our Victoria College Teachers 145
- வாழ்வை வளமாக்க வள்ளுவத்தை வாசிப்போம் 146
- இலங்கை சிற்பக் கலையின் சுதேசக் கலைமரபு 149
- Cancer 154

- கல்வியும் நவகுடியேற்றவாதமும் 156
- An Ideal Teacher 161
- ஆவர்த்தன அட்டவணை 162
- How I Get Ready to School 164
- The Importance of English 165
- Victoria College 167
- கலாவதி 168
- The Value of Teachers 171
- The Importance of Success 172
- Mrs. Arunthavachelvy Velupillai 173


நன்றிகள்....

# விக்ரோறியாக்கல்லூரியின் முதலாவது பெண் அதிபரின் பொற்காலப்பதிவுகள்

*திருமதி. இந்திரா தவநாயகம்*
*பகுதித் தலைவர்*
*பழைய மாணவி*

ஒருவரது இருப்பு பெறுமதிமிக்கதாக மதிக்கப்படுவது அவர் நடத்தையாலும், சேவையாலுமே. அந்த வகையில் எமது முன்னாள் அதிபர் திருமதி. அருந்தவச்செல்வி வேலுப்பிள்ளை அவர்கள் 34வருட சேவையில் 10வருடங்கள் மகாஜனக் கல்லூரியிலும் 24வருடங்கள் எமது பாடசாலையிலும் சேவையாற்றியுள்ளார். 12வருடங்கள் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராகச் சேவையாற்றியமை எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமே.

எமது கல்லூரியின் முதல் அதிபர் வி.லோபி சிமோல் 22வருடங்கள் பாடசாலைக்கு மகத்தான சேவையாற்றினார். அவருக்கு அடுத்ததாக நீண்ட காலம் அதிபராக அரும்பணியாற்றியுள்ளவர் எமது முன்னாள் அதிபர் திருமதி அருந்தவச்செல்வி வேலுப்பிள்ளை அவர்களேயாவார். 12வருடங்களைக் கொண்ட அதிபர் சேவையின் போது இவர் கல்லூரியில் கொண்டிருக்கும் பற்றினையும் பாடசாலைச் சமூகம் இவர் மீது கொண்டுள்ள மதிப்பினையும் துலாம்பரமாகக் காணக்கூடியதாக இருந்தது. விக்ரோறியாவின் வரலாற்றில் முதற் பெண் அதிபர் என்ற கிரீடத்தைத் தாங்கித் தனதாக்கிக் கொண்டுள்ள இவருடன் 21வருடங்கள் யான் இக்கல்லூரியில் சேவையாற்றியுள்ளேன் என்பதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். இவருடன் இணைந்து பணியாற்றிய காலம் பசுமையானது.

இதுவரை காலமும் விக்ரோறியாக் கல்லூரியை வழிநடாத்திய ஆண் அதிபர்களுக்கு நிகராக கல்லூரியை வழிநடாத்தி வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றதுடன், பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக நேர் கொண்ட பார்வையுடன் பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதை யதார்த்தமாக நிரூபித்துக்காட்டியவர். எல்லாத்துறைகளிலும் ஆசிரியர்களும், மாணவர்களும் தங்கள் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் தேசியமட்டம் வரை விக்ரோறியாவின் முத்திரையைப் பதிக்க உதவியவர். "சமூகத்திற்காகப் பாடசாலையின் கதவுகள் எப்போதும் அகலத்திறந்திருத்தல் வேண்டும்" என்ற கொள்கைக்கு அமைவாக பாடசாலைக்கும் சமூகத்திற்குமான உறவைச் சிறந்த முறையிற் பேணி, சமூகம் தானாக முன்வந்து பாடசாலைக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு ஆதரவு அளித்தவர். பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு போன்றவற்றின் செயற்பாடுகள் மூலம் கல்லூரி சிறப்பாக அமைவதற்கு வழிசமைத்த பெருமைக்குரியவர்.

இவர் மாணவர் எல்லோராலும் பாராட்டப்படுகின்ற வகையில் தாவரவியல் பாடத்தினை கற்பித்த சிறந்த ஆசிரியர். க.பொ.த உயர்தரத்தில் தாவரவியல் பாடத்தினை கற்பித்து 75வீதத்தற்கு கூடுதலான அடைவு மட்டத்தைப் பெற வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரிடம் கல்வி கற்று உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இவர் தம் மாணவர்கள் இவரது சேவையை நாள் தோறும் வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

எமது பாடசாலையில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள திறமையான மாணவர்கள் பல்கலைக்கழகம் வரை சென்று தங்கள் படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பைத் தேடிக் கொடுத்தவர். பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மூலமாகப் பெறுமதியான புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொடுத்து அவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு உதவியவர்.

இவருடன் எந்நேரமும் எந்த விடயத்தையும் தயக்கமின்றிக் கதைத்து ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள முடியும். இப்படியான இனிய சுபாவம் கொண்ட இவர் ஆசிரியர்களின் இன்ப, துன்ப நிகழ்வுகள் யாவற்றிலும் பங்கு பற்றும் நற்பண்பு கொண்டவர். நிறைந்த இறைபக்தியும் தன்னம்பிக்கையும் ஆளுமையும் கொண்டு விளங்கியதுடன் போர்க்காலச் சூழலில் ஏற்பட்ட சவால்கள் அனைத்தையும் தம் மும்மொழித்திறமையால் எதிர்கொண்டு ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாதுகாத்தவர். நிஷாப்புயல் அனர்த்தங்களின் போது நமது பாடசாலையில் தங்கியிருந்த இடம் பெயர்ந்த மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றைப் பூர்த்தி செய்த பெருமையும் அவருக்குரியதே.

இக்கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் பொழுது இவரின் மனதை பெரிதும் ஏங்க வைத்த விடயம் யாரிடம் இக் கல்லூரியை ஒப்படைத்துச் செல்வது என்பதாகும். தனக்குப்பின் இக்கல்லூரியைத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல சிறந்த அதிபர் வேண்டுமென மனவேதனைப்பட்டார். ஒவ்வொருவரது செயலும் நல்ல நோக்கத்திற்காக அமையும் பொழுது தான் அதன் விளைவு நல்லதாக அமையும். அதற்கமைய பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு ஆகியோரின் ஒத்துழைப்புடன் அவர் நிம்மதியாக தனது ஓய்வு காலத்தை பாடசாலை பற்றிய எதுவித பதட்டமும் இன்றி கழிக்கும் வகையில் எமக்கு மிகப் பொருத்தமான ஆளுமை மிக்க சிறந்த அதிபர் கிடைத்தார் என்றால் அதற்குக் காரணம் முன்னாள் அதிபரின் பாடசாலை மீதான விசுவாசமும், கடவுள் பக்தியுமே ஆகும். முன்னாள் அதிபர் சிறந்த அதிபராகச் செயற்பட்டார் எனின் அதற்கு உந்து சக்தியாக விளங்கியவர்கள் அவரது குடும்பத்தவர்களே,

அதிபர் அவர்கள் 1998 மார்கழி மாதம் அதிபர் பதவியைபொறுப்பேற்ற காலம் தொடக்கம் 2010 ஆடி வரையான காலப்பகுதியில் ஒவ்வொரு வருடமும் நடைபெற்ற வரலாற்றுப்பதிவினையும், அக்காலத்தில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களின் விபரத்தினையும், க.பொ.த சாதாரணதர, உயர்தர பரீட்சைகளில் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களின் விபரத்தினையும் 135 ஆவது ஆண்டு நிறைவு மலரில் வரலாற்றுப்பதிவாக தருவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

## 1999-2010 வரையான வரலாற்றுப்பதிவுகள்

1999 * கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கைத் தமிழ்த்தினப்போட்டியில் பிரிவு 5 சிறுகதை ஆக்க நிகழ்ச்சியில் செல்வன்.தங்கராசா பிரபாகரன் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று வரலாற்றில் சாதனை படைத்துள்ளார்.

* பாலர் மண்டபம் DCB (பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ்) புனரமைக்கப்பட்டது
* திரு.அப்புத்துரை மனுநீதி அவர்களின் அனுசரணையுடன் நீர்த்தாங்கி புனரமைக்கப்பட்டது.

2000 * செயற்பாட்டறையும் விவசாயகூடமும் நிர்மாணிக்கப்பட்டது.

* GTZ அனுசரனையுடன் தொழில்நுட்ப கூடம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.

2001 * கல்லூரியில் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது.

* மனேச்சர் செல்லப்பா அவர்களின் உருவச்சிலை திரை நீக்கம் செய்யப்பட்டது.
* கல்லூரியின் கிழக்குப்பக்கத்திலுள்ள 2பரப்பு நிலம் லண்டன் பழைய மாணவர் சங்கக் கிளையினால் கொள்வனவு செய்யப்பட்டது
* செல்லப்பா நினைவு மண்டபம் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நினைவாக நிர்மாணிக்கப்பட்டது.

2002 * கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை தமிழ்த்தினப்போட்டியில் விசேட நாட்டுக்கூத்து ("விடியலை நோக்கி") மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றது.

2003 * பிரதான மண்டபத்தின் மேற்தளம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

2004 * மக்கள் வங்கியினால் அகில இலங்கை ரீதியாக வழங்கப்பட்ட இளம் சாதனையாளர் விருதினை செல்வி.சுகன்யா சந்திரபாலன் பெற்றுக்கொண்டார்.

* விளையாட்டு மைதான விஸ்தரிப்புக்காக மைதானத்தின் கிழக்குப்பக்கக் காணி கனடா பழைய மாணவர் சங்கத்தினரால் கொள்வனவு செய்யப்பட்டது.
* GTZ அனுசரனையுடன் "கனகரட்ண மண்டபம்" புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

2005 * ICT (Information Technology Centre) நிலையம் நிர்மாணிக்கப்பட்டது.

* மனேச்சர் செல்லப்பா அவர்களின் மகள் திருமதி. சின்னையா அவர்களினால் 14பரப்புக் காணி அன்பளிப்புச் செய்யப்பட்டது (மனேச்சர் செல்லப்பா வளவு)

* பிரம்மஸ்ரீ.சி.பாலகுமாரசர்மா அவர்களால் அவர் தந்தையார் சிவஸ்ரீ.வே.சிவசுப்பிரமணிக்குருக்கள் ஞாபகார்த்தமாக கல்லூரி முன்றலில் வித்தியா பீடம் (சரஸ்வதி சிலை) அமைக்கப்பட்டது.
* மனையியல் கூடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.
* தரம் 6 ஆங்கில மொழி மூலமான கல்வி ஆரம்பிக்கப்பட்டது.
* 25 மாணவர்கள் பல்கலைக்கழகங்களின் சகல பீடங்களுக்கும் அனுமதியைப் பெற்றுக் கொண்டார்கள்.

2006 * கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ஆங்கில தினப் போட்டியில் ஆங்கில நாடகம் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்றுக்கொண்டது.

2007 * நுண்கலை மன்றத்தால் ஆசிரியை திருமதி. ஸ்ரீதேவி கண்ணதாசன் அவர்களின் நெறியாள்கையினால் பரத நாட்டிய செய்முறை விளக்க இறுவெட்டு வெளியிடப்பட்டது.

* செல்வி.சிவலேணுகா சிவதாசன் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சைவபரிபாலன பரீட்சையில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

2008 * விளையாட்டு மைதான விஸ்தரிப்புக்கு புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட காணி The World Vision Lanka அனுசரணையுடன் செப்பனிடப்பட்டது.

* 125ஆவது ஆண்டு நிறைவு மலர் 28.02.2008 அன்று வெளியிடப்பட்டது.
* ஓமான் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் கிணறு புனரமைக்கப்பட்டது.
* பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சமையலறை அமைக்கப்பட்டது.
* நிக்கொட் அனுசரணையுடன் மைதானத்தின் தென்கிழக்கு மூலையில் 130'x25' மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. இக்கட்டடத்தின் கிழக்கு தெற்குப் பகுதிக்குரிய மதில் கனடா பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்டது.
* "இசுறு" பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டது.

2009 * கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ஆங்கில தினப் போட்டியில் செல்வி.சில்வியா தவநாயகம் Copy Writing நிகழ்ச்சியில் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டி வரலாற்றில் முதற் தடவையாக தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றினார். செல்வி.யசோதா கணேசநாயகம் Copy Writing நிகழ்ச்சியில் மாகாணமட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றார்.

* கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் தனி இசை நிகழ்ச்சியில் செல்வி.இரஞ்சனி வைரவன் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றார்.

* மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியில் செல்வன்.கு.ஜெயக்குமார், செல்வி.த.நிதுஜா சட்டவேலி பாய்தலிலும், செல்வி.சி.ஜெயரஞ்சினி முப்பாய்தலிலும், 21வயதின் கீழ் ஆண்கள் அணியினர் 4x100 அஞ்சல் நிகழ்விலும் வெற்றியீட்டி தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றினார்கள்
* திரு.சதானந்தவேல் அப்புத்துரை அவர்களால் மைதானத்தின் வடக்குப் பக்கக்காணி 5 பரப்பு 4 குழி அன்பளிப்புச் செய்யப்பட்டது.
* நிறுவுநரின் வழித்தோன்றல்களாகிய திருமதி.சந்திரா சாம்பசிவம், Prof. மயில்வாகனம் சிவசூரியா, செல்வி.மயில்வாகனம் சிவமலர் ஆகியோரினால் பறாளாய் வீதியில் 6.6 பரப்பு நிலம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

2010 * இசுறு திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் அழகியல் கூடத்திற்கான அடிக்கல் கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல். G.A.சந்திரஸ்ரீ அவர்களால் நாட்டப்பட்டது.
* மாகாண மட்ட பெருவிளையாட்டுகளில் முதல் தடவையாகப் பங்கு கொண்ட பெண்கள் கிரிக்கட் அணி வலய, மாவட்ட நிலைகளில் வெற்றியீட்டி மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியது.
* மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டியில் செல்வன்.சி.சிவபாலன், செல்வன்.நா.நிறோஜன் ஆகியோர் சட்டவேலி பாய்தலிலும், செல்வி.ச.சுகன்யா தட்டெறிதலிலும், செல்வி.ஸ்ரீ.கோபிகை குண்டு போடுதலிலும், 17 வயதின் கீழ் ஆண்கள் அணியினர் 4x100 அஞ்சல் நிகழ்விலும் வெற்றியீட்டி தேசிய மட்டப்போட்டியில் பங்குபற்றினார்கள்.

## பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் விபரம்
## 1999-2010

**1999–2000 கல்வியாண்டு**

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.இ.வாகீசன் | – மருத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 2. | செல்வி.தி.கணேஸ்வரி | – விவசாயம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 3. | செல்வி.கி.நித்தியா | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 4. | செல்வி.சி.கவிதா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வி.கோ.விஜயமாலா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வி.இ.ரபீனா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வி.வை.புஸ்பராணி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 8. | செல்வி.சி.ரதிவதனி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | செல்வி.சு.சுகந்தாதேவி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 10. | செல்வி.அ.சத்தியா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 11. | செல்வி.இ.ஜெயா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 12. | செல்வி.க.வாசுகி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |

### 2000-2001 கல்வியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி.தி.அட்சரேஸ்வரி | – மருத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 2. | செல்வன்.பா.துக்ஷாந்தன் | – பொறியியல் | பேராதனைப்பல்கலைக்கழகம் |
| 3. | செல்வன்.ந.தணிகைக்குமரன் | – பௌதிக விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 4. | செல்வன்.கு.பாலச்சந்தர் | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வி.கு.சுஜாதா | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வன்.சி.சிறீரமணன் | – வர்த்தகம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வி.த.தங்கசொரூபி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 8. | செல்வன்.அ.முருகதாஸ் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | செல்வன்.ந.பிரதீபன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 10. | செல்வி.பா.கிருஸ்ணமாலா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 11. | செல்வி.த.தவரஞ்சி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |

### 2000-2002 கல்வியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி.வா.கோமதி | – பொறியியல் | பேராதனைப்பல்கலைக்கழகம் |
| 2. | செல்வி.அ.தர்சினி | – வர்த்தகம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 3. | செல்வி.ந.ஞானேஸ்வரி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 4. | செல்வி.வ.பூமகள் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வன்.த.பிரபாகரன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வி.இ.நளினி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வி.இ.தமயந்தி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 8. | செல்வி.இ.அமலோற்பவி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | செல்வி.தி.திருறஜனி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 10. | செல்வி.க.கிருகா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 11. | செல்வி.க.ஆனந்தி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 12. | செல்வி.தி.சுபலக்சுமி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |

### 2002-2003 கல்வியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.சு.ஜனார்த்தனன் | – உயிரியல் விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 2. | செல்வி.ச.சுபோதினி | – பௌதிக விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 3. | செல்வன்.ந.சிறீஸ்தராஜா | – பௌதிக விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 4. | செல்வன்.இ.ராஜவகிந்தன் | – பிரயோக விஞ்ஞானம் | வவுனியா வளாகம் |
| 5. | செல்வி.இ.அபிராமி | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வன்.இ.ரகுபதி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வி.கு.அமிர்தசக்தி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |

| | | | |
|---|---|---|---|
| 8. | செல்வி.த.கஜந்தினி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | செல்வன்.த.ரவிமோகன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 10. | செல்வன்.ந.பொன்ராசா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 11. | செல்வன்.செ.ஸ்ரீஸ்கந்தராஜா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 12. | செல்வன்.தி.ஜெகநாதன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |

**2003–2004 கல்வியாண்டு**

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.இ.கலாபதி | – பௌதிக விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 2. | செல்வி.ப.பிரதீபா | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 3. | செல்வி.தெ.ஜெனார்த்தனி | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 4. | செல்வி.க.பத்மலாவண்யம் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வி.ஜெ.ஜெயதர்சினி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வி.தி.சுகன்யா | – பௌதிக விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வன்.சே.ஜெனார்த்தனன் | – உயிரியல் விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |

**2004–2005 கல்வியாண்டு**

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.சூ.குணசாந்தன் | – விவசாய விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 2. | செல்வன்.அ.பிரதீபன் | – நில அளவையியல் | சப்பிரகமுவ பல்கலைக்கழகம் |
| 3. | செல்வன்.ப.பிரபாகரன் | – பௌதிக விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 4. | செல்வி.உ.பிரியந்தினி | – வர்த்தகம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வி.ர.யாழினி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வன்.பொ.சிவராசசிவம் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |

**2005–2006 கல்வியாண்டு**

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.ச.சாரங்கன் | – மருத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 2. | செல்வன்.ச.தாசன் | – பொறியியல் | மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 3. | செல்வி.ம.டெசித்தா | – விவசாயம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 4. | செல்வி.மு.பிரியதர்சினி | – விவசாயம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வி.ச.சுகன்யா | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வன்.க.கிரிதரன் | – முகாமைத்துவம் | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வன்.கு.திருச்செல்வம் | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 8. | செல்வன்.சி.ஸ்ரீரங்கன் | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | செல்வி.ப.பபிதா | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 10. | செல்வி.க.துளசி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 11. | செல்வி.இ.நிலானி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |

| | | | |
|---|---|---|---|
| 12. | செல்வி.சி.நிருபா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 13. | செல்வி.சு.விசாலாட்சி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 14. | செல்வி.சி.சிவதாரணி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 15. | செல்வன்.கி.திருச்செந்தூரன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 16. | செல்வன்.கோ.பிரியதர்சன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 17. | செல்வி.க.ஐஸ்வர்யா | – நுண்கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 18. | செல்வி.ம. றஜினோபன் | – நுண்கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 19. | செல்வி.ச.நிசாந்தி | – நுண்கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 20. | செல்வி.சு.ரஜினி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 21. | செல்வி.கி.இராஜலக்சுமி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 22. | செல்வி.செ.ஜெயரஞ்சினி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 23. | செல்வன்.இ.விநோதன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 24. | செல்வி.செ.மஞ்சுளா | – கலை | கிழக்குப்பல்கலைக்கழகம் |
| 25. | செல்வன்.த.வைகுந்தவாசன் | – கலை | கிழக்குப்பல்கலைக்கழகம் |

## 2006–2007 கல்வியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.வே.கஜேந்திரன் | – பொறியியல் | மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 2. | செல்வன்.பீ.ஆமல்ராஜ் | – பௌதிக விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 3. | செல்வி.ஜெ.ஜெசிந்தா | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 4. | செல்வன்.வு.விமல் | – வணிகம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வி.ந.காயித்திரி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வி.சௌ.கீர்த்திகா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வி.சி.லதாசாந்தி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 8. | செல்வி.க.கோபிதா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | செல்வி.கி.நதியா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 10. | செல்வன்.மு.நவநீதன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 11. | செல்வன்.இ.கிருபாகரன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 12. | செல்வன்.ப.பிரசாந் | – நுண்கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 13. | செல்வி.நா.நிசாந்தினி | – நுண்கலை | யாழ் பல்கலைக்கழகம் |

## 2007–2008 கல்வியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.கி.சஞ்சீவன் | – பொறியியல் | மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 2. | செல்வி.ப.கிருபாஜினி | – பொறியியல் | மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 3. | செல்வன்.ப.கஜந்தன் | – பொறியியல் | மொறட்டுவ பல்கலைக்கழகம |
| 4. | செல்வி.சௌ.கிரேக்கா | – ஊடுகதிர்படமெடுப்பு | பேராதனைப்பல்கலைக்கழகம் |

| | | | |
|---|---|---|---|
| 5. | செல்வன்.ர.ரகுராம் | – தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | வவுனியா வளாகம் |
| 6. | செல்வன்.சு.ஶ்ரீரமணன் | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வி.கு.சயந்தா | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 8. | செல்வன்.ப.சுபாகரன் | – கலை | சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| 9. | செல்வன.வ.மகேஸ்வரன | – கலை | சப்ரகமுவ பல்கலைக்கழகம |
| 10. | செல்வி.து.உதயகௌரி | – சித்த மருத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 11. | செல்வி.சி.கோகிலவாணி | – கலை | கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 12. | செல்வி.சி.தனுஜா | – கலை | கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 13. | செல்வி.நா.வாசுகி | – விலங்கு விஞ்ஞானம் | ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம் |
| 14. | செல்வன்.இ.மனோகரன் | – பிரயோக விஞ்ஞானம் | வவுனியா வளாகம் |
| 15. | செல்வன்.சி.ஜெனார்த்தனன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |

## 2008–2009 கல்வியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.கு.கணரூபன் | – பொறியியல் | மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 2. | செல்வி.சூ.சௌதாமினி | – மருத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 3. | செல்வி.செ.சரண்ராஜ் | – அளவையியல் விஞ்ஞானம் | சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| 4. | செல்வன்.க.தனீசன் | – விவசாயம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வன்.ச.விஜயகுமார் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வி.சா.சதீபா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வன்.வை.சுபரூபன் | – நுண்கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 8. | செல்வி.வை.இரஞ்சினி | – நுண்கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | செல்வன்.க.கார்த்திகேயன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 10. | செல்வன்.க.சிவப்பிரியன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |

## 2009–2010 கல்வியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.ப.பிரகாஷ் | – மருத்துவம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 2. | செல்வி.த.டினுஷா | – உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | வயம்ப பல்கலைக்கழகம் |
| 3. | செல்வன்.வை.கிரிதரன் | – பௌதிக விஞ்ஞானம் | பேராதனைப்பல்கலைக்கழகம் |
| 4. | செல்வன்.கா.வினார்த்தனன் | – உயிரியல் விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வி.சே.தாரணி | – உயிரியல் விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வி.ப.நிஜந்தா | – சட்டம் | யாழ் பல்கலைக்கழகம் |

| | | | |
|---|---|---|---|
| 7. | செல்வன்.து.விஸ்வராஜ் | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 8. | செல்வன்.அ.அன்ரனி கிளரன்ஸ் | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | செல்வன்.ரா.சலோஷன் | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 10. | செல்வி.உ.சுகிர்தா | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம |
| 11. | செல்வி.ர.மந்தாகினி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 12. | செல்வி.செ.நந்தினி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 13. | செல்வி.[illegible].சஞ்சீவன் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 14. | செல்வன்.ந.ஶ்ரீரங்கன் | – தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் | ஊவாவெல்லஸ பல்கலைக்கழகம் |
| 15. | செல்வி.வ.தனுசாந்தி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 16. | செல்வி.க.பாமினி | – கலை | கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 17. | செல்வன்.வை.சுதர்சன் | – பௌதிக விஞ்ஞானம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 18. | செல்வி.சி.சர்மிளா | – சித்த மருத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |

**2010–2011 கல்வியாண்டு**

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வன்.அ.அன்ரன் தனேஸ் | – சூழல் பேணலும் முகாமைத்துவமும் | களனிப் பல்கலைக்கழகம் |
| 2. | செல்வி.ச.தாரணி | – சூழல் பேணலும் முகாமைத்துவமும் | களனிப் பல்கலைக்கழகம் |
| 3. | செல்வி.இ.மாலதி | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 4. | செல்வி.ந.மேரி செலஸ்ரீனா | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 5. | செல்வன்.ம.ஜெயப்பிரசாந் | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 6. | செல்வி.க.கனிமொழி | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 7. | செல்வி.ஜெ.சயந்தா | – கலை | யாழ் பல்கலைக்கழகம் |
| 8. | செல்வி.க.தர்மசுகி | – சட்டம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | செல்வி.த.பாதுஜா | – நடனம் | யாழ் பல்கலைக்கழகம் |
| 10. | செல்வன்.வை.பிரதீபன் | – சங்கீதம் | கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 11. | செல்வி. செ. டிரோலினி | – நாடகம் | கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 12. | செல்வி. க. கயல்விழி | – முகாமைத்துவம் | யாழ் பல்கலைக்கழகம் |

## அதிமிகச்சிறந்த பெறுபேறு பெற்றோர் விபரம்

**க.பொ.த. சாதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| 1. 1999 | செல்வி ம. றோசல்யா | - | 10D |
| 2. 2005 | செல்வன் கு. கணரூபன் | - | 10A |
| | செல்வி கு. சொரூபிகா | - | 10A |

க.பொ.த. உயர்தரம்

மாவட்ட நிலை

| | | | |
|---|---|---|---|
| 1. 2003 – | செல்வி ப. பிரதீபா | 3A முகாமைத்துவம்<br>யாழ் பல்கலைக்கழகம் | 16 |
| 2. 2005 – | செல்வன் க. கிரிதரன் | 3A முகாமைத்துவம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம் | 9 |
| | செல்வி ச. சுகன்யா | 3A முகாமைத்துவம்<br>யாழ் பல்கலைக்கழகம் | 14 |
| 3. 2006 – | செல்வன் வே. கஜேந்திரன் | 3A பொறியியல்<br>மொறட்டுவப்பல்கலைக்கழகம் | 2 |
| 4. 2007 – | செல்வன் கி. சஞ்சீவன் | 3A பொறியியல்<br>மொறட்டுவப்பல்கலைக்கழகம் | 13 |
| 5. 2008 – | செல்வன் கு. கணரூபன் | 3A பொறியியல்<br>மொறட்டுவப் பல்கலைக்கழகம் | 2 |
| | செல்வன் ச. விஜயகுமார் | 3A கலை<br>யாழ் பல்கலைக்கழகம் | 129 |
| 6. 2009 – | செல்வன் ப. பிரகாஷ் | 3A மருத்துவம்<br>கொழும்பு பல்கலைக்கழகம் | 2 |
| | செல்வன் து. விஸ்வராஜ் | 3A முகாமைத்துவம்<br>யாழ் பல்கலைக்கழகம் | 12 |
| 7. 2010 – | செல்வி கா. தர்மசுகி | 3A சட்டம்<br>யாழ் பல்கலைக்கழகம் | 17 |

பழைய மாணவியாகிய யான் இக்கல்லூரியில் ஆசிரியராக இருக்கும் காலத்தில் 125 ஆவது ஆண்டு நிறைவினையும், பகுதித் தலைவராக இருக்கின்ற கால ஓட்டத்தில் 135 ஆவது ஆண்டு நிறைவினையும் மதிப்பிற்குரிய முன்னாள் அதிபரின் சேவைக்காலப் பதிவினையும் எழுதக்கிடைத்த வாய்ப்பிற்காய் ஆண்டவனுக்கு மேலான நன்றியைக் கூறிக்கொண்டு "நீதிமானுடைய பெயர் புகழ் பெற்று விளங்கும்" என்ற வேதாகம வாக்கியத்துடன் நிறைவு செய்வதில் மிக மகிழ்வடைகின்றேன்.

♣ ♣ ♣

# யா/ விக்ரோறியாக்கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார்

**திரு. வி. சண்முகநாதன்**
*முன்னாள் பிரதி அதிபர்*

| | | |
|---|---|---|
| **தோற்றம்** | : | 1878 |
| **பிறந்த இடம்** | : | புலோலி |
| **தந்தை** | : | சுப்பிரமணிய பிள்ளை |
| **தாய்** | : | வள்ளியம்மை |
| **சகோதரிகள்** | : | மனோன்மணி, மகேஸ்வரி, இராசேஸ்வரி |
| **மனைவி** | : | திலகவதியம்மை |
| **வேறுபெயர்கள்** | : | குடிசையில் வாழ்ந்த குரவர் பீ.ஏ.மாஸ்ரர் கந்தவனமுனிவர் |
| **ஆரம்பக்கல்வி** | : | புலோலி வேலாயுத மகா வித்தியாலயம் |
| **உயர்கல்வி** | : | சென்னைப்பல்கலைக்கழகம். |
| **முதல் ஆசிரியப்பணி** | : | திருகோணமலை சென்.யோசப் கல்லூரி. |
| **கல்விப்பணியாற்றிய வேறு பாடசாலைகள் சில** | : | பரமேஸ்வராக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| **விக்ரோறியாவில் அதிபர் பணி** | : | 1924–1932 |
| **பெரியாரின் முதல் நூல்** | : | "சைவ போதம்" |
| **பெரியாரின் கடைசி நூல்** | : | "சைவத்தின் பெருஞ்சிறப்பு" |
| **பெரியாரின் ஆச்சிரமம் உள்ள இடம்** | : | பொலிகண்டி. |
| **திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிச் சபைத்தலைவராக** | : | 1948–1953 |
| **மறைவு** | : | 14.08.1953 |
| **பெரியாரின் நூற்றாண்டு விழா** | : | 29.09.1978இல் யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்றது. |
| **பெரியாருக்கான ஞாபகார்த்த மண்டபம்** | : | 30.07.2008இல் விக்ரோறியாக் கல்லூரியில் அமைக்கப்பட்டது. |
| **சைவப்பெரியார் எழுதிய நூல்கள் சில** | : | சைவபோதம், திருவருட்பயன் உரை, சைவசமய சாரம், கந்தபுராண விளக்கம், திருவாசக மணிகள், சைவக்கிரியை விளக்கம், அகநூல், அளவை நூல், படிப்பிக்கும் முறைகளும் விதிகளும், சுப்பிரமணிய பெருமான் கொண்ட திருப்பெருவடிவம், The Saiva School of Hinduism, Arumukha Navalar. |

இலங்கை வரலாற்றில் சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பெரும் தொண்டாற்றிய அறிஞர்களில் சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் முக்கிய இடம்பெறுகின்றார். இவர் 1878ஆம் ஆண்டு புலோலியைச் சேர்ந்த சுப்பிரமணிய பிள்ளை என்பவருக்கும் வள்ளியம்மைக்கும் இளையபுதல்வராகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியைப் புலோலி மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியைச் சென்னைப் பல்கலைக்கழகத் திலும் நிறைவு செய்து கொண்டார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிற் புலமை பெற்றிருந்ததோடு கணிதத்துறை யிலும் தர்க்கவியலிலும் வல்லவராகத் திகழ்ந்தார். பெரியாரின் சமயத்தொண்டும் கல்வித்தொண்டும் சமூகச்சீர்திருத்தத் தொண்டும் அளப்பரியது. இவரது சைவ சித்தாந்த அறிவுக்கு சைவ உலகம் தலை வணங்குகிறதென சைவப்பெரியார்கள் கூறுவர். இவர் எழுதிய "சைவசித்தாந்தம்" என்ற நூல் இதற்குச் சான்று என்பர். இந்தியா விற் பல பல்கலைக்கழகங்கள் இவரின் ஆற்ற லைக்கண்டு வரவேற்கக் காத்திருந்தனவாம். இவர் தனது வாழ்வில் சமூக சீர்திருத்தப் பணிகளை அதிகளவில் மேற்கொண்டிருந் தார். அதனால் ஏற்பட்ட மக்களின் எதிர்ப்புக் களை அவர் பொருட்படுத்தவில்லையாம் "ஏற்ற தொரு கருமத்தை என் உள்ளம் ஏற்றால் எடுத்துரைப்பேன் எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்" எனச் செயலிற் காட்டினார்.

தீண்டாமை, சமஆசனம், சமபோசனம் என்பவற்றில் உறுதியாகச் செயற்பட்டார். கல்லூரியில் மாணவர்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வுகளை இல்லாது போக்கப் பாடு பட்டார். இவர் கல்வித்துறை சம்பந்தமான உயர்பதவிகள் பலவற்றில் பணியாற்றிக் கல்வித்தொண்டும் சமயத்தொண்டும் ஆற்றியுள்ளார். சைவப் பெரியார் தனது போதனையின் படியே வாழ்ந்து காட்டிய தோடு சைவ விழுமியங்களின் படியே தன் வாழ்வையும் அமைத்து வாழ்ந்துள்ளார். பெரியாரின் தோற்றத்தையும் வாழ்க்கை முறையையும் கூறும் போது பின்வருமாறு கூறுவார்கள். "நடுத்தர உயரம் மெலிந்த உடல் மடித்துக் கட்டிய எட்டு முழவேட்டி எந்நேரமும் நெற்றியில் வீபூதிப் பூச்சு அறி வையும் ஒழுக்கத்தையும் வெளிப்படுத்தும் ஒளிவீசும் கண்கள் காலில் குமிழ் மிதியடி, சுத்தமான சைவ உணவு காலை மாலை தியானம் வெள்ளிக்கிழமை விரதம் ஒழுங் கான ஆலய வழிபாடு அடுத்தவரை வாழ வைக்கும் குணம்" இத்தனையும் நிறைந்த பேராசானாக, சிறந்த நிர்வாகியாக, தலைசிறந்த கல்விமானாக விளங்கினார். எந்த அதிபர்களும் கொண்டிருக்காத உன்னத நிலையில் எமது கல்லூரியில் 1924–1932வரை உபஅதிபராகவும் அதிபராகவும் கல்விப்பணியாற்றியுள்ளார். இவரின் பாதம்படக் கல்லூரிச் சமூகம் என்ன தவம் செய்ததுவோ?

எமது கல்லூரியின் அதிபர்கள் வரிசை யில் மூன்றாவது அதிபரான எஸ்.நரசிங்க நாயுடுவின் பின் பதவியேற்று கிட்டத்தட்ட ஒன்பது ஆண்டுகள் கல்விப்பணி, சமூகப் பணி, சமயப்பணி ஆகியவற்றை எவ்வித தடையுமின்றிச் செய்து முடித்துள்ளார். மாணவர்கள் பாடசாலையிலும் வாழ்க்கை யிலும் ஒழுக்கத்துடனும் சைவ ஆசாரத்

துடனும் நடக்கவேண்டுமென விரும்பிச் செயற்பட்டுள்ளார். ஒழுக்கம், நீதி, நேர்மையுள்ளதாக எதிர்கால சமூகம் அமைய வேண்டும் என்பதிற் கண்ணாயிருந்தார். மேல்நாட்டுப்பழக்க வழக்கங்கள் மூலமாக எமது சமூகம் சீரழிவதாகவே கருதினார். சைவப்பிள்ளைகள் அற்ப சொற்ப சலுகைகளுக்காக மதம் மாறுவதைப் பெரியார் ஒருபோதும் விரும்பவில்லை. சைவ ஆலயங்களில் மிருக பலியைக் கண்டித்தும் எதிர்த்தும் வந்துள்ளார். இது சம்பந்தமாக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். மாணவர்கள் மூலமாகவே மிருகபலிக்கெதிரான உணர்வலைகளை ஏற்படுத்தினார். இவரின் எதிர்ப்பினால் சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் நடைபெற்று வந்த மிருகபலி நிறுத்தப்பட்டமை நல்ல சான்றாகும். இவ்வாறானதொரு சமூகப்பணிக்குச் சொந்தக்காரனாக இருந்துள்ளார் எமது கல்லூரி அதிபர் பெரியார் சிவபாதசுந்தரனார்.

மாணவர்கள் தங்கள் கல்வி மூலமாக வளர்த்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விடயங்களில் பண்புக்கு முன்னுரிமை கொடுக்கும் படி வலியுறுத்தினார். ஒவ்வொரு மாணவனும் சிறந்த பண்பாளனாக வாழவேண்டுமென விரும்பினார். சைவப் பெரியார் அவர்கள் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவராக அரும்பெருந் தொண்டாற்றியுள்ளார். பதின்னான்கிற்கு மேற்பட்ட நூல்களையெழுதி சைவஉலகை மேம்பாடடையச் செய்த பெருமைக்குரியவர். பெரியார் தன்வாழ்க்கையில் எடுத்துக்கொண்ட விடயத்தைத் திறம்பட ஆற்றுவதில் வல்லவராக இருந்தார். மாமிச போசனத்தை சைவர்கள் கைவிட வேண்டும் என்ற கருத்தை எத்தனையோ கோணங்களில் நின்று மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார். ஒழுக்கசீலராகவும் ஆசாரசீலராகவும் தவவாழ்க்கை வாழ்ந்து காட்டியுள்ளார். மாணவர்களுக்குப் படித்துக்கொடுப்பதிலும் பார்க்க அவர்களைத் தாமாகவே படிக்கச்செய்துள்ளார். எப்பொழுதும் உண்மையையே பேசி வந்துள்ளார். பெரியார் மேற்குலகத்தாரின் அறிவியல் நூல்களையும், கிழக்குலக ஞானிகளின் சாத்திர, தோத்திர நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர். இவரை "schalar, writer, speaker, Educationist, Patriot, Reformer" என்றெல்லாம் கூறுவர்.

பெரியாரின் சைவப்பணியை அவதானித்த யோகர் சுவாமிகள் ஒருதடவை அவரைப் பார்த்து "உபாத்தியாயர் நீங்கள் அதிக காலமிருந்து சைவத்திற்குத் தொண்டாற்ற வேண்டும். ஆகையால் தங்க ஏலாதி வாங்கிச் சாப்பிடுங்கள்" என்று கூறியமை பெரியாரின் சைவத்தொண்டுக்குச் சிறந்த சான்றாகும். தடிமல், இருமல் வந்தால் தங்க ஏலாதி மாத்திரை ஒரு குளிகையை பாலில் உரைத்துக்குடிப்பார். சில வேளைகளில் நிலபாவற்சூரணம் பாவிப்பார். சிறுவருத்தங்களுக்கெல்லாம் சுதேச வைத்தியத்தினைப் பின்பற்றுவதில் பிரியமானவராகவிருந்தார். பெரியார் விக்ரோறியாவில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் இந்தியாவின் தேசத் தந்தை அண்ணல் காந்திஜி 29.11.1927இல் கல்லூரிக்கு வந்துள்ளார். சைவப்பெரியார்

சிவபாதசுந்தரனார் கல்லூரியில் முதல்வராக இருந்ததனால் கல்லூரி பெருமை பெற்றதோடு அண்ணல் காந்தியின் வருகையால் கல்லூரியின் புனிதத்தன்மை மேலும் ஒளிவீசியது. தன்னலம் கருதாத காந்திஜி எம் கல்லூரியில் உதிர்த்த வார்த்தைகள். "கல்வி என்பது உண்மை கல்வி என்பது சத்தியம் கல்வி என்பது இறையன்பு கல்வி என்பது தூயவாழ்க்கை கல்வி என்பது உள்ளார்ந்த நேர்மை" எனக் குறிப்பிட்டதாகக் கூறப்படுகின்றது.

அண்ணல் காந்தியினுடைய வாழ்க்கையுடன் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் வாழ்க்கைமுறையும் பெரிதும் ஒன்றுபட்டதாகவே இருக்கின்றது. எளிமைக்கு இருவரும் சிறந்த உதாரண புருஷர்களாக இருந்திருக்கிறார்கள். இப்படியான மகான்களின் பாதம் பட்ட விக்ரோறியாக் கல்லூரியில் நாமும் கல்விப் பணியாற்றியமையை எண்ணும் தோறும் பெருமகிழ்ச்சி ஏற்படுகின்றது. பெரியார் சிவபாதசுந்தரனார் பற்றி சைவநெறியைப் பாடமாகக் கற்கின்ற இலங்கை மாணவர்கள் அனைவரும் அறியும் வண்ணம் தரம்9 சைவநெறி பாடப் புத்தகத்தில் பெரியார் வரலாறு இடம்பெற்றுள்ளது. இதனால் விக்ரோறியாக் கல்லூரியையும் அனைவரும் அறிகின்றனர்.

30.07.2008 அன்று கல்லூரியின் அலுவகை மேல்மாடி மண்டபத்திற்கு ஆசிரியர்களின் தீர்மானத்தின்படி முன்னாள் அதிபர் திருமதி.அ.வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் "சிவபாதசுந்தரனார் மண்டபம்" எனப் பெயர் சூட்டப்பட்டதோடு பெரியாரின் திருவுருவப்படமும் இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு.ஆ.கனகரத்தினம் அவர்களால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு பெரியாரின் வாழ்வியலை மீட்டுப்பார்த்தமை குறிப்பிடத்தக்கது.

அன்றிலிருந்து அம்மண்டபம் "சிவபாதசுந்தரனார் மண்டபம்" என அழைக்கப்படுவதன் மூலம் நாள்தோறும் பெரியாரை நினைவுகூருகின்றனர். கல்வி சம்பந்தமான அனைத்து நிகழ்ச்சிகளும் அம்மண்டபத்திலேயே நடைபெற்று வருகின்றன. கல்லூரியின் இன்றைய அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் பெரியாரின் மண்டபத்தை மேலும் மெருகூட்டி அழகுபடுத்திச் சகல வசதிகளையும் கொண்டதாக மாற்றியமைத்த பெருமைக்குரியவராகின்றார். 2011இல் கல்லூரியின் 135ஆவது ஆண்டு விழாவைக் கல்லூரிச் சமூகம் கொண்டாடுவதையிட்டு மகிழ்வுறும் அதேவேளையில் 2013இல் பெரியார் சிவபாதசுந்தரனாரின் 135ஆவது ஆண்டு விழா பற்றியும் கல்லூரிச் சமூகம் சிந்திக்குமென நினைக்கிறேன்.

**"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்**
**உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டான் – என்று**
**உடம்பினை யானிருந்தோம்புகின்றேனே".**

(திருமூலர்)

♣ ♣ ♣

# FIRST DAY AT VICTORIA COLLEGE

***Miss. K. Sithamparapalini***
*Grade 11A*

I live at Tholpuram. When I reached five years I was admitted to a school closed by. I just entered the school where we had to obey some rules and regulations which I was not used to them when I was at home. So sometimes I found it difficult to follow them up. It took sometimes for me to be familiarized with them. When I just entered the school, I was welcomed by the grade two students by having some programmes and we were given some badges for us to cheer up. Our class teacher handle us softly like flowers with out shrinking our faces. She applied gentle words to pacify us, even though we did some mischievous things. After I got through grade nine I have to face and to be changed to a big school as our school has no classes for grade ten. I sat for the entrance exam. And got through the exam and my parents, relations and even my self waited for the day to come to enter the new school. Early in the morning I went to the temple, prayed god and got blessings from my elders before, I went to school. When I entered the school gate I was in amazement to see all the tall and beautiful buildings all over the places.

My mother took me to the office and after that I was sent to my particular class at once I felt the difference between the two schools. And I felt I was like in a ship wondering the waves with out having a place to anchor. You may wonder why I said like that because I was helpless as I lost all my best friends. After few minutes I saw a best friend of mine coming towards our class room. I felt that as a star in the dark sky had lot of imaginations of past time were reeling in my mind and I obviously felt that I will succeed in my study as in the former school that we complete each other to get higher grades. Even though others are strangers to me, they smiled at me and some came to speak to me and some greeted me. When the bell rang we went to the morning assembly. Then I went to my class and seated in my chair she was the teacher she came with full of smiling shining face that made her more beautiful. She was wearing a saree with beautiful flowers and neatly fall on the shoulders and the saree pin shining likes a star not on her shoulder but on her face.

I expected her to speak in Tamil but spoke in English with short and simple sentences which contained in depth meaning and made us to think that we must

do hard study in English to come up with her commands and lessons. This will also help us to enter in to a global world where English is taking a higher position for us to develop good knowledge and take up higher position and lead a good life as a citizen to our country.

Further more in this fast moving world there are so many advances in technology where we must have sufficient knowledge of English to enjoy it. Even in our higher studies there are many books in English to read and gain knowledge.

After that a lot of subject teachers came and taught us each individually having different characteristics, personalities and qualities. They taught us using different methods and advising their method according to our performance. During the interval time we collaborated with each other and give a receive to our former school and our marks. We also didn't fail to discuss about our famous personalities.

During our lessons a person with good personality, pleasing manner and looked as a fairy with nice saree entered suddenly with the smart walk. I felt as I am seeing a fairy in my class. A friend whispered and informed me that she was our principal. At once we all stood up and said good morning to her and she spoke nicely to us and gave us good advice to precede our studies methodically and successfully


That day experience was imprinted in my mind as words carved on a stone not as words written in the water. I hope this will ever last still I die and live this world may god bless my school and guide us to get more and more good fame and glory to our school by doing hard work.The motto of our school is

"Manners Maketh the Man"

♣ ♣ ♣

**Life is as tedious as a twice-told tale**
**Vexing the dull ear of a drowsy man.**

**- William Shakespeare,**
*"King John", Act 3 scene 4*



# திக்கெல்லாம் புகழ் பரவட்டும்



*பண்டிதை திருமதி. பொன். பாக்கியம்*
*முன்னாள் தமிழாசிரியை*

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே"**
என்றார் தமிழ் மூதாட்டி ஒளவைப் பிராட்டியார்
**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**
என்றார் உலகப் பொதுமறை அருளிய திருவள்ளுவ நாயனார்.

இந்த உலகத்தையும், அதில் காணப்படும் உயிரினங்கள் யாவற்றையும் படைத்து திருவிளையாட்டயர்கின்ற பெருமான், மானிட சாதியை ஆக்கி அவர்களுக்கெனப் பல்வேறுபட்ட மதம், மொழிகளை உருவாக்கிப் பல்வேறு வகைப்பட்ட செயற்பாடுகளையெல்லாம் செய்கின்றான். அவற்றுக்கெல்லாம் காரணம் யாது? அக்காரணத்தை நம்மாற் கண்டு பிடிக்க முடியுமா? "அவனின்றி அணுவும் அசையாது".

இந்நிலைப்பாட்டினை உணர்ந்த ஒரேயொரு சீவ இனம் மானிட இனம். இந்த இனம் பகுத்தறிவினைப் பெற்ற இனம். அதன் பயனாக இப்பூவுலகை வர்ண உல காகவும் சுவர்ண உலகாகவும் ஆக்கி மகிழ்கின்றது. இதற்கான மூலாதாரம் யாது என நாம் வினாவிக் கொண்டு போவோ மானால் அதற்கான விடை அந்த மானிட இனத்துக்குக் கிடைத்த புத்திக்கூர்மையும் அதனால் ஏற்பட்ட கல்வியறிவுமே என்ற தெளிவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மனிதன் கல்வியறிவினால் மேல் நிலை அடைகின்றான். இக்கல்வியின் பயனே ஆன்ம விடுதலை என்கின்ற முத்தி நிலையுமாகும். முத்தியின்பமே பெருகிய பேரின்பம். இப்பேரின்பப் பெருவாழ்வைத் தரவல்ல கல்வி ஒவ்வொருவராலும் தேடிப் பெறப்பட வேண்டியதொன்றாகும்.

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**
என்பது தமிழ்மறை. இக்கல்வியைப் பெறுவதை உயர்நோக்காகக் கொண்டவர்கள் உயர்ந்தவர்களே.

இந்த வகையிலே சிந்திக்கும் பொழுது இன்று நூற்றுமுப்பத்தைந்தாவது ஆண்டு நிறைவினைக் காணும், பாரம்பரியம் மிக்கதும் பண்பாட்டு நிறைவு கொண்டது மான நமது சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அன்னை வையத்திலும் வானகத்திலும் உயர்ந்தவளாக நம்முன்னே காட்சி அளிக்கின்றாள். இந்நாட்டிலே கல்விக்கு வித்திட்டவர்கள் ஆங்கிலேயர்.

ஆங்கிலேயரால் தாபிக்கப்பட்ட வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்ற சுழிபுரம் பெரியார் கனகரத் தினம் முதலியாரது எண்ணக் கருவின் தூய்மையும் தீர்க்க தரிசனமுமே இன்று நாம் போற்றி வணங்குகின்ற கல்லூரி மாதா. சுழிபுரம் பல்லாற்றானும் தன்னி றைவு பெற்ற கிராமம். மானிட வாழ்வின் விடிவுக்கேற்ற கட்டமைப்புக்கள் கொண்டது அது. அக்கிராமத்தை ஒளி செய்கின்ற பல்வேறு கண்களுள் விக்ரோறியாக் கல்லூரியும் ஒன்றாகும்.

விக்ரோறியாக் கல்லூரியின் ஆரம்பம், அதன்நோக்கம், அதனை நடத்தியவர் களின் தியாக வாழ்வு, அதனாற் பயன டைந்த சமூகம் என்றிவற்றையெல்லாம் பெருமிதத்தோடு நோக்கினும் என்மனதில் வேரூன்றிப் பதிந்து விட்ட ஒரு மேலான விடயம் இது கட்டி எழுப்பிய பண்பாட்டுத் திருக்கோலமாகும். அங்கு கற்ற மாணவர், கற்பித்த ஆசிரியர், அதிபர் ஆகியோரது உன்னதமான ஒழுகலாறும், அன்பும், சீவகாருண்யமும், கண்ணியமும், ஒற்று மையும் என்றும் எண்ணி இறும்பூதடையச் செய்வதோடு ஒரு வரலாற்றுப் பேரேட்டை யும் உருவாக்கியுள்ளது. சைவப் பெரியார் திரு.சு.சிவபாதசுந்தரனார் அவர்கள் அதிபராக இருந்த காலப் பகுதியிலிருந்து இந்த முத்திரை ஆழப் பதியப் பெற்றி ருக்கின்றது. ஆசிரியருக்குக் குருபூசை விழா எடுக்கும் மரபு இக்கல்லூரியின் பழைய மாணவர்களிலிருந்து தான் தோற்றம் பெற்றது. நிரம்பிய கிராமியச் சூழ்நிலையில், மரபு வழுவா மக்கள் வாழும் பகுதியில் இக்கல்லூரி தோற்றம் பெற்றிருப்பது அதன் உயர்வுக்கு உந்து சக்தியாக அமைந்ததேயன்றித் தடைக்கல் லாக அமையவில்லை. இங்கு பிரார்த்தனை மண்டபத்தில் இருந்து அருளாட்சி செய்து கொண்டிருக்கும் சிவகாமி சமேத நடராசப் பெருமான் வேண்டுவார்க்கு வேண்டும் வரமீந்து எல்லா நன்மைகளையும் கொடுத்து ஆடல் புரிந்து கொண்டிருக் கின்றான்.

இவ்வாறு தோற்றம் கொண்டிருக்கும் கல்லூரி அன்னை நமக்கெல்லாம் பண் பாட்டுக் கோலங்களை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றாள். கல்வியின் நோக் கங்களுள் ஒன்றான "உயர்நோக்குக் கொண்ட பண்பாடே நமக்கு உறுதியைத் தரும்" என்னும் நோக்கினை நிறைவேற்ற விரும்பும் யாவரும் அங்கே வாருங்கள். எப்பொழுதும் வழி திறந்திருக்கும். வாழ்வு சிறப்படையும். இஃது விக்ரோறியாவில் எனது இருபத்தைந்து வருட ஆசிரிய சேவையிலிருந்து நான் பெற்ற அனுபவ உண்மை.

ஒரு வீட்டினுடைய சிறப்புக்கு மூல காரணி குடும்பத்தலைவனே. விக்ரோறி யாக் கல்லூரியின் சிறப்புக்கு மூல காரணஸ்தர்கள் அங்கு தலைமை தாங்கிய அதிபர்களே. அந்த அதிபர் பீடம் மிக உன்னதமானது. அதில் இருந்து பிரகாசிக்கும் ஒளிச் சிதறல்கள் கல்லூரி முழுவதும் பிர காசித்துக் கொண்டிருந்தது. இருக்கின்றது. இருக்கும். விக்கிரமாதித்த மன்னனுடைய சிங்காசனம் மிகவும் விசேடமானது. அதில்

யாரேறி இருந்தாலும் அவன் மனம் புடம் போடப்பட்டு விடும். விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் பீடமும் அத்தகைய தொன்றே. அதன் ஆட்சிச் சிறப்பை இருபத்தைந்து ஆண்டுகள் கண்ட அனுப வக்கூற்றே எனது கூற்று.

இவ்வாறான ஒரு பாரம்பரியம் மிக்க கல்லூரிக்குப் பிள்ளைச் செல்வம் பெறு வதற்காகவே மாற்றம் பெற்று வந்தவர் எங்கள் முன்னை நாள் அதிபர் திருமதி. அருந்தவச்செல்வி வேலுப்பிள்ளை அவர்கள். 1986ஆம் ஆண்டு மாற்றலாகி வந்த அவரின் பண்பாட்டுக் கோலங்கள் எங்கள் அனைவரையும் அவர் பாலீர்த்து விட்டது. நல்லதொரு தமிழ்ப்பெண்ணை நான் கண்டேன். இனிமையான சுபாவம். எப்பொழுதும் புன்சிரிப்பு, அடக்கமான போக்கு, தமிழ்ப்பண்பாடு மாறாத நடையுடை பாவனை, பழக்கவழங்கங்கள், சமய அனுட்டானம், ஒழுக்கம் என்பன மூத்தோ ரான எமக்கு மிக்க மகிழ்ச்சியை அளிப்ப வைகளாக இருந்தன. இக்கல்லூரியில் அவராற்றிய இருபத்துநான்கு வருட சேவை களிற் பன்னிரண்டு ஆண்டுகள் அதிபர் பதவியை அலங்கரித்தாரென்றால் அதற் கான காரணம் மேலே நான் எடுத்துக்காட்டிய நற்பண்புகளேயென என்னுள்ளம் மதிப்பீடு செய்கின்றது. நன்றாகத் தமது ஆசனத்தை அலங்கரித்துப் புகழுடனும் சிறப்புடனும் ஓய்வு பெற்றிருக்கும் அம்மையாரை வாழ்த்தி அவருக்கு எல்லா நிறைவுகளும் அருள வேண்டுமெனச் சிவகாமி சமேத நடராசப் பெருமானை வணங்குகின்றேன்.

உலகம் பூராவும் இன்று விக்ரோறியா அன்னையின் குழந்தைகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். விளையாட்டுத் துறையிலே, சட்டத்துறையிலே, தமிழ்த் துறையிலே, அரசியல் துறையிலே இன்னும் பல துறைகளிலே தடம் பதித்த சாதனை மாணவர்களைப் பெற்றெடுத்தவள் எங்கள் அன்னை. பல்துறை சார்ந்த அதி உன்னத சேவையுடன் கூடிய ஆசிரியரின் வாண்மை களைப் பெற்று அலங்கரிக்கப்பட்டவள் அவள். நீதி வழுவா நெறி முறையில் வாழ்ந்த அதிபர்களால் ஆட்சி செய்யப் பட்டவள் அவள். ஒரு நிமிடம் நில்லுங்கள். தன் மடியில் தவழ்ந்து மழலை பொழிந்து, பின் ஆசிரியராக நியமனம் பெற்று அயராது கடமையாற்றி, அரும்பெரும் அனுபவத்தோடு மீண்டும் வருகை தந்தி ருக்கும் இன்றைய அதிபர் பிரம்மஸ்ரீ. வ.ஸ்ரீகாந்தன் ஐயா அந்த விக்கிர மாதித்தன் ஆட்சிப் பீடத்தை அலங்கரிக் கின்றாரே. அதுகூட அவள் பெற்ற பேறல்லவா? அவர் சேவையால் அன்னை மேலும் சிறப்புற்று விளங்க நான் சிவகாமி சமேத நடராசப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். என்றும் என் உள்ளத்தில் நின்று நிலைத்து இன்ப ஊற்றாகத் தித்திக்கும் அன்னையின் புகழ் திக்கெல்லாம் பரவிடப் பெரு மானை வணங்குகின்றேன்.

♣ ♣ ♣

# ஆசிரியர் குழாம்



# பயின்ற பொழுதினிலே!!

*செல்வி. கு. கணரூபன்*
*பொறியியல் பீடம்,*
*மொறட்டுவ பல்கலைக்கழகம்.*

இரண்டாயிரமாவது ஆண்டின் ஆரம்பத்தை உலகம் ஆர்வமாய்க் கொண்டாடிக் கொண்டிருந்த பொழுது எனக்கும் புதியதொரு பாடசாலை அறிமுகமானது.

என் வாழ்விடம் நடை தூரத்திலிருந்தாலும் ஆரம்பப் பாடசாலை, ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் பயிலும் போதே அவ்வப்போது நிகழ்வுகளுக்கு வந்திருந்ததனாலும் இப் பாடசாலை முற்றிலும் புதியதாயிருக்கவில்லை. இருந்தாலும் பெரியதாய், புதியதாய், இத்தாய் முழுதாய் என்னைக் கவர்ந்து கொண்டாள். அவள் தான் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியன்னை!

அந்நேரம் அதிபராயிருந்தவர் திருமதி. அ.வேலுப்பிள்ளை அவர்கள். தற்சமயம் செவ்வனே பணி முடித்து சமீபத்தில் (2010) இளைப்பாறிவிட்டார்.

சிற்றுண்டிச் சாலையோடமைந்த வகுப்பில்தான் வழக்கம் போல் தரம் ஆறு. புதிய நண்பர்கள். ஐக்கிய சங்கம் பாடசாலையிலிருந்தே அனேக மாணவர்கள் வருவதனால் எனக்கும் என் பழைய நண்பர்களுக்கும் அனைவரையுமறிதல் மிக்க எளியதாயிருந்தது. முதல் நாள் வகுப்பை சுத்தம் செய்வதில் இணைந்து ஒரே வாரத்தில் அனைவரும் ஐக்கியமானோம். இறுதிவரை இருப்பதுவும், எதிர்காலத்தில் எதிர்பாராத சந்திப்புக்களில் விழிகளை விரியச் செய்வதுமான நட்புக்கள் அல்லவோ இவை.

கற்பித்த அனைத்து ஆசிரியர்களின் விபரங்களும் தனித்தனியே அனேக பக்கங்களை ஆக்கிரமிக்குமளவுக்கு விடயங்கள் பல கொண்டவை. எனக்கு வாய்த்துள்ள பக்கங்களினுள் விபரணை செய்ய முற்படின் அதில் பலர் விடுபடவும் கூடுமென்பதால் அதைத் தவிர்த்துவிட்டேன்.

ஆறாந் தரத்திலிருந்து பாடசாலை மைதானத்தில் அடிக்கடி விளையாடி வந்திருந்தாலும் ஏழாந் தரத்திலிருந்தே முறைப்படி தோற்பந்துத் துடுப்பாட்டப் பயிற்சி செய்வதை ஆரம்பித்தேன். ஆறாந்தரத்தில் அறிமுகமான போது பெரிதாய்ப் பரந்து கிடந்து பிரமிப்பூட்டிய மைதானத்தில் தொடர்ந்தும் உலவியதால் அது என் உள்ளங்கையைக் காட்டிலும் உருச்சிறுத்துப் போயிற்று.

"அரசாங்க முதல்தர பாடசாலைகளுக்குள் மாவட்டத்தினுள் மிகச் சிறந்ததொரு மைதானம். சிறந்ததொரு வளம்" வெள்ளிக் கிழமை ஒன்றுகூடலில் அதிபரின் கூற்றுக்கு எவ்வித மறுப்பும் இருக்க முடியாது.

தினமும் புதிதாய் விடிந்தது காலை. எங்கள் காலத்தை கொடுத்து அனுபவங்களை வாங்கினோம். நூலகம் எங்களுக்கு

அலுக்காமல் கதைகள் சொல்லி வந்தது. ஒன்றல்ல... இரண்டு நூலகங்கள். ஒன்று பாலர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கு வேறொன்றுமியங்கியது.

துடுப்பாட்டப் பயிற்சியுடன் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பனவும் எனக்கு அறிமுகமாயின. எங்கள் வயதுப் பிரிவில் சிறந்த மெய்வல்லுனர்களும் திறமையான விளையாட்டு வீரர்களுமிருந்தனர். இருந்தும் போட்டிகளில் மிகச் சிறப்பாகச் சோபிக்கத் தவறினோம். ஆனால் கோட்ட மட்டங்களில் எங்கள் ஆதிக்கம் அதிகமாகவே இருந்தது.

அனைவருக்குமே தமது கல்லூரிக் காலத் துடுக்குத்தனத்தினால் விளைந்த சோதனைகளும் சுவாரசியங்களும் சொல்லி மாளதவை. மறக்கப் பட முடியாதவை.

மாலையில் 'பொலித்தீன்' பையில் நீர் நிரப்பி எறிந்து விளையாடி வகுப்பை நனைத்துவிட்டு மறுநாட் காலை அதே ஈரத்தை 'நாய் செய்துள்ள நாசவேலை' என்பதாக நம்பச் செய்து (பாடவேளைக்கு பாதை வேறு காட்டி) கரும்பு தின்னக் கூலி வாங்கிய நாட்கள். இவற்றைத் திறம்படச் செய்துவிட்டு வீட்டுவேலைகளைத் திறந்து பார்க்கவோ செய்யவோ தோன்றாமல் வந்ததன் பயனாக எதிர்கொண்ட சோதனைகள். மறந்து விட முடியுமா?

மேற்கண்டவை அரைக் காற்சட்டை வயதிலெனும் போது நீளக் குழாய் மாட்டி உயர்தரம் என்று அனுப்பி வைத்துவிட்டால் பின்...எங்களின் முடிவுகள், தெரிவுகளை எங்கள் கையில் கொடுத்துவிட்டு வயதும் வாழ்க்கையும் வேடிக்கை பார்க்கும் காலம்......பலர் ஜெயித்தோம்.

கல்வியறிவென்பது சமூக தொடர்புகளை மேம்படுத்தவும் வாழ்வாதாரத்துக்கு வழி சமைப்பதற்கும் பயன்படுவது என்பது என் தனிப்பட்ட கருத்து. அதனால் பட்டங்கள், பதவிகளை விடவும் பழகும் முறையும் வாழ்வு முறைமையும் தான் உண்மையான அறிவை எடுத்துக் காட்டுவதாயிருக்கலாம். போலிகள் வேண்டாமே நமக்கு.

ஒவ்வொருவருக்கும் பயின்ற பாடசாலை தனித்துவமான சிறப்புடையதாய்த் தோன்றுவதில் வியப்பில்லை. அது ஈன்ற தாயின் பால் ஏற்படும் விசேட ஈர்ப்பினை ஒத்தது தானே. இருந்தும் விக்டோரியாக் கல்லூரியின் பல பரிமாணங்களால் பலனடைந்தவனென்ற முறையில் எனக்கு கல்லூரியின் மேல் தவிர்க்க முடியாத சிறப்புக் கவர்ச்சி இருப்பது இயற்கையே.

மற்றையவனின் முகத்தில் மகிழ்ச்சியைக் காண்பதில் ஆர்வமிக்க எந்தவொருவனுக்கும் வாழ்க்கையில் இறுதிவரை பிடிப்பு இருக்கும். உண்மை உறவுகளிருக்கும். வளர்ச்சியுமிருக்கும். அதே இயல்பு கொண்ட விக்டோரியாக் கல்லூரி அன்னைக்கும் அனைத்து வளங்களும் வரட்சியற்றிருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்களில்லை.

செல்லவிருக்கும் காலம் அன்னையின் சேவையினை துரிதமாய் அதிகரிக்குமென்ற நம்பிக்கையுடன் நான் நிவர்த்தி செய்கிறேன்.

*வாழிய விக்ரோரியா கல்லூரி.*

# Education in Sri Lanka

***Miss. S. Mehala***
*G.C.E (A/L) 2008 Commerce*

Have you ever noticed that some of the children are roaming around on the road side during the school time? And have you ever thought or asked them why they are not going to school? Sri Lanka has a very high literacy rate, but it is still painful to see uneducated children. There are several reasons for drop out from the school. Yet, I found a couple of reasons such as underprivileged and lack of interest and encouragement for education.

On one hand, due to poverty some of the parents force their children to leave the school and go for work to earn money for the family. On the other hand, the children are not able to understand the important of education and prefer to stay at home. The parents also do not realize the value of education and allow the children to drop out the school very simply. As a result, only the lucky once manage to develop their financial position and others stay at the same line without any improvement.

In today's competitive world, it is very essential to be educated. The parents must realize that their children are not their burden, rather they are their investment. I do agree that it is hard to educate an underprivileged child, but we must also remember that we have free education system in Sri Lanka, which most of the other countries do not have. In addition to that, the government provides scholarship for the good students who live under the poverty line. Moreover, in the job sector, the underprivileged applicants are given the first opportunity. To increase the life standard, we must educate the children in such a way so that they can get a good job and earn money.

In addition to that, according to our culture, our society respects an educated person more than anyone else. To up hold our head in the future, we must be firm that we have to be educated.

In conclusion, to avoid school drop outs, we must explain the important of education and it is benefit not only to the children, but also to their parents. By doing so, we can establish an educated pure generation.

♣ ♣ ♣

# ஞாபகம்



***வைத்திய கலாநிதி செ. கண்ணதாசன்***
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*மருத்துவ பீடம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

வாழ்க்கையிலோ அல்லது பரீட்சையிலோ நாம் வெற்றியடைவது என்பது, சரியான தகவலை அல்லது சரியான ஆற்றலை, சரியான வேளையில், சரியான முறையில் பயன்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. தகவல்களை அல்லது ஆற்றல்களை கருவறையில் தொடங்கி கல்லறை செல்லும்வரை கற்றுக்கொள்கிறோம். இயற்கை, சூழல், பாடவிதானம், ஊடகங்கள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றிலிருந்து நாம் பலவற்றைக் கற்றுக் கொள்கிறோம். பொதுவாக எல்லோருக்கும் சந்தர்ப்பங்கள் சமமாகவே இயற்கை அல்லது இறைவனால் வழங்கப்படுகின்றபோதும்இ ஒருசிலரே வாழ்க்கையில் அல்லது பரீட்சைகளில் வெற்றிபெற ஏனையோர் பின் தங்குகிறோம். நாமும் அந்த ஒருசிலர் வரிசையில் இடம்பிடிப்பது எவ்வாறு என்பதே எம்முன் எழுந்துநிற்கும் மாபெரும் வினாவாகும்.

இத்தகைய வெற்றியில் பாரிய பங்களிப்புச் செய்வது எமது ஞாபக சக்தியே ஆகும். எனவே, ஞாபகசக்தி என்றால் என்ன? அது எவ்வாறு உருவாக்கப்படுகிறது? அதனை எவ்வாறு நாம் விருத்தி செய்யலாம் என சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

தகவல்களை அல்லது அனுபவங்களை பெற்று சேமித்து வைத்து மீளப்பயன்படுத்தும் ஆற்றலையே ஞாபக சக்தி எனலாம்.

மூளையே ஞாபகசக்திக்குப் பொறுப்பாக விளங்கும் எமது உடலின் பகுதியாகும். கோடிக்கணக்கான நரம்புகளைக் கொண்டது. இந்நரம்புகள் நரம்பிணைப்பின் மூலமாக ஏனைய நரம்புகளுடன் தொடர்பு கொள்கின்றன. ஞாபசக்திக்குப் பொறுப்பான நரம்புகள் தமக்கிடையே புதிய நரம்பிணைப்புக்களைத் தோற்றுவிப்பதன் மூலமும், புதிய நரம்புகளைத் தோற்றுவிப்பதன் மூலமுமே ஞாபகசக்தியானது உருவாகிறது.

ஞாபகசக்தியினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. புலன் ஞாபகம் (sensory memory)
2. குறுகிய/தொழிற்படு ஞாபகம் (short term / working memory)
3. நீண்டகால ஞாபகம் (long term memory)

## புலன் ஞாபகம் (sensory memory)

தகவல்களை எமது ஐம்புலன்களினூடாகப் பெற்றுக்கொள்கிறோம். பெரும்பாலும் கண் (பார்த்தல்), காது (கேட்டல்) மூலமாகவே தகவல்கள் எம்மை வந்தடைகின்றன. பார்த்த காட்சியிலிருந்த கண்ணோ அல்லது கேட்ட ஒலியிலிருந்து காதோ அகற்றப்பட்ட பின்னரும் அக்காட்சி அல்லது ஒலி ஞாபகத்திலிருத்தலையே புலன் ஞாபகம் என்பர்.

ஒரு சில செக்கன்களே இந்த ஞாபகம் நீடிக்கும். எத்தனையோ காட்சிகளும் ஒலிகளும் எம்மைச்சூழ எழுந்தாலும் எம்மைக் கவர்பவைகளையே நாம் பார்க்கிறோம் அல்லது கேட்கிறோம் அதாவது கவனிக்கிறோம். ஏனையவை கவனிக்கப்படாமலேயே சென்று விடுகின்றன.

இந்த ஞாபகத்தில் உள்ளெடுக்கப்படும் தகவல்களே அடுத்த கட்டமான குறுகிய / தொழிற்படு ஞாபகத்தினுள் நுளைகின்றன. கணனியின் விசைப்பலகைக்கு (key board) இதனை ஒப்பிடலாம்.

## குறுகிய/தொழிற்படு ஞாபகம் (short term / working memory)

“இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறேன்” “காலையில் என்ன சாப்பிட்டேன்” என்ற தகவல்களை எமக்குச் சொல்வது குறுகிய/தொழிற்படு ஞாபகம் ஆகும். எமது அன்றாட நடவடிக்கைகள் இந்த ஞாபகத்தின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. புலன் ஞாபகத்தினதும் நீண்ட கால ஞாபகத்தினதும் பாலமாகத் தொழிற்படுவது இதுவே. இதனாலேயே இதனை தொழிற்படு ஞாபகம் என்பர். சிந்தனை அல்லது கற்பனை செய்தல், கணித சமன்பாட்டினைத் தீர்த்தல், குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புதல், நடன அளிக்கை செய்தல் போன்ற நிலைமைகளில் தொழிற்படுவது இதுவே. ஒரு சில செக்கன்களிலிருந்து ஒரு சில மணிநேரம் வரை இது நீடிக்கலாம். மீட்டல் (rehearsal) மூலம் இந்த கால அளவினைக் கூட்டிக்கொள்ளலாம்.

இதனது கொள்ளளவானது 7 ± 2 என்பதாகும். ஒரே நேரத்தில் 7 ± 2 வித்தியாசமான தகவல்களை எம்மால் கையாள முடியும். இவர்களையே தசாவதானி, அட்டாவதானி என்போம்.

தகவல் எந்தளவு பெரியதாகவோ சிக்கலானதாகவோ இருந்தபோதிலும் அதனை 7 ± 2 அர்த்தமுள்ள துண்டுகளாக்குகின்றபோது எம்மால் அதனைக் கையாளமுடியும்.

உ-ம் ROWCIDKGBCIAFBI இதனைப்பின்வருமாறு ஞாபகத்தில் வைத்திருக்கலாம் RAW,CID,KGB,CIA,FBI அர்த்தமுள்ள 5 துண்டுகளாக்கப்பட்டுள்ளது.

0212222073 இதனைப் பின்வருமாறே ஞாபகம் வைத்தல் வேண்டும்.

021, 222, 2073

புறக் குழப்பங்களால் (disturbances) இந்த ஞாபகசக்தி பாதிக்கப்படுகின்றது.

இவ்வாறாக, எவரொருவர் அதிக தகவல்களை, அதிக நேரம் தொழிற்படு ஞாபகத்தில் வைத்திரக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவராவார்.

இந்த குறுகிய/தொழிற்படு ஞாபகத்தில் தகவல்களை திரும்பத்திரும்ப ஒத்திகை பார்க்கின்றபொழுது (repetition) அவை நீண்டகால ஞாபகத்திற்குச் செல்கின்றன. கணனியில் "RAM" ற்கு இதனை ஒப்பிடலாம்.

### நீண்டகால ஞாபகம் (long term memory)

கணனியின் "Hard Disc"ற்கு ஒப்பிடப்படக்கூடியது. நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடியது. கொள்ளளவில் எல்லையற்றது. சீ.வீ.ராமன், ஐன்ஸ்டீன் போன்ற மேதைகளே 10-15% கொள்ளளவையே பாவித்துள்ளனர். தகவல்களை மீண்டும் மீண்டும் மீட்டுகின்றபோது நீண்டகால ஞாபகத்திற்குச் செல்கின்றன. அங்கே ஏற்கனவே உள்ள தகவல்களுடன் தொடர்புபட்டதாயினும் எமக்குத்தேவையென நாமாகத் தேடிப் பெற்ற தகவலாயினும் உணர்வுபூர்வமான தகவலாயினும் நீண்டநாள் ஞாபகத்தில் பதிதல் இலகுவாகிறது.

நீண்டநாள் ஞாபகம் பிரதானமாக இருவகைப்படும்

1. வெளிப்படையான ஞாபகசக்தி (Explicit memory)
2. உள்ளான ஞாபகசக்தி (Implicit memory)

### வெளிப்படையான ஞாபகசக்தி (Explicit memory)

இதனையே பொதுவாக ஞாபக சக்தி என்கிறோம். முயன்று ஞாபகத்திற்கு கொண்ட வருபவை. இதனை மேலும் இருவகையாகப் பிரிப்பர்

1.1 தகவல்கள் சம்பந்தமான ஞாபகம் (semantic memory)- பெயர்கள், காரண காரியங்கள் போன்றவற்றை ஞாபகம் வைத்தல்


1.2 நிகழ்வுகள் சம்பந்தமான ஞாபகம் (episodic memory)- நிகழ்வுகளை ஞாபகம் வைத்தல். உ–ம் பரிசளிப்பு விழாவில் பரிசு பெற்றமை

### உள்ளான ஞாபகசக்தி (Implicit memory)

எம்மையறியாமலே தொழிற்படும் ஞாபக சக்தி. எமது ஆற்றல்களும் செயன்முறைகளுமாகும்.

உ–ம் வாகனம் ஓட்டுதல், வாத்தியக் கருவிகளை இசைத்தல்.


நீண்டநாள் ஞாபகசக்தி மிகவும் அத்தியாவசியமானதாகும். தொழிற்படு ஞாபகமானது இதிலிருந்தே தகவல்களையும் பொறிமுறைகளையும் பெற்று எம்மைத் தொழிற்பட வைக்கிறது.




உறக்கத்தின் போதே ஞாபகசக்தியானது பலமடைகின்றது (consolidate). ஆழ்ந்த உறக்கத்தில் இவ்வாறு நிகழும்போதே கனவு தோன்றுகிறது.

நீண்டகால ஞாபகத்திலிருந்து சில தகவல்களை விரைவாகப் பெற்றிருப்போம். மீண்டும் மீண்டும் எம்மால் பயன்படுத்தப்படும் தகவல்கள் விரைவாகக் கிடைக்கும். நீண்டநாள் பாவிக்காது விட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ள நீண்டநேரம் எடுக்கும்.

நீண்டகால ஆராய்ச்சிகளின் பின் ஆகக்குறைந்தது எவ்வளவு நாளுக்கொருதடவை எவ்வளவு நேரம் மீட்டல் செய்யவேண்டும் என முடிவுக்கு வந்துள்ளனர்.




நாம் கற்ற பாடங்கள் 1 மணிநேரத்தில் மறக்கத் தொடங்கி, 24 மணிநேரத்தில் 50 வீதத்திற்கு மேல் குறைவடைந்து, 48 மணிநேரத்தில் 20 வீதத்திலும் குறைவாகவே ஞாபகம் நிற்கும்.

இதனைத் தவிர்க்க, 2ஆம் நாள் 10 நிமிடமும் 7ஆம் நாள் 5 நிமிடமும் 30ஆம் நாள் 2–4 நிமிடமும் மீட்டால் கற்ற பாடங்களை மறக்காது ஞாபகத்தில் வைத்திருக்க முடியும்.

எனவே ஆரம்பத்தில் படிக்காது விட்டு கடைசிநேரத்தில் ஒரேயடியாகக் கற்பதில் பயனில்லை. கற்கின்ற போதே உடனே மீட்டு வந்தால் இறுதியில் வருந்தத்தேவையில்லை.

கற்பிக்கின்ற முறை கவர்ச்சிகரமானதாக (கற்பித்தற் துணைச்சாதனப் பயன்பாடு), அமைகின்ற போதும், இது எமக்கு மிகவும் அவசியம் என மாணவர்கள் உணர்கின்ற போதும் கவனம் எடுக்கின்றனர். இதனால் புலன் ஞாபகம் உருவாகி இறுதியில் நீண்ட கால ஞாபகசக்தி கூடுகிறது. கற்கும் சுழல் விரும்பத்தக்கதாக அமைதலும் அவசியம்.

குறுகிய/தொழிற்படு ஞாபகத்தினை வளர்த்துக் கொள்ள மீட்டல் மிக அவசியம். தகவல்களை அர்த்தமுள்ள துண்டுகளாக்கிப் பழகுதல் வேண்டும். தகவல்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திப் பார்த்தலும் இதனை வளர்க்க உதவும். மாணவர்கள் இந்த ஞாபக சக்தியினை நம்பியே முதல்நாள் அல்லது காலையில் படித்துவிட்டுப் பரீட்சை எழுதுகின்றனர்.

நீண்டகால ஞாபகசக்தியை வளர்க்க மீட்டலுடன் போதிய உறக்கம் அவசியம். அதிக நித்திரை விழித்தல் இந்த ஞாபக சக்தியைப் பாதிக்கும்.

ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்திப்படித்தல் மிகவும் அவசியம். இன்றைய ஆராய்ச்சி முடிவுகளின்படி நல்ல ஞாபக சக்தியுள்ளவர் என்போர் நல்ல தொடர்பு படுத்தக்கூடியவர்களே (good associators) ஆவார்.

மேலும், உடலையும் மூளையையும் நல்ல ஆரோக்கியமான நிலையில் பேணுதல் வேண்டும். ஆரோக்கியமான நிறையுணவு, போதிய உடற்பயிற்சி, நகைச்சுவை உணர்வு போன்றன ஞாபகசக்தியைத் தூண்ட உதவும்.

உடலிற்குப் பயிற்சி செய்வது போல மூளைக்கும் பயிற்சி கொடுக்க வேண்டும். எவ்வாறு தசைகள் பலம்பெறுமோ அவ்வாறே மூளையும் பலம் பெறும்.

சதுரங்கம், குறுக்கெழுத்துப்போட்டிகள் போன்றன மூளைப்பயிற்சிக்கு உதாரணங்களாகும்.

ஞாபக சக்தி என்பது பரம்பரை சார்ந்தது அன்று. சூழலின் தாக்கம், எமது முயற்சி என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

இறுதியாக, முயன்றால் முடியாது ஒன்றுமில்லை. எனவே, நாமும் நல்ல ஞாபகசக்கியுள்ளவராகி, வாழ்க்கையில் முன்னேறி, எமது பெற்றோருக்கும் பாடசாலைக்கும் நல்ல பெயரைத் தேடிக்கொடுப்போமாக.

♣ ♣ ♣

# அந்த ஒன்பது வருடங்கள்

***செல்வன் ச. சாரங்கன்***
*பழைய மாணவன்,*
*மருத்துவ பீட இறுதியாண்டு மாணவன்*

பழையதாகும் போது அதிக மதிப்பைப் பெறுபவை சிறந்த நட்பும், நல்ல நூல்களுமே. அந்த வகையில் நாம் சிறந்த நட்பைப் பெறுவது பாடசாலைக் காலத்திலேயே. இப்பருவத்தில் கிடைக்கும் நட்பு எதிர்பார்ப்பற்றது. எதையும் செய்யக் கூடியது. நாம் ஒருநிலைக்கு வந்த பின் கிடைக்கும் நட்புக்கள் பொதுவாக ஏதாவது எதிர்பார்ப்பின் அடிப்படையிலோ அல்லது கட்டாயத்தின் அடிப்படையிலோ அமைந்திருக்கும். இவ்வகை நட்பில் ஆழம் அதிகம் இருப்பதில்லை. இது நிலைப்பதுமில்லை. அந்த வகையில் கல்லூரிப்பருவமானது ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படைக் கல்வியையும் நல்ல பழக்கவழக்கங்களையும் பெற்றுத் தருவதுடன் சிறந்த நண்பர்களையம் பெற்றுத்தருகிறது.

இது 2005ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் கல்லூரிப் பருவ நினைவுகள்.

1997ஆம் ஆண்டு எம்மை அரவணைத்துக் கொண்டது விக்ரோறியாக் கல்லூரி. ஒன்பது வருடங்கள் தங்கியிருந்தோம். புதியவர்கள் வரவால் பழையவர்கள் பிரிந்து விட்டோம். தரம்-6. புதிய சூழல், புதிய நண்பர்கள், புதிய பாடங்கள், புதிய ஆசிரியரிகள், மகிழ்ச்சியுடன் பயணம் ஆரம்பமாகியது. இடையில் 5ஆம் தர புலமைப்பரீட்சைப் பெறுபேறு வெளியாகும். பரீட்சை எழுதியவர்களைவிட பெற்றவர்களே அதிகம் பரபரப்படைவர். (இங்கு பெற்றோர் ஒன்றைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அதாவது சித்தி அடைந்தவர்களைப் பாராட்டும் அதே வேளை சித்தியடையாத மாணவர்களைத் தட்டிக்கொடுக்க வேண்டும். ஏனெனில் ஒரு மாணவனின் திறமையும் எதிர்காலமும் இப்பரீட்சையால் தீர்மானிக்கப்படுவதில்லை.)

தரம் 7, 8, 9 பாடசாலைச் சூழல் பழகிவிட்டது. நாமும் இப்போது seniors ஆகிவிட்டோம். புதிதாகத் தரம் 6இல் சேரும் மாணவர்களை வேடிக்கை பார்ப்பது, முடிந்தால் மிரட்டுவது, கல்லூரி விழாக்கள், விளையாட்டுக்கள் போன்றவற்றில் பங்குபற்றுவது என மிக மகிழ்ச்சியாகக் கல்லூரிக் காலம் கழிந்தது. இடையிடை தலையிடி போலக் கணிப்பீடுகள் வருவது தவிர்க்க முடியாததே. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாணவருக்கும் இக்காலப் பகுதி ஒரு பொற்காலமாகும்.

இன்றும் நமக்குக் கல்லூரியில் ஞாபகச் சின்னமாக உள்ளவை இக்காலப்பகுதியில்

(1998) பாலர் மண்டபத்துக்கருகில் நடப்பட்ட அசோக் மரங்கள் ஆகும். இவை நம்மால் நீர் ஊற்றி வளர்க்கப்பட்டவை யாகும். இக்காலப் பகுதியில் கல்லூரியின் பிரதான மண்டபத்தின் கூரை செப்பனி டப்பட்டது. அதில் உள்ள ஒவ்வொரு ஓட்டிலும் எமது நண்பர்களின் வியர்வை உள்ளது. இக்காலப்பகுதியிலேயே(2000) எமது கல்லூரியில் தோற்பந்து துடுப்பாட்டப் போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கான pitch போடுவதில் எமது மாண வர்களின் பங்கு மறக்கமுடியாததாகும்.

தரம் 10, 11 க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குரிய தயார்ப்படுத்தல்கள் ஆரம்பமாகி விடும். (இதுவரை தனியார் கல்விநிறுவனங்களுக்குச் செல்லாது அதிஷ்டவசமாகத் தப்பித்திருந்த 'ஓரிரு' மாணவர்களும் அங்கு அனுப்பப்படுவர்.) ஒன்றாகப் பயணித்து வந்த நாம் சாதாரண தரப் பரீட்சை முடிவில் பிரிக்கப்பட்டோம். ஆனாலும் எம்மைப் பிரித்தது, வெறும் வகுப்பறைச் சுவர்கள் தான்.

உயர்தரத்தில் சுமார் இரண்டரை ஆண்டுகள் சுமையான கல்வி. இடையில் (2004டிசம்பர்26) சுனாமியையும் எதிர் கொண்டோம். இதனால் பரீட்சைக்காக இரண்டு மாதங்கள் காத்திருந்தோம். 2005 உயர்தரப் பரீட்சையுடன் எமது கல்லூரி வாழ்க்கை முடித்து வைக்கப்பட்டது. நாமும் பாடசாலையின் பழைய மாணவர்களாகி விட்டோம். மீண்டும் வருவதற்கு ஆசைப் படுகிறோம். ஆனாலும் காலம் கட்டளை யிடுகிறது முடியாதென்று.

2005ஆம் ஆண்டு எமது கல்லூரி யிலிருந்து சுமார் 40 மாணவர்கள் பல் கலைக்கழக அனைத்துப் பீடங்களிற்கும் தெரிவாகினர். இந்தச் சாதனைக்குச் சொந் தக்காரர் எமது கல்லூரியில் அர்ப்பணிப் புடன் கல்வி கற்பித்த, கல்வி கற்பிக்கிற ஆசிரியர்கள் மட்டுமே. இனி வருபவர்கள் இச்சாதனையை முறியடிக்க வேண்டும்.

"பேச்சை விட செயல்கள் அதிக
சத்தத்தை ஏற்படுத்துகின்றன."

♣ ♣ ♣



அறியாமை வெட்கப்படவேண்டிய ஒன்றுதான்.
ஆனால் அறிந்துகொள்ள விருப்பமில்லாமை
அதைவிடப் பெரிய வெட்கக்கேடாகும்.

- பென்ஜமின் ஃபிராங்ளின்

# மலர்க்குழுவினர்கள்



# கல்விசாரா அலுவலர்கள்





மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்
Pakiyaratnam Hardware Stores
பாக்கியரட்ணம் ஹாரட் வெயார் ஸ்ரோர்ஸ்
GENERAL HARDWARE MERCHANTS
163, 165 Main Street, Chankanai.
T.P : 021 321 2713
Branch :
THARAN TRADERS
130, 132 Stanley Road, Jaffna.
Tel : 021 222 2664




ஆரம்பியுங்கள்
சேமியுங்கள்
வெல்லுங்கள்
1961 - 2011
50
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
உங்கள் குடும்பத்தின் புதிய உறவின் வருகைக்கு
முதலாவது அன்பளிப்பாக மக்கள் வங்கியின்
இசுறு உதான
கல்விச் சிறார்களின் வளமான எதிர்காலத்துக்கு
சிசு உதான கணக்கு
இளமைப் பராயத்தில் உயர் கல்வியைத் தொடரவும்,
வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும்
YES இளவயதினர் கணக்கு
பெறுமதியான பல்கலைக்கழக புலமைப் பரிசிலை வழங்கும்
YES FUTURE STARS கணக்கு
அதிஸ்டங்களை அள்ளித்தரும் மகளிருக்கான
வனிதா வாசனா கணக்கு
Isuru Udana
Sisu Udana
es
Young Executive Savings
PEOPLE'S BANK
உங்கள் வயதிற்கும், தேவைக்குமான பொருத்தமான விதத்தில் மக்கள் வங்கியில்
சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து வாழ்க்கையின் வெற்றிப் பாதைக்கு பிரவேசியுங்கள்.

**NSB**

## தேசிய சேமிப்பு வங்கி
### யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை

வங்கித் துறையில் மிக உயரிய நன்மதிப்பைப் பெற்ற ஒரு வங்கியாக பல வெற்றிகளை வென்றுள்ள தேசிய சேமிப்பு வங்கி தனது சேவை மூலம் வாழிக்கையாளர்களுக்கு நிறைவான நன்மைகளை வழங்கி வருகின்றது.

சிறுதுணி பெருவெள்ளம் என சேமித்து வாழ்வில் உயர்வுபெற தேசிய சேமிப்பு வங்கியுடன் இன்றே இணையுங்கள்.

- ☆ சின்னஞ்சிறார்கள் முதல் முதியோர் வரைக்குமான கணக்குகள்.
- ☆ உத்தியோகத்தர்களுக்கான சுயதேவைக்கடன் வசதிகள் மற்றும் வீடமைப்புக் கடன் வசதிகள்.
- ☆ ATM, நிலையான வைப்புக்கெதிரான EASY CASH CARD வசதிகள்
- ☆ SMS & Internet Banking வசதிகள்
- ☆ தங்க ஆபரணங்களுக்கான அடகு சேவையில் மிகக்கூடிய தொகை.
- ☆ உங்கள் வைப்புக்களுக்கும் வட்டிக்கும் முழுமையான அரசாங்க உத்தரவாதம்

**சேமிப்பே சிறந்த செல்வம்**

LG

# அபான்ஸ்
## சங்கானை

வட்டி இல்லை
ஜொலி அதிகம்

தவணை முறையில்

சகலவிதமான மின்சார உபகரணங்களையும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.





தொடர்புகளுக்கு:-
**அபான்ஸ் காட்சியறை**
இல. 221, பிரதான வீதி, சங்கானை.
0212250106, 0773763503

Abans

# விஞ்ஞானத்தின் விந்தை

*செல்வி சில்வியா தவநாயகம்*
*க.பொ.த உயர்தரம், கணிதம் (2011)*

வெளியுலகம் தெரியாது!
விழிமூடி வாழ்ந்திட்ட
கோமா சேப்பியன் நியண்டர்தாலிஸை
ரோபோ காட்டி. தவிர
கணனி காட்டி விழிக்க வைத்து
கோமோ சேப்பியன் சேப்பியனாய்
உருவாக்கி உயர்த்தியது விஞ்ஞானம்.
விண்ணாணம் கதைத்து வீண் வம்பு செய்தவரை
மெய்ஞ்ஞானம் புகட்டி
ஞானம் வளர்த்ததும் விஞ்ஞானம்.
உலகம் தன் சம்சாரமாய்க் கருதும்
மின்சாரம் தந்ததும் விஞ்ஞானம்.
கல்யாணம் செய்யும் கவலை வேண்டாமென்று
குளோனிங்கைக் கொடுத்ததும் விஞ்ஞானம்
தட்டையான பூமியினை சீராக உருட்டி
கோளமாய்ச் சுற்றியதும் விஞ்ஞானம்.
குட்டையான மனிதரின் ஜீனினை மாற்றி
நெட்டையாய் மாற்றுவதும் விஞ்ஞானம்.
அகில வாழ்விற்கு ஆதாரம் விஞ்ஞானம்.
அனு ஆயுதம் தந்ததும் விஞ்ஞானம்
நாசாவைத் தந்ததும் விஞ்ஞானம்- ஹிரோசிமா
நாகசாகியை நாசமாக்கியதும் விஞ்ஞானம்.
ஓசோனைக் காட்டியதும் விஞ்ஞானம்-அதனில்
ஓட்டை போட்டதும் விஞ்ஞானம்.
நாகரிகம் காட்டியதும் விஞ்ஞானம் - சாக்கடையாய்
நாட்டை மாற்றுவதும் விஞ்ஞானம்
டால்ற்றனைத் தந்ததும் விஞ்ஞானம் -சாள்ஸ்
டார்வினைத் தந்ததும் விஞ்ஞானம்

உயிர் பற்றிச் சொன்னதும் விஞ்ஞானம் - இன்று
உலகை ஆள்வதும் விஞ்ஞானம்.
திரும்பும் திசையெங்கும் - விழி
காணும் பொருளெங்கும்
அகில உலகெங்கும் - கடந்து
அண்ட வெளியெங்கும் வாழ்ந்து வருவதும் - விடாது
நிறைந்து இருப்பதும்
மெய்ஞானத் தாய் வளர்த்த
விஞ்ஞான மகவேயாம்.

♣ ♣ ♣

ஒரு சராசரி மனிதன் தனது சக்தியிலும் திறமையிலும் வெறும் 25% மட்டுமே தனது வேலைக்குச் செலவழிக்கிறான். தங்களது திறமையில் 50%க்கு மேல் செலவழிப்பவர்களை இந்த உலகமே பாராட்டுகிறது. 100% திறமையையும் அர்ப்பணிப்பவர்களை இவ்வுலகம் தலைவணங்கிப் போற்றுகிறது.

**- ஆன்ட்ரூ கார்னெஜி**

Always forgive your enemies -
nothing annoys them so much.
**- Oscar Wilde**



# MY VISIT TO MALAYSIA

*Miss. Gayathri. Thevasuthan*
*Grade 11A*

Every one faces many days during their life span. Some of those days are joyful and some of them are sorrowful and some are unforgettable throughout their life.

In such way I also have an unforgettable, joyful day. I was born in Bahrain which is near to the Saudi Arabia. During my one year old I came to Sri Lanka. After that I didn't go to any other foreign countries. But last year I got an opportunity to visit abroad. That country is Malaysia. Before I share my experience with you, I thank all the well-wishers who guided me to join in that joyful journey.

Now a days, many people thought that the children who engage in the extracurricular activities are push back in their studies, and these extracurricular activities spoil the education of their children. Children get many advantages through extracurricular activities. But people do not understand and agree it.

As I'm a student, I took part in many extracurricular activities like Girl Guides, English day, Tamil day, Sports and etc. As a Girl Guide, I got an opportunity to visit abroad.

During last December 2009 International Girl Guides Commissioner of Malaysia visited Jaffna and she regretted that the Jaffna Tamil students didn't take part in the international celebrations. Mostly Sinhalese only took part in those celebrations. She promised that she would take some Jaffna Guides to Malaysia through her institution.

Now I come to express my experience. We have the Guides meeting on Thursdays. One day our guider said that our district Girl Guide Commissioner asked some names of students to visit Malaysia. We all laughed at that moment and we expressed our unwillingness to her.

When I came home, I told that to my mother. She discussed with my father and asked me to visit there and told the advantages that could be gained. I told my hatred to her. But our former principal Mrs.A.Vellupillai, class teacher and my English teacher Mrs.S.Thevarajah, Guiders and some other teachers compelled and induced me to visit there.

According to their encouragement my mind was changed and I decided to visit Malaysia. After some weeks I was called to face an interview and I was selected in that interview, and I was given training by our district Commissioner.

According to the promise of Miss.Jeyadevi Subramanium who is the International Girl Guides Commissioner of Malaysia, thirty students from ten schools who were selected at the interview and four Guiders got an opportunity to visit Malaysia with the leadership of our Jaffna District Girl Guides Commissioner, Mrs.N.Tharmakulasingam.

We started our journey on 27.08.2010 at 10'o clock from Jaffna and we reached Negombo Cultural hall building at 9.45pm.

After that on 28.08.2010 at 8.30am, we left to Malaysia from Kaddunayake International Airport. While we were flying in an aero plane we imagined about the country Malaysia.

We reached the airport in Kualalumpur which is the capital of Malaysia at 12.30pm. At the outside of the airport, lots of Malaysian Commissioners, Guiders, and Guides welcomed us by waving their hands and by handshakes. Then we climbed on a bus and went to the building which is owned for Association of Girl Guides situated at Javan Daththo Abdulla in Seremban.

In that building we got lots of various kinds of gifts and meals, we met lots of new Malaysian Girl Guides friends.

On 29.08.2010 we had a bazaar. On that bazaar we sold some items like tea, chilli powder, dry chillies, rice flour, winnowing fan, jaggery, dry fish and etc which were taken from Jaffna. During that bazaar we got Malaysian currency which is known as Ringid. We met lots of Jaffna people and Sri Lankan people who live in Malaysia.

On 30.08.2010 and 31.08.2010 we took part in the National day Celebration of Malaysia. On that day's night the National Flag of the Malaysia was hoisted and National Anthem was sung by Girl Guides of Malaysia.

On 01.09.2010 we visited to Tunku Kurist College. In that college we were welcomed with band music. Every one of us was given a new Malaysian Girl Guide as a partner. I got Miss.Shshizatul amiza Sharmin as a partner. She showed her class room, school's library, computer lab, dance room, sports room and other school surroundings. She taught me to do some handicrafts by using colour papers and paper ribbons.

**D**uring the period from 02.09.2010 to 07.09.2010 we saw and visited many places like Museum of Negeri Sembilan, Nottingham university, Tamil Convent School, Science Secondary School, Kualalumpur Girl Guides Association's building, Girl Guides Shop, PC club, Battucave Murugan Temple, Twin Tower, Cultural Buildings, Prime minister's house of Malaysia, Prime minister's office, Girl Guides Chief Commissioner's house, Amman temple, Water Park, Malacca's Portuguese Port, Portuguese Church, Statue of Frensis Servier, NS Sports Council, International Girl Guides Commissioner of Malaysia's house and etc.

**W**e also took part in an event known as camp fire. During that event we expressed our talents like singing, dancing, acting, and etc by doing group and individual events. We also expressed our cultural items through dances and dramas. We got an opportunity to see Chinese and Japanese dances. We exchanged some small gift items like stickers, key tags and etc with Malaysian Girl Guides.

**I** got an immense opportunity there. That is I took my dinner at Prime Minister's House and another day I took my dinner at Chief Commissioner's house.

**T**hrough this wonderful journey I got a chance to communicate with Malay, Chinese, Japanese and Indian Girl Guides. I got to know to made lots of handicrafts, about the traditions, customs of Malaysia, types of Chinese and Japanese dances, Different kinds of delicious food items, sweets, fruits, vegetables, clothes and etc.

**A**nd also I practice some good behavioural habits like punctuality managements, helping others, work with group, coordination, live with harmony with multi religious, rational people, do our own work and common works efficiently, leadership, respecting the leadership, appreciating others' talents and skills, understand and respect the different customs, performs our duties without neglecting, respecting others and etc.

**W**e came to Sri Lanka on 08.09.2010 unwillingly. I expressed my enjoyable experiences to my parents, teachers, friends and relatives after I came from Malaysia.

**F**inally I'd like to say one thing. Even if my former principal, teachers, guiders and class teachers didn't induce me to visit Malaysia, I could not have told this wonderful experience to you. So I thank all who were guided me to join in that wonderful and enjoyable visit to Malaysia.

♣ ♣ ♣

# கற்றலை வழங்கும் தாயே! சுழிபுரம் விக்ரோறியாவே!

## பற்றுடன் அகவை நூற்றிமுப்பத்தைந்தும் கடந்தனை நீ வாழ்வாய் வாழி!

*ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம்*
*பழைய மாணவன்*

சுந்தரத் தமிழர் மனதில் சுடர் மிகு கருவாய்த் தோன்றி
செந்தமிழ்ச் சுழிபுரத்தாய் மடியினிற் பிறந்தே நீயும்
பைந்தமிழும் வளர்த்தாய் தாயே சுழிபுரம் விக்ரோறியாவே!
வந்தகவை நூற்றிமுப்பத்தைந்தும் கடந்தனை நீ வாழ்வாய் வாழி.

அன்னியர் ஆட்சிக்காலம் மக்கள் அடிமையாய் துவண்ட நேரம்
எண்ணியே பெரியோர் உன்னை எளிதுறப் பெற்றதாலே
கண்ணென ஆனாய் தாயே சுழிபுரம் விக்ரோறியாவே!
திண்ணிய அகவை நூற்றிமுப்பத்தைந்தும் கடந்தனை நீ! வாழ்வாய் வாழி.

ஆங்கிலக் கல்வி தன்னை ஆழமாய்ப் பதித்து எங்கள்
தூங்கிய சமூகந் தன்னைத் துடித்தெழ வைப்பதற்காய்
பாங்குற எழுந்தாய் தாயே சுழிபுரம் விக்ரோறியாவே
ஈங்ககவை நூற்றிமுப்பத்தைந்தும் கடந்தனை நீ! வாழ்வாய் வாழி.

தாழ்வுற்று வறுமை மிஞ்சி கல்வி நிலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்றதாமோர் மாணவ சமூகந் தன்னை
வாழ்விக்க வந்த தாயே சுழிபுரம் விக்ரோறியாவே!
நீழ் அகவை நூற்றி முப்பத்தைந்தும் கடந்தனை நீ! வாழ்வாய் வாழி.

படியேறி வந்தோர் தன்னை மடியில் நீ சுமந்ததாலே
விடியற்கு விடியல் உன்னைப் பிள்ளைகள் சுமத்தல் கண்டு
கொடியேந்தி நிற்கும் தாயே சுழிபரம் விக்ரோறியாவே
நெடிதுயரகவை நூற்றி முப்பத்தைந்தும் கடந்தனை நீ வாழ்வாய் வாழி.

வானுயர் கல்வி மேன்மை வளர்கின்ற விளையாட்டுக்கள்
தேனுயர் ஒழுக்க சீலம் தெவிட்டாத கலை பண்பாடு
தானுமே சுமக்கும் தாயே சுழிபுரம் விக்ரோறியாவே!
கோனுயரகவை நூற்றிமுப்பத்தைந்தும் கடந்தனை நீ! வாழ்வாய் வாழி.


பெற்றதோர் பிள்ளையுன்னை பேணியே காக்கும் வேளை
உற்றநற் சோதரர்கள் உறுதுணை நிற்கும்வேளை
கற்றலை வழங்கும் தாயே சுழிபரம் விக்ரோறியாவே!
பற்றுடன் அகவை நூற்றி முப்பத்தைந்தும் கடந்தனை நீ வாழ்வாய்வாழி.

பள்ளியில் படித்திடுதல் பலகலையில் படித்திடுதல்
இவையெல்லாம் படிப்புக்களில் மேலான படிப்புக்கள் தான்
ஆனாலும் அதைவிடவும் மேற்படிப்பு எதுவென்றால்
ஒருவர் படிப்பதற்கு காரணமாய் இருந்தவற்றைப் படிப்பதுதான்.

♣ ♣ ♣

All the religions of the world, while they may differ in other respects, unitedly proclaim that nothing lives in this world but Truth.

**- Mohandas Gandhi**



நீங்கள் ஒரு நேர்மையான மனிதராக ஆகிவிடுங்கள், உலகில் ஒரு போக்கிரி குறைந்துவிட்டான் என்று நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

**- தாமஸ் கார்லைல்**

உலகிலுள்ள மிகச் சிறந்த, மிக அழகான பொருள்களைக் காணமுடியாது. தொட்டுணரக்கூட முடியாது. அவ்றறை இதயத்தால் உணர வேண்டும்.

**- ஹெலன் கெல்லர்**

# சுனாமி

***செல்வி. கார்த்திகா மகேஸ்வரன்***
*க.பொ.த உயர்தரம், கணிதம் (2011)*

சுனாமி எனும் ஜப்பானியச்சொல் துறைமுக அலை எனப் பொருள்படும். ஜப்பானிய மொழியில் tsu என்பது துறை முகத்தையும் nami என்பது அலையையும் குறிக்கும். முன்னைய காலங்களில் சாதாரண மக்களால் இவ்வலைகள் சந்திர, சூரியர்களின் ஈர்ப்பு சக்தியினால் ஏற்படும் வற்றுப் பெருக்க அலைகள் எனவும் விஞ்ஞானிகளினால் புவிநடுக்க கடல் அலைகள் எனவும் அழைக்கப்பட்டது. மேலும் முன்னைய காலங்களில் விஞ்ஞானிகளால் உபயோகப்படுத்தப்பட்ட புவிநடுக்க கடல் அலைகள் என்ற சொற்பிர யோகமும் தவறான கருத்தையே தருகிறது. ஏனெனில் சுனாமி ஏற்படுவதற்கு புவி நடுக்கம் மட்டுமே காரணமாக அமைவதில்லை.

சுனாமி என்பது பொதுவாக சமுத்திரத்தில் ஏற்படும் தாக்கக் குழப்பம் காரணமாக நீர்நிரல் தொகுதி ஒன்று மேல்நோக்கி நகர்த்தப்படுவதால் உருவாக்கப்படும் அலைத்தொடர் / தொடர்ச்சியான அலைத் தொடர் என வரைவிலக்கணம் கூறலாம். சுனாமி ஏற்படுவதற்கு புவிநடுக்கங்கள், எரிமலை வெடிப்புக்கள், கடற்படுக்கையில் ஏற்படும் நிலச்சரிவுகள், கடலின் அடியில் ஏற்படும் எரிமலை வெடிப்புக்கள், விண்கற் தாக்கங்கள் அணுகுண்டுப் பரிசோதனைகள் போன்ற பல இயற்கை செயற்கை நிகழ்வுகள் காரணங்களாக அமைகின்றன.


சுனாமியின் தோற்றத்திற்கான பொதுவான காரணம் நீரடியில் ஏற்படும் நிலநடுக்கமாகும். இது புவித்தட்டுக்கள் எதிரெதிர்த்திசையில் அசைவதால் தொடுகையுறும் பகுதியில் ஏற்படும்




உராய்வு, பாரமான நிலத்தட்டு பாரங் குறைந்த தட்டொன்றின் மீது வழுக்குதல் நிலத்தட்டுக்கள் மோதும் போது ஒன்றின் மீது ஒன்று எழுதல் போன்ற நிகழ்வுகளால் ஏற்படுகின்றன. இவ்வாறான நிகழ்வுகளால் வெளிவிடப்படும் பெருமளவு சக்தி நீருக்கு கைமாறுகிறது. இச்சக்தி சமுத்திர நீரை மேல் நோக்கி சாதாரண கடல் மட்டத்திற்கு மேல் தள்ளும். இதுவே சுனாமியின் தோற்றமாகும். பெருமளவு நீர்த்தொகுதியை அதன் சமநிலையிலிருந்து இடம்பெயர்த்தும் குழப்பத்தினாலும் சுனாமி ஏற்படலாம்

எனினும் கடல் கடல்படுக்கை நிலநடுக்கமே பயங்கரமான சுனாமியைத் தோற்றுவிக்கும். சுனாமி மிக உயர்வான

நீண்ட அலை நீளமுடையது. ஆழமான கடலில் சுனாமியின் உயரம் 1m வரை அறியலாம். ஆழமான கடலில் சுனாமிகள் வெளிப்படையாகத் தெரியக்கூடியன அல்ல. இதனால் ஆழ்கடலில் சுனாமியைக் கண்டறிதல் மிகவும் கடினம். கடலில் அலைகள் உருவாவதற்கு ஈர்ப்புவிசை, ஆழ்கடல் செயற்பாடு, வளிமண்டல அமுக்கம் போன்றன துணைபோகின்றன. எனினும் அடிப்படைக் காரணியாக விளங்குவது காற்று ஆகும். சுனாமி அலையின் நீளம் உயர்வாக இருப்பதன் காரணமாகவே அது நீரலையாக தொழிற்படுகின்றது.



சுனாமி கடலின் ஆழமான பகுதிகளிலிருந்து ஆழம்குறைந்த கரையை நோக்கி வரும்போது, நீரின் ஆழம், கரையின் வடிவம் போன்றன சுனாமியின் தோற்றத்தையும், நடத்தையையும் பாதிக்கின்றன. சாதாரண நீர் அலைகள் போன்று சுனாமி கரையை அண்மிக்கும் போது பல காரணங்களினால் தனது சக்தியின் ஒரு பகுதியை இழக்கிறது. கரையில் சக்தி தெறிப்படைதல், கடல் படுக்கையில் ஏற்படும் உராய்வு போன்ற காரணங்களால் சக்தி இழப்பீடுகள் ஏற்படுகின்றன. இவ்வாறான இழப்புகளுக்கு மத்தியிலும் கடலோரங்களை மிகக்கூடிய வலுவுடன் தாக்கும் சக்தியை சுனாமி கொண்டிருக்கும்.

சுனாமி கடற்கரை மண்ணை வன்மையாக அரித்து அங்கு காணப்படும் மரங்களனைத்தையும், வேருடன் பிடுங்கி எறியக்கூடிய வலிமை வாய்ந்தது. உயர்வேகத்தில் கரையைத் தாக்குவதால் அது செல்லும் பாதையில் உள்ள வீடுகள், கட்டடங்களைத் தரைமட்டமாக்கக்கூடியது. சுனாமி தரையிலிருந்து கடலுக்கு மீளும்போது அவை தாக்கிய பிரதேசத்தில் உள்ள பொருட்களையும் தன்னோடு இழுத்துச் செல்லும். கடற்கரையில் ஆறொன்று சங்கமிக்கும் எனில் அவ்வாறினூடாக சுனாமி உள் நாட்டினுள் வெகுதூரம் சென்று பெரும் வெப்பத்தை ஏற்படுத்தி பாழாக்கக்கூடியது. இவ்வாறான பல பாதிப்புக்கள் சுனாமியால் ஏற்படுகின்றன.

Pacific Tsunami warning centre எனும் அமைப்பு தொடர்ச்சியாக சுனாமி, பூகம்பம் போன்ற நிகழ்வுகள் ஏற்படுவதைக் கண்காணித்து வருகிறது. இது காவாய் தீவுக்கூட்டத்தின் ஏவாக்கடற்கரையில் அமைந்துள்ளது. அலஸ்காவில் அமைந்துள்ள Alaska Tsunami Warning Centre எனும் அமைப்பு ஐரோப்பா, அமெரிக்கா பகுதியில் ஏற்படக்கூடிய சுனாமிகளைக் கண்காணிக்கிறது. இப்பகுதிகளில் கடல் கீழ் புவிநடுக்கங்கள் அடிக்கடி ஏற்பட்ட வண்ணம் இருப்பதால் அதன் முக்கியத்துவம் உணரப்பட்டு இவை அமைக்கப்பட்டு திறந்த சமுத்திர மிதவை

கள் மற்றும் கடல் வற்றுப்பெருக்குமானி போன்ற கருவிகள் சுனாமியை உணர்ந்து அப்பிரதேசத்தில் அமைந்துள்ள நிலையங்களுக்கு தகவல் தரும் வற்றுப்பெருக்கு நிலையங்கள் கடல்மட்ட ஏற்ற இறக்கத்தை அவதானிக்கும். புவியதிர்வு பதிகருவி நிலையங்கள் புவியதிர்வு உயிர்ப்பு உள்ளதா என்பதைப் பதிவு செய்யும். இந்நிலையத்தினர் பூகம்பமானது ரிச்சர் அளவில் 7. 5ஐ தாண்டியுள்ளது என அறிவிப்பார்களாயின் சுனாமி உருவாகி உள்ளதா என்பது கண்டறியப்பட்டு மக்களை வேண்டிய இடங்களில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். சுனாமியை ஆழ் சமுத்திரத்தில் மதிப்பீடு செய்து தகவல் தரும் ஏற்பாடுகள் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது. Deep Ocean Assessment and Reporting of Tsunami தொகுதி ஒன்று சமுத்திரப்படுக்கையில் வைக்கப்பட்டுள்ள அமுக்கப்பதிகருவி ஒன்றையும், Bottom Pressure Recording இலிருந்து மிதப்பைக்கு ஒலி modem மூலம் தரவுகள் அனுப்பப்படும். மிதப்பையிலிருந்து உபகோள் தரவு சேகரிக்கும் தொகுதி ஒன்றின் மூலம் தரவுகள் உரிய அமைப்புகளுக்கு உடனடி நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படும். Deep Ocean Assessment and Reporting of Tsunami தொகுதி 1cm உயரமுள்ள சுனாமியையும் உணரக்கூடிய உணர் திறனை உடையது.


சுனாமி அலைகள் உருவாகத் தொடங்கிய பின் அதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே சுனாமி முன் எச்சரிக்கை நிலையங்களை அமைப்பதன் மூலம் சரியான நேரத்தில் மக்களுக்கு அறிவித்து உயிர் உடைமை சேதத்தை தவிர்த்துக்கொள்ள முடியும்.

♣ ♣ ♣



**Subdue your appetites, my dears, and you've conquered human nature.**

**- Charles Dickens**



# பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள்



# கஜமுகன் ஹாட்வெயர்

# KAJAMUGAN HARD WARE

C.I.C பெயின்ற், சீமெந்து, P.V.C பைப்,
கம்பி வகைகள் மற்றும் கட்டிடப் பொருட்கள்
மொத்தம் சில்லறை விற்பனையாளர்கள்




T.P : 222 2833

147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்


SUNDHARSON
சுந்தர்சன்
Jaffna Road, Manipay
SUNDHARSON
DISTRIBUTORS OF ELECTRICAL ITEMS AND ELECTRICAL APPLIANCES, WATER PUMPS, SANITARY WARE
LG
Abans
Distributors For KELANI CABLES
யாழ் வீதி, மானிப்பாய்.
JAFFNA ROAD, MANIPAY.
T.P. : 021 2255136


Hatton National Bank
A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability
HNBயின் சிறுவர்களிற்கான சிறப்பு
சேமிப்புத் திட்டம் "சிங்கிதி"
PATHUM VIMANA 2011
மேற்படி சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதன் மூலம் உங்கள் மழலைகளின்
எதிர்காலத் தேவைகளுக்கு அடித்தளமிடுவதுடன் கவர்ச்சியான
பரிசில்களையும் வெல்லுங்கள்.
HNB Personal LOANS
A loan as personal asyour needs
அடகு சேவை
இப்போது சனிக்கிழமைகளிலும்
காலதாமதமற்ற துரித சேவை
MoneyGram
International Money Transfer
துரிதகதியிலான வெளிநாட்டுப்
பணப்பரிமாற்ற சேவை
ஹற்றன் நஷனல் வங்கி சங்கானை கிளை
HNB
Your Partner in Progress

# அன்னையின் அரவணைப்பில் ஆற்றிய பணிகள்

***திருமதி. சிறிதேவி கண்ணதாசன்***
*ஆசிரியை*

நூற்றுமுப்பத்தைந்து ஆண்டுகள் தொன்மைச் சிறப்பும், கல்வி, கலை, விளையாட்டுக்களில் சிறந்து விளங்கி வருவதுமாகிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் 01.09.1998 அன்று தொடக்கம் எனது ஆசிரியப்பணி ஆரம்பமாகியதை நினைத்து மன மகிழ்வும் பெருமையுமடைகிறேன். ஏனெனில் எமது கல்லூரி அதிபர் திருமதி.அ.வேலுப்பிள்ளை அவர்கள் தனது அதிபர் பதவியை ஆரம்பித்ததும் அவ்வருடமே ஆகும். எனது பணியில் காலூன்றியது முதல் நான் சந்தித்த நீண்ட நாள் அதிபர் அவர். “தாரமும் குருவும் தலைவிதிப்படி” என்பார்கள். அதுபோலத் தான் வேலைத் தலத்திலும் தலைமைப்பீடத்தின் ஒத்துழைப்பும் அனுசரணையும் கிடைத்துவிட்டால் எமது பணி வெற்றியடையும் என்பதில் ஐயமில்லை. ஆரம்பத்தில் எனது பணியில் நான் காலடி எடுத்து வைத்த போது எவ்வளவு உத்வேகத்துடன் தொழிற்பட ஆரம்பித்தேனோ அந்தளவிற்கு மேலான உத்வேகத்துடன் 12 வருடங்களைக் கடந்திருக்கிறேன் என்றால் அதற்கு காரண கர்த்தா எங்கள் அதிபர் தான். அவரின் பாராட்டுதல்களும், அரவணைப்பும், அன்பான கட்டளைகளும், ஆறுதல் வார்த்தைகளும், போட்டிகளில் துவண்டு போகையில் தூக்கிவிடும் தாய்மையும், தக்க தருணத்தில் தரமான ஆலோசனைகளும் விக்ரோறியா மாணவர்கள் தேசிய ரீதியில் கால்பதித்திட வித்திட்டனவாய் அமைந்தன.

அந்த வகையில் வருடாவருடம் நடைபெறும் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகளில் எமது கல்லூரி பல்வேறு கலைத்திறன் நிகழ்வுகளில் கலந்து கொண்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 70 மாணவர்கள் கோட்ட மட்டத்திற்கு பங்குபற்றி தொடர்ந்து வலயம், மாவட்டம் எனப் பரிசில்கள் பெற்று வருகின்றனர்.

தமிழ்மொழித்தினப் போட்டிகளுக்கு ஏற்படும் செலவுகள் குறிப்பாக நடனப் போட்டிகளுக்கான செலவுகள் மிக அதிகம். அவற்றைப் பொருட்படுத்தாமல் ஏதோ ஒரு வகையில் அவற்றை ஈடு செய்து எமக்கு வேண்டிய சகல வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித் தந்து மாணவர்களுக்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்படாமலும் ஆளுமையை விருத்தியடையச் செய்வதிலும் பெரும் பங்காற்றியவர்.

பல பாடசாலைகளில் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாமையும் அதற்கான ஒத்துழைப்பை அதிபர்கள் செய்து தராமையும் காரணமாக ஆசிரியர்களின் ஆளுமையும் மாணவர்களுக்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்படுவதும் உண்டு. இவ்வாறு பல இசை, நடன,

ஆசிரியர்கள் கவலை தெரிவிப்பதுடன் தங்கள் முன்னேற்றங்கள் தடைப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாது சில பாடசாலை அதிபர்கள் தேசிய நிலைக்கு தகுதி பெறுவதானால் மட்டுமே தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றலாம் என ஆசிரியர்களுக்கு கட்டுப்பாடும் விதித்துள்ளார்கள். இந்த நிலையில் ஆசிரியர்கள் தங்களால் முடியாத விடயத்தில் தலையிடாது வெறுமனே கற்பித்தலோடு தமது காலத்தை கழிப்போம் என இருந்துவிடுகின்றார்கள். நடனம் ஓர் ஆற்றுகைக் கலைக்குரிய பாடம் ஆகும். திரும்பத் திரும்ப மாணவர்களை மேடையேற்றுவதனால் மட்டுமே நடனக் கலையை மேம்படுத்த முடியும். தமிழ்மொழித் தினப் போட்டிகளின் நோக்கத்திற்கே புறம்பான செயற்பாடாக இச்செயற்பாடு அமைகிறது.

அந்த வகையில் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களுமாகிய நாங்கள் பெருமையடைவதுடன் நன்றியுடையவர்களாகின்றோம். பெரும்பாலான அதிபர்கள் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளையே முக்கியத்துவப்படுத்துபவர்களாக இருக்கிறார்கள். எங்கள் அதிபர் ஒரு விஞ்ஞானத் துறை சார்ந்தவராக இருந்தபோதிலும் இசை, நடன துறைக்கும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கி மாணவர்களையும் ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தி வந்துள்ளார் என்பது எமக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

போட்டிகள் மட்டுமல்லாது நுண்கலை மன்றத்தினூடான பல்வேறு செயற்பாடுகளிலும் எமக்குத் தோளோடு தோள் நின்று பல ஆலோசனைகளை வழங்கி வந்துள்ளார். பிற கலாசார நிகழ்வுகள், போட்டிகள், களப் பயணங்கள் போன்றவற்றில் தானும் ஒருவராகக் கலந்து கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களை வழிநடத்தி வந்துள்ளார்.

### தமிழ் மொழித்தினப் போட்டிகள்

வழமை போல தமிழ்த்தினப் போட்டிகளில் குறிப்பாக நடனப் போட்டிகளில் எவ்வளவு தூரம் சிறப்பாக எமது மாணவர்கள் தொழிற்பட்டாலும் நடுவர்களின் தீர்ப்பு பல சந்தர்ப்பங்களில் மாறுபாடானதாக அமைத்துவிடுகின்றது.

- பொருத்தமான அனுபவம் வாய்ந்த நடுவர்கள் நடுநிலைமை வகிக்காமை.
- போட்டி விடயத்திற்கு தொடர்பில்லாத கவர்ச்சிகரமான விடயங்களுக்கு முதலிடம் வழங்குகின்றமை.
- பிரபல பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றமை.

போன்ற பல காரணங்களால் எமது மாணவர்களின் சந்தர்ப்பங்கள் இழக்கப்படுவதுடன் மனச் சோர்வும் அடைந்து விடுகின்றனர். இதனால் நாம் பல தடவைகள் சுற்று நிருபத்திற்கு புறம்பானவற்றைச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் தட்டிக்கேட்க வேண்டிய தேவைகளும் ஏற்பட்டன. அவ்வாறான வேளைகளில் எல்லாம் எமக்கு பல ஆலோசனைகளை வழங்கி அணுகு முறைகளை விளக்கி அமைதியான முறையில் எதனையும் கையாளும் பக்குவத்தைக்

கற்றுத் தந்து வழிநடத்தியவர் எமது அதிபர். மாணவர் போட்டி முடிவுகளினால் துவண்டு போகின்ற வேளைகளில் அவர்களைத் தட்டிக் கொடுத்து "இன்று இல்லாவிட்டால் அடுத்த வருடம் வெற்றி பெறலாம்" என உற்சாகப்படுத்தியதுடன் வருடா வருடம் சோர்வடையாமல் போட்டிகளில் ஈடுபட வைத்தவர் எம் அதிபர். அவருடைய காலப்பகுதியில் நடனப்போட்டிகளில் மாவட்டம் வரையில் போட்டியிட்டு பிரபல பாடசாலைகளுடன் இரண்டாம் இடத்தைப் பெற்று வருகின்ற போதும் சென்ற வருடம் அவற்றை முறியடித்து செல்வி.ச.லாவண்யா தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

| **ஆண்டு** | **விடயம்** | **பிரிவு** | **பெயர்** | **பெற்ற இடம்** |
|---|---|---|---|---|
| 1998 | தனிநடனம் | 2 | ஆ.விஜிதா | கோட்டம் – 1ம் இடம் |
| | தனிநடனம் | 3 | மா.கைலைப்பிரியா | கோட்டம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 5 | ஸ்ரீ.நிரோஜினி | கோட்டம் – 1ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | வலயம் – 3ம் இடம் |
| 1999/2000 | தனிநடனம் | 5 | ச.பவதாரணி | கோட்டம் – 3ம் இடம் |
| | தனிநடனம் | 4 | த.மகேந்தினி | கோட்டம் – 3ம் இடம் |
| | குழு நடனம் | | | மாவட்டம் – 2ம் இடம் |
| 2001 | தனிநடனம் | 5 | ச.நிஷாந்தி | மாவட்டம் – 2ம் இடம் |
| | குழு நடனம் | | | மாவட்டம் – 2ம் இடம் |
| 2002 | தனிநடனம் | 2 | சி.சிவலேனுகா | வலயம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 3 | செ.வாசுகி | மாவட்டம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 4 | த.சத்தியகலா | கோட்டம் – 2ம் இடம் |
| | குழு நடனம் I | | | கோட்டம் – 2ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | வலயம் – 2ம் இடம் |
| 2003 | தனிநடனம் | 2 | த.பாதுஜா | வலயம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 3 | சி.சிவலேனுகா | மாவட்டம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 4 | செ.வாசுகி | வலயம் – 3ம் இடம் |
| | குழு நடனம் I | | | வலயம் – 3ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | வலயம் – 2ம் இடம் |
| 2004 | தனிநடனம் | 3 | உ.சுகிர்தா | வலயம் – 3ம் இடம் |
| | குழு நடனம் I | | | கோட்டம் – 2ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | மாவட்டம் – 2ம் இடம் |
| 2005 | தனிநடனம் | 3 | த.பாதுஜா | மாவட்டம் – 3ம் இடம் |
| | தனிநடனம் | 4 | சி.சிவலேனுகா | வலயம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 5 | ச.நிஷாந்தி | வலயம் – 3ம் இடம் |
| | குழு நடனம் I | | | கோட்டம் – 2ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | வலயம் – 2ம் இடம் |

| ஆண்டு | விடயம் | பிரிவு | பெயர் | பெற்ற இடம் |
|---|---|---|---|---|
| 2006 | தனிநடனம் | 4 | ச.தாரணி | வலயம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 5 | த.பிரதீபா | வலயம் – 3ம் இடம் |
| | குழு நடனம் I | | | வலயம் – 2ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | வலயம் – 2ம் இடம் |
| 2007 | தனிநடனம் | 2 | ந.அபிராமி | மாவட்டம் – 3ம் இடம் |
| | தனிநடனம் | 3 | த.பாதுஜா | வலயம் – 3ம் இடம் |
| | தனிநடனம் | 4 | சி.சிவலேனுகா | வலயம் – 2ம் இடம் |
| | குழு நடனம் I | | | கோட்டம் – 2ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | வலயம் – 2ம் இடம் |
| 2008 | தனிநடனம் | 2 | பா.ரூபிணி | மாவட்டம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 3 | த.நிதுஜா | வலயம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 4 | ச.லாவண்யா | மாவட்டம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 5 | ச.தாரணி | வலயம் – 3ம் இடம் |
| | குழு நடனம் I | | | கோட்டம் – 2ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | மாவட்டம் – 2ம் இடம் |
| 2009 | தனிநடனம் | 2 | சி.சிவானந்தி | மாவட்டம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 3 | ந.அபிராமி | மாவட்டம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 5 | த.பாதுஜா | வலயம் – 2ம் இடம் |
| | குழு நடனம் I | | | கோட்டம் – 3ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | வலயம் – 2ம் இடம் |
| 2010 | தனிநடனம் | 2 | ச.லக்சிகா | கோட்டம் – 3ம் இடம் |
| | தனிநடனம் | 3 | பா.ரூபிணி | கோட்டம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 4 | ந.அபிராமி | வலயம் – 2ம் இடம் |
| | தனிநடனம் | 5 | ச.லாவண்யா | தேசியம் – 1ம் இடம் |
| | குழு நடனம் I | | | மாவட்டம் – 2ம் இடம் |
| | நாட்டிய நாடகம் | | | மாவட்டம் – 2ம் இடம் |

## நாட்டுக்கூத்துப் போட்டி

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் வருடம் தோறும் நடாத்தப்படும் நாட்டுக்கூத்துப் போட்டியில் எமது கல்லூரி விசேட கூத்துப் போட்டியில் மாகாண மட்டத்தில் தனக்கென ஓர் இடத்தைத் தக்கவைத்துள்ளமை யாவரும் அறிந்ததே. மேற்படி கூத்து நிகழ்வுகளை நடாத்துவதற்கு எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து விசேட கூத்து

மட்டுமல்லாமல் இசை நாடகம், தென்மோடிக் கூத்து போன்றவற்றையும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற அவாவும் நல்லெண்ணமும் கொண்டவர் எம் அதிபர். இந்த வகையில் 2009 ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமாக தென்மோடி நாட்டுக் கூத்தில் விசேட பயிற்சி வழங்கி முதன்முறையாக மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொள்ள வழிவகுத்தவர். அவரின் ஊக்கத்தினால் பெற்ற வெற்றிகள் பின்வருமாறு

### விசேட கூத்து

| | | |
|---|---|---|
| 1999 | கோட்டம் | 1 ஆம் இடம் |
| 2002 | மாகாணம் | 1 ஆம் இடம் |
| 2003 | மாகாணம் | 1 ஆம் இடம் |
| 2004 | மாகாணம் | 2 ஆம் இடம் |
| 2005 | மாகாணம் | 3 ஆம் இடம் |
| 2006 | வலயம் | 2 ஆம் இடம் |
| 2007 | மாகாணம் | 1 ஆம் இடம் |
| 2008 | வலயம் | 1 ஆம் இடம் |
| 2009 | வலயம் | 1 ஆம் இடம் |
| 2009 | தென்மோடிக் கூத்து | மாவட்டம் 2ஆம்இடம் |
| 2003 | இசைநாடகம் | வலயம் 2ஆம் இடம் |

### நுண்கலை மன்றம்

எங்கள் அதிபர் திருமதி.அ.வேலுப்பிள்ளை அவர்களின் வழிகாட்டலிலும் ஆலோசனையிலும் 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நுண்கலை மன்றமானது, வருடம் தோறும் நிதியுதவிக் கலை நிகழ்வுகளை நடாத்தி மாகாண மட்டங்களில் கலைத்திறன் போட்டிகளுக்கு ஏற்படும் செலவுகளை ஈடுசெய்வதுடன் வெற்றி பெறும் மாணவர்களுக்கான வெற்றிக்கேடயங்களையும் வழங்கி வந்துள்ளது.

### இறுவெட்டு வெளியீடு

2007ஆம் ஆண்டு பரத நாட்டிய பாடத்திற்கான "பரத நாட்டிய செய்முறை விளக்கம்" எனும் இறுவெட்டு நுண்கலை மன்றத்தினூடாக வெளியிடப்பட்டமை அதிபர் அவர்களின் காலத்தில் ஒரு வரலாற்றுச் சாதனையாக காணப்படுகிறது. "இந்தியாவிலிருந்து பரதநாட்டியம் சம்பந்தமாகப் பல இறுவெட்டுகள் வெளிவருகின்றன. இலங்கையிலிருந்து இவ்வாறு வெளிவருவது அரிதாக உள்ளது. ஆகவே நாம் எமது பிள்ளைகளைக் கொண்டு இறுவெட்டு ஒன்று வெளியிட்டாலென்ன?" என்று அதிபர் அடிக்கடி கேட்டுக்கொள்வர். அவரின் அன்பான இந்தக் கட்டளையே என்னை இந்த

அளவிற்குத் துணிவு கொள்ள வைத்தது எனலாம். பரத நாட்டியத்துறையிலே இலங்கையில் முதன் முதல் இப்படி ஒரு இறுவெட்டு வெளியிட்ட பெருமை எமது கல்லூரியையே சாரும். இதற்கு அனுசரணை வழங்கிய கனடா பழைய மாணவர் சங்கத்தினருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

## பல்வேறு கலாச்சார நிகழ்வுகள்

எமது கல்லூரி அதிபர் திருமதி.அ.வேலுப்பிள்ளை அவர்களின் அதிபர் சேவைக் காலத்தில் பிரதேச, மாவட்ட, மாகாண, அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும் பல்வேறு கலாசார நிகழ்வுகளிலும் எமது கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டமை வரலாற்று பதிவுகள் ஆகின்றன.

- வலி.மேற்கு பிரதேச கலாசார பேரவையினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலைவிழா நிகழ்வுகளில் நடன நிகழ்ச்சிகள் வழங்குதல்.
- சிவபூமி முதியோர் இல்லத்தில் வருடாவருடம் திருநாவுக்கரசர் குருபூசை தினத்தில் நடன நிகழ்ச்சிகள் வழங்குதல்.
- 2009 ஆம் ஆண்டு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட தமிழ் இலக்கியவிழாவில் ''கிராமியக் கதம்பம்'' நடன நிகழ்ச்சி வழங்கியமை.
- 2010 ஆம் ஆண்டு கௌரவ ஆளுநர் அவர்களால் பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடாத்தப்பட்ட வடக்கின் வசந்தம் நிகழ்வில் எமது கல்லூரி மாணவர்கள் அமரர் செல்லையா மெற்றாஸ்மெயில் அவர்களின் நெறிப்படுத்தலில் ஒயிலாட்டம் நிகழ்வில் கலந்து கொண்டமை.
- 2010 ஆம் ஆண்டு உலக காசநோய் தினத்தில் அகில இலங்கை ரீதியில் பதுளை, நூலக கலாசார மண்டபத்தில் நடாத்தப்பட்ட காசநோய் விழிப்புணர்வு விழாவில் எமது கல்லூரி "காசமற்ற தேசம்" எனும் நடன நிகழ்ச்சி வழங்கியமை.

இவ்வாறு பலவழிகளிலும் எம்மையெல்லாம் வழிப்படுத்திய அதிபர் திருமதி.அ.வேலுப்பிள்ளை அவர்களின் அந்த 12வருட சேவைக்காலத்தில் எமக்கு நல்லதொரு தாயாக் துன்பத்தில் துணையான தோழியாக் கல்லூரிச் சேவையிலே சேவகியாக, மாணவர்க்கெல்லாம் நல்லாசானாக, திட்டமிடலிலே நற்பணிப்பாளராக, வழிகாட்டியாக் ஆலோசகராக, அடக்கம், பொறுமை, ஆழ்ந்த அறிவு கொண்ட முன்னுதாரணமான பெண்ணதிபராக விளங்கித் தன் பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளார். அவரின் தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்றிய பாக்கியம் கிடைத்ததையிட்டு மனநிறைவடைகிறேன். அவர் நீண்டகாலம் சுகநலமாக வாழ எங்கள் கல்லூரியிலிருந்து அருள்பாலிக்கும் சிவகாமி சமேத நடராஜப்பெருமான் துணைபுரிய வேண்டுகின்றேன்.

## எமது அதிபர்

இவர் எமக்குப் புதியவரல்லர். எம் கல்லூரியுடன் நீண்டகாலம் ஒட்டியுறவாடிய ஊரறிந்த பெருமகனார். என்ன அற்புதம்! சிவகாமி சமேத நடராஜப்பெருமானின் அருள் கல்லூரிக்கு எப்போதும் இருந்து கொண்டே இருக்கும் என்பதை நிரூபிக்கும் வகையில் அமைந்தது எங்கள் அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் வருகை. கல்லூரியின் அபரிமிதமான வளர்ச்சிக்கு இவரது ஒத்தழைப்பு உத்வேகம் கொடுக்கிறது. தொடர்ந்தும் எமது அதிபர் அவர்களின் வழிநடத்தலில் கல்லூரியின் மேன்மையை, வரலாறு தனது பொன்னேடுகளில் பொறிக்கும் என்பதில் ஐயமில்லை.

♣ ♣ ♣

சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்தில் வந்தனவாக தொகுத்துக்கூறுதல் நாடகம்.

**– இளம்பூரனார்.**

உலகம் ஒரு மேடை. ஆதில் அனைவரும் நடிகர்கள்

**– ஷேக்ஷ்பியர்**

நூடகம் என்து யாதேனுமோர் செயலைச் போலச் செய்தல் ஆகும்.

**– ஆரிஸ்டோட்டில், பரத முனிவர்**

நாடகம் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும்.
புழக்கவழக்கங்களைக் காட்டும் நிலைக்கண்ணாடி ஆகும்.

**– அலடைஸ் நிக்கொல்**

நாடகம் என்பது உலக இயல்பைப் போலச் செய்தலாகும்.

**– பரத முனிவர்**

நாடகம் என்பது சுகம், துக்கம், ஆகிய இரண்டையும் உள்ளடக்கும் வகையில் உலக கொண்டுள்ள தன்மையை அங்க அபிநயங்கள் மூலம் வெளிக்காட்டுதல் ஆகும்.

**– பரதமுனிவர்**

நாடகம் என்பது வாழ்க்கையின் ஒரு துண்டம் (Piece) ஆகும்.

**– பேர்ணாட்ஷா**

நாடகம் என்பது இசை, நடனம், சொல்லாடல்கள், நடிப்பு, வேடவுடை, ஒப்பனை, போன்ற கலைத்துவ மூலகங்கள் மூலம் பார்ப்போரிடத்தே யாதேனும் அழகியல் அனுபவங்களை உணரச் செய்வதற்காக எடுக்கப்படுகின்ற முற்றுமுழுதாக வேறுபட்ட ஒரு கலைப்படைப்பாகும்.

**– அபிநவகுப்தர்**


# நனோ தொழில்நுட்பம்
# (Nano Technology)

***செல்வி. அபிராமி இந்திரகுமாரன்***
க.பொ.த உயர்தரம், விஞ்ஞானம்(2011)

இன்றைய நவீன யுகத்தில் விஞ்ஞானம் தந்த விந்தைமிகு தொழில்நுட்பப் புரட்சியாக நனோ தொழில்நுட்பம் விளங்குகின்றது. தொழில்நுட்ப புரட்சி என்றால் எந்தவொரு பொருளையும் இயன்ற அளவு சிறியதாகவும், மலிவானதாகவும், நிறைந்த பலனைத் தரக்கூடியதாகவும் உருவாக்குதலே ஆகும். இவ்வாறு பெரிய பொருட்களில் இருந்து சிறியவற்றை கண்டுபிடிப்பதை "மேல் இருந்து கீழ்" தொழில்நுட்பம் என அழைப்பர்.

நனோ தொழில்நுட்ப எண்ணம் 1959ம் ஆண்டு றிச்சார்ட் பைன்மன் (Richard Feyman) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. அணு, மூலக்கூறுகள் போன்ற அடிப்படைத் துணிக்கைகளை ஒழுங்காகச் சுருக்கி பதார்த்தங்களை உருவாக்கும் போது அவற்றில் குறைபாடுகள் குறைவாகவும் அவற்றின் தரம் கூடியதாகவும் இருக்கும் என றிச்சார்ட் பைமன் கூறினார்.

நனோ (Nano) என்பது கிரேக்க மொழியில் (Greek) குள்ளன் எனவும் $10^{-9}$ஆம் அடுக்கிலும் குறிப்பிடப்படும். மனித உரோமம் ஒன்றின் விட்டத்திலும் ஒரு இலட்சம் (100,000) மடங்கு சிறியது. நனோ தொழில்நுட்பத்தின் பிரதான இலக்கு அணுக்கள், மூலக்கூறுகள் அல்லது $10^{-9}m$ பருமனுக்கு குறைவாக உள்ள துணிக்கைகளை ஒரு தெளிவான கட்டுப்பாடான முறையில் புதிய பதார்த்தங்களை உருவாக்கப் பயன்படுத்தி அதிலிருந்து மிகப்புதியதொரு ஒழுங்கில் புதிய தன்மைகளுடன் கூடிய புதிய திரவியங்களைப் பெறுவதாகும்.



நனோ தொழில்நுட்பம் இரசாயனம், பௌதிகம், மருத்துவம், சக்தி வழங்கும் கணனி, விலங்கியல், இலத்திரனியல் உணரிகள் போன்ற எல்லாத்துறைகளிலும் விருத்தி அடைந்துள்ளது. அது மட்டுமன்றி இயற்கைச் சூழலிலும் நனோ தொழில் நுட்பம் உண்டு என்றால் ஆச்சரியமாக உள்ளதா? ஆம் இயற்கையிலும் நனோ தொழில் நுட்பம் உண்டு.

பட்டாம் பூச்சியின் அழகிய வர்ணத் திற்கு காரணம் நனோ தொழில் நுட்பம்.





கைத் தொலைபேசி ஒன்று சூரியகலத்தால் மின்னேற்றப்படுகின்றது

சூரிய கலங்கள்

ஆச்சரியப்படாதீர்கள். இது தான் உண்மை. பட்டாம் பூச்சியில் மட்டுமல்லாது ஏனைய பறவைகளின் இறகுகளிலும் நேர்த்தியாக அடுக்கப்பட்டுள்ள நனோ துணிக்கைகளிற் பட்டுத்தெறிப்படைந்து அல்லது முறி வடைந்து வரும் ஒளிக்கதிர்களின் தலை யீடே அழகிய வர்ணத்திற்கு காரணமாகும். மேலும் மழை காலங்களில் வீதியில் தேங்கி நிற்கும் வாகனங்களில் இருந்து ஒழுகிய எண்ணெய்ப் படை மிதப்பதையும், அதில் சூரிய ஒளி பட்டு தெறிப்படைந்து வரும் கதிர்களின் தலையீட்டினால் உருவாகும் பல வர்ண நிறங்களை அவதானித்திருப்பீர்கள். விதம் விதமாக அடுக்கப்பட்டிருக்கும் நனோ துணிக்கை களே இதற்கும் காரணம். பல்லிகள் நிலைக் குத்தாகவும் கிடையாகவும் தளங்களில் எவ்வாறு நகருகின்றன என சிந்தித்த துண்டா? அதற்கும் காரணம் நனோ துணிக்கைகள் தான். பல்லியின் கால்களில் கிட்டத்தட்ட 200nm விட்டமுள்ள பில்லியன் ($10^{12}$) எண்ணிக்கையான நனோ மயிர்கள் உண்டு. அவ்வளவு மயிர்களின் மொத்த மேற்பரப்பும் நனோ அளவில் எவ்வகை யான மேற்பரப்புக்களினதும் நனோ கட்டமைப்புடன் பலவிதமான மூலக்கூற்று விசைகளினால் இணைக்கப்படுவதனால் பல்லி எவ்வித சக்தி விரயமும் இல்லாமல் நிலைக்குத்தானதும் கிடையானதுமான தளங்களில் நகருகின்றது. இயற்கையாக அமைக்கப்பட்ட நனோ துணிக்கைகளை போல் மனிதன் தன் அறிவாற்றலால் செயற்கையாக உருவாக்க முயன்றான். அதில் வெற்றியும் கண்டான்.

நனோ தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தி இலத்திரனியல் சாதனங்கள், மருந்துப் பொருட்கள், விளையாட்டு

உபகரணங்கள், வாகன உதிரிப்பாகங்கள், உடுப்புக்கள், படப்பிடிப்புக் கருவிகள், சூரிய திரைகள் போன்ற பல்வேறு பொருட்கள் உருவாக்கப்பட்டன. சில நனோத் துணிக்கைகள் டீசலின் எரிபொருள் வெளியேற்றத்தைக் குறைக்கின்றன. அத்துடன் ஆபத்தான கழிவுகளைச் சுத்தம் செய்கின்றன. மண் நிலத்தடி நீரின் அழுக்கு களை அகற்றுகின்றன. துருப்பிடிக்காத, மங்காத வர்ணங்கள் போன்றவற்றை உற்பத்தியாக்க உதவுகின்றன.

மேலும் கட்டடக் கலையில் நனோ தொழிநுட்பம் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. நனோ சக்தியளிக்கப் பட்ட வளையக்கூடிய சீமெந்துக் கலவை தற்போது உருவாக்கப்படுகிறது. இதனால் வீதிகளின் ஆயுட் காலத்தை அதிகரிக்கச் செய்யலாம். வீதி வெடிப்புக்களையும் ஓட்டைகளையும் குறைக்க முடியும். பூமி அதிர்வுகளில் இருந்தும் பாதுகாக்கலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. நனோ தொழிநுட்பத்தால் செய்யப்பட்ட சீமெந்துக் கற்கள் சாதாரண கற்களை விட 500 மடங்கு உறுதியுள்ளதாகவும் 40% பாரம் குறைந்ததாகவும் இருக்கும். இதற்கு சீமெந்துக் கலவையுடன் பல்வைனைல் அற்ககோல் (polyvinyl alcohol) நார்கள் சேர்த்துப் பலப்படுத்துகிறார்கள்.

காபன் நனோ குழாய்கள் (CNT) நனோ தொழிநுட்பத்தால் உருவாக்கப் பட்ட அதிசய படைப்புகளாகும். CNT என்பது கிரபைட்டின் (Graphite) நுண்ணிய ஓடுகள் நனோ மீற்றர் பருமனுள்ள உருளை வடிவாக உருவாக்கப்பட்டதாகும். இது உருக்கை விட 6 மடங்கு நிறை குறைவானதாகவும் சிறந்த வெப்ப மின் கடத்தியாகவும் உள்ளது.

இன்று தானாக ஒன்று சேரல் (self Assembly) என்பது நனோ தொழில் நுட்பத்தின் அடிப்படைச் சின்னமாக உள்ளது. முடியாது என்பதை முடிப்பதற்கும், சிரமமானதை இலகுவாக்கவும் நனோ தொழிநுட்பம் உதவுகின்றது. நனோ தொழிநுட்பம் உச்ச வளர்ச்சியை அடையும் போது ஓட்டை, வெடிப்புக்கள் இல்லாத வீதிகள், தூய்மையான வைத்தியசாலை கள், கறைப்பிடிக்காத உடுப்புக்கள் போன்ற எத்தனையோ விந்தைகளைக் காணலாம்.

புதிய தொழிநுட்பம் என்பதால் நம்பிக்கையீனமும் சந்தேகமும் கூட அதிகமாகவே உள்ளது. சூழலுக்கோ உயிரிகளுக்கோ பாதிப்புண்டா? பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்.

**சிந்திக்க..........**

1) அணு ஒன்று 0.1nm விட்டம்உடையது. கண்ணால் பார்க்க முடியாதது.
2) அணுக்கள் ஒன்று சேர்ந்தால் மூலக் கூறுகள் உருவாகும்.
3) 30அணுக்கள் சேர்ந்தால் 1nm விட்டம் உருவாகும்.
4) மனித கலங்கள் 5000-200000nm வீச்சு உடையவை.
5) புரதங்கள் 3-20nm வீச்சு உடையவை.
6) மருந்து வகைகளில் உள்ள மூலக்கூறு கள் 25nm வீச்சு உடையவை.

♣ ♣ ♣



# இந்து தத்துவ நோக்கிற் கலைகள்

***கலாநிதி ஏ. என். கிருஷ்ணவேணி***
*தலைவர், நுண்கலைத்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

இந்துமதம் மனிதனின் உயர் குறிக்கோள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதுடன் இறுதிப்பயனாக இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகிய வீடு பேற்றினை அடைதல் என்று கூறுகிறது. எல்லா மதங்களும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டாலும் அவை கூறும் மார்க்கங்கள், இறுதிப்பயன் பற்றிய கருத்துக்கள் அவரவர் சமய/தத்துவக் கோட்பாடுகளுக்கு ஏற்றவகையில் விளக்கப் படும் நிலையில் சிறிது வேறுபட்டுக் காணப்படுகிறது. வீடுபேறு என்பது வட மொழியில் 'மோட்சம்' என்று அழைக்கப்படும். இது 'விடுதலை' என்று பொருள்படும். ஆன்மீக விடுதலை என்று இதற்கு பொருள் கொள்ளலாம். இந்துக்களைப் பொறுத்த மட்டில் ஆன்மாவானது பல்வேறு பிறவி களுக்குட்படுகிறது. ஒவ்வொரு பிறப்பிலும் அது செய்த கர்மப் பலன்களுக்கேற்ப பல பிறவிகளுக்குட்படுவதாகக் கர்மம் மறு பிறப்புக் கோட்பாடு விளக்குகிறது. இத் தகைய வினைக்கீடாகப் பிறவி எடுக்கும் ஆன்மாக்கள், வினைப்பயன் நுகர்ந்து வினை நீங்கிய காலை இறைவனை அடையமுடியும் என்பது இந்துமதக் கொள்கை. பல பிறவிகளிலும் வாழ்ந்து அனுபவமும் பக்குவமும் பெற்ற நிலையில் மனம் சிறிது பற்றினின்றும், ஆசைகளி னின்றும் விடுபட்டு பயன் கருதாச் செயலில் ஈடுபட்டு, உள்ளத்தில் உறுதிப்பாடும், இறைநாட்டமும் கொண்ட நிலையில் பக்தியும், ஞானமும் பெற்று மோட்சம் பெறுகின்றது. மோட்சம் என்பது மீண்டும் பிறக்காத நிலையில் ஆன்மா பரப்பிர மத்துடன் ஒன்றியிருத்தலேயாகும். இது பரமுத்தி, சாயுச்சியம் போன்ற பெயர் களினால் அழைக்கப்படும். இதுவே பேரின்பப் பெருநிலையாக உபநிடதம், பகவத்கீதை, பிரமசூத்திரம் போன்ற பிரஸ்தானத் திரயங்களிலும், ஏனைய சைவ வைஷ்ணவ நூல்களிலும் விளக்கப் பட்டுள்ளது. வாழ்வின் இறுதியில் அடையும் பேரின்பப் பெருநிலைக்கு, முக்கியத்துவம் கொடுப்பதனால் இந்துமதம் மறு உலகச் சமயம் (Other worldly religion) என்று சில மேலைத்தேய அறிஞர்களினால் கூறப் பட்டதையும் இங்கு கவனித்தல் வேண்டும். இந்து மதக் கோட்பாடுகள் யாவும் மறுமை இன்பத்திற்கு வழியாக இவ்வுலகத்தில் வாழ்வாங்கு வாழ்தலையே கூறுகின்ற னவே அன்றி அது மறுமைச் சமயம் அல்ல. எனவே, இந்து மதத்தைப் பொறுத்தமட்டில் வாழ்க்கை வாழ்வதற்கே. இந்துமதக் கோட்பாடுகளில் புருஷார்த்தக் கோட்பாடு இதனை சிறப்பாக விளக்குகிறது. 'புரு ஷார்த்தம்' என்பது மனித இலட்சியம் என்று பொருள்படும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருட் கள் ஆகும். இவை தர்மம், அர்த்தம், காமம்,

மோட்சம் எனவும் அழைக்கப்படும். இவற்றுள் நாலாவதாகிய வீட்டினை அல்லது மோட்சத்தினை அடைய வேண்டுமாயின், முதல் மூன்றினையும் ஒருவன் சரியாகப் பின்பற்ற வேண்டும். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் சாதனங்கள் என்றழைக்கப்படும். அவற்றை முறையாகப் பின்பற்றுவதனால் இறுதிப் பயனாகிய மோட்சத்தைப் பெற முடியும்.

'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்பது வள்ளுவர் கருத்து. மண்ணில் நல்லவண்ணம் வாழ்தலின் மூலமே ஆன்மீக ஈடேற்றம் கை கூடும். மனித விழுமியங்கள் யாவும் (Human Values) உலக வாழ்க்கை யிற் பின்பற்றப்பட வேண்டியவை. பேரா சிரியர் ஹிரியண்ணா இந்துக்களின் கலை அழகியற் கொள்கையானது, புருஷார்த் தங்களை அடிப்படையாகக் கொண்டது என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. அந்தவகை யில், மோட்சம், பரமபுருஷார்த்தம் எனப்படும். இது இறுதியானது. ஒன்றை அடைவதற்கு ரிய கருவியாக்க முடியாது. இது சாத்தியம் எனப்படும். இத்தகைய மோட்சம் அல்லது வீடு பேற்றிற்குரிய வழியாகக் கலையும் கலை அனுபவமும் சிறப்பாகப் பேசப்படும் நிலையில் இந்து மதம் மக்கள் வாழ்க்கை யுடன் ஒட்டிய உயர் மதமாக நிற்கிறது.

இந்து மதத்தின் பல்வேறு சமயப் பிரிவு களும், தத்துவக் கோட்பாடுகளும், பல் வேறு மார்க்கங்களைக் கூறினாலும் அவை யாவும் இறுதியில் அடையும் பலன் ஒன்றே. அந்தவகையில், கலையும் ஓர் ஆன்மீக சாதனமாகவே கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தான் சார்ந்த சமூகத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளின் மூலம் வாழ்வின் இலக்கினை அடைவது போன்று கலைஞரும் தனது கலைச் செயற்பாட்டின் மூலம் தன் குறிக்கோளை அடைவதுடன், மற்றையோரும் அதனை அடைவதற்குரிய வழிமுறையை மேற்கொள்கிறான். கலை உருவாக்கச் செயல்முறையும், கலை அனு பவமும் ஆன்மீக சாதனங்களாகின்றன. கலைஞன், கலைப்படைப்பு, பார்வை யாளர் அல்லது ரசிகர்கள் என்ற மூன்றும் கலை அனுபவத்துடன் தொடர்புடையன.

## கலைப்படைப்பு (Work of Art)

மனிதனால் உருவாக்கப்படும் பொருட் கள் யாவும் ஏதோ ஒரு வகையில் அவனது தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டவையாக இருந்தாலும் சிலவற்றை உருவாக்கும் போது அவன் அதிக சிரத்தையும், ஆர்வமும், ஈடுபாடும் கொண்டு உருவாக்குகிறான். அத்தகைய பொருட்கள் ஏனைய பொருட்களில் இருந்து செய் நேர்த்தியிலோ, வடிவமைப் பிலோ, அழகிலோ வேறுபடுவதனைக் காணலாம். இத்தகைய பொருட்களைக் கலைப்படைப்புக்களாகக் கொள்ளலாம். இன்னும் சிறப்பாகக் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் யாவும் மிக நுட்பமாக உருவாக்கப்படும் நிலையில் நுண்கலைகள் என்று அழைக் கப்படுகின்றன. இவற்றுள்ளும் கட்டடம், சிற்பம், ஓவியம் போன்றன காண்பியக் கலைகள் (Visual Arts) எனவும், ஏனைய இசை, நடனம், நாடகம் போன்றன அரங்கில் ஆற்றுகை செயற்படுவதனால் ஆற்றுகைக்

கலைகள் (Performing Arts) எனவும், இலக்கியம் மொழியை ஊடகமாகக் கொண்ட கலை (Verbal Art) எனவும் கொள்ளலாம். இவற்றை மதச்சார்பான கலைகள் (Religious Arts) மதச்சார்பற்ற கலைகள் (Secular Arts) எனவும் பிரிக்கலாம். மதச் சார்பான கலைகள் மத வழிபாட்டு முறைகளுடன் தொடர்புடையவை. இந்து மதத்தில் வழிபாட்டு முறைகள் யாவும் திருவுருவத்தை அடிப்படையாகக் கொண்ட கோயில் வழிபாடாகவே உள்ளன. எனவே, கோயிற் கட்டடக்கலை, சிற்பக் கலை, கோயிலை அழகுபடுத்தும் ஓவியக் கலை யாவும் சமய சாஸ்திர நூல்கள், சிற்ப சாஸ்திரங்கள், வாஸ்து சாஸ்திரங்கள், புராண, இதிகாசங்கள் போன்ற நூல்கள் தரும் ஐதீகம், விதிமுறைகள், லட்சணங்களுக்குட்பட்ட வகையிலேயே உருவாக்கப்படல் வேண்டும் என்பது விதி. அந்த வகையில் கலை நியமங்களுடன் கூடிய சிற்பங்களே வழிப்பாட்டிற்குரிய மங்கல வடிவங்களாகவும், பிரமாணந் தவறிய, வழிப்பாட்டிற்குப் பொருந்தாத வடிவங்கள் அமங்கல வடிவங்களாகவும் கொள்ளப்படுகின்றன. சுக்கிரநீதிசாரம் எனும் நூல் சிற்ப உருவாக்கம் பற்றிக் கூறும் கருத்து இங்கு மனங்கொள்ளத்தக்கது. "சகல விதமான கலை நியமங்களும், சிறப்பாக சிற்ப சாஸ்திரங்களிற் கூறப்பட்ட அளவைகளுக்குக் கூடாமலும் குறையாமலும், கூறப்பட்ட லக்ஷண விதிகளின்படி, உருவாக்கப்படும் சிற்பங்கள் அல்லது மூர்த்தங்களே மங்கலமானவை, அழகானவை, நன்மை விளைவிக்கத்தக்கவை. பிரமாணந்தவறிய அமங்கல வடிவங்கள் வாழ்க்கையையும் செல்வத்தையும் அழித்து அரசு, நாடு, மக்களுக்குத் துன்பம் விளைவிக்கும் தன்மை உடையவை. மங்கல மூர்த்தங்கள் வழிபடுவோனை சுவர்க்கத்துக்கு இட்டுச் செல்பவை" என்று கூறுகிறது. இதிலிருந்து இந்துமதக் கோட்பாடுகளின்படி, ஒரு கலைப் படைப்பு என்பது சிற்ப சாஸ்திரங்கள் கூறும் அளவைப் பிரமாணம், லக்ஷணவிதி, அங்க அமைப்பு, ஹஸ்தங்கள், முத்திரைகள், ஆடை, ஆபரணம், ஆயுதம் போன்ற சகல அம்சங்களையும் கருத்திற் கொண்டு உருவாக்கப்படும் போதே அழகிய கலைப்படைப்புக்களை உருவாக்க முடியும். சிற்பங்கள், சிற்ப சாஸ்திரங்களையும் கட்டடங்கள் வாஸ்து சாஸ்திர விதிமுறைகளையும் தழுவி அமைக்கப்பட வேண்டும். இந்துக் கலை மரபின்படி ஓவியம் என்பது விஷ்ணுதர்மோத்தர புராணம் போன்ற நூல்கள் கூறும் ஓவியக் கொள்கையை அடியொற்றித் தீட்டப்பட வேண்டும் என்பது விதி. கலைஞன் தான் நினைத்தவாறு சிற்ப ஓவியங்களை உருவாக்க முடியாது என்பது தெளிவான கருத்து. அவை சாஸ்திர மானத்திற்குட்பட்டவையாக இருக்க வேண்டும் என்பது தெளிவு. (ஆனந்த குமாரசுவாமி 1934:115)

இவ்வாறு சிற்பக் கலை, நியமப் பண்புகள் கொண்டதாக அமைய வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதற்குக் காரணம், சாதகர்களது உள்ளம் ஒருமைப்படுவதற்கு சிற்ப, விக்கிரகங்கள் காரணமாக இருத்தல் வேண்டும் என்பதாகும். சிற்ப, விக்கிரகங்களைத் தியானிப்பதன் மூலம் (Contemplation) மன ஒருமைப்பாட்டினை அடைந்து

அத்தகைய பயிற்சியின் மூலம் பண்பட்ட உள்ளத்தைப் பெறுவதன்மூலம் மோட்சத்தைப் பெறுவதற்குரிய தகுதிப்பாட்டினை பக்தன் பெறுகிறான் என்பது இந்துமதக் கொள்கை. அருவ, அருவுருவத் திரு மேனிகள் இந்திரியங்களுக்கப்பாற் பட்டவை. உ_வத்திருமேனிகள் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பையும் ஆன்மீக ஈடேற்றத்திற்குரிய வகையில் இறைவனது தொழிற்பாடுகளையும் புலப்படுத்துவனவாக உள்ளன. சிற்ப, விக்கிரகக் கலைக் கொள்கையானது மதத்தையும், கலையையும் இணைத்து நிற்பதுடன் மதத்தை அழகுபடுத்துவதாகவும் உள்ளது.

**கலைஞன்**

கலையை உருவாக்குபவன் கலைஞன் என்று அழைக்கப்படுகின்றான். தனது கைவினைத் திறன் ஆற்றல் வழியாக கற்பனையையும் அழகுணர்வையும் சேர்த்துத் தனது அனுபவத்திற்குப் புதிய வடிவம் கொடுப்பவன் கலைஞன். இந்துக் கோயிற் கட்டடம், சிற்பம், ஓவியத்தைப் பொறுத்த வரையில் அவ்வவற்றிற்குரிய கலை நியமங்களுடனும் கலையைப் படைப்பதனால் அவன் யோகியாகப் போற்றப்படுகிறான். தெய்வ விக்கிரக உருவாக்கம் என்பது தூய உளச் செயற்பாடாகும். இது 'சித்தசஞ்ஞா' எனப்படும் (ஆனந்தகுமார சுவாமி, 1934:5). இந்த அடிப்படையில் இந்துக்கலை மரபு நன்கு வளர்ச்சி பெற்றுள்ளதைக் காணலாம். சிற்பக் கலைஞன் ஒருவன் தெய்வீகச் சிற்பங்களை அமைப்பதற்குத் தகுதி உடையவனாக இருக்க வேண்டும். அவன் பின்பற்ற வேண்டிய நியமங்களுடன் அவனுக்குரிய ஒழுக்கங்களையும் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. அதாவது, "மனத்தூய்மை உள்ளவராகவும், மனதைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உள்ளவராகவும், தியானம் போன்ற வழிபாட்டு முறைகளில் ஈடுபடுபவராகவும், சாஸ்திர நூல்களைக் கற்றறிந்தவராகவும், ஏக பத்தினி விரதனாகவும் இருக்க வேண்டும்" என்பது சிற்பக் கலை நூல்கள் கூறும் கலைஞனுக்குரிய ஒழுக்கம். மேற்குறிப்பிட்ட தகுதிப்பாடு உடைய கலைஞனால் மட்டுமே சாஸ்திரங்கள் கூறும் விதிமுறைகளுடன் கூடிய கலைப்படைப்புக்களை உருவாக்கமுடியும். கலைஞனானவன் யோகப்பயிற்சிகளை மேற்கொண்டு புலனடக்கம், மன ஒருமைப்பாடு, தியானம் போன்றவை கைவரப் பெற்றவனாக இருக்கும் நிலையிற்றான், சிற்ப விக்கிரகங்களுக்குரிய தியான மந்திரங்களை உச்சரித்து அதன் உருவாக்கத்தை அகத்தே பதித்து மனதிற் பதித்த அவ்வடிவத்திற்குப் புறத்தே கல்லிலோ, உலோகத்திலோ வடிவம் கொடுக்க முடியும். தியானம் போன்ற யோகப்பயிற்சிகளினால் உள்ளத்தில் ஏற்படும் தடைகளை நீக்கி உள்ளத்தில் உருவத்தைக் காட்சிப்படுத்தி (Visual Formulation), இஷ்ட தெய்வ வழிபாட்டின் மூலம் அதனை வடிவமைக்கிறான். உண்மையில், எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் அவன் அதுவே ஆகிறான். எந்தவிடயத்திலும் உண்மை ஞானம் என்பது வெறும் சாதாரண அவதானிப்புப் பார்வையின் மூலம் (Pratyaksa)பெறப்படுவதோ அல்லது மனதிற் பதிவதோ அல்ல. ஆனாற் காண்

போனுக்கும் காணப்படும் பொருளுக்கும், அறிவோனுக்கும் அறியப்படும் பொருளுக்குமிடையே வேறுபாடற்ற நிலையில் ஏற்படும் ஒருமைப்பாடு. யோகப் பயிற்சியின் மூலம் கிட்டுவது. பிருகதாரண்யக உபநிடதம் "தான் வேறு, அது வேறு என்று நினைப்பவன். வேறெதையும் அறிய மாட்டான்" என்று கூறுவது நோக்குதற்குரியது. சங்கராச்சாரியார் அம்பினை எய்யும் ஒருவன் தன் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வேளை அதற்கப்பால் எதனையும் காணமாட்டான் என்று கூறுகிறார். இத்தகைய யோக்கியதை, திறன், ஞானம் உடைய ஒருவனே கலைஞனாக இருக்க முடியும்.

இந்து ஐதீகங்களின்படி தெய்வீகக் கலைஞனான (Supreme Artificer) விஸ்வகர்மாவின் ஆளுகைக்கும், கட்டுப்பாட்டிற்கும் உரியவர்களாகக் கலைஞர்கள் உள்ளனர் என்று அறியமுடிகிறது. சில வேளைகளில் உலகில் சில குறிப்பிட்ட வேலைகளைப் பூர்த்தி செய்ய விஸ்வகர்மன் தானே மனிதக் கலைஞனாக வடிவெடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. கலைஞர்கள் தம் சிந்தனைத் திறன் மூலம் சுவர்க்கத்திற்குச் சென்று அங்கு தெய்வத்தைப் பார்த்து அதனை மறு உருவாக்கம் செய்வதாக இந்துமத நூல்கள் கூறுகின்றன. சைவாகமங்கள் கோயிற் கட்டடக் கலையை 'கைலாசபாவனா' எனக் கூறுவதும் குறிப்பிடத்தக்கது. கலை உருவாக்கம் என்பது அதனை அறிந்தவனாகிய அவனிடமே நிறைவேற்றப்படுகிறது என ஐதரேயப் பிராமணம் (Vi, 27) கூறுகிறது. இதனோடு தொடர்புடைய பல பகுதிகள் இருக்கு வேதத்தில் இடம் பெறுகின்றன. கலை உருவாக்கம் என்பது ஆத்ம சம்ஸ்கிருதி (Integration of the self) என்பது இந்து மத நூல்களின் கருத்து. ஏனெனில், சாதாரண புலக்காட்சியின் மூலம்(Pratyaksa) கலையை உருவாக்கமுடியாது. அகக் காட்சி உடைய (Visual Contemplation) ஒருவரால் மட்டுமே சிற்பத்திற்கு வேண்டிய லக்ஷணங்களை (Lineaments) மனதிற் கொண்டு அதனை உருவாக்கமுடியும். எனவே, கலைஞன் என்பவன் ஒருவகையில் ஒரு யோகியுடன் ஒப்பிடப்படுகிறான். கலைச் செயற்பாடுகள் யாவும் யோகப் பயிற்சியின் வெளிப்பாடாகவே கொள்ளப்படுகிறது. அபிநவகுப்தர் ஒரு கலைஞனை படைப்புக்கடவுளான பிரஜாபதியுடன் ஒப்பிடுகின்றமை இங்கு கருத்திற் கொள்ளத்தக்கது.

**பார்வையாளர் அல்லது ரசிகர்கள்**

ஒரு கலைப்படைப்பைப் பார்த்து அனுபவித்து ரசிக்கும் ஆற்றல் வாய்ந்த பார்வையாளர்களே ரசிகர்கள். இவர்கள் உணர்ச்சியிலும், கற்பனை வளத்திலும் கலைஞனை ஒத்த ஆற்றலுடையவர்களாக இருப்பதனால் இவர்கள் சிருதயர் என்று அழைக்கப்படுவர். ரசிகர்களின் முக்கியமான தகுதிப்பாடு கவியுள்ளத்தைப் புரிந்து கொள்ளல் என்று பேராசிரியர் ஹிரியண்ணா கூறுவது இங்கு அவதானிக்கத்தக்கது. கலை அனுபவம் மனிதப் பண்பாட்டில் தங்கியிருப்பதாகவும் மனிதனது உணர்ச்சிச் செழுமையின் வெளிப்பாடாக உள்ளதாகவும் அபிநவகுப்தர் கூறுகிறார். மனிதனது

உளப்பக்குவமே கலை அனுபவத்தைப் பெறுவதற்குத் துணையாகிறது. இக்கலை அனுபவமே ரசானுபவம் என்று சிறப்பித்துப் பேசப்படுகிறது. கலை ரசனையின் மூலம் பெறப்படும் அனுபவமே (Aesthetic Experience) ரசானுபவம் எனப்படும். இந்திய அழகியற் சிந்தனை மரபில் காவியங்களின் மூலம் பெறப்படும் ரசானுபவம் சிறப்பித்து பேசப்படுகின்றது. பரதர் திருஷ்யகாவியமான நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு ரச உற்பத்தி பற்றிப் பேசுகிறார். காவியங்களின் அடிப்படையில் பேசப்பட்ட ரசானுபவம் எந்த ஒரு கலை வடிவத்தின் மூலமாகவும் கிட்டக் கூடியதே (ஆனந்தகுமாரசுவாமி, 1934: 124). எந்த ஒரு கலையிலும் பார்வையாளர் மனமொன்றி ஈடுபடும் நிலையில் இது பெறப்படுகிறது.

போஜர் தமது சமராங்கண சூத்திரதாரம் எனும் நூலில் சிற்ப, விக்கிரகக் கலை பற்றிய விதிமுறைகள், செய்முறைகளை விளக்குமிடத்து ஒரு கவிதையிலோ, இசையிலோ பெறும் ரசானுபவம் சிற்பங்களில் இருந்தும் பெறத்தக்கது என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. ஓவிய ரசனை பற்றி சித்திர சூத்திரம் விரித்துக் கூறுகிறது. இவ்வாறு பண்பாட்டில் பிரதான கூறாக விளங்கும் கலைகளை அடிப்படையாகக் கொண்டு ஒருவன் பெறும் அனுபவமானது இறை அனுபவத்தைப் பெறுவதற்கு அதாவது பிரமானுபவத்தைப் பெறுவதற்குத் துணையாகிறது. எவ்வாறு கர்மம், பக்தி, ஞானம் போன்ற யோகநெறிகளும், ஏனைய மார்க்கங்களும் வீடு பேற்றினை அடைவதற்குத் துணையாகின்றனவோ அதே போன்று கலைகளும் மோட்ச சாதனமாகக் கொள்ளப்படுகின்றன. பௌதீக ரசங்களினூடாக அலௌகீக ரசானுபவத்திற்கு வழி பிறக்கிறது. அக்கினி புராணம் 'ரசம்' என்பது பிரமானந்த சொரூபத்தின் வெளிப்பாடு என்று கூறுகிறது. கலை அனுபவப் பயிற்சியானது (Art Contemplation) பிரமாஸ்வாதத்திற்கு வழியாகிறது. உபநிடதங்கள் பிரமமே ரசஸ்வரூபமானது எனக் கூறுகின்றன (தைத்திரீயம் 11. 1.1). தனஞ்சயர் ஆன்மாவின் ஆனந்தானுபவ நிலையே அழகியலனுபவம் என்கிறார். இந்து தத்துவங்களைப் பொறுத்தமட்டில் பிரமம் சத் (Existence) சித் (Conscionsners), ஆனந்தம் (Bilss) என்ற மூன்று இயல்புகளையும் உடையது. ஆனந்தவர்த்தனர் அழகியலனுபவம் ஓர் அசாதாரண அனுபவம் என்பதனால் அதன் அலௌகீகத் தன்மையை எடுத்துக் கூறுகிறார். கலை அனுபவமான ரசம் இந்து தத்துவங்கள் கூறும் பௌதீகவதிதக் கொள்கையின் அடிப்படையில் 'பிரமானந்த சகோதர' என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. வாழ்க்கை பற்றிய இந்துக்களின் குறிக்கோள் கவிதை, இசை, நடனம், ஓவியம், சிற்பம், கட்டடம் என்ற கலைகளினூடாகப் பெறப்படத்தக்கது என்று விவரிக்கும் நிலையில் கலைகளை ஆன்மீக சாதனங்களாக இந்து சமய, தத்துவ, அழகியல் நூல்கள் கூறுகின்றன.

### ரசிகர்களும் சாதகர்களும்

மத வழிபாட்டு முறைகள் யாவும் மனிதன் மனதை ஒரு நிலைப்படுத்திப்,

புலன்களை அடக்கி இறைவடிவத்தை மனதில் நிறுத்தி அமைதியைப் பெறும் வழியாக உள்ளன. உணர்ச்சிகளின் கொந்தளிப்பு, அலைபாயும் மனம் இவற்றை அடக்குவதற்கு இறைவழிபாடு துணைபுரிகிறது. இத்தகைய உயர்ந்த குறிக்கோளை அடைவதற்குத் திருவுருவ வழிபாடு, கிரியைகள், சடங்குகளை உள்ளடக்கிய கோயில் வழிபாடு உறு துணையாக உள்ளது. கோயிற் கட்டடங்கள் ஆகம விதிப்படி அமைக்கப்படுவதுடன் உள்ளத்தை ஈர்க்கும் அழகிய கலைக் கூடங் களாகவும் அமைந்துள்ளன. இதேபோன்று சிற்ப சாஸ்திர நூல்கள் கூறும் கலை நியமங்களுக்கேற்ப உருவாக்கப்படுவ துடன், ஆடை, ஆபரணங்கள், மலர்கள், மலர் மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டு அழகுபடுத்தப்படுவதனைக் காணலாம். மகோற்சவ காலங்களிற் சிறப்பாகச் சாத்துப்படி அலங்காரங்கள் செய்யப்படு வதைக் காணலாம். ஆகமங்கள் தெய்வ விக்கிரகங்களை அலங்கரிக்கும் ஆசாரி யர்களை அலங்காராச்சாரியர் என்று அழைக்கின்றன. வழிபாடு என்பது புறத்தூய்மை, அகத்தூய்மை இரண்டையும் அடிப்படையாகக் கொண்டது. எவ்வாறு ஒரு ரசிகர் கலைப்படைப்பில் அதன் அழகில் ஈடுபட்டுக் கலை அனுபவத்தைப் பெறுகிறாரோ அதேபோன்று ஒரு சாதகன் (Aspirant) தெய்வத் திருவுருவத்தின் அழகில் மனம் லயித்து மன ஒருமைப் பாட்டைப் பெற்று அமைதி அடைகிறான். கலைப்படைப்பில் ஆழ்ந்து ஈடுபடும் பயிற்சியானது, மன ஒடுக்கத்திற்கு வழிவகுத்து வழிபாட்டில் இலகுவாக ஈடுபட உதவுகிறது. சிரவணம், மனனம், நிதித்தி யாசனம் போன்றன இறைவனை அடை வதற்குரிய வழிகளே. இதே போன்று பக்தியிலும் பல்வேறு வகையுண்டு. ஸ்ரீமத் பாகவதம் (Vii. V.23) "சிரவணம், கீர்த்தனம், விஷ்ணோகோஸ்மரணம், பாதசேவனம் அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சகியம், ஆத்மநிவேதனம்" என்ற பக்தியின் ஒன்பது வகையான நிலைகளை எடுத்துக் கூறு கிறது. படிப்படையாக உள்ளத்தை இறை வனிடம் செலுத்தி இறுதியில் முற்றுமுழு தாக இறைவனை சரணாகதி அடைதலை இது தெளிவுபடுத்துகிறது. கலை ஈடுபாடு, கலை அனுபவம் என்பது இறைவன் மீது ஆழ்தியானங் கொண்டு ஆன்மீக ஈடேற்றம் பெற உதவுவதனால் கலை அனுபவம் பிரமானந்த சகோதர எனப்படுகிறது.

மேற்கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்து நோக்கின் கலை அனுபவம் என்பது எவ்வாறு இறை அனுபவத்திற்கு வழியாகிறது என்பது புலப்படும். இரண் டிலும் ஆழ்தியானமே (Contemplation) முக்கியத்துவம் பெறுகிறது. இந்து மத நூல்கள் கலைஞனை ஒரு யோகியுடன் ஒப்பிடுவதும், கலைகளை மோட்ச சாதன மாகக் கூறுவதும் எத்துணை பொருத்தம் என்பது தெளிவாகிறது. கலை ஈடுபாடும், மத வழிபாடும், புலனொடுக்கம், தியானம், ஆழ்நிலைத்தியானத்திற்கு ஒருவனை இட்டுச் செல்வதுடன், தனித்துவமான இன்ப அனுபவத்தைக் கொடுக்கின்றன. இவை இறுதியில் பேரின்பப் பெருநிலை என்று தத்துவ நூல்கள் விளக்கும் வீடுபேற்றினைப் பெறுவதற்கு வழியமைக்கின்றன.

ஆகமங்கள் கூறும் கோயில் வழிபாட்டில் இசை, நடனம் போன்ற கலைகளும் இறைவனை வழிப்படுவதற்குரிய வழிபாட்டு முறைகளாகக் கூறப்பட்டுள்ளன. கீதம், வாத்தியம், நடனம் மூன்றும் தௌர்யத்திரிகம் என்றழைக்கப்படுகின்றது. இவ்வாறு இசை, நடனம், வாத்தியம் மூலம் இறைவனை வழிபட வகுக்கப்பட்ட நெறியானது கோயில்கள் மூலம் கலைகளைப் பேணுவதற்கு ஆகமங்கள் எடுத்துக் கொண்ட முன்நடவடிக்கையாகவே கொள்ளப்படத்தக்கது. கோயில் வழிபாட்டில் அபிஷேகங்களின் போதும், ஆராதனைகளின் போதும் தாளம், மத்தளம், குழல், சங்கு, நாதஸ்வரம், தவில் போன்ற வாத்தியங்கள் இசைக்கப்படுவது வழக்கம்.

கீத உபாசனையை எடுத்துக்கொண்டால் சாமகானங்களில் ஸ்தோபம் அமைத்துப் பாடுதலும், பண்ணோடு தேவாரப்பாடல்களைப் பாடுதலையும் அது குறித்து நிற்கிறது. ஓதுவார்கள் பண்ணிசைத்தமைக்குப் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. இறைவனையே இசைவடிவாகக் கண்டவர்கள் நாயன்மார்கள். சுந்தரர், "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்று பாடுவது கவனத்திற் கொள்ளத்தக்கது. திருமுறைகள் பண் சுமந்த பாடல்கள் ஆகும். அவற்றைப் பாடுவோர் பண்ணோடு பாடுதல் வேண்டும் என்பது விதி. திருஞானசம்பந்தர் "பண்ணும் பதமேழும் பலவோசைத்தமிழவையும் உள்நின்றதோர் சுவையும் உறுதாளத்தொலிபலவும்" என்று பாடப்படுவது குறிப்பிடத்தக்கது. கீதம், வாத்தியம் இசைக்கப்பட்டதன் பின்னர் நிகழ்த்தப்படுவது நடனம். நாயன்மார் காலத்திற் பெண்கள் கோயில்களில் நடனம் ஆடியமைக்கு அவர்களது பாடல்களே ஆதாரமாக அமைகின்றன. திருஞான சம்பந்தர்,

**"பூவைமேனி இளைய மாதர் பொன்னும் மணியும் கொழித்தெடுத்து ஆவண வீதியில் ஆடுங்கூடல்"**

என்று பாடுவது கவனிக்கத்தக்கது.

**"தையல் மடவார்கள் உடை அவிழக்குழல் அவிழக் கோதைகுடைந்தாட"**

என்று பெண்கள் கோயில்களில் நடனமாடியமையை எடுத்துக் கூறுகிறார். சோழர் காலப் பகுதியில் தேவரடியார்கள் கோயில்களில் நடனமாடியதற்கு ஆதாரங்கள் உள்ளன. நடனத்தின் மூலமாகவும் இறைவனை அடையமுடியும், ஆன்மீக ஈடேற்றத்தைப் பெறமுடியும் என்ற கருத்து வலுப்பெறுகிறது.

நடனம் இந்து மதத்தில் வழிபாட்டு நெறியாக விளங்கியதுடன், இறைவனையே நடனமாடும் நிலையில் நடராஜராகக் கண்டு வழிபட்டவர்கள் இந்துக்கள். நடராஜரது நடனம் உலக இயக்கத்தைக் குறித்து நிற்கும் பிரபஞ்ச நடனம் ஆகும். உலக சிருஷ்டி, காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற பஞ்சகிருத்தியங்களையும் வெளிப்படுத்தி நிற்பது: அது கன்மத்திற்கிடாகப் பிறவி எடுத்த ஆன்மாக்கள் உலகில் வாழ்ந்து கன்மப் பயன்களை அனுபவித்து பிறவித் துன்பத்தில் இருந்து விடுபட்டு இறை அனுபவத்தைப் பெற்று, இறை அருளோடு மோட்ச நிலை அடைவதை விளக்குகிறது. திருமூலர் தம் திருமந்திரத்தில் (2687)

**ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்**
**ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்**
**ஆனந்தம் ஆக அகிலசராசரம்**
**ஆனந்தம் ஆனந்தக் கூத்துகத்தானுக்கே**

என்று பாடுவது குறிப்பிடத்தக்கது. சச்சிதானந்தமாக உள்ள பரம் பொருளின் அருளினால் அதே இயல்பை உடைய ஆன்மா. ஆன்மீக விடுதலையைப் பெற்று உய்வு பெறுகிறது. இந்தவகையில் ஆன்மீக இலட்சியத்திற்கு சாதகமாகக் கலைகளும், கலை அனுபவமும் அமைந்துவிடுகிறது.

கலையை ரசிக்கும் ஒருவன் அந்த ரஸனையின் மூலம் சிறிது சிறிதாகத் தனது மனதை ஒருநிலைப்படுத்த முனைகிறான். இவ்வாறு மனதை ஒரு நிலைப்படுத்தும் முயற்சியானது ஆன்மீக அனுபவத்திற்குத் துணைபுரிகிறது. கலை அனுபவம் பரம் பொருளாகிய பிரமானுபவத்திற்கு சகோதரம் போன்றது (Sahodara of Brahmasvada) என்று கூறப்படுகிறது. மதங்கள் கூறும் மார்க்கங்களுடன் கலை அனுபவமும், கலை ரஸனையும் அதியுயர் மனிதப் பெறுமானமாகிய மோட்சத்தைப் பெறுவதில் துணைபுரிகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. Coomaraswamy, A. K., Transformation of Nature into Art, Newyork; Dover Publications,1956.

2. Dorairangaswamy, M.A., The Religion and Philosophy of Tevaram, Book II, University of Madras, 1959.

3. Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Vol.I Part I, II, Vol. II Part I Indological Book House, 1971.

4. Hiriyanna,M., Art Experience, Kavyalaya Publishers, Mysore,1954.

5. Ramachandran, T.P., The Indian Philosophy of Beauty, Part II, Dr. S.Rathakrishnan Institute for Advanced study in Philosophy, University of Madras, 1979.


♣ ♣ ♣

# தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியின் நினைவலைகள்
## (தேசியம் நோக்கிய பயணம்...)

*செல்வி.த.நிதுஜா*
*தரம்* 11A

சென்ற வருடம் தேசிய மட்டப் மெய் வன்மைப் போட்டிகளானது கொழும்பு சுகததாஸ விளையாட்டரங் கில் செப் ரெம்பர் 29ஆம் திகதி தொடக்கம் ஒக்டொபர் 03ஆம் திகதி வரை நடைபெற்றது. இந் நிகழ்வில் விக்ரோறியாக் கல்லூரி சார்பில் பல வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டோம். அவ்வீர, வீராங்கனைகள் சார்பில் தேசிய மட்ட அனுபவத்தை உங்களிடம் முன்வைப்பதில் பெரும் உவகை அடைகிறேன்.

மாணவர்களின் கல்விச் செயற்பாடு களின் ஓர் அங்கமாக இணை செயற்பாடு களில் முக்கியம் பெறுவது விளையாட்டு ஆகும். இதன்போது மாணவர்கள் தமது திறமைகளைப் பாடசாலைகளில் ஆரம் பித்து கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் எனப் பல தடைகளைத் தாண்டி தேசிய மட்டத்தில் பங்கு பற்றுவதற்குத் தம்மை இசைவாக்கிக் கொள்ளப் பயிற்சி அவசியமாகின்றது. பாடசாலையில் ஏற்படும் பல விதமான பயிற்சிகள் தான், ஒருவன் தன்னை விளையாட்டு வீரன் என வெளிச்சம் போட்டுக் காட்ட உதவுகின்றது.

மாகாணமட்டத்தில் வெற்றி பெற்றுத் தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றியது என்பது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நிகழ்வு ஆகும். அங்கு சென்று பார்க்கும் போது எமது வட மாகாணப் போட்டியிலுள்ள அனுபவத்தினை விடப் பல மடங்கு அனுபவங்களைப் பெறக்கூடிய தாக இருந்தது.

தேசிய மட்ட ஆரம்ப நிகழ்வின் போது நடைபெற்ற அறிமுக விழாவில் வட மாகாணம் சார்பாக ஒரு போட்டியாளர் என்ற ரீதியிலும் தேசிய வீரர்களுள் ஒருவராகவும் அம்மைதானத்தில் அணி வகுத்து நின்ற போது நான் மிகவும் பெருமிதம் கொண்டேன். அணிவகுப்பின் பின் பல பாடசாலைகளைச் சேர்ந்த மேலைத்தேய இசைக்குழுவினர் மேலைத் தேய இசையை இசைத்தனர். அதனைத் தொடர்ந்து பலதரப்பட்ட நடன வகைகளும், பரேட் நிகழ்வும் இடம்பெற்றது. இவற்றைத் தொடர்ந்து ஒவ்வொரு மாகாணக் கொடிகளும் மாகாணத்திற்குப் பொறுப் பான கல்வி அதிகாரிகளினால் ஏற்றப் பட்டன. அதன் பின்பு தேசியக்கொடி கல்வி அமைச்சரான கௌரவ பந்துல குண வர்த்தன அவர்களால் ஏற்றப்பட்டது. ஒலிம்பிக் தீபமானது 2009ஆம் ஆண்டின் முதன்மை வீரர்களால் ஏற்றப்பட்டது. இத் தீபமானது இறுதி நாள் நிகழ்வு வரை அணையாது ஒளிர்ந்து கொண்டிருந்தமை மிகவும் அற்புதமான ஒன்றாகும்.

சுகததாஸ விளையாட்டரங்கில் உள்ள எந்தவொரு ஆசனத்திலிருந்து பார்வை யிட்டாலும் சகல போட்டிகளையும் தெளி வாகப் பார்க்கக் கூடியதாக உள்ளமை மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இம்மைதானத்தில் சுவட்டு நிகழ்ச்சியின் போது போட்டியாளர் ஓடும் நேரத்தை டிஜிற்றல் கடிகாரத்தில் அனைவரும் பார்க்கக் கூடியதாக இருந்தது. மைதான நிகழ்வின் போது அளவீடுகள் யாவும் டிஜிற்றல் முறையில் அளக்கப் பட்டது. இது எமக்கு மிகவும் வியப்பாகவும் புதுமை யாகவும் இருந்தது. போட்டி யாளர்கள் மட்டும் மைதானத்திற்குள் சென்று போட்டியிடுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததாக காணப்பட்டது.

ஆரம்பிப்பாளர்கள் சிங்கள மொழியில் ஆரம்பித்ததில் மிகவும் பயமாகவும் பதட்ட மாகவும் இருந்தது. ஓட்ட நிகழ்வின் போது வெடியொலியை கொண்டே போட்டியை ஆரம்பித்தனர். தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றும் போது பல்லின வீரர்களுடனும் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் அவர்களுடைய செயற்பாடுகளையும், அவர்களுடைய பழக்கவழக்கமாகிய தமது குருவை வணங்கும் முறையையும், போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் மைதானத்தை தொட்டு வணங்குவதையும் அவர்களிட மிருந்தே பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்நிகழ்வினை நேரடியாக ஒளிபரப்பிய ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் மூலம் நமது பெற்றோர்கள் மட்டுமல்லாது தாய்நாட்டு மக்கள் அனைவரும் பார்த்து இரசிக்கக் கூடியதாக இருந்தது.

சுகததாஸ விளையாட்டரங்கில் உபகரண வசதிகள் நிறைவாக இருந்தன. மைதான அமைப்புக்கள், இடவசதிகள் என்பன எமது வடமாகாணத்தை விட உயர்வாகவே காணப்பட்டன. அங்கு வழங்கப்படும் பயிற்சிகள், அவற்றின் செயற்பாடுகள் என்பன மிகவும் கவர்ச்சிகரமாக அமைந்தன. அங்கு உள்ள போட்டியாளர்களின் திறன்களின் வெளிப்பாட்டினை எம்மால் அணுக முடியாது உள்ளது. ஆனால் தேசிய மட்டப்போட்டியில் பங்கு பற்றுவது என்பது எம்மைப் பொறுத்த வரை அதுவே ஒரு வெற்றியாகும். அங்கு சென்றதனால் எமது விளையாட்டில் பல புதிய அனுபவத்தினையும், பயிற்சியையும் மன வலிமையுடன் பெறக்கூடியதாய் இருந்தது. பயிற்றுவிப்பாளரை மதித்து அவரின் சொற்படி நடந்து பயிற்சியில் கலந்து கொண்டு திறமைகளை வளர்க்க வேண்டும் என்பது எனது பேரவா ஆகும். எமது திறமைகளை வெளிக்கொண்டு வந்த எமது பயிற்று விப்பாளரும் கல்லூரியின் பழைய மாணவருமாகிய திரு.ந.சிவரூபன் அவர் களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். அத்தோடு பல சிரமங்களுக்கு மத்தியிலும் எம்மை அழைத்துச் செல்ல வழி சமைத்த முன்னாள் அதிபர் திருமதி.அ.வேலுப்பிள்ளை அவர்களும் எம்மை எல்லாம் அழைத்துச் சென்ற திருமதி.ஜெ.ஆதித்தன் ஆசிரியை அவர்களும் தற்போது எமது விளையாட்டை எல்லாம் ஊக்குவித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலை முதல்வர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களும் எமது வாழ்வில் மறக்க முடியாதவர்களாக உள்ளனர்.

♣ ♣ ♣

# TEACHERS - AS BUILDERS OF NEW NATIONS

***Miss. Tharany Kumarakulasingam***
*Teacher*

From time immemorial, the teacher has been enjoying a high status and esteem in society. He has been termed the "TORCH BEARER" of the race, the one who by the light of his knowledge remove the darkness of ignorance. He moulds the lives of thousands of children and is know as the builders of the nation. He dedicates his life to the service of others and symbolizes a candle which burns to light the way for others. There is no professions so rewarding and as rich in potentialities as the professions of teaching.

The teacher today is facing with new era in education, calling for greater effort on the part of the teacher. Also at the same time he cannot deny the fact there are enormous resources of talent and idealism in our youth. They have lively minds, willing hearts and a dedication to service. All these lead the teachers to believe in the rich possibilities of intellectual and social advance. The practical issue is teaching the ignorant. Education today is dedicated not only to the intellectual development of youth but also to their moral and social welfare.

It has brought about a new outlook, new thoughts and ideas and new methods of teaching, necessitating an over all change in the whole patterns of educations. The new era provides all with equal opportunities. Each child gets the education as his talents deserve. The purpose is to contribute his most to the total life of the community.

Now as we realized that all children are not the same they vary in talents, motivation and interest. Some are highly intelligent, others are poor and backward. Education makes greater demands on teachers. For example, if the children are intellectuality under developed and culturally backward, they need a chance to start, hints to guide them and encourage them to go ahead, instead of greater hours of study.


If a child shows the poor result, the duty of the teacher to find out the cause of it and take remedial measures to raise his standard. If there are obstacles to their education, as teachers, it's their duty to remove the obstacles rather than deprive

them of education facilities. The progressive idea is to build an educational ladder which takes account of "what children are and what they can be". In other words, it throws greater responsibilities on the shoulders of the teachers. Due to the over all changes in the curriculum of our schools demanding greater efficiency and hard work on the part of the teachers.

Is it not the cry all over the world today, that the standard of education is falling down, the type of students coming out the modern educational institutions are misfits in society and life, the teacher is losing his status and positions in society and so on.

This requires the teachers to think seriously over the situation and find out the underlying causes of the present down fall in the field of education. So teachers will have to be prepared for this, dedicating and sacrificing profession, realizing that the take is difficult but not impossible. Thus the teachers have to play an important in framing the lives of the future citizens. In brief, it should be a matter of great fortune and pride for the teachers, that they are the builders of a new nation. The plant of freedom, which has been grown with the help of the martyrs, should now be grown and make to bloom like a lovely flower by the teachers as builders of a new nation.

♣ ♣ ♣





நிலவின் கீழே துயில் கொண்டிருந்தான்
சூரியன் கீழே குளிர்காய்ந்திருந்தான்
செய்யத்தான் போகிறோம் என்றே வாழ்ந்திருந்தான் - எதுவும்
செய்யாமலேயே மாய்ந்துவிட்டான்.

**- ஜேம்ஸ் அல்பெரி**



# விக்ரோறியா அன்னையின் செல்வி

***திரு.சி.க.இந்திரராசா***

*ஓய்வு பெற்ற பிரதி அதிபர்*

மகாஜனாக் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் விஞ்ஞானத்துறையில் முன்னணி ஆசிரியராகத் திகழ்ந்த திருமதி.அருந்தவச் செல்வி வேலுப்பிள்ளை அவர்கள் எங்கள் கல்லூரியின் முன்னாள் அதிபர். எமது விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராகவிருந்த திரு.க.அருணாசலம் அவர்களின் விடா முயற்சியினால் திருமதி.அ.வேலுப்பிள்ளை அவர்கள் 1986ஆம் ஆண்டு இக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையேற்றுக் கொண்டார். இவர் ஆசிரியராக இருந்து சாதித்த சாதனைகள் பல. குறிப்பாக உயர்தர விஞ்ஞான வகுப்புக்களுக்குப் பொறுப்பாகவிருந்து பல மாணவர்களை விஞ்ஞானத்துறைக்கும், மருத்துவத்துறைக்கும் பல்கலைக்கழகம் அனுப்பிவைத்தார் என்பது சரித்திரம் கூறும் உண்மை.

இத்தகைய சாதனைகளின் பேறாக பிரதி அதிபராகக் கடமையேற்று அப்பணியைச் செவ்வனே நிறைவேற்றினார். இக்காலத்தில் இவரது கடமையுணர்ச்சியை மெச்சிய விக்ரோறியாச்சமூகம் 1998 மார்கழி மாதம் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஒப்படைத்தது. கடமையேற்ற காலத்தில் இருந்து மாணவர்களின் கல்விவளர்ச்சி, நிர்வாக மேம்பாடு, விளையாட்டுத்துறை, கலை கலாசாரப் பண்புகள் போன்ற அனைத்து விடயங்களிலும் தன் முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழாவை மையமாக வைத்து ஸ்தாபகரின் மகன் மனேச்சர் செல்லப்பாவின் உருவச்சிலை திரைநீக்கம் செய்யப்பட்டது. கல்லூரியின் சரித்திரம் விளங்கக் கூடிய வகையில் 125ஆவது ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. அம்மலரில் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பெற்ற வளர்ச்சியும் அதற்காக உழைத்தவர்களின் பணிகளும் நினைவுகூரப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய காலத்தில் பாடசாலையின் பௌதிக வளங்கள் பல விரிவாக்கப்பட்டன. அவற்றில் நிக்கொட் நிறுவனத்தால் வழங்கப் பட்ட கட்டடம் குறிப்பிடத்தக்கது. நிக்கொட் நிறுவனப் பணிப்பாளர் திரு.ரி.லங்காநேசன் அவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு இக்கட்டடத்தைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் இசுரு பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு அதற்குரிய ஆரம்ப வேலைகளைத் தொடக்கி வைத்த பெருமையும் இவரையே சாரும்.

கல்லூரியின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் 1950ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நீர்த்தாங்கி திரு.அ. நித்தியானந்த மனுநீதி அவர்களின் உதவியுடனும், கிணறு ஓமான் பழையமாணவர் சங்கத்தின் உதவியுடனும் புனரமைக்கப் பட்டது.

எங்கள் கல்லூரி விளையாட்டு மைதானம் 200மீற்றர் ஓடுபாதை கொண்டதாக இருக்கின்றது. தற்போது அதை 400மீற்றர் ஓடுபாதை கொண்டதாக அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக வெளிநாட்டில் இருக்கும் பழைய மாணவர் சங்கத்தின் உதவியை நாடி பல காணிகளைப் பாடசாலைக்குச் சொந்தமாக்கினார். இன்று விளையாட்டுத்துறையில் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் படைக்கும் சாதனைகளுக்கு இவரது அரு முயற்சியும் ஒருகாரணமாகும்.

கல்லூரியின் அத்தியாவசிய பௌதிக வளங்களுள் தளபாடம் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எங்கள் கல்லூரி அரசினர் பாடசாலையாக இருந்தாலும் அரசாங்கத்தால் வழங்கப்படும் தளபாடத்தின் அளவு பாடசாலை மாணவர்களின் முழுத்தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மிகக்குறுகிய பங்கையே வகிக்கின்றது. மேற்படி அதிபரது காலத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தளபாடங்கள் ஒரு பகுதி தேவையையே நிறைவு செய்யக்கூடியதாக இருந்தது. குறிப்பாக,

1. விஞ்ஞான ஆய்வுகூடத்திற்குத் தேவையான தளபாடங்களும், கணனி அறை, ஆங்கிலப் பகுதிக்குத் தேவையான தளபாடங்களும் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் மற்றைய தேவைகளுக்குத் தளபாடப் பற்றாக்குறை இருந்தது. இவற்றை நிறைவுசெய்யும் பொருட்டு அரச சார்பற்ற தனியார் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டதன் நிமித்தம் GTZ நிறுவனத்தின் மூலம் மாணவர்களுக்குத் தேவையான தளபாடங்கள், ஆசிரியர்களுக்குத் தேவையான கதிரைகள், மண்டபங்களுக்குத் தேவையான தளபாடங்கள் உட்பட ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் பெறப்பட்டன.
2. UNHCR மூலம் மாணவர்களுக்குத் தேவையான 500சோடி மேசை, கதிரைகள் பெறப்பட்டன.
3. நிக்கொட் நிறுவனத்தின் மூலம் 200 பிளாஸ்ரிக் கதிரைகள் பெறப்பட்டன. இவையாவும் அதிபரின் தனிப்பட்ட முயற்சியின் பயனால் பெறப்பட்டவையாகும்.

இவரது சேவைக்காலத்தில் நான் பிரதியதிபராக இருந்து கடமையாற்றிய சந்தர்ப்பத்தையிட்டுப் பெருமைப்படும் அதே நேரத்தல் இவரது நிர்வாக நுணுக்கங்களைக் கண்டு வியந்துமிருக்கிறேன். இவர் தன் உழைப்பினால் பாடசாலையை வளர்ச்சிப் பாதையிலிட்டுச் சென்றதைக் கல்லூரிச் சமூகம் என்றும் மறக்காது. தான் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வதற்காக தற்போதைய தகுதியான அதிபரைக் கொண்டு வருவதற்கும் இவர் எடுத்த முயற்சிகளைக் குறிப்பிடுவதில் பெருமையடைகின்றேன். தொடர்ந்தும் இவரது சேவை கல்லூரிக்குப் பயன்படுவதற்கும், ஓய்வு காலத்தில் அவரது வாழ்நாள் மிகச்சிறப்புடன் அமையவும் எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை வேண்டுகின்றேன்.

♣ ♣ ♣

# சிங்கராஜவனம்

***செல்வன். தேவசுதன் துவாரகன்***
*தரம் 10A*

இயற்கை நேசிப்புக் கழகத்தின் அங்கத்தவராகையால் சிங்கராஜ வனத்தைப் பார்வையிடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. மேற்படி வனம் பற்றி நான் அறிந்து கொண்ட தகவல்களை ஏனையோரும் அறிந்து பயன் பெற வேண்டும் என எண்ணி இக் கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்.

வனம் என்பது நீண்ட காலமாக காலநிலை, சூழல், பௌதீக அமைப்பு மற்றும் ஏனைய காரணிகள் மூலம் அமைந்த தாவரங்களின் கூட்டமும் அதுபோல் உயிரினங்களுக்கான வசிப்பிடமாகவும் அமைந்த ஒரு பிரதேசம் ஆகும்.

சிங்கராஜவனம் இலங்கையின் காலி, மாத்தறை, இரத்தினபுரி மாவட்டங்களில் பரந்து காணப்படுகின்றது. இதன் எல்லைகளாக வடக்கில் நாபொலதொல, கொன்குலன ஆறு, தெற்கில் மஹதொல, கிங் ஆறு, மேற்கில் கமுகந்தாவதொல, குடாவ ஆறு, கிழக்கில் பெவர்லி தோட்டம், தெனியாய என்பன காணப்படுகின்றன.

இவ்வனம் சர்வதேச சொத்தாக பிரகடனப்படுத்தப்பட்டதற்கான காரணம் இப்பிரதேசம் 75 வீதமான மரங்களையும் கொடிகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றமை ஆகும். கி.பி 1618 இல் போத்துக்கேயரால் கிராம பட்டியலில் சிங்கராஜா பற்றிய விபரங்கள் சேர்க்கப்பட்டன. 1875 யூன் 08 ஆம் திகதி 4046 வர்த்தமானி அறிவிப்பின்படி 6700 ஹெக்டேயர் சிங்கராஜ வனமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1936 மே 21 ஆம் திகதி சிங்கராஜவனம் முதன் முதலாக பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1975இல் மனிதனும் சூழலும் என்ற அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாகக் குறிப்பிட்டது. 1977 இல் முழுப்பிரதேசமும் பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1972 - 1977 வரை மரம் வெட்டும் சட்டத்தின்கீழ் 2205 ஹெக்டேயர் அரசமரக் கூட்டுத்தாபனத்தால் நீக்கப்பட்டது. 1988 இல் தேசிய சொத்தாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1989 இல் சர்வதேச சொத்தாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இவ்வனம் 6.21 - 6.27 நெட்டாங்கிற்கும், 80.21 – 30.37 அகலாங்கிற்கும் இடையில் அமைந்திருக்கின்றது. இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து அதி கூடியது 1170 மீற்றரும், குறைந்தது 90 மீற்றரும் ஆகும். இவற்றுள் சில மலைகள் காணப்படுகின்றன. அவற்றுள் 600 மீற்றருக்குக் கூடிய 6 மலைகளும் உள்ளன. அவை கினிபிடிகல கிழக்கு, கினிபிடிகல மேற்கு, சிங்ஹகல, பிடிகல, முலாவெல்ல, கொஸ்குலநன என்பனவாகும்.

இங்கு வருடாந்த அதிகூடிய மழைவீழ்ச்சி 6000mm ஆகும். மாதாந்த மழை வீழ்ச்சி 50mm ஆகும். ஆண்டு வெப்பநிலை 18°C இற்கு இடைப்பட்டதாகும். ஈரப்பதன் அண்ணளவாக $75^0$ இற்கும் $80^0$ இற்கும் இடைப்பட்டதாகும். சரிவு அதாவது இங்கு காணப்படும் மலைகள் $10^0$ - $35^0$ இற்கு இடையில் அமைந்திருக்கின்றன.

இக்காட்டின் மண் செம்மஞ்சள் நிற பொடி சோலிக் மண்ணாகும். இது ஓர் வள மற்ற மண்ணாகும். இம் மண்ணிலிருக்கும் பக்ரீரியாக்கள் மூலம் உக்கிய தாவரங் களிலிருந்து பெறப்படும் போசாக்கினைத் தாவரங்கள் உடனடியாக உறிஞ்சிக் கொள்வதனால் மண் வளமற்றதாகக் காணப்படுகின்றது.

இவ் வனத்தில் காணப்படும் மரங்கள் பல்வேறு உயரங்களில் படிக்கட்டுப் போன்ற அமைப்பில் காணப்படுகின்றன. விசாலமான 45m இற்கு அதிகமான உயர முடைய மரங்களைக் கொண்ட தொகுதி மேற்படியில் காணப்படும். 30m இற்கும் 45m இற்கும் இடைப்பட்ட உயரமுடைய, அடர்த்தியில் குறைந்த இடைவெளியுள்ள சூரியஒளி படக்கூடிய வகையில் அடுத்தபடி காணப்படுகின்றது. 15m க்கும் 30mக்கும் இடைப்பட்ட உயரமுடைய மிகவும் நெருக்கியதாயும் அடுத்த சட்டமைப்பு அமைந்திருக்கின்றது. அதற்கு அடுத்த சட்டமைப்பில் 5m – 15m இற்கு இடைப் பட்ட மரங்கள் காணப்படுகின்றன. இறுதி யாக கீழ் வளரிகளும், புதர்களும் காணப்படுகின்றன.

சிங்கராஜாவின் தாவரக் குடும்பம் 1:240 000 என்ற விகிதத்தில் காணப்படு கின்றன. இங்கு எல்லா இனத் தாவரங்களை யும் காணலாம். இலங்கையில் காணப்படும் 340 தாவர வகைகளுள் 192 வகைகளை இவ்வனத்தில் காணலாம். இவற்றுள் 15 வகைகள் இலங்கைக்கே உரித்தான தாவர வகைகளாகும். இவற்றை சிங்கராஜ வனத்தில் மாத்திரமே காணலாம்.

இங்கு ஹொர, தொரண, கீன, பதுள்ள, வனராஜா, இருராஜா, கொடபர ஆகிய தாவர வகைகள் காணப்படுகின்றன. வெனிவெல், மிளகு, ரசகிந்த, புஸ்வெல், காட்டுமிளகு, போன்ற கொடிவகைகள் காணப்படுகின்றன. இலங்கைக்கே உரித் தான 217கொடி வகைகள் காணப்படுவதுடன் அவற்றுள் 65 வீதமான அதாவது 140 வகை களை சிங்கராஜாவில் காணக்கூடியதாக உள்ளன.

இவ்வனத்தில் பல்வேறுபட்ட உயிரி னங்கள் வாழ்கின்றன. இலங்கைக்கு மட்டும் உரித்தான சில உயிரினங்களும், சிங்க ராஜ வனத்திற்கு மட்டும் உரித்தான சில உயிரினங்களும் இங்கு காணப்படு கின்றன. வண்ணாத்துப்பூச்சிகள், ஈரூடக வாழிகள், ஊர்வன, பறவைகள், முலை யூட்டிகள், பங்கசுக்கள், பக்ரீரியாக்கள் என்பன அவையாகும்.

இலங்கைக்கே உரித்தான 65 வகை யான வண்ணாத்துப்பூச்சிகளை இங்கு காணலாம். இவற்றுள் இலங்கைக்கு மட்டும் உரித்தான வண்ணாத்துப் பூச்சிகளும்

உள்ளன. அத்துடன் இலங்கையில் காணக் கூடிய COMMON BIRDWIN வண்ணத்துப் பூச்சியும் இங்கு உள்ளது.

இலங்கைக்கு உரித்தான 28வகை யான ஈரூடக உயிரினங்கள் இங்கு உள்ளன. இவற்றுள் நீ[illegible]தவளைகள், தவளைகள் அதிகமாகும். தேரை இனங்களும் உள்ளன.

இங்கு இலங்கைக்கே உரித்தான 45வகையான ஊர்வன காணப்படுவதுடன் அவற்றுள் 21 வகைகள் இவ்வனத்திற்கு மட்டும் உரித்தானவையாக உள்ளன. பாம்புகள், ஓணான்கள், ஆமைகளும் வாழ்கின்றன. இலங்கையில் அதிக விஷம் கொண்ட பாம்புகளான குருன்கரவலா, கோமர கூடெல்லா போன்றனவும் இங்கு காணப்படுகின்றன.

147வகைப் பறவைகள் இங்குள்ளன. இவற்றுள் இலங்கைக்கே உரித்தான 33வகைகளுள் 28வகைகளை இங்கு காணலாம். இப்பறவைகளுள் 18வகை களைக் காட்டினுள் மாத்திரமும், 10வகை களை வனாந்தர எல்லையிலும் காணக் கூடியதாக உள்ளது. இப்பறவை வகை களுள் 57வகைகள் அழிந்து கொண்டி ருக்கின்றன.

இலங்கைக்கே உரித்தான மீன்வகை கள் 16இல் 3வகைகளை இவ்வனத்திலுள்ள நீர்த் தேக்கங்களில் காணக்கூடியதா யுள்ளன. இவை தவிர 11மீன்வகைகள் சிங்கராஜாவை வசிப்பிடமாகக் கொண் டுள்ளன.

இவ்வனத்தில் பெருந்தொகையான முலையூட்டிகளைக் காணலாம். இவற்றுள் 40வகையின இங்கு வாழ்கின்றன. இலங்கைக்கு மாத்திரம் உரித்தான முலையூட்டிகள் 12இல் 08வகைகளை இங்கு காணக்கூடியதாயுள்ளது.

35வகையான பங்கசுக்கள் இங்கு காணப்படுகின்றன. மரங்களில் இருந்து உதிரும் இலை, குழைகள், இறந்த விலங்குகள் என்பனவற்றை உக்கச் செய்து மண்ணை வளமாக மாற்றுவதில் பங்கசுக் களும், பற்றீரியாக்களும் பெரும் பங்கு வகிக்கின்றன.

சிங்கராஜவனத்திற்கு அண்மையில் 22கிராமங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் வாருக்தெனிய, கொலொன் தொடுவ ஆகிய இரு கிராமங்களும் காட்டினுள்ளே காணப்படுகின்றன. இங்கு பாணி, கருப்பட்டி தயாரிப்பு, பிரம்பு கொண்டு பின்னப்படும் கைப்பொருள்கள், மருந்துவகைகள் தயாரிப்பு போன்ற தொழில்கள் நடைபெறுகின்றன.

இயற்கைக் காடான இங்கு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதால் இலங்கைப் பொருளாதாரத் திற்கு அன்னிய செலாவணி கிடைப்ப துடன், இவ்வனத்தைச் சார்ந்திருக்கும் கிராம மக்களின் கைத்தொழிலும் முன்னேற்றமடைகின்றது.

இவ்வனத்திற்கு அண்மையில் பரி சோதனை நிலையங்களும், தகவல்

நிலையங்களும் காணப்படுகின்றன. பல புதிய கண்டுபிடிப்புக்களையும் கண்டறிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். வெளிநாட்டுப் பரிசோதனைக் குழுக்களுடன் நம் நாட்டவரும் இணைந்து பல விசேட தாவரங்களையும், செடி கொடிகளையும் கண்டறிந்து உள்ளனர்.

சிங்கராஜ ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 14km தூரத்திலுள்ள சிங்ஹகல எனும் இயற்கைப் பாதை, 9km தூரத்திலுள்ள கல்லெள்யாய எனும் இயற்கைப் பாதை, 7km தூரத்திலுள்ள யோதநவதகச, 7km தூரத்தில் உள்ள முலாவெல்ல, 3.5km தூரத்திலுள்ள கல்வி மற்றும் தகவல் நிலையம், 2.5km தூரத்திலுள்ள தூவிலிஎல்ல எனும் நீர் வீழ்ச்சி என்பன சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களாக உள்ளன.

இத்தனை சிறப்புக்கள் மிக்க உலக பொக்கிசமான சிங்கராஜ வனத்தைப் பற்றிய மேற்படி தகவல்கள் யாவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. இயற்கையை ரசிப்போம். அதனைப் பாதுகாப்போம். பயன்பெறுவோம்.

♣ ♣ ♣



உங்களது அனுமதி இல்லாமல் யாருமே
உங்களைத் தாழ்வாக எண்ணவைக்க முடியாது.
**- எலினோர் ரூஸ்வெல்ட்.**



# நன்னெறியில் புது செல்நெறி

*செல்வி. பூ ஜெயமலர்*
*ஆசிரியை*

கல்லா அறிவின் கயவர்பால் கற்றுணர்ந்த
நல்லார் தமது தனம்நண்ணாரே-வில்லார்
கணையிற் பொலியும் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகும் ஒண்பொருள்.
கற்றுணந்த நல்லவர் கல்லாத அறிவற்றவரைச் சேரமாட்டாராம்.
தம்மிடமுள்ள பெருமைகள் இழக்கப்பட்டுவிடும் என்றஞ்சி.
இதை மறுதலிக்கிறது புது நெறி.
கற்காதவரை அடைந்து இவரையும் தம்போல்
ஆக்கவேண்டிய கடப்பாட்டை மறந்துவிடாது வாழ
வழிகாட்டுவதே கட்டாயக்கல்வியாகும்.
வெண்பாவின் மறு பாதியை மனதிலிருத்திக் கொள்ளுங்கள்.
ஒரு பொருளையே
உயர்வாகவும் இழிவாகவும் உருவாக்க முடியும்.
அது பார்ப்போரின் நோக்கைப் பொறுத்தது.
இதற்கு உதாரணம் தெப்பம்.
கற்றறிந்த சான்றோர் கவி சொன்னார்
தனித்துள்ள போது எவ்வளவு கனமுள்ள பொருளையும்
தெப்பத்தில் ஏற்றி விடுங்கள்தாழ்ந்து போகாது. அது
தன் "கனம்" என்னும் தனித்துவத்தை இழந்து
இலகுவாகி விடுகிறது.
இது இழிவாம்.(கனம்-கற்றவர்)(புணை –கல்லாதவர்) ஆனால்
அதே பாரமான பொருள்
மறுகரையை அடைய வேண்டுமானால்
தெப்பத்தில் ஏற்றப்படவே வேண்டும்.
ஏறத்தயாராகவே வேண்டும். மறுத்து
தனித்துச் செல்ல நினைத்தால்
தண்ணீரில் அல்லவா அமிழ்ந்து விட வேண்டும்.

தன்னிலும் பாரமானதைக் கூட
தாங்கிக் கரை சேர்க்கிறது தெப்பமல்லவா?
தாழ்ந்தோரைச் சார்ந்தால்
தாமும் தாழ்ந்து விடுவோம் என்று
சான்றோர் கூறிய கவியை மறுதலிக்க முடியும்.
தான் தண்ணீரில் நனைந்தும்
அலையில் மோதுண்டும்
தன்னைச் சார்ந்தோரைக் கரைசேர்க்கிறதே தெப்பம்! அதன்
தியாகம் நிறைந்த சாதனை எமக்குப் பாடம்.
நாமும் தெப்பம் போல் இருப்போம்.
இழிந்ததாய் அல்ல
சார்ந்தோரைக் கரையேற்றுவதாக.
எம் செய்கை புனிதமாகவும் புதுமையாகவும் இருக்கட்டும்
அதிலிருந்து பிறப்பன வெல்லாம் புதுமைகளும் புனிதங்களுமே!

♣ ♣ ♣



ஓராண்டு நோக்கிருந்தால், பூக்களை வளருங்கள்
புத்தாண்டு நோக்கிருந்தால், மரங்களை வளருங்கள்
முடிவில்லா நோக்கிருந்தால், மனித குலத்தை வளருங்கள்.

**- கீழை நாட்டுப் பழமொழி.**

# தீயவை யாவினும் சிறந்த தீயாள்

***செல்வன். த. திலக்ஷன்***

*க.பொ.த உயர்தரம் (2011)*

*கலைப்பிரிவு*

கம்பனைக்கற்றவர்க்குக்கரைந்து போன பாடமிது. ஒரு மனைவியோடு வாழ்வதே கடினம் என்று கூறாமல் சந்நியாசம் கொள்ளும் ஆடவர்களின் மத்தியில் தசரதன் மூன்று மனைவியரை மணந்தும் பேதமகற்றி ஒற்றுமையை நிலைநாட்டி வாழ்ந்தான். ஒருவரையொருவர் சகோதரிகளாக மதித்தனர். ஒருவரது குழந்தையை மற்றவள் தனது குழந்தை போல் பேணி வளர்த்தாள். பிள்ளைகளும் அவ்வாறே அனைவரையும் தாயாக மதித்து ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் வாழ்ந்தனர் என்பது இராம கதையைக் கற்றவர்க்குத் தெரியும்.

நல்ல மரத்தில் புல்லுருவி போல் அந்த நற்றாயருள் ஒருத்தியான கைகேயியை மாற்றவென்றே ஒருத்தி வந்தாள். அவள் தான் கூனி எனப்படும் மந்தரை. "கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்" "அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்னும் பழமொழிகள் இவர்களுக்காக உருவானதா? அல்லது இவர்களை வைத்து உருவானதா? என்று எண்ணுமளவுக்கு கைகேயியின் மாற்றம் அமைகிறது.

இராமனது முடிசூட்டலைத் தடுப்பதைத் தன் நீண்ட காலக் கனவாகக் கொண்ட கூனி எதுவுமறியாமல் உறங்கிக் கொண்டிருந்த கைகேயியை அடைந்து அவளை எழுப்பியவள் "உனக்குப் பேரிடர் வருவதை அறியாமல் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறாயே?" என்று கடிந்து கொண்டாள். அதற்கு "புவிக்கெலாம் வேதமேயன இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ?" என்று ஏளனம் தோன்றக் கடிந்து கொண்டாள் கைகேயி.

அப்போது இராமனது முடிசூட்டு விழா பற்றிய தகவலைத் தெரிவித்தாள். இராமனது தகுதிபற்றித் தந்தை அறிவார். தேவரும் முனிவரும் அறிவர். மண்ணுலகத்தார் அறிவர். ஆனால் அவன் இளவரசுப் பட்டம் பெறுவதை விரும்பாத கூனிக்கோ "தாடகையெனும் பெயர்த் தையலாள் படக் கோடிய வரிசிலை இராமனே தெரிகிறான். அதாவது போயும் போயும் ஒரு பெண்ணை வதம் செய்ய வில்லெடுத்தவனே இவன். வில்லறம் தவறியவன். ஆண்மைக்கு மாசுபடப் பிறந்தவன்" என்று கூனியின் வாயாற் பேச வைத்திருப்பது கம்பனது போற்றுதற்குரிய கவித்துவம் ஆகும். இதுகேட்ட கைகேயி கோசலை போல் மகிழ்ந்து விலைமதிப்பற்ற மாலையைப் பரிசாக வழங்கினாள். ஆனால் கூனியோ கைகேயி மனம் மாறும் வரையிலும் தன்முயற்சியை விட்டபாடாகவில்லை. இறுதியில் மனம் மாறிய பின்பே விட்டாள். இந்நிலையிலும் கம்பன் கைகேயியைக் குற்றவாளியாகக் கூற விரும்பாது,

**"அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்**
**துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்**

**இரக்கமின்மையன்றோ இவ்வுலகங்கள் இராமன்**
**பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றனவே"**
என்று அதற்குக் காரணம் கற்பிக்கின்றார்.

ஊழ்வினை துரத்தியதால் சிலம்பு விற்கக் கோவலன் பாண்டி நாட்டுக்குச் சென்றது போல் கைகேயியும் அரக்கர் செய்த பாவமும்தேவர்கள் செய்த தர்மமும் துரத்தியதால் தன் நற்பண்புகளை இழந் தாள். அதுமட்டுமன்றி அவள் அப்படிக் கல் லாகி நின்று செயற்படாவிட்டால் இச்சுவை யான கதையே பிறந்திருக்காது என்று அவளைக் காப்பாற்றுகிறார் கம்பர். அவ் வாறு உள்ளத்தால் மாறியவளை உருவத் தாலும் மாற்றுகின்றார். அன்புக்குரிய காதல் மனையாளாகவும் பாசத்திற்குரிய தாயாகவும் இருந்த கைகேயி நல்ல மனுசி என்று கூடக் கூறமுடியாத அளவுக்கு மாறிவிடுகின்றாள்.

மந்தரையின் திட்டத்தைச் செயற் படுத்துவதற்காகத் தன்னைத் தயார்ப் படுத்துகிறாள். கூந்தலிற் செருகிய பூவைச் சிதைத்தாள். ஆபரணங்களை அகற்றி னாள். திலகத்தை அழித்தாள். பஞ்சணை மெத்தையை விட்டுக் கீழிறங்கினாள். மொத்தத்தில் மூதேவி போலக் காணப் பட்டாள். இப்படிப்பட்ட கோலத்தில் இருந் தால்தான் நினைத்ததை நிறைவேற்ற முடியும் என்று நினைத்தாளோ அல்லது என்றும் போல் இயல்பான நிலையிலி ருந்தால் இவ்வளவு உறுதியாக இருக்க முடியாது என்று கருதினாளோ?. இவை யெல்லாவற்றையும் கம்பன் தீர்க்க தரி சனத்தோடுதான் கூறியிருக்க வேண்டும். ஏனெனில் சுமங்கலிப் பெண்கள் யாருமே செய்யத் துணியாதவை இவள் செய்தவை. இனிமேல் இம்மங்கலக் கோலத்தை அவள் ஒருபோதுமே கொள்ளப் போவதில்லை என்பதையே உணர்த்தியுள்ளார் என்பது கம்பரசிகர் வாதம்.

அந்தப்புரத்தில் அலங்கோலமாகக் கைகேயியைக் கண்ட தசரதன் பெருந்து யரடைந்தான். "உனக்குற்ற துன்பம் யாதோ?" எனக்கேட்டவாறே பதிலுக்குக் காத்திராது "மானை எடுக்கும் யானை போல் தழுவியெடுக்கலுற்றான்." அவளோ "மின் துவள்கின்றது போல் மண்ணில் வீழ்ந்தாள்". இங்கே நயக்கத் தக்கது யாதெ னில் என்றும் மாற்றமடையாத இயல் புடைய யானையை வலிமை பொருந்திய தசரதனுக்கு உவமையாக்கி மருண்டு மாறும் இயல்புடைய மானைக் கைகேயிக்கு உவமையாக்கியுள்ளமையாகும். அதுவுமன்றி மண்ணில் வீழ்ந்த மின்னல் மீண்டும் வானை அடைவதில்லை. அதுபோல் இவளும் இனித் தசரதன் கையை அடையப் போவதில்லை என்பதைக் கூறுகின்றார்.

எவ்வாறேனும் மனைவியின் துன்பத் துக்கான காரணத்தைக் கண்டுபிடித்து அதை நீக்கி அவளை முன்போலாக்கிவிடத் துடித்தான் தசரதன். அதனால்
**"உன்னை இகழ்ந்தவர் மாள்வர் உற்றதெல்லாம்**
**சொன்னபின் என்செயல் காண்டி சொல்லிடு"**
என்றவன்
**"வள்ளல் இராமன் உன்மைந்தன் ஆணை**
**உள்ளம் உவந்து அது செய்வேன்"**
என்று அவசரப்பட்டுச் சத்தியமும் செய்து விட்டான். இங்கு கம்பன் காட்டும் நயம்

மிக்க சொற்பிரயோகங்கள் ரசிக்கத்தக்கன. "வள்ளல் இராமன்" என இராமனை வள்ள லாக்கினான் என்றால் இதுவரை இராமன் எந்த வள்ளற்தன்மையும் செய்யவில்லையே. அப்படியென்றால் ஏன் கூறினான்?. ஓ! தனக் குக் கிடைக்கவிருந்த அரசைத் தம்பிக்காகக் கொடுத்துவிட்டு "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" என்று கூறப் போகின்றவனை வள்ளல் என்று கூறாது வேறெப்படிக் கூறுவது?

இவ்வாறு கூறிய கணவனைப் பார்த்து

**"ஏய வரங்களிரண்டினிலொன்றினாலென்**
**சேயரசாள்வது சீதைகேள்வனொன்றால்**
**போய் வனமாள்வது"**

என்றாள். இவ்விடத்திற்றான் அவளைக் கம்பர் "தீயவை யாவையினும் சிறந்த தீயள்" என்கிறார். "உன்மகன் இராமன்" எனக்கூறிய கணவனைப்பார்த்து "என் மகன் அரசாள்வது" எனக்கூறிவிட்டு அது பரதனே என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இராமனை "சீதை கேள்வன்" என்று அந்நியப்படுத்தி விடுகின்றாள். தான் பெற்றெடுக்கா விட்டாலும் பெற்றவள் போல் அன்புசெலுத்தி வளர்த்த பிள்ளையைக் காட்டுக்குப் போ எனக்கூறிய வன்னெஞ்சியை தன் உயிரிலும் மேலாக மதித்துக் காதல் செய்த கணவனைப்பார்த்து இத்தகைய கொடிய வரத்தைக் கேட்ட கொடியவளை "தீயவை யாவினும் தீயாள்" என்பது எத்துணை பொருத்தமானது?. இங்கு நல்ல பொருளில் பயன்படுத்தப்படும் "சிறந்த" என்ற சொல்லைக் கைகேயியின் கொடுந் தன்மையை மிகைப்படுத்திக் காட்டக் கம்பன் கையாண்டிருப்பது சிறப்பாகும்.

இக்கொடிய தன்மையைத் தன்னுள் வைத்திருந்ததால்தான் கணவன் துன்ப மடையவும், இரந்து கேட்கவும், கோபம டைந்து பேசவும், இராமன் பிரியின் தன்னு யிர் தரியாதெனக் கூறவும் மனம் மாறாதவ ளாகக் "கொண்டது விடாப்பிடியோடு" வரங் களைப் பெறுவதிலேயே குறியாக இருந்தாள். வரங்களைப் பெற்ற பின்னர் தானே அதைச் செயற்படுத்தத் துணிந்து இராமனை அழைத்து உன் தந்தையின் கட்டளை யென்று வனவாசத்துக்கான செய்தியைத் தெரிவித்தாள். இராமன் தசரதனைச் சந் திக்க நேர்ந்தால் காரியம் கெட்டுவிடுமோ என்றஞ்சியே இவ்வாறு நடந்து கொண்டாள்.

எனவே கூனியின் சகவாசத்தால் தனக்கு உண்டாகக் கூடிய பழிக்கும் அஞ் சாது தன்வாழ்வினுக்கு ஏற்படப் போகும் கேட்டையும் உணராது நாட்டுக்கு ஏற்படப் போகும் தீங்கையும் கருதாது ஏன்! தன்மகன் பரதன் முடிசூட சம்மதிப்பானோ விடுவானோ என்றுகூடச் சிந்திக்காது இவ் வாறு செய்தவளை வெறுமனே "தீயவள்" என்றாற் போதுமா? எனவே தான் கம்பர் கைகேயியைத் தீயவை யாவினும் சிறந்த தீயாள் என்றார். இதன்மூலம் அரசாளும் ஆசையும் ஆரைத்தான் விட்டது? தாயும் பிள்ளையும் என்றாலும் எச்சரிக்கை அவசியம். பசப்பு வார்த்தைகளை நம்பிச் சுய சிந்தனையின்றிச் செயற்படுவதால் உண்டாகும் கேடுகளையும் அவசரப்பட்டோ அல்லது அதிக அன்பின் நிமித்தமோ வாக்குறுதிகளை வழங்குவதன் கஷ்டங் களையும் அறியமுடிகின்றது.

♣ ♣ ♣

## மாணவ முதல்வர்கள் 2011 / 2012






அவுஸ்ரேலியா மெல்பேர்ன் பழைய மாணவர் சங்க ஒன்று கூடலின்போது
கல்லூரிக்கீதம் இசைக்கப்படுகின்றது.

# Barakath paper Trading Company

**School Items, Fancy Items,**

**Stationery, Specialist in Exercise Books,**

**Papers, Boards,**

**Printing Ink & Boss Products**



388, Hospital Road,
Jaffna.
Tel : 021 2222409
021 2222909



ரன் கெகுளு

18 plus

Kantha Ran Ginum

NRFC

7 வருடங்களுக்கு பிறகு

ரு.100,000

5 வருடங்களுக்கு பிறகு

ரு.50,000

ரு.62,500

முதலீடு

புத்திசாதுரியமான முதலீடு

முதலீடு

ரு.25,000

ரு.31,250

7 வருடங்களுக்கு பிறகு

ரு.50,000

5 வருடங்களுக்கு பிறகு

BOC infinity Retirement Plan

சாதாரண சேமிப்பு கணக்குகள்

இலங்கைவங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்


Prestige PLUS
Personal Account


BOC Smart Saver

SAVINGS CERTIFICATES

# THEVANSON

*Dealers for all kinds of Electronic goods, PVC Pipes and Fittings Power Tools, Multilac Paint items etc....*





No. 57, K.K.S. Road, Chunnakam.
T.P. : 0773912742, 0718474688

விக்ரோறியாக் கல்லூரி கல்விப்பணியில் மேலும் சிறந்தோங்க வாழ்த்துக்கள்

# அம்பாள் மரஅரிவு காலை அன்
# மர வியாபாரம்





சகலவிதமான மரத்தளபாடங்கள்,
வீடுகளுக்கான கூரைவேலை,
கதவு, யன்னல் அனைத்துக்கும்
மற்றும்
மரங்கள் பெற்றுக் கொள்ளவும்



பாரதி வீதி,
சங்கானை

உரிமையாளர் : சு. ஜெயகாந்தன்

# எனது நினைவில் நின்றவை சில

***திருமதி அ. வேலுப்பிள்ளை***
*முன்னாள் அதிபர்*

நீண்ட பாரம்பரியமும் தனித்துவமும் கொண்ட விக்ரோறியாக் கல்லூரியின் 135ஆவது ஆண்டு நிறைவினையொட்டி ஒரு மலரைக் கல்லூரிச் சமூகம் வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியதாகும். கல்லூரியின் சாதனைகளைக் காலத்துக்குக் காலம் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருப்பது இவ்வகையான மலர்களேயாகும். இவை கல்லூரியின் வரலாற்று ஆவணங்களாகும். இவை தொடர்ந்து நூலகங்களிற் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும். ஜோன்.ப.மாட்டின் என்பவர் 'யாழ்ப்பாணக் குறிப்புக்கள்' என்னும் நூலில் பத்திரிகைத் தொழில் பற்றிக் குறிப்பிடும் போது 1898இல் விக்ரோறியாக் கல்லூரி வெளியிட்ட பாடசாலைச் சஞ்சிகை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னரும் சில சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. ஆனால் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு மலரினை ஆக்க முயற்சித்த போது மேற்குறிப்பிட்ட சஞ்சிகைகளைத் தேடி அலைந்த போதும் துரதிஷ்டவசமாக அவை எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. இதனால் மிகுந்த சிரமத்துக்குள்ளானோம்.

எமது கல்லூரி 1876ஆம் ஆண்டு கனகரத்தின முதலியார் அவர்களால் சைவ ஆங்கிலப் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பட்டு தொடந்து அவர் மகன் திரு.க.செல்லப்பா முதலியார் அவர்களால் வழிநடாத்தப்பட்டது. இவர்களது தூர நோக்கும், பரந்த மனப்பாங்கும், செயற்றிறனும் கல்லூரியின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன.

இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா 1976ஆம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி 18நாட்களாக இரவு பகலாக ஒளிர்ந்தது என்று அறிந்தோம். நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக கல்லூரியின் வடக்கு மூலையில் 2பரப்புக் காணி அமைந்துள்ளது.

கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழா 2001ஆம் ஆண்டு மிகுந்த இக்கட்டான சூழலில் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இருநாட்கள் அமைதியாகக் கொண்டாடப்பட்டது. முதலாம் நாள் மனேஜர் செல்லப்பா அவர்களின் உருவச்சிலை திரைநீக்கம் செய்யப்பட்டு பரிசுத்தின நிகழ்வுகளும் இடம்பெற்றன. பழைய மாணவரான மேல்நீதிமன்ற நீதிபதி உயர்திரு.கு.பொ.சி.வரதராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். வலி.மேற்குப் பிரதேச செயலர் கலாநிதி.க.குணராசா அவர்களால் நிறுவுனர் நினைவுப்பேருரை நிகழ்த்தப்பட்டது. இரண்டாம் நாள் நிகழ்வில் கல்லூரிக்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டு ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர் பழைய மாணவர்

களினால் கௌரவிக்கப்பட்டனர். நூற்றி யிருபத்தைந்து ஆண்டுகளின் ஞாபகார்த்த மாக மனேஜர் செல்லப்பாவின் உருவச்சிலை, செல்லப்பா மண்டபம், விஸ்தரிக்கப்பட்ட விளையாட்டு மைதானம், கல்லூரியின் வரலாற்று மலர் என்பன உள்ளன.

தற்போது அமைதியான சூழலில் 135ஆவது ஆண்டு நிறைவு விழா கொண் டாடப்படுவதையிட்டு மனநிறைவடை கின்றேன்.

நான் மகாஜனாக் கல்லூரியிலிருந்து சுயவிருப்பின் பேரில் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த போது அதிபர் திரு.க.அருணா சலம், கல்வித்திணைக்கள அதிகாரி யாகவிருந்த திரு.கா.சந்திரராசா ஆகி யோரின் முயற்சியினால் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார், மகாத்மாகாந்தி அடிகள் ஆகியோர் கால் பதித்த புனிதத் தன்மை கொண்ட விக்ரோறியாக் கல்லூரியில் 22.06.1986இலிருந்து ஆசிரியராகக் கடமை புரியும் பாக்கியம் கிடைத்தது.

இங்கு நான்கு திறமையான அதிபர் களின் கீழ் சேவையாற்றும் வாய்ப்புப் பெற்ற வள். ஒவ்வொருவரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். இவர்களின் காலங்களை நினைப்பது விக்ரோறியாவின் சுவாரசி யங்கள், சவால்கள், தடைக்கற்கள், எதிர் நீச்சல்கள் என்பவற்றைத் தெரியப்படுத்து வதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது.

திரு.க.அருணாசலம் அவர்கள் 13.05.1978-28.09.1987 காலப்பகுதியில் இக்கல்லூரியின் அதிபராகக் கடமை யாற்றினார். இவர் தனது வெள்ளையுள் ளத்தாலும், என்றும் எவர்க்கும் உதவ முன்னிற்கும் பண்பினாலும், அறிவுத்திறத் தாலும் மிகக் குறுகிய காலத்திலேயே மாணவர்கள், ஆசிரியர்கள், துணை ஆளணியினர், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரினது உள்ளங்களை யும் தன் பாலீர்த்துக் கொண்டவர்.

கல்லூரியின் வரலாற்றில் இவருடைய காலம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவருடைய காலத்திலேயே நிர்வாகக்கட்டி டத்தொகுதி மிகுந்த சவால்களின் மத்தி யில் கட்டப்பட்டது. கல்லூரியில் ஏற்பட்டி ருந்த பல பிரச்சினைகள் இவரது நிர்வாகத் திறமையாலும், சாதுரியத்தினாலும் தீர்த்துவைக்கப்பட்டன. இவருடைய காலத்திலேயே நீண்ட இடைவெளியின் பின் மாணவர்கள் பலர் பல்கலைக்கழகம் சென்றனர். கல்லூரியின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க வகையில் ஞா.பவானி, எஸ்.இரமணன் ஆகிய இருவரும் மருத்துவபீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட முதல் மாணவர்களாவர்.

கல்லூரி விளையாட்டுத்துறை உட்பட சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டது. நீண்ட இடைவெளிக்குப்பின் பரிசளிப்பு விழாக்கள்இ நிறுவுநர் தினப்பேருரை கள், மெய்வல்லுனர் போட்டிகள், உயர்தர மாணவர் மன்ற ஒன்றுகூடலும் விருந்துப சாரமும் என்பன உரிய காலத்தில் நடைபெற்றன.

இவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றாலும் கல்லூரியுடன் அந்நியோன்யமான தொடர்பினைப்பேணி கல்லூரியின் வளர்ச்சிக்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளையின் தலைவராக இருந்து வெளிநாட்டுக் கிளைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கல்லூரியின் அபிவிருத்திக்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தவர். கல்லூரியின் வரலாற்றினைப் பல உசாத்துணை நூல்களிலிருந்து ஆதாரங்களைப் பெற்று ஆராய்ந்து தொகுத்தளித்த பெருமை திரு.க.அருணாசலம் அவர்களையே சாரும். தற்போதய அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களைக் கல்லூரிக்கு வரவழைப்பதற்குக் காரணகர்த்தாவாக விளங்கியவரும் அவரே.

இவரைத் தொடர்ந்து காரைநகரைச் சேர்ந்த திரு.கே.கே.நடராஜா (14.10.1987–04.07.1989) அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இவருடைய காலம் அரசியல் நெருக்கடி நிறைந்த காலம். பாடசாலைச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட காலம். மாணவர்களைப் பற்றிய விசாரணைக்காக இராணுவ முகாம்களுக்கு ஆவணங்களுடன் சென்றுவரவேண்டிய கஷ்டமான நிலை. ஆயினும் தன்னுடைய திறமையினாலும், சாதுரியத்தினாலும் அச்சவால்களுக்கு முகம்கொடுத்து வெற்றி கண்டவர்.

இவரது காலத்தில் அரசாங்க நிதியதவி எதுவும் இல்லாதிருந்த போதும் பழைய மாணவர்களின் அனுசரணையால் மிகப் பழைமை வாய்ந்த பிரதான மண்டப புனர்நிர்மாண வேலைகள், அலுவலக மேல்மாடி மண்டபத்திற்கு வேலைப்பாடுகளுடன் கூடிய வர்ணம் பூசுதல், கல்லூரியின் முன்பக்க மதில் நுழைவாயில் புனரமைப்பு ஆகியன இடம்பெற்றன. மின்விநியோக மின்மை, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற நிலைமைகளால் கல்லூரிக்கான நீர்விநியோகத் தொகுதி சீர்குலைந்த நிலையில் கல்லூரியின் பழைய கிணற்றடியில் சிறிய நீர்த்தாங்கியும் குழாய்களும் அமைக்கப்பட்டு மாணவர்களின் குடிநீர்ப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. கல்லூரிக்கான பாண்ட் வாத்திய அணியும் இவரது காலத்திலேயே உருவாக்கப்பட்டது.

அடுத்து தொல்புரத்தைச் சேர்ந்த திரு.செ.பத்மநாதன் அவர்கள் 16.05.1989–05.12.1992 வரை அதிபராகச் சேவையாற்றினார். இவர் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவனாகவும், ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்தவர். கல்லூரியின் நீண்ட நாட்தொடர்பின் காரணத்தால் கல்லூரியின் பாரம்பரியங்களை நன்கு அறிந்து கஷ்டமான காலத்திலும் கல்லூரி நிர்வாகத்தைத் திறம்பட நிகழ்த்திச் சென்றார். சீரற்ற அகப்புறச் சூழற்காரணிகளால் செயற்படாதிருந்த மாணவர் ஆளுமை விருத்திக்களமான உயர்தர மாணவர் மன்றம் புனரமைக்கப்பட்டு மாணவர் ஒன்றுகூடலும் விருந்துபசாரமும் இடம்பெற்றன.

மாணவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதாலும் ஆசிரியர்களுக்கு மனிதாபிமான உதவிகளைச்

செய்து கொடுப்பதாலும் அவர்களின் முழுத்திறமையையும் பயன்படுத்தும் சக்தி வாய்ந்தவராக விளங்கினார். இவரது காலத்திற்தான் முதன்முறையாக ஆசிரியர் தினம் 06.10.1991இல் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணவருக்கான மதிய உணவுத்திட்டமும் அறிமுகப்படுத் தப்பட்டது. அரசாங்கத்தினால் வழங்கப் பட்ட மிகக் குறைந்த நிதியிலிருந்து சோறு, கறி வழங்கப்பட்டதோடு அப்பணத்தைச் சிக்கனமாகக் கையாண்டு வெள்ளிக் கிழமைகளில் மாணவர்களுக்குப் பாயாச மும் வழங்கப்பட்டது.

கல்லூரியில் பல அபிவிருத்திப் பணி களை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டி ருந்த போதிலும் மிக மோசமான அரசியற் சூழ்நிலை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளிற் தங்கியிருந் தமை, காரைநகர்ப் பாடசாலைகள் சில மாலை நேரப் பாடசாலைகளாக எமது பாடசாலையில் இயங்கியமை, எதிர்பார்க்கப் பட்டவர்களிடமிருந்து நிதியுதவி கிடைக் காமை போன்ற காரணங்களினால் அவை நிறைவேற்றப்படாமை கல்லூரியின் துரதிஷ்டமேயாகும்.

அடுத்து பொன்னாலையைச் சேர்ந்த வரும் இக்கல்லூரியின் பழைய மாணவருமான திரு.கா.சந்திரபாலன் அவர்கள் 06.10.1992–12.12.1998 வரை அதிபராகக் கடமையாற்றினார்கள். அக்காலத்தில் நிலவிய மிகக் கஷ்டமான அரசியல் சூழ்நிலையின் மத்தியிலும் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்சென்று கட்டிக்காத்த பெருமை இவருடையதாகும்.

செயற்றிறனுடைய ஒருவர் வழிகாட்டி னால் இலைமறைகாய்களாக இருக்கும் திறமைகள் தாமாகவே வெளிக்கொணரப் படும். எமது அதிபர் ஒரு சிறந்த செயல் வீரர். கலங்காத உள்ளமும், குன்றாத ஆர்வமும், விடாமுயற்சியும் உடையவர். எல்லையற்ற துன்பங்களைத் தானே சுமந்து கல்லூரியை வளர்த்துச் சென்றவர்.

மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, ஆளுமை விருத்தி, பௌதிக வளவிருத்தி செயற்றிட்டங்களைச் செயற்படுத்த முற்பட்ட போது நிதி தேடுவதில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி யிருந்தது. நீண்ட காலமாகச் செயலிழந்தி ருந்த பழைய மாணவர் சங்கம் புனரமைக் கப்பட்டது. வெளிநாட்டுக் கிளைகளான கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் கிளைகள் உருவாக்கப்பட்டு அதிலிருந்து பெறப்படும் வட்டி மூலம் கல்லூரித் தேவைகள் நிறைவேற்றப் பட்டன. அக்காலத்தில் ஆசிரியர் பற்றாக் குறை பெரும் பிரச்சினையாக இருந்தது. க.பொ.த உயர்தர வகுப்பில் பல முக்கிய மான பாடங்களுக்கு தற்காலிக ஆசிரியர் களை நியமித்து மாணவர்களுக்குக் கல்வி அளித்ததன் மூலம் அவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறு பேறுகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் தொகையை அதிகரிக்கச் செய்தார். நீண்ட இடைவெளி யின் பின்னர் நா.கிருபானந்தன், இ.சுரேந்திர

குமார் ஆகிய இருமாணவர்கள் மருத்துவ பீடத்திற்கு அனுமதி பெற்றமை குறிப்பிடத் தக்கது.

மாணவர் ஆளுமை விருத்திக் களங் களான மாணவர் மன்றங்கள் புத்துயிர் பெற்றன. உயர்தர மாணவர் மன்றம் க.பொ.த சாதாரண மாணவர்களைப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் நோக்குடன் விஞ்ஞான செயல்முறைப் பயிற்சிப் பட்டறையை நிகழ்த்தத் தொடங்கியதும் இவரது காலத்திலேயே. இதில் அயற்பாட சாலை மாணவர்கள் பலரும் கலந்து கொண்டு பயன் பெற்றுவந்தனர்.

துரித கதியில் மாறிச் செல்லும் இன்றைய தொழில்நுட்ப உலகினை எதிர்கொண்டு முன்னேறிட மாணவர்களைத் தயார் செய் யும் நிலையில் அவர் தம் ஆளுமைக்கு ஊக்கு விப்பும் கௌரவமும் வழங்கும் பொருட்டு பாடசாலைகளில் பரிசுத்தினம் நீண்ட கால இடைவெளியின் பின்னர் கொண்டாடப் பட்டது. மிகுந்த சிரமத்தின் மத்தியில் தோற் பந்து கிரிக்கெட் உபகரணத் தொகுதியும் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலை களுக்கிடையில் சிநேகபூர்வமான ஆட்டங் களும் இடம்பெற்றன.

1995ஆம் ஆண்டு அரசியல் சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட வலிகாமம் மக்களின் இடப்பெயர்வினால் எமது கல்லூரியும் இடம்பெயர்ந்து, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பகுதிநேரப் பாடசாலையாக இயங்கி 13.06.1996இல் மீண்டும் சுழி புரத்தில் இயங்கத்தொடங்கியது. கல்லூரி யின் பல கதவுகள் உடைத்துத் திறக்கப்பட்டு புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கிரிக்கெட் உபகரணத்தொகுதி உட்பட பல பொருட்கள் களவாடப்பட்டிருந்தன. ஆசிரி யர்கள், மாணவர்கள் பலர் இடப்பெயர் விலிருந்து திரும்பவில்லை. 1368 மாண வர்களையும், 52 ஆசிரியர்களையும் கொண்டிருந்த கல்லூரி 770 மாணவர் களுடனும், 31 ஆசிரியர்களுடனும் இயங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருந்தது. அதிபர் திரு.க.சந்திரபாலன் அவர்கள் வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் மத்தியிலும் மனம் தளராது மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், கல்லூரி யின் தரத்தையும் புகழையும், மீட்டெ டுக்கவும் அரும்பாடுபட்டனர்.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் மாணவர் கணினி அறிவு பெற்றிருக்க வேண்டிய தேவையை நிறைவேற்ற வலிகாமம் வலயத்தில் முதன்முதலாக ஒரு கணினியை மட்டும் கொண்ட கணனிக் கூடம் அமைக்கப்பட்டு 1997ஆம் ஆண்டு விஜயதசமி நாளில் பாடசாலைவிட்டு விலகிய மாணவர்களுக்கு கணனிக்கற்கை நெறி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டது. இன்று பெரும்பாலான மாணவர் களின் வீடுகளில் கணனி பயன்படுத்தப்படு கின்றது. ஆனால் அன்று மாணவர்கள் வரிசையாகச் சென்று அக்கணனியைக் காட்சிப் பொருளாகப் பார்வையிட்டமை எனது மனக்கண்ணில் தெரிகின்றது.

1998இல் மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் நிதி பெறப்பட்டு எமது கல்லூரியின்

பழமை வாய்ந்ததும் நீண்ட காலம் புனரமைக்கப்படாதிருந்ததுமான சுனைபநறயல மண்டபமும் இணைந்த வகுப்பறைகளும் முழுமையாகக் கூரை கழற்றப்பட்டுப் புனரமைக்கப்பட்டன. பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கட்டிடப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு சிக்கனமாகத் திருத்த வேலைகள் நிறைவடைந்தன. இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தலில் முன்னாள் பிரதியதிபர் திரு.சி.க.இந்திரராசா அவர்களின் பங்களிப்பும் மகத்தானது.

இவரது காலத்தில் விளையாட்டுத் துறையிலும் கல்லூரி தனது முத்திரையைப் பதித்தது. 1998இல் செல்வன்.த.மயூரன் மெய்வல்லுனர் நிகழ்வுகளில் மாகாண மட்டத்தில் சாதனை படைத்து தேசிய மட்டத்திலும் பங்குபற்றினார்.

1AB பாடசாலை அதிபர்கள் நிர்வாகப் பழுவின் காரணமாக தமக்கு நேரசூசி அமைத்து வகுப்புக்களுக்குச் சென்று கற்பிப்பது குறைவு. ஆனால் திரு.க.சந்திரபாலன் அவர்கள் சமூகக்கல்வி, அரசியலும் மூலதத்துவமும் ஆகிய பாடங்களைத் திறம்படக் கற்பித்து மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு உதவினார்.

பாடசாலைகளில் மகிழ்ச்சிகரமான கற்பித்தல் இடம்பெறுவதற்கு அதன் பௌதிகச்சூழல் முக்கிய பங்களிக்கின்றது. அதற்கமைவாக இவருடைய காலத்தில் கல்லூரி வளாகத்தினுள் பயன்தரும், நிழல்தரும் மரக்கன்றுகள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டன. அவை வளர்ந்து விருட்சங்களாகி இன்று கல்லூரி வளாகம் சோலைவனமாகக் காட்சியளிக்கின்றது.

இத்தகைய அதிபர்களின் கீழ் சேவையாற்றுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை எனது வாழ்க்கையிற் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகின்றேன். இவர்களிடம் நான் கற்றுக்கொண்டவையும், பெற்றுக் கொண்ட பட்டறிவும் எனது 12 வருட அதிபர் சேவையில் நான் கல்லூரியின் இலக்கு நோக்கிப் பயணிப்பதற்கு உதவின என்று கூறினால் அது மிகையாகாது.

இக்கல்லூரி கடந்த கால சாதனைகளில் காலூன்றி எதிர்காலத்தில் பல சாதனைகளைப் படைத்து வெற்றிநடை போட எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராஜப்பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

♣ ♣ ♣

# OUR TONGUE NEEDS CONTROL

***Miss. Y. Yokitha***
*G.C.E A/L (Commerce (2012)*

There are two qualities in man. One is the animal nature and the other is humanness. Unfortunately man is forgetting his humanness. There are millions of people in this world. Everyone should realize what he or she should do to others. God has provided man with some special organs to do specialized work.

They are the eyes, the ears, the nose, the skin and mouth-tongue. The tongue is used to know the different tastes like sweet, bitter, sour, salty, etc. because of the "tasty buds". in our tongue. Here we are not going to describe about the delights of tasty dishes, but the other important use of this organ. Man is the only animal that can speak.

Our tongue helps us to speak. We must consider the true purposes and the value of our thoughts before we speak. We must think the impact of the words before uttering them. Some people consider small effects in other's as huge and ignore even great faults found in them. Everyone should cultivate good thoughts in his or her mind. It will lead to have a disciplinary life.

When we get irritation or fury we lose self control and speak many words that would hurt others. It is not human nature. So we must think at least twice before we speak. People who are very frank and out spoken make many enemies and hurt others unnecessarily. A word spoken innocently or otherwise, can cause untold misery to others. It may ruin a family friendship, unity among the characters. Our tongue is one of the dangerous weapons that can kill others. In the past many people committed suicide due to the bad comments of irresponsible people.

If the tongue is so bad then why did god create it? It is capable of doing both good and bad. Here is one of flesop's fables to illustrate this once the master told his servant to cook something that represent all evil. The servant cooked variety of dishes from the tongue-roast, devilled, boiled, curried etc. the master was very pleased and asked his servant to cook again the next day something that represent all goodness. The cook prepared the very same dishes again.

The master was very angry and asked an explanation. Then the servant explained him that there was nothing on earth that had such a power to do good or evil as the tongue. Hence we must always speak tender words or soothing words to broken hearts or words of blessing or words of encouragements.

"Birds are entangled by their limbs
and man by their tongue"

And oftentimes, to win us to our harm,
The instruments of darkness tell us truths,
Win us with honest trifles, to betray's
In deepest consequence.

**- William Shakespeare**, *"Macbeth", Act 1 scene 3*




If the human race wishes to have a prolonged and indefinite period of material prosperity, they have only got to behave in a peaceful and helpful way toward one another.

**- Winston Churchill**



# வரலாற்று நாயகர்களில் என் மனதைக் கவர்ந்த இருவர்



*திரு. சி. ஞானச்சந்திரமூர்த்தி*
*ஓய்வு பெற்ற ஆசிரியர்*

ஆபிரகாம் லிங்கனும் மகாத்மா காந்தியுமே என் மனதைக் கவர்ந்த வரலாற்று நாயகர்கள். 1945ஆம் ஆண்டு விக்ரோறியாக் கல்லூரியில் நான் பயின்ற போது S.S.C. (இன்றைய க.பொ.த. சாதாரண தரம்) வகுப்பில் ஆங்கிலம், வரலாறு என்னும் இரு பாடங்களைப் போதித்தவர் திரு.சிவராசா ஆசிரியர். அவருடைய போதனையே 66வருடம் கடந்தும் என் சிந்தனையில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது. மிகுந்த அமைதியான முறையில் மாணவர்களைத் தம் வசப்படுத்திக் கற்பிக்கும் ஆற்றல் அவரிடமிருந்தது. ஆங்கிலம் கற்பிக்கும் போது சேக்ஸ்பியரின் (Shakespeare) நாடகத்தை விளக்கும் போது இவர் இன்னும் கொஞ்ச நேரம் இதைப் படிப்பிக்க மாட்டாரா என்று நாங்கள் ஏங்கியிருக்கின்றோம். அந்த அளவுக்கு அவர் கற்பித்தற் திறமை அமைந்திருந்தது.

வரலாறு கற்பிக்கும் போது எங்கள் கண்முன்னாலேயே யுத்தம் நடைபெறுவது போன்ற உணர்வை நாம் பெறுவோம். அத்தகைய சிறப்பு மிக்க ஆசானின் வழிகாட்டலில் கற்ற ஆபிரகாம் லிங்கனும் மகாத்மாகாந்தியும் இன்றும் என்நினைவில் நீங்கா இடம் பெற்றுள்ளனர்.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவில் அடிமை முறையை ஒழித்தான். உலக நாகரிகம் உள்ளவரை அவனது பெயர் நிலைத்து நிற்கும். லிங்கன் அமெரிக்காவில் உள்ள கென்ருக்கி என்னும் மாகாணத்தில் 1809ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம் திகதி பிறந்தார். தந்தை தோமஸ், தாய் நான்சி. சாதாரண குடும்பத்தில் பிறந்த லிங்கனுக்கு ஏழைகளின் வாழ்க்கை மனவேதனையைக் கொடுத்தது. எவ்வகையிலாயினும் ஏழைகளின் அவல வாழ்க்கையை மாற்ற வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு சட்டம் பயின்று சட்டவல்லுனர் ஆனார். மனிதனை மனிதன் விலைக்கு வாங்குவதும் விற்பதும் அவனது மனத்தை வெதும்பச் செய்தது. நான் இந்நாட்டின் ஜனாதிபதியானால் அமெரிக்காவில் அடிமை முறையைச் சட்டபூர்வமாக இல்லாமல் செய்வேன் என்று கூறியதுடன் அதற்காகத் தன்னைத் தயாராக்கினான்.

சட்டம் பயின்று அமெரிக்க பாராளு மன்றத் தேர்தலில் பங்குகொண்டு வெற்றி வாகை சூடினான். பாராளுமன்றத்தில் அவனது முக்கிய வேலை அடிமை முறை ஒழிப்பைச் சட்டபூர்வமாக்குவதாகும். பாராளுமன்றத்தில் வட தென் அமெரிக்கப்

பிரதிநிதிகள் இருந்தனர். வடஅமெரிக்கா கைத்தொழில் நாடாகையால் வட அமெரிக்கப் பிரதிநிதிகள் அடிமை முறை ஒழிப்புக்கு ஆதரவு கொடுத்தனர். தென் அமெரிக்கா விவசாய நாடாகையால் தோட்டங்களில் வேலை செய்வதற்கு அடிமைகள் தேவைப்பட்டதால் தென் அமெரிக்கப்பிரிநிதிகள் அடிமைமுறை ஒழிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே பாராளுமன்றத்தில் அடிமைமுறை ஒழிப்பைச் சட்டபூர்வமாக ஒழிக்கமுடியாத நிலையில் வட தென் அமெரிக்காவுக்கிடை யில் போர் ஒன்று காலத்தின் தேவையாக இருந்தது.

அமெரிக்க வரலாறு கண்டிராத உயிரழிவுகளைக் கொண்ட போராக உள்நாட்டுப் போர் நடைபெற்றது. போரின் முடிவில் அடிமைமுறை ஒழிக்கப்பட வேண்டுமென்று போர்புரிந்த வடபகுதி வென்றது. கெற்றிஸ்பாக் (Gettys burg) என்னும் மைதானத்தில் ஆபிரகாம்லிங்கன் ஆற்றிய உரையின் முக்கிய பகுதி 'மக்களின் ஆட்சி, மக்களால் ஆட்சி, மக்களுக்கு ஆட்சி' என்பது. இக்கருத்து உலகை விட்டு அழியாது. 'As I shall not be a slove. I shall not be a master' என்பதே அவனது சித்தாந்தமாகும். நான் அடிமையாக இருக்க விரும்பாததால் எஜமானனாகவும் இருக்க மாட்டேன். அதுவே இன்றைய உலக நாகரிகத்துக்கு வழிகாட்டியாக உள்ளது.

போர்முடிந்து அடிமைமுறை சட்டபூர்வ மாக ஒழிக்கப்பட்ட மறுநாள் ஆபிரகாம் லிங்கன் நாடகம் பார்த்துக்கொண்டி ருக்கும் போது தனது 56ஆவது வயதில் பூத் (Booth) என்னும் கொலைகாரனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானான். மனித நாகரிகத்துக்கு அயராது உழைத்து வெற்றி கண்ட ஒருவனின் உயிர் ஒரு கொலை காரனின் துப்பாக்கிக்கு இரையானது என்றுமே மன்னிக்க முடியாததாகும்.

ஆபிரகாம் லிங்கனுக்கு அடுத்தாற் போல் என் மனதைக்கவர்ந்தவர் மகாத்மா காந்தி. இவர் வடஇந்தியாவிலே போர் பந்தர் என்னும் கிராமத்தில் 1869ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். இவருக்குத் தாய்தந்தையர் இட்ட பெயர் மோகன தாஸ் கரம்சந் காந்தி என்ப தாகும். இவர் தந்தையார் கரம்சந் காந்தி. தாயார் புத்தலிபாய். இவர் கஸ்தூபாய் என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார்.

'காந்தியைப் போலொரு சாந்த சொரூபியை காண்பதும் எளிதாமோ? அகிம்சை தனிலே புத்தரவர். ஆத்ம சோதனையில் யேசுநாதர் அவர்' என்று காந்தியைப் பற்றி ஒரு கவிஞன் பாடி யிருக்கின்றான். புத்தரும் யேசுநாதரும் ஒருக்கால் ஒன்றுபட்டு உலகை வாழ்விக்க வந்த அவதார புருஷன் தான் காந்தி. இச்சந்தர்ப்பத்தில் ஆபிரகாம்லிங்கனையும் காந்தியையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இருவரும் தங்கள் வாழ்வின் இலட்சியமாக இன விடுதலைக்காக உழைத்து வெற்றி கண்டதுடன் தங்கள் உயிரையும் தியாகம் செய்த உத்தமர்கள். லிங்கன் போரில் சாதித்ததை மகாத்மாகாந்தி அகிம்சை யால் சாதித்தார். லிங்கன் பூத் என்பவனா

லும் காந்தி கோட்சே என்பவனாலும் கொல்லப்பட்டனர். இருவரும் தாம் கொண்ட இலட்சியங்களை நிறைவேற்றிய பின்பே மரணித்தனர். இருவரும் சட்ட வல்லுனர்கள். அவர்கள் தங்கள் இலட்சி யத்தை வெல்வதற்குப் பெரிதும் உதவியது அவர்கள் கற்ற சட்டமே.

காந்தி ஆங்கில ஆட்சியை எதிர்த்து சத்தியாக்கிரகப் போர் நடாத்திய இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்த காலத்தில் இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர் சேர்.வின்சன்ட் சேர்ச்சில். அவரைப்போல் சிறந்த பேச்சாளனோ, எழுத்தாளனோ, நிர்வாகியோ இங்கிலாந்தில் எக்காலத்திலும் இருக்கவில்லை. மிகச்சிறந்த உடையணியும் சேர்ச்சில் வெறும் மேலுடன் முழங்காலுக்கு மேல் வேட்டி கட்டிச் செல்லும் காந்தியைப் பரிகசித்து 'அரைநிர்வாணப் பக்கிரி' (Half naked fair) என்று அழைத்து வந்தார். காந்தி இந்தியாவின் விடுதலை பற்றி மாட்சிமை தங்கிய மகாராணியைச் சந்திக்க அவர் வசிக்கும் பக்கிங்காம் மாளிகைக்குச் (Buckingham palace) சென்றதை ஒரு வரலாற்று ஆசிரியர் வர்ணிக்கும் போது 'காந்தி பக்கிங்காம் மாளிகையில் ஒவ்வொரு படியில் ஏறிய போது இந்தியாவின் அந்தஸ்து உலக அரங்கில் உயர்ந்து கொண்டது' என்று எழுதினார். அத்தகைய உலகம் போற்றும் உத்தமன் இந்தியாவுக்கு மட்டுமன்றி உலகத்துக்கே கிடைக்க முடியாத அரும்பெரும் சொத்து.

உண்மையே உயர் அறம் என்ற கொள்கையுடைய மகாத்மா ஆங்கில ஆட்சியை எதிர்த்து சுதந்திரப்போர் நடாத்துவதற்குப் பாவித்த ஆயுதங்கள் சத்தியாக்கிரகம், அகிம்சை என்பன. சத்தியாக்கிரகம் என்றால் உண்மையை இறுகப்பிடித்தல். வேதனை வரினும் மெய்யே உரை என்ற வாக்கைத் தன் வாழ்வின் இலட்சியமாக் கொண்டார். இளமையில் அரிச்சந்திரன் நாடகம் பார்த்ததன் பயனாகவே தன்வாழ்வில் 'உண்மையே உயர் அறம்' என்பதை நன்கு உணர்ந்து கடைப்பிடித்தார். இதன் விளைவே அவர் எழுதிய 'சத்திய சோதனை' என்னும் அருநூலாகும். அகிம்சை என்பது அவரது நெறி. எக்காலத்திலும் எந்நிலையிலும் எவ்வுயிருக்கும் தீங்கு நினைக்காத தன்மையே அகிம்சை.

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று நடாத்தி, சத்தியத்தின் நித்தியத்தை உலகுள்ளவரைக்கும் நிலைநிற்கச் செய்தவர் மகாத்மாகாந்தி. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தான் இறக்கும் நிலையிலும் தன்னைச் சுட்டவனை மன்னிக்கும் படி வேண்டியவர் மகாத்மா தானே!. உலகுள்ளவரைக்கும் அவர் நாமம் நிலைத்து நிற்கும். இந்தியா என்றால் மகாத்மா என்று எண்ணுமளவுக்கு அவர் அழியாப்புகழ் பெற்றுள்ளார்.

முடிவாக எனக்கு வரலாறு போதித்த ஆசிரியர் திரு.சிவராசாவை மனதிலிருத்தி அவரது பாதங்களில் இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

♣ ♣ ♣

# காலத்தால் அழியாத பள்ளி நினைவுகள்

*செல்வி. ஶ்ரீ. விஷ்ணுகா*
*தரம் 11A*

சின்ன அடியெடுத்து சிங்கார நடை நடந்து
வண்ண உடையுடுத்து வடிவாக அலங்கரித்து
பொன்னகைகளோடு நல்ல புன்னகையும் குலுங்கிடவே
முன்னம் நான் வந்திருந்த பள்ளியினை நினைக்கின்றேன்.

அன்னையின் அரவணைப்பை அன்று நான் தளர்த்தி விட்டு
என்னை வளர்த்தெடுத்த தந்தையாரின் தோளிலேறி
முன்பள்ளி முடிந்ததென்று முறைப்பாடு செய்து கொண்டு
இன்புறவே வந்தமர்ந்த ஆண்டொன்றை நினைக்கின்றேன்.

ஆணென்றும் பெண்ணென்றும் அறியாத பருவத்தில்
மானென்றும் மயிலென்றும் ஓடோடி விளையாடி
கானம் இசைத்தும் கருங்குயிலாய்க் கூவியும்
தேனென்று வந்தமர்ந்த ஈராண்டை நினைக்கின்றேன்.

முத்துக்கும்முத்தான முத்தமிழும் மணங்கமழ
மெத்த உயர்ந்த பல ஆசான்கள் அரவணைக்க
பொன் வண்டு பறப்பது போல் பறந்து வந்து
தித்திக்க அமர்ந்திருந்த மூன்றாண்டை நினைக்கின்றேன்.

நல்லதும் கெட்டதும் எதுவென்று தெரியாமல்
வல்லமை பெற்றதோர் வளர்ச்சியும் அடையாமல்
பல்வகைக் கொப்பிகள் புத்தகம் தனைச் சுமந்து
செல்லமாய் வந்தமர்ந்த நான்காண்டை நினைக்கிறேன்.

கையோடு காலதுவும் மெய்யோடு ஒட்டாமல்
வெய்யிலும் மழையுமே வேறாகத் தெரியாமல்
வையகம் முழுவதையும் வளைத்துப் பிடித்ததைப் போல்
ஐயமின்றி வந்தமர்ந்த ஆண்டு ஐந்தை நினைக்கின்றேன்.

கொய்யாப் பழமெடுத்து கையோடு கொண்டு வந்து
மெய்யான நண்பர்க்கு மெல்லவே கொடுத்து விட்டு
பொய்யாத அன்போடு பொழுதெல்லாம் படித்து வந்த
தொய்யாத ஆறாம் ஆண்டினை நான் நினைக்கிறேன்.

செய்யாத வீட்டு வேலைக்காய் பொய் சொல்லி
ஐயாவின் அப்பப்பா இறந்ததாய்க் கதைகட்டி
மெஞ்ஞானம் ஊட்டுகின்ற ஆசிரியர் மனங்களினைத்
தைய்யாமல் தைத்து விட்ட ஆண்டேழை நினைக்கின்றேன்.

வெள்ளைப் புறாக்களைப் போல் அங்குமிங்கும் விளையாடி
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பாட்டுக்கள் பல இசைத்து
துள்ளித் துள்ளி நல்ல ஆட்டங்கள் போட்டு நின்ற
கள்ளங் கபடமில்லா எட்டாண்டை நினைக்கின்றேன்.

புள்ளி குறைந்ததென்று சுள்ளி முறித்தடிக்க
பள்ளி ஆசிரியர் வகுப்பிற்கு வருமுன்னர்
கொள்ளி சுட்ட புண்கள் கைகளிலே உள்ளதென்று
வெள்ளைத் துணி கட்டி வந்த ஒன்பதாண்டை நினைக்கிறேன்.

பந்தெடுத்து வீசி எந்தன் பக்கத்தை ஜெயிக்க வைக்க
சிந்தை கொண்டு சிட்டெனவே பறந்து ஒரு பந்தெறிந்து
நொந்திடாமல் வெற்றிகளை நொடிப் பொழுதில் குவித்த
சுந்தர ஆண்டு பத்தை நெஞ்சத்துள் நினைக்கிறேன்.

பக்குவமாய்ப் பத்தாண்டு படித்ததையும் சமர்ப்பிக்க
தக்க ஆண்டு வந்ததென்று வகுப்பறையில் தவம் கிடந்து
மக்களென ஈன்றோர்க்கும் பள்ளிக்கும் ஆசிரியர்க்கும்
துக்கமில்லாச் செய்தி தரும் ஆண்டு பதினொன்றை நினைந்து கொண்டிருக்கின்றேன்.

♣ ♣ ♣

# பற்று அட்டை

***செல்வி. சுகன்யா சந்திரபாலன்***
*பழைய மாணவி*

சுற்றிவரும் பூமியில் காலத்தின் வேகத்தை மிஞ்சிய வகையில் தகவற் தொழில்நுட்பமும் அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றது. அந்த வளர்ச்சிப் பாதையில் பொருளாதாரத்தின் அடிக்கல்லான பணத்தின் வடிவங்களும் மாறிக்கொண்டே செல்கின்றன. ஆரம்ப காலத்தில் நிலவிய பண்டமாற்றுப் பொருளாதாரம் பணவடிவமாக மாறி, பின்னர் காசோலை வடிவத்துக்கு முன்னேறி, தற்போது அட்டை வடிவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. இந்த வகையில் தற்போது தன்னியக்க ரெலர் அட்டை (ATM card), கடன்அட்டை (credit card), பற்று அட்டை (Debit card) போன்றன நடைமுறையிலிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தன்னியக்க ரெலர் அட்டை எனப்படுவது தன்னியக்க ரெலர் இயந்திரங்கள் மூலம் நமது சேமிப்பு, நடைமுறைக் கணக்குகளிலிருந்து பணத்தை மீளப்பெறவோ அல்லது கணக்கு மீதியை அறிந்துகொள்வதற்கோ பயன்படுத்தப்படுவதாகும். கடனட்டை எனப்படுவது கடன் அடிப்படையில் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படுவதாகும். இக்கடனட்டைகளின் மூலம் அனுமதிக்கப்பட்ட தொகையின் ஒருபகுதியைத் தன்னியக்க ரெலர் இயந்திரத்தின் மூலம் பணமாக மீளப் பெறவும் முடியும். கடனட்டைகள் வாடிக்கையாளரின் நம்பிக்கைத்தன்மை, அவர்களின் தகுதி, வருமானம் என்பவற்றைப் பொறுத்து வழங்கப்படுகின்றது. கடனட்டைகளின் மூலம் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது அப்பணத்தை மீளச்செலுத்துவதற்கு ஒவ்வொரு வங்கியும் குறிப்பிட்ட கால அவகாசத்தை வழங்குகின்றது. அக்காலப் பகுதிக்குள் வட்டியில்லாக் கடனை அனுபவிக்க முடியும். அக்காலப் பகுதியை மீறும் போது குறிப்பிட்ட வீத வட்டி அறவிடப்படும்.

அதே வேளை பற்று அட்டை எனப்படுவது உங்களது சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளின் மீதியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு வர்த்தக நிலையங்களில் கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்கும், தன்னியக்க ரெலர் இயந்திரத்தின் மூலம் பணத்தை மீளப் பெறுவதற்கும், தமது கணக்கு மீதியைப் பரீட்சித்துக் கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்ற அட்டையாகும். அத்துடன் தமது வங்கியைச் சாரந்திராத வேறு அவ்வகையான அட்டைகளை ஏற்றுக்கொள்ளும் தன்னியக்க ரெலர் இயந்திரத்தின் மூலம் பணத்தை நொடிப் பொழுதில் பெறவும் முடியும். ஏதாவது ஒரு வங்கியில் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளை ஆரம்பிக்கும் போது பற்று அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

பற்று அட்டையின் உபயோகமானது உல்லாசப்பயணங்கள்இ பிரயாணங்களின் போது மிகவும் பயனள்ளதாக அமைகின்றது. பற்று அட்டையின் மூலம் தமது கணக்கு மீதிக்கு ஏற்ற வகையில் பாதீடு செய்யப்பட்ட செலவை மேற்கொள்ள முடிவதுடன் பாது காப்பானதாகவும் எடுத்துச் செல்வதற்கு இலகுவானதாகவும் அமைகின்றது.

பற்று அட்டையினைக் கடனட்டையுடன் ஒப்பிடும் போது, பற்று அட்டை கடனட்டை யிலிருந்து வேறுபட்டதாகவும் சேமிப்பு, நடைமுறைக் கணக்குகளுடன் நேரடியாகத் தொடர்பு பட்டதாகவும் அமைகின்றது. கடனட்டை, 'இப்போது விலைக்கு வாங் குங்கள் பின்னர் செலுத்துங்கள்' என்ற அடிப் படையிலும் பற்றுஅட்டை, 'இப்போது விலைக்கு வாங்கி இப்போதே செலுத்துங்கள்' என்ற அடிப்படையிலும் அமைக்கிறது. அதாவது பற்று அட்டை மூலம் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் அதே கணத் திலேயே வாடிக்கையாளரது கணக்கிலும் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கட னட்டையில் சுட்டிக்காட்டப்பட்ட கொள்வனவு ஆற்றலை தூண்டுகிறது என்ற பிரதான குறைபாடு பற்று அட்டையின் மூலம் நிவர்த்தியாக்கப்படுகின்றது. அதாவது கடனட்டையினைப் பயன்படுத்தும் போது கட்டுப்பாடற்ற வகையில் செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் பற்று அட்டையின் மூலம் கணக்கு மீதிக்கு ஏற்ற வாறே பற்ற முடியும் என்பதால் செலவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றது. கணக்கிலுள்ள வரவுமீதியின் மீதே பற்று அட்டை வழங்கப் படுவதனால் அட்டையை வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளரின் தகுதி, நம்பிக்கைத் தன்மை என்பவற்றை ஆராயவேண்டிய அவசியமில்லை.

பற்று அட்டையினை தன்னியக்க ரெலர் அட்டையுடன் ஒப்பிடும் போது, தன்னி யக்க ரெலர் அட்டை மூலம் பொருட்கள் சேவை களைக் கொள்வனவு செய்யமுடியாததுடன் தன்னியக்க ரெலர் இயந்திரங்களின் மூலம் பணத்தை மீளப்பெற்றுக் கொள்ளுதலை மாத்திரம் செய்யலாம். மேலும் அநேகமாக தமது வங்கியைச் சார்ந்த இயந்திரங்கள் மூலம் மாத்திரமே இதனைச் செய்ய முடிகிறது.

இத்தகைய வாய்ப்புக்களைக் கொண்ட பற்று அட்டையின் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

- பணத்தினை எடுத்துச் செல்வதில் காணப்படுகின்ற களவு, தொலைந்து போதல் போன்றவற்றைத் தவிர்க்கக் கூடியதாகவுள்ளது.
- பணத்தினைக் கையாளுவதை விட இலகுவாக அட்டைகளைப் பாவிக்கக் கூடியதாக உள்ளது.
- அட்டைகளை விரைவாகப் பாவிக்கக் கூடியதாகவுள்ளதால் நேரம் மீதப்படுத் தப்படுகின்றது.
- கடனட்டையினைப் பெறுமதி வாய்ந்த நம்பிக்கையான தகுதியான வாடிக்கை யாளர்களாலேயே பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் பற்று அட்டையை சேமிப்பு அல்லது நடைமுறைக்கணக் கினை வைத்திருக்கும் எந்தவொரு வாடிக்கையாளரும் பெற்றுக்கொள்ள முடியும்.

- பற்று அட்டையின் மூலம் தாம் செய்யும் கொடுக்கல் வாங்கல்களை மாதாந்த கணக்கு கூற்றுக்களின் மூலம் பரீட்சித்துக்கொள்ள முடியும்.
- அட்டை தொலைந்து போனால் அல்லது களவாடப்பட்டால் சம்பந்தப்பட்ட வங்கிக்கு உடனடியாக அறிவித்து அட்டையைத் தடைசெய்வதுடன் புதிய அட்டையையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- அட்டை பழுதடைந்தால் புதிய அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு பலவசதி வாய்ப்புக்களைக் கொண்ட பற்று அட்டையில் சிலகுறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. இத்தகைய குறைபாடுகளாகப் பின்வருவனவற்றைக் கூற முடியும்.

- கடன் அட்டையைப் போல திடீரென ஏற்படும் அவசர நிதித்தேவைக்கு கடன் வசதியைப் பெற்றுக்கொள்ள முடியாது.
- நவீன தொழில்நுட்பங்களுக்கெற்ப மோசடிகளுக்கு இடமளிக்கப்படுகின்றது.
- பற்று அட்டை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய வர்த்தக நிலையங்கள் எல்லா இடங்களிலும் போதிய அளவில் இல்லை.

எவ்வாறெனினும் காலத்தின் தேவைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப இத்தகைய மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் நாம் எதிர்கொண்டேதான் ஆகவேண்டும். ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்ற போதும், பற்று அட்டை உட்பட அனைத்து வசதிகளும் மக்களின் பெரும்பாலான நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டுள்ளதால் இந்த முன்னேற்றம் வரவேற்கத்தக்கதாகும். இந்த வளர்ச்சி கிளைகளற்ற வங்கிச் சேவை உருவாகுவதற்கு வழிவகுப்பதாகும். இந்த வகையில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை நோக்கும் போது, இனிவரும் காலத்தில் இதைவிடச் சிறிய, கூடிய வசதிகளுடன் ஓர் ஆவணத்தை எதிர்பார்த்தல் மிகையாகாது.

♣ ♣ ♣

### இலகுவாகச் சுருக்குவதற்கு...

ஒரு முழு எண்ணை, 25ஆல் பெருக்கவேண்டிய தேவையிருப்பின் அவ் முழு எண்ணை 4ஆல் பிரித்து வரும் விடையுடன் இரண்டு பூச்சியங்களைச் சேர்த்துக் கூறின் விடை பெறப்படும்.

உ-ம் : உங்களிடம் ஒருவர், 52இனை 25ஆல் பெருக்கித் தருமாறு கேட்பாராயின், 52இனை நான்கால் பிரிக்க வரும்விடை 13. இதனுடன் இரண்டு பூச்சியங்களைச் சேர்க்க வருவது 1300. இதுவே 52 x 25 =1300 ஆகும்.

இதேபோல் ஒரு முழு எண்ணை 125ஆல் பெருக்கவேண்டியிருப்பின் அவ் எண்ணை 8ஆல் பிரித்து, மூன்று பூச்சியங்களைச் சேர்த்து விடையாகக் கூறலாம்.

# போதையைப் போக்கவொரு பாதை சமைப்போம்

*திருமதி யா. சத்தியசீலன்*
*ஆசிரியை*

"இளங்கன்று பயமறியாது" என்பதற் கிணங்க இன்றைய இளம் சமுதாயம் போதைப் பொருட்பாவனையால் தம் ஆரோக்கியத்தையும் வாழ்க்கையையும் கெடுத்துக் கொள்வதுடன் சமுதாயத்திற்கும் கேடு விளைவிக்கின்றனர். அற்ப இன்பங் களைப் பெறவும் கவலைகளை மறக்கவும் போதையை நாடுகின்றனர்.

ஹெரோயின, ஹமூன், கொக்கேயின், மன்ஜு•வானா, தருகா, மெதடின், ஒபியம், குடு போன்றவை போதைப் பொருட்களா கும். கசிப்பு, மெதடின், வத்துபான் போன்ற மதுபாவனைகள் சிகரட், பீடிவகைகள், சுருட்டு போன்றவையும் போதையைத் தருகின்றன. இப்போதைப் பொருட்கள் உடலின் நரம்புப் பகுதியையும் உள்ளு றுப்புக்களையும் தாக்குகின்றன.

போதைப் பொருட்களுக்கு அடிமை யாவதை ஆங்கிலத்தில் drugs addictive என்று அழைக்கின்றனர். இப்பழக்கம் தீவிரமாகும் போது கொலை, திருட்டு, பாலியல் வன்முறை போன்ற சமூகவிரோதச் செயல்களைச் செய்யத் தூண்டுகின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அண்மைக்காலத்தில் இலங்கையில் உள்ள இளைஞர்கள் யுவதிகள் உபயோ கிக்கும் போதை வஸ்துக்களில் ஹெரோயின், அபின், கஞ்சா என்பன முன்னணி வகிக் கின்றன. ஹெரோயின் வெண்மைத்தூளாக வும் மண்ணிறத்தூளாகவும் கிடைக்கின்றது. இதனை ஊசி மூலமும், புகைத்தல் மூலமும் உள்ளெடுக்கின்றனர். இதனை அதிகம் பாவிப்பதால் மரணம் ஏற்படுகின்றது.

அபின் என்பது பொப்பி என்னும் தாவ ரத்தின் பழுக்காத வித்துறையிலிருந்து பெறப்படும் கட்டிபட்ட சாறு ஆகும். இது வாய்மூலம் உள்ளெடுக்கப்படும். இதன் பிரதான கூறு மோர்பின் ஆகும். மோர்பின் மிக மோசமான வேதனைக்குக் கொடுக்கும் மருந்துகளில் முக்கியமானதாகும்.

புகைத்தலும் ஒருவிதமான போதை என்பார்கள். புகைத்தலால் உண்டாகும் கேடு பற்றி ஆங்கிலத்தில் பின்வருமாறு கூறுகின்றனர். "when a cigarette is lighted there is fire at one end and a fool at the other" சிகரெட் ஒன்றைப் பற்றவைக்கும் போது ஒருமுனையில் தீயையும் மறு முனையில் ஒரு முட்டாளையுமே காண முடிகின்றது என்பதே அவ்வாசகத்தின் விளக்கமாகும்.

எமது சமூக வரலாற்றுடன் மதுப்பழக்க மானது நீண்ட காலமாகப் பின்னிப்

பிணைந்துள்ளது. "கள்ளுண்பார் நஞ்சுண் பவர்" என்ற வள்ளுவர் கூற்று இதனை மெய்ப்பிக்கின்றது.

போதைப் பொருட்பாவனையால் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுகின்றது. அத்தோடு ஞாபகசக்திக் குறைவு, பசி யின்மை, நித்திரையின்மை, உளச் சோர்வு, பாலுணர்வு குறைவு, அறிவு இழக்கும் நிலை, புத்தி மாறாட்டம், குருதிச் சுற் றோட்டத்தொகுயில் இதயத்துடிப்பில் சீரற்ற தன்மை, தாழ்குருதியமுக்கம் ஆகியன ஏற்படலாம். சுவாசத் தொகுதியில் சுவாச வீதம் குறைந்து கடுமையாகப் பாதிக்கப் பட்டால் மரணம் கூடச் சம்பவிக்கலாம்.

**"போதையை மறக்க**
**போதை ஏற்றினான் மானிடன்**
**நீயின்றி நானில்லை என்றான் இறுதியில்**
**உயிரையே பறித்தது போதை"**

இது போதைப் பாவனையால் ஏற்பட்ட துன்பத்தை விளக்கும் ஒரு கவிதை.

ஊசி மூலம் போதைப் பொருளை உள்ளெடுக்கும் போது அவ்வூசி கிருமி நீக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இல்லை யேல் புண் கீழ்க்கட்டி, குருதிநஞ்சேறல், செங்கமாரி, எயிட்ஸ் போன்ற நோய்கள் ஏற்படலாம். அண்மைக்காலத்தில் உலகின் அதிபயங்கர கொல்லும் நோய் பரவுவதற் குரிய காரணிகளில் ஒன்றாக இந்தப் போதைப் பொருள் ஊசியேற்றலும் உள் ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பழக்கத் திற்கு அடிமைப்பட்டவர்களுக்கு மிகவும் விரைவாக புற்றுநோய், இருதய நோய், ஈரற்சிதைவு என்பன ஏற்படும். போதைப் பொருட்பாவனையால் ஆரம்பத்தில் இன்பத்தை அனுபவித்தவர்கள் நாளடை வில் உடம்பில் ஏற்படும் உபாதைகள் காரணமாக உயிர் இருக்கும் வரை சித்திரவதையை அனுபவிக்க நேரிடும்.

இளைஞரிடையே போதைப் பொருட் பாவனையால் ஏற்படும் சமூகப்பாதிப்புக் கள் குற்றச் செயல்களைக் கண்காணிக்கா மல் இருந்துவிட முடியாது. ஆண்களில் சுமார் 50% மானோரும் பெணண்களில் 8% மானோரும் குடிக்கிறார்கள் என்று உலக சுகாதார தாபன ஆய்வு கூறுகிறது.

கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டி ருக்கும் நகர்ப்புற இளைஞர்களிடையே மிதமிஞ்சிய பணப்புழக்கம் காணப்படு வதனாலேயே அவர்கள் இப்போதைப் பொருட்ளைச் சுலபமாகக் கொள்வனவு செய்ய முடிகிறது. இன்று பாடசாலை மாண வர்களும் இதனை அதிகம் பயன்படுத்து கின்றனர். ஒவ்வொரு பெற்றோரும் இதற் கான பொறுப்பேற்க வேண்டியவர்களாவர். ஏனெனில் பிள்ளைகளிடம் அதிகளவு பணத்தை வழங்கி அவர்களை நரகத்தின் வாசலுக்கு இட்டுச்செல்லாமல் கண் காணிக்கும் பொறுப்பு பாதுகாவலரையே சாரும்.

போதைப்பொருள் தடுப்புப் பொலி ஸாரால் மட்டும் எமது இளைஞரை இக்கொடிய பழக்கத்திலிருந்து காப்பாற்றி விட முடியாது. இதனால் ஏற்படும் தீமை களைப்பற்றி மக்களிடையே விழிப்புணர்வு அவசியம். நகர்ப்புறப் பாடசாலைகளில்

போதைப் பொருளை விற்பனை செய்யும் குழுக்களைக் கண்டறிந்து அவர்களைச் சட்டதின் பிடியில் சிக்கவைக்க வேண்டும். போதைப் பொருட்பாவனையால் பாதிக் கப்பட்ட இளைஞரைச் சிகிச்சை முகாம் களில் அல்லது புனர்வாழ்வு அமையங் களில் ஒப்படைக்க வேண்டியது பாரிய பொறுப்பாகும்.

"வாழ்வு என்பது இன்பந்தரக்கூடியதும் பயனுள்ளதுமான ஒரு அனுபவம்" என்ற தத்துவம் இளைஞர்களுக்குப் புரியவைக் கப்பட வேண்டும். போதையைப் பாவித்து இன்பம் பெறாமல் சமூகசேவை, மதவழிபாடு கள், விளையாட்டு, நாடகம், இலக்கியம் போன்றவற்றில் ஈடுபடச்செய்ய வேண்டும். இவ்விதம் பயனுள்ள முறையில் ஒருவன் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் போது வாழ்க்கை அர்த்தமுடையதாகின்றது.

*"போதையை நாட்டிலிருந்து ஒழிப்போம்.*
*நலமாக வாழ்வோம்."*

♣ ♣ ♣

## அமெரிக்காவின் நவீன ஒற்றன்

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் ஆராய்ச்சியில் உருவாக்கப்படும் நவீன ஒற்றர்களை யாவரும் எதிர்பார்க்கமுடியாது. அந்த வரிசையில் தற்போது ஒற்றனாக மாற்றப்பட்டுள்ளது சுறா மீன்களாகும். அதாவது சுறா மீன்களின் மூளையில் இலத்திரனியல் சிப்புகளைப் (Chip) பொருத்தி அவற்றை கணனிகளின் கட்டளைகளுக்கு அடிபணியச் செய்து, அவற்றைப் பயன்படுத்தி ஏனைய கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்களைப் பின் தொடர்வது போன்றவற்றுடன், வெடிகுண்டுகளையும் வெடிக்க வைக்கமுடியுமாம்.

மாணவர்களிடம் மறைந்திருக்கும் உண்மையான திறமையை வெளிப்படுத்துவதே கல்வியின் நோக்கமாகும். மாறாக மாணவர் மண்டையில் எதையாவது திணிக்க முயல்வதல்ல கல்வி.

**- அல்பிரட் ஐன்ஸ்டைன்**

# LIFE WITHOUT AN AMBITION

***Miss.Sylvia Thavanayagam***
*G.C.E. A/L Maths(2011)*

Life without an ambition is like a curry without flavour. Ambition should be an essential part in a person's life. Too much of flavouring can spoil the curry, making it distasteful. Too many ambitions can also bring problems into one's life. Therefore it is necessary, to set our ambition at the right level.

For example, a homeless man can dream of living in a palatial house. He could make owning a house his ambition, and if he pursues this, he might, instead of living in a palace, at least end up living in a comfortable, habitable house. Although too many ambitions can spoil one's dream, sometimes they can be useful because, one can come up to some position.

There are famous people who have set meaningful records around the world because they had ambitions. In our country people like Maliban Company's owner and siddhalepa Vedamahattaya are good examples. They started business on a small scale, and achieved great success.

Ambitious people have made life better for others. A very famous inventor Thomas Edison was a very ambitious person who invented the electric bulb. A great ambitious lady scientist, Madam Marie curie discovered Radium. Nelson Mandela and Martin Luthur king fought for the rights of the black people. They succeeded because they set their targets perfectly. Another great person was Abraham Lincoln who started life in a log cabin. His family was very poor, but because of his perseverance and ambition he became a lawyer, and then the president of America. Another ambitious person, the present Prime Minister of India Manmohan Singh was a person whose family underwent poverty. But he wanted to be some one in society and it is said that he studied under streetlights.

All these people succeeded in life because they were very ambitious.

It is clear that all these people strived hard towards their stunning achievements. It is important that we do everything possible to realize our ambition. That will be our contribution to make this world a better place. For at least a few of us.

♣ ♣ ♣

# தாய்மைக்குச் சமர்ப்பணம்

*செல்வன் ர. நிரோஜன்*
*தரம் 10A*

உன் கருவில் நான் இருக்க
ஊண் உறக்கம் மறந்து நின்றாய்!
நான் பிறக்க நீ துடித்தாய்
என் வரவால் நீ மகிழ்ந்தாய்!
தாலாட்டு நீ பாட — உன்
மடியில் நான் உறங்க
என் உறக்கம் கலைந்திடாமல்
உன் தூக்கம் இழந்து
எனக்காக விழித்திருந்தாய்!
உன் தேவை மறந்து என்தேவை உணர்ந்து
எனக்காக நீ வாழ்ந்தாய்!
இரத்தத்தைப் பங்கு வைத்து
என் பசி தீர்த்து வைத்தாய்! உன்
பசி மறந்து பட்டினிகள் பல இருந்தாய்!
பத்து மாதம் கருவிலேந்தி
பகலிரவாய்ப் பாடுபட்டுப் பெற்றெடுத்த உத்தமியே!
பட்டதெல்லாம் நீ மறந்து — என்னைப்
பள்ளிக்கூடம் அனுப்பி வைத்து நான்
பட்டமெல்லாம் பெற வைத்தாய்!
பாசத்தாயே!
பட்டகடன் தீர்க்க என் வெற்றிகள்
உன் பாதங்களிற்குச் சமர்ப்பணம்.

♣ ♣ ♣



# ஒளித்தொகுப்பு

*செல்வி. ஸ்ரீ. காருண்யா*
*க.பொ.த உயர்தரம் (2013)*
*விஞ்ஞானப்பிரிவு*

காலை மலர்ந்ததும் கதிரவன் எழுந்தான்
தாவர இனங்கள் தாம் மகிழ்ந்தனவே
தமக்கென உணவைத் தாம் உருவாக்கும்
ஒளித்தொகுப்பென்பது அதன்பெயராகும்
சூழலில் உள்ள நீரோடு உணவாய்க்
காற்றில் கலந்திடும் காபனீரொட்சைட்
ஈருணவையுமே இன்புறப்பெற்று ஈகையாய்
ஒட்சிசனாம் உயிர்வாயுவைக் காற்றில் விடுவோம்.

காற்றொடு கலந்திருக்கும் கரியமிலவாயுவும்
சேற்றோடு கலந்திருக்கும் சாக்கடை நீரும்
நாற்றிசை சுற்றியே நகர்ந்திடும் சூரியக்
கதிரிலே ஈரொளி கவர்ந்தே நாம் வாழ்வோம்
சூழலை மாசாக்கும் இக்கனியம் யாவையும்
தீனியாய் ஆக்கியே மானியம் செய்வோம்
பகலெல்லாம் தேடிப் பரிமாறி இதனை
இரவினில் ஈயும் புரவலர் நாமே.

மற்றவர்க்காக வாழ்வதில் இன்பம்
தாவரமான எங்களின் பாடம்
சூரிய ஒளியைச் சிறைப்பிடித்ததனை
இரசாயன சக்தி ஆக்கிடுவோமே
சிவப்பு நீல ஒளிகளை சிறப்புடனேற்று
ஒளித்தொகுப்பிதனை ஒழுங்குடனாற்றி
சூழலைக் காத்துச் சுகம்பெற வாழ
நாளிகையேனும் ஓயாதுழைப்போம்.

விஞ்ஞான விந்தைக்கும் மெய்ஞ்ஞான மேன்மைக்கும்
மேலானதெங்கள் பணி
அஞ்ஞானம் கொண்டாரும் ஆக்கினைகள் செய்வாரும்
ஒட்சிசனை விட்டதுண்டா?
எத்தனை சிலின்டர் ஏறி வந்தாலும்
அத்தனையும் எமக்கீடாகுமா?
இத்தனை செய்யும் ஒளித்தொகுப்பொன்றே
அத்தனை உயிர்க்கும் பிராணனடா!

♣ ♣ ♣

ஒருவர் மற்ற எல்லோரையும் விட அதிக தைரியத்தைப் பெற்றிருப்பதால் வீரனாவதில்லை. மற்றவர்களைவிட ஒரு பத்து நிமிடங்கள் அதிகமாகத் தைரியசாலியாக இருப்ப தாலேயே வீரனாகிறார்.

**- ரால்ஃப் வால்டோ எமர்சன்**



தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்
தீரா இடும்பைத் தரும்

**- திருக்குறள்**

# வெற்றியும் விருதும் விளைவது எதனால்?

*செல்வி.லாவண்யா சயந்தன்*
*க.பொ.த உயர்தரம்* 2011

**(2010 தமிழ்த் தினம் தனிநடனம்
பிரிவு 5, தேசிய மட்டம் – 1ம் இடம்)**

முயற்சி திருவினையாக்கும். முயன்றால் சாதிக்கமுடியும் எனும் பழமொழிக்கு இணங்க பலபேரின் முயற்சியினாலும் அர்ப்பணிப்பினாலும் நான் தேசிய மட்டத்திலே முதலாம் இடத்தினைப் பெறக் கூடியதாக இருந்தது. தரம்10இல் இக் கல்லூரியிலே வந்து சேர்ந்த போது எனக்கு நடனத்தைக் கற்பிப்பதற்கு சிறந்த ஆசிரியை திருமதி.ஸ்ரீதேவி கண்ணதாசன் கிடைத்தது என்வாழ்வில் நான் செய்த பாக்கியம் என்றே கூற வேண்டும். இவ்வாசிரியருக்கு என்மூலம் வெற்றி கிடைக்கவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் முதல் தடவை என்னால் முடியவில்லை.

2008 ஆம் ஆண்டு நான் பிரிவு நான்கிலே தனிநடனம் செய்தபோது கோட்டம், வலயம், மாவட்டம் எனச் சென்றேன். மாவட்டத்திலே எனக்கு இரண்டாம் இடம் கிடைத்தது. ஆனால் எனது குரு நினைத்தது வேறு. நடந்தது வேறு. அந்த நிமிடம் எனது குருவினால் கூறப்பட்டவார்த்தை என்னவெனில் அடுத்த முறை பிரிவு 5இலே என்னை எவ்வாறாயினும் தேசிய மட்டத்திற்குக் கூட்டிச் செல்வேன் என்று வாக்குறுதியளித்தமையாகும். என்னிலும் பார்க்க அவருக்கு இருந்த குறிக்கோளே என்னைத் தேசிய மட்டம் வரை கூட்டிச்சென்றது என்றே கூறவேண்டும்.

அவர் தனது குறிக்கோளை நிறைவேற்ற எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையிலேயே 2010ம் ஆண்டுக்கான தமிழ்த்தினப்போட்டி வந்தது. அப்போது என்னை விட எனது ஆசிரியரே மிகவும் துடிப்போடு இருந்தார் என்றே கூற வேண்டும். அப்பொழுது எனது குரு தனது குறிக்கோளைப் பரவலாகக் கூறி நம்பிக்கையும் ஊட்டி அதற்காக அரும்பாடு பட்டு உழைத்தார்.

எனக்கு போட்டிக்காக வர்ணம் எனும் உருப்படியே கொடுக்கப்பட்டது. அதை 15–20 நிமிடங்களுக்குள் ஆடவேண்டி இருந்தது. அப்போது எனது ஆசான் பெரும்பாலும் ஒருவரினாலும் தெரிவு செய்யப்படாத வர்ணமாக இருக்கவேண்டும். அப்போது தான் பார்வையாளர்களாயினும் சரி நடுவர்களாயினும் சரி இரசித்துப் பார்ப்பார்கள். அத்தோடு சலிப்பும் ஏற்படமாட்டாது. ஏனெனில் ஒன்றையே திரும்பத் திரும்ப பார்க்கும் போதும் கேட்கும் போதும் சலிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டாகும். எனக்கூறி எனக்கு "அன்னமேஅருகில் வா" எனத் தொடங்கும் புதிய வர்ணத்தை

கற்பித்துக் கொடுத்தார். அது ஏறத்தாழ 19 நிமிடம் 55 செக்கன்களைக் கொண்டதாக இருந்தது. எனது குரு நினைத்தவாறு கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் வரை கலந்துகொண்டபோது என்னுடன் போட்டியிட்ட எவருமே இப்பாடலுக்குத் தமது நடனத்தை நிகழ்த்தவில்லை.

தேசியமட்டம் செல்லவேண்டும் எனில் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் எனும் தடைகளைத் தாண்டியே ஆக வேண்டும். ஆனால் இவைகளையெல்லாம் வென்று செல்வதென்பது இலேசான காரியமல்ல. ஏனெனில் நடனநிகழ்ச்சிகளை மேடையேற்றும் ஆசிரியர்களெல்லாம் பரதத்தில் வல்லவர்களாக இருப்பவர்கள். ஆனால் எனதுஆசிரியர் மற்றவர்களைப் பார்த்து மனம் சலிப்பவர் அல்ல. நாம் எது செய்தாலும் அதிலே நிறைவும் தரப்பட்ட விடையத்தைச் சரியான முறையில் ஒப்புவித்தல் வேண்டும். என்பதையுமே முக்கியமானதாகக் கொண்டிருந்தார். அவர் நினைத்தது போல அவருடைய அணிசேர் கலைஞர்களும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

எனது குருவானவர் ஒவ்வொரு மட்டப் போட்டிகளுக்குப்போகும்போதும் ஒவ்வொரு நுட்பங்களைக் கையாண்டு ஒவ்வொரு பாவங்களும் நன்றாக இருக்கவேண்டும் எனக்கூறி ஒவ்வொன்றையும் மாற்றி மாற்றி புதுப் பொலிவு பெறச் செய்தார். அதன் மூலமாக நான் எனது குருவிடம் இருந்த பல்வேறு நுணுக்க நுட்ப முறைகளையெல்லாம் அறிந்து கொள்ள முடிந்தது.

நான் இவ்வாறு ஒவ்வொரு மட்டங்களையும் வென்று தேசியம் வரை செல்வதற்கு முக்கியமான மூன்று காரணங்களையும் கூறவேண்டும் அவற்றில் ஒன்று என் நடனஆசிரியரிடமிருந்த கற்பனாஆக்கத்திறன், மற்றயது பக்கவாத்தியக் கலைஞர்களின் பங்களிப்பு. எனது இசை ஆசிரியர் திருமதி. ப.முகுந்தன் தனது தேன்மதுரக் குரலில் எனது நடனத்தை உயிரோட்டம் கொண்டதாக ஆக்கி எனது குருவுடன் சேர்ந்து அரும்பாடு பட்டு உழைத்தார். நாம் பயிற்சி எடுக்கும் போது தானும் வந்திருந்து பாடலைப் பாடி எங்களுக்கு உறுதுணையாக இருந்தார். குருவின் வீட்டில் பயிற்சி எடுக்கும் போதும் கூட எந்தவித மறுப்பும் இன்றி எந்நேரமானாலும் சரி வந்திருந்து தனது அளப்பரிய சேவையை ஆற்றினார்.

அத்தோடு மிருதங்கத்தினை வாசித்து நடனத்தை மெருகூட்டிய மிருதங்க ஆசிரியரின் பணியும் அளப்பரியது. அவரும் ஒத்திகை பார்க்கும் போதெல்லாம் வந்து எங்களுடன் இணைந்து தனது சேவையை எல்லாம் மனப்பூர்வமாகச் செய்துள்ளார். மூன்றாவது எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி வேலுப்பிள்ளை அருந்தவச்செல்வி அவர்களதும் தற்போதைய அதிபர் திரு வ.ஸ்ரீகாந்தன் அவர்களதும் ஊக்குவிப்பு அளப்பரியது. இவ்வாறான முக்கிய காரணங்களே என்னைத் தேசியம் வரை செல்ல வைத்தது என்று கூறுவதில் ஐயமில்லை.

ஒரு பாடசாலையில் திறமை மிகுந்த நடன ஆசிரியரும் சங்கீத ஆசிரியரும்

இணைந்து காணப்படுவதில்லை. ஆனால் எமது பாடசாலையில் எழுந்தருளியிருக்கும் சிவகாமிஅம்மை சமேத நடராஜப்பெரு மானின் திருவருளால் எமது பாட சாலைக்கு வரப்பிரசாதமாக நடன ஆசிரி யரும் சங்கீத ஆசிரியரும் கிடைத்துள்ளனர். இவர்களின் அளப்பரிய சேவைக்கு என் மூலமாக ஒரு சிறிய வெற்றி கிடைத்த மையை இட்டு நான் மிகவும் சந்தோச மடைகின்றேன்.


அத்தோடு நான் முக்கியமாகக் கூற வேண்டிய விடயம் என்னவெனில் எனது ஆசிரியர்கள் என்னை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கமாகக் கொண்டு தேசிய மட்டப் போட்டி கொழும்பிலே நடைபெற்றபோது மூன்று நாட்களாகத் தமது குடும்பம் பிள்ளைகள் எல்லாவற்றையும் விட்டு என்னையும் தங்களது மகள் என நினைத்து மனம் சலிக்காது மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள். அவர்களின் அர்ப் பணிப்பை நான் வாழ்நாளில் என்றுமே மறக்கமாட்டேன் என இத்தருணத்தில் கூற விரும்புகின்றேன்.

நான் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெறுவேன் எனக் கனவிலும் நினைத்ததே இல்லை. ஆனால் எனது ஆசிரியருக்கு என்னில் நம்பிக்கை இருந்தது. இந் நம்பிக்கை வீண் போகவில்லை. இவ் வெற்றிக்குக் காரணகர்த்தாவாகிய எனது குரு, இசைஆசிரியர், மிருதங்க வித்து வான், பாடசாலை முன்னாள் அதிபர், தற்போதய அதிபர், என் பெற்றோர் அத் தோடு என்னையும் எனது ஆசிரியர்களை யும் ஊக்குவித்து வாழ்த்துக்கள் வழங்கிய எனது பாடசாலை அனைத்து ஆசிரியர் களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து நான் தேசியம் வரை சென்ற அனுபவப்பகிர்வை நிறைவு செய்கின் றேன்.

♣ ♣ ♣

**ஒன்றும் செய்யாமல் காத்திருப்பவர்களுக்கும் சில நன்மைகள் கிடைக்கலாம். ஆனால் அவையெல்லாம் துடிப்புடன் செயலாற்று பவர்களுக்குக் கிடைத்ததுபோக எஞ்சியிருப்பவையே.**

**– ஆப்ரஹாம் லிங்கன்**



# ஆயிரம் திறமைகள் இருந்தும்

*செல்வி. P. டிலக்ஷனா*
*தரம் 10A*

"கெட்டிக்காரர்கள், ஆனா என்ன புண்ணியம்? முன்னுக்கு வரவேயில்லையே!" என்று சிலரைப்பற்றி மற்றவர்கள் விமர்சனம் செய்வதைப் பார்த்திருக்கிறோம். நம் மட்டத்திலே கூடத் திறமையிருந்தும் முன்னுக்கு வராத பலர் இருக்கிறார்கள்.

எவ்வளவோ திறமை இருந்தும் இவர்கள் ஏன் முன்னுக்கு வரவில்லை? இவர்களை முன்னேற விடாமற் தடுக்கும் குறுக்குச் சுவர்கள் எவை? என்பன பற்றிக் கொஞ்சம் சிந்தனை செய்தேன். சில உண்மைகள் புலப்பட ஆரம்பித்தன.

இவர்களிற் பலர் ஒரே நினைப்பு இல்லாதவர்களாக பல புத்திக்காரர்களாக இருக்கிறார்கள். திடீரென்று ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்கு மாறுவார்கள். செய்யும் தொழில் இடத்தைத் திடீரென்று மாற்றுவார்கள். அதாவது வாழ்க்கையையும் வளர்ச்சியையும் பணயம் வைத்து எந்தவொரு முடிவையும் எடுப்பார்கள். இது இவர்கள் தம் திறமை மீது கொண்டிருக்கும் அசாத்திய நம்பிக்கையைக் காட்டுகிறது. என்றாலும் முக்கியமான முடிவுகளை எடுக்கும் போது ஆற அமரச் சிந்தித்து எடுக்க வேண்டும் என்கிற இயல்பை இவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். எல்லாமே எம் எண்ணப்படி நடப்பதில்லை என்பதை இவர்கள் உணர வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் காலம் கழிந்த பின் தான் இந்த உண்மை உணரப்படும்.

நேர்மையும் திறமையும் பலர் விடயத்தில் ஒன்றுசேர இருப்பதில்லை. ஆம்! மற்றவர்களை இவர்கள் வெகு சாமர்த்தியமாக ஏமாற்றி விடுவார்கள். சில வேளைகளில் இந்த ஏமாற்று வேலை வெளியே தெரியாமற் போனாலும், பல நேரங்களில் வெட்ட வெளிச்சமாகி விடுவதுடன், இவர்களும் வீசி எறியப் பட்டுவிடுகிறார்கள்.

♣ ♣ ♣

**நல்ல உணவுகளை உண்பதால் உடல் வளரும். நல்ல நூல்களைப் படிப்பதனால் உனது உணர்ச்சி வளரும். நல்ல உள்ளத்துடன் சதா இறைவனை நினைப்பதால் உணர்ச்சியையும் உயிரையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.**

**- வாரியார்**

# THE AIM OF EDUCATION

***Miss. I.Karthiga***
*G.C.E A/L Maths (2013)*

The main aim of education is the all-round development of a student. Its purpose is to develop a student into a full, whole and integrated person. Thus, the objectives to be achieved through education and training are many and comprehensive. Education helps in achieving and developing skills, abilities, insights and scientific temper. Besides literary and aesthetic appeal of education, there are utilitarian aspects as well and they are equally important. Education aims at developing and bringing out the best of a student's inner personality, without neglecting the outer and material aspects. Education also means that students are capable of standing on their own feet, to earn their bread and butter. An educated person is supposed to face the challenges of life bravely and successfully. No person can be called properly educated if he or she fails in making a meaningful contribution to the society and country.

The purpose of education is to strike a proper balance between inner and outer emotional and practical aspects of one's personality and life. If it is not done, it will result in an imbalanced development of a personality. It should help in flowering of both the spiritual and physical potentialities. All round development means the growth and development of mind, spirit and body. All these are integral and inter development aspects of a one's personality. It only means that there should be integrated development and none of these aspects should be neglected.

The main task of education is to produce useful, intelligent, patriotic, emotionally integrated, morally strong, cultured, scientifically tempered and healthy men and women. In short, the aim and objective of education should be proper integration and harmony between feeling, thinking and doing. Education should produce people properly adjusted with the rhythm of life, and this cannot be achieved unless there in the much desired adjustment between rhythms and heart in the individual.

One of the primary aims of education is to develop character. Now, character is a very comprehensive term and means not only pattern of behavior of an individual but also moral strength, mental presence, self-discipline, fortitude and reputation etc. most of our modern problems have their

origin in our lack of strong moral character. The modern age has been suffering from the crisis of character. It is said that the character is lost, everything is lost. According to a poet, "sow a habit and you reap character. Sow the character, and you reap a dignity." Thus, the men of character are the men of dignity. The aim of education should be to make our students follow in the footsteps of these men of strong character and destiny.


The education imparted in our schools, should be such as to mould the personalities of the students, to enable them to face the realities of life with courage and confidence. In this context, the valuable concept of basic education championed by Mahatma Gandhi comes to mind. The basic education should aim at producing doctors, engineers, technicians, teachers and etc. and also fill up the vacant posts advertised by government and other agencies.

It clearly shows that education is an essential investment and input to realize the optimum output. Obviously, a purposeful education makes human resources and capital for more divident- paying than it would be otherwise. Good moral character, scientific temper, self dependence, patriotism, social and environmental awareness, singleness of purpose, secular and broad outlook, fortitude, and sense of human values, like compassion, truth, peace, non-violence, and charity are some other aspects of education.

♣ ♣ ♣

Anyone can become angry - that is easy, but to be angry with the right person at the right time, and for the right purpose and in the right way - that is not within everyone's power and that is not easy.

**- Aristotle**



# மொழித்தேர்ச்சியின்மையும் கற்றலும்

*திருமதி ஞானாம்பிகை மகேஸ்வரன்*
*ஆசிரியை*

தற்போது பாடசாலை மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தின் மூலமாகவும், தகவல் ஊடகங்களின் வளர்ச்சி காரண மாகவும் கூடிய அறிவாற்றல் கொண்டவர் களாகவும், அறிவினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிமுறைகளைத் தெரிந்தவர்களாக வும் உள்ளனர். எனினும் மாணவர்களின் மொழியறிவு, மொழி கையாளும் வல்லமை, மொழியைத் தமது ஆக்கங்களில் கையாளும் ஆற்றல் என்பவை திருப்திகரமாகக் காணப் படாமை முக்கிய குறைபாடாகும். பதின்மூன்று வருடங்களாகத் தாய்மொழியைக் கற்றும் மொழித்தேர்ச்சி பாராட்டக் கூடிய அளவில் இல்லாமையை அவதானிக்க முடிகிறது.

மொழித்தேர்ச்சிக்கு கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படைத் தேர்ச்சிகளை மேம்படுத்த வேண்டியுள்ளது. எனினும் மொழித்தேர்ச்சிக்கு கேட்டல், வாசிப்பு இரண்டும் மிக இன்றியமையாதன. கேட்டவுடன் அறிந்து கொள்ளுபவர் வாசிப்புத்திறன் மிக்கவராக இருப்பார். கேட்டலும் வாசித்தலும் கருத்துக்களை அறிந்து கொள்ள உதவுபவை. வாசித்தல் என்பது வரிவடிவம், ஒலித்தல், பொருளு ணர்தல் ஆகிய கூறுகளை உள்ளடக்கிய செயல்களைக் குறிக்கும். வாய்வாசிக்க அறிவுமூலம் பொருளுணர்தல் வேண்டும். பொருள் உணர்ந்து வாசிப்பதற்கு தொடர்ச்சி யான வாசிப்பு அவசியம். இன்றைய மாணவர்கள் வரிவடிவத்தை அறிந்து வாசிப்பினைச் செய்யும் போதிலும் பொரு ளுணர்ந்து கிரகிப்பதில்லை. இதனாற்தான் இவர்கள் கற்றலிற் பின்நிற்கின்றனர்.

மொழி கற்பிக்கும் ஆசிரியர் என்ற வகையில் வகுப்பறையில் மாணவர்களின் வாசிப்புப் பற்றி அவதானிக்கும் சந்தர்ப் பங்கள் பல. அவர்கள் வாசிக்கும் போது எழுத்துக் கூட்டி வாசித்தல், அவசரமாக உச்சரித்து சொற்களைத் தவறாக வாசித்தல், குறில் எழுத்துக்களை நெடிலாக ஒலித்தல், கிரகித்தலுக்கு ஏற்றதாக வாசிக்காது தமது வாய்க்குள் மெதுவாக அல்லது வேகமாகத் தொடர்ந்து படபடென வாசித்தல் போன்ற நிலைகளில் உள்ளனர். இதனை அவதா னிக்கும் போது கற்றல் கற்பித்தலில் குறைபாடுகள் இருப்பது மறுக்கமுடியாத உண்மையே. கூடுதலான மாணவர்கள் எழுத்துக்களை இனங்காணக் கூடியவ ராகவே உள்ளனர். ஆனால் கிரகித்தலுடன் கூடிய வாசிப்பு இல்லாதவர்களாக உள்ளனர்.

இவற்றுக்கான காரணங்கள் எவை?, இவற்றினை மாற்றியமைத்துச் சீராக்க முடியாதா?, இவற்றுக்குத் தீர்வு யாது? இவை கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் அனைவரும் சிந்தித்து விடைகாண

வேண்டிய விடயங்கள். அந்த வகையில் முதலில் காரணங்களையும் அவற்றைச் சீராக்கும் முறைகளையும் நோக்குவோம்.

ஆரம்பக் கல்வி பயிலும் போது எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கப் பயிற்சி பெறாமையாகும். இவ்விடத்து சரியாக உச்சரிக்கப் பயிற்சி வழங்குவதன் மூலம் வாசிப்புத் திறனில் பின்தங்கிய மாண வர்களுக்கு உதவ முடியும். தெளிவாக ஒலிக்கும் போதே மற்றவரால் விளங்கவும் கிரகிக்கவும் முடியும் என்பதை உணர வைத் தல் வேண்டும். ஒருவர் கருத்தை வெளிப் படுத்தும் சாதனமே மொழி. மாறுபட ஒலிக்கும் போது பொருள் மாறுபடும் என்ற அடிப்படையை மாணவர்கள் நன்கு விளங்கிக் கொள்ளுமாறு ஆரம்ப வகுப்புக் களில் சொல்லையும் எழுத்தையும் சரி யான ஒலியுடன் உச்சரித்துச் சொல்லு வதற்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

உரத்து வாசித்தலில் போதிய தேர்ச்சி யின்மை, விருப்பங்காட்டாமை, கூச்ச மடைதல் போன்ற தன்மையைக் காண முடிகிறது. ஆரம்ப, இடைநிலை வகுப்புக் களில் உரத்து வாசித்தலைக் கட்டாயப் படுத்தல் வேண்டும். இல்லாவிட்டால் உயர்தர வகுப்புக்களிற்கூட பிழையாகவே உச்சரித்து வாசிப்பர். உரத்து வாசிப்பதால் நாவுக்குப் பயிற்சி கிடைக்கிறது. உரத்து வாசிக்கும் போது கண் பார்க்கிறது, வாய் வாசிக்கிறது, காது கேட்கிறது. எனவே மூன்று உறுப்புக்கள் செயற்படுவதனால் கிரகித்தல் செயற்றிறனுடையதாக அமை கின்றது, ஞாபகத்திலும் இருக்கிறது.

உச்சரிப்பிலும் வாசிப்பதிலும் கேட்டலி லும் உண்டாகும் தவறுகள் எழுதுவதிலும் தாக்கம் செலுத்துகின்றன. எழுத்தினைப் பொறுத்தவரை ஒலிப்பு வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளாமை மட்டுமன்றி உறுப் பமைய எழுதுவதுமில்லை. இதனால் பயிற்சிக் கொப்பிகளைத் திருத்துவது ஆசிரியர்களுக்கு மிகச் சுமையான தாகிறது. மீள் பயிற்சிகளை வழங்கும் போது அவற்றில் அக்கறையின்றி உதா சீனம் செய்யும் போக்கு இன்றைய மாண வர்களிடம் அதிகமாக உள்ளது. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பார்த்து எழுதும் பயிற்சிகளை வழங்கும் போது அவற்றிற் கூடத் தவறுகள் விடும் சந்தர்ப்பங்கள் பல.

இவ்வாறு சொற்களைப் பிழையின்றி எழுதவும் வாசிக்கவும் முடியாத அடிப் படைத் தேர்ச்சிகளற்ற மாணவர்களுக்கு இலக்கிய. இலக்கண விடயப்பரப்புக்களை எவ்வாறு கற்பிப்பது. குறிப்பிட்ட வகுப்பில் குறித்த பாடங்களுக்கான தேர்ச்சிகளை அடையாத நிலையில் நிகழும் வகுப் பேற்றத்தால் எவ்வித பயனுமில்லாமற் போகிறது. அதாவது குறிப்பிட்ட வகுப்பில் குறிப்பிட்ட பாடத்தைக் கற்பதற்கான ஆயத்தநிலை இல்லாத போது அதனைப் பொருட்படுத்தாது வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும் ஆயத்தநிலையில் உள்ள னர் என்ற கருதுகோளுடன் கற்பிப்பதால் எவ்வகைப் பயனுமில்லை. பிள்ளையும் உரிய முன்னறிவும் முதிர்ச்சியும் இல்லாத விடத்து கற்றலில் வெறுப்பே ஏற்படும். இது கற்றலை மேலும் பாதிக்கும். இவ்வாறான ஒரு பிள்ளை பாடசாலைக்கும் தனியார்

கல்வி நிறுவனங்களுக்கும் அலைவது நேரத்தையும் பணத்தையும் விரயமாக்கும் செயலாகுமேயன்றி வேறு என்ன பயன்?. இவ்வுண்மையைப் பற்றி மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உணரவைப்பது கூட ஆசிரியர்களின் பொறுப்பாகவுள்ளது.

பொதுவாக பாடசாலைகளில் மொழி கற்பித்தல் என்பது மொழி ஆசிரியர்களின் கடமையாகும் என்ற நிலைப்பாடே காணப் படுகின்றது. எனினும் சகல ஆசிரியர்களும் மொழி ஆசிரியர்களே என்ற நிலைப்பாடு உருவாகி மாணவர்களின் மொழித் தேர்ச்சியில் யாவரும் ஆர்வமும், அக்கறை யும் காட்டுவார்களாயின் மொழித்தேர்ச்சி யில் பாரிய வளர்ச்சியைக் காண முடியும். சகல பாடங்களிலும் மொழியைத் திருத்த மாகக் கையாளுவது தொடர்பாகக் கவனம் செலுத்தும் போது மொழியாற்றலை மேம்படுத்த முடியும்.

மாணவர்களிடையே வாசிப்பதில் உள்ள ஆர்வம் குறைந்து வருவதற்கு இன் னொரு காரணம் நவீன தொடர்புச் சாதனங்களின் பாவனையாகும். மிகக் குறைந்தளவிலான மாணவர்களே வாசிப்புப் பழக் கத்தைக் கொண்டவர் களாய் மகிழ்ச்சிக்காகவும் பொழுது போக்கிற்காகவும் வாசிக்கின்றனர்.

வாசிப்புப் பழக்கத்தையும், வாசிப்புத் திறனையும் அதிகரிப்பதற்கு: ஆர்வத்தைத் தூண்டக்கூடிய கதைகளை வாசித்துக் காட்டல், வாசிப்புத் தொடர்பான மகிழ்ச்சி யான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், வாசிப்புக்கு உதவக்கூடிய விளையாட்டுக் களை உருவாக்குதல் போன்ற முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

கற்பித்தல் முறைகளில்; சிறியதிலிருந்து பெரியதை நோக்கிச் செல்லுதல், அறிந்ததில் இருந்து அறியாததை நோக்கல், எளிதி லிருந்து கடினமானதை நோக்கிச் செல்லு தல் போன்ற உத்திகள் காணப்படுகின்றன. இவற்றை மொழி கற்பித்தலில் பின்பற்ற லாம். படங்களோடு கூடிய கூற்றுக்களை வாசித்தல், படங்களையும் சொற்களையும் வாசித்தல், இரண்டு எழுத்து, மூன்று எழுத்து, நான்கு எழுத்து எனத் திட்டமிட்டு வாசித்தல், சிறிய சொற்றொடர்களை வாசித்தல், தனி யெழுத்துக்களைப் படங்களுடன் இணைத் தல் என்பன கிரகித்தல் வாசிப்புக்கு அல்லது கருத்தூன்றிய வாசிப்புக்கு எளிமையான வழிமுறைகளாகும். வாசிப்பின் விளைவு மாணவர்களது சொல்லாட்சி வளர்வதே யாகும்.

வகுப்பறைகளைப் பொறுத்தவரை வாசிப்புப் பயிற்சியை வழங்கும் போது, பாடநூல்களை மட்டுமன்றி பாடநூல் களுக்கு மேலாக பல்வகை நூல்களையும் வாசிக்க வைத்தல் சிறந்ததாகும். அப்போது வாசிப்புப் பற்றிய தேர்ச்சியை மாணவர்கள் விரைவில் அடைந்து கொள்வார். விளம் பரங்கள், அறிவித்தல்கள், அழைப்பிதழ்கள், கடிதங்கள், சுவரொட்டிகள், பத்திரிகைத் தகவல்கள் முதலியவற்றை வாசிக்கச் செய்வதனூடாக வாசிப்பின் பயிற்சியைக் கூட்டுவதனுடன் மொழியாற்றலையும் வளர்க்க முடியும்.

எழுத்துக்களை எழுதும் போது பலவித மான தவறுகள் இருப்பதனை அவதானிக்க முடிகிறது. அவையாவன: எழுத்துப்பற்றிய புலக்காட்சியின்மை, எழுத்துப் பொறி முறையை அறியாமை, உறுப்பமைய எழுதாமை, எழுதுவதற்கான எளிமை யான வழிகளை அறியாமை, எழுத்தினை எழுதும் ஒழுங்கினை அறியாமை (தொடங்கி முடிக்கும் முறை), குறில் நெடில்களைப் பிரித்தறியாமை, ஏகாரம், ஓகாரங்களைப் பிரித்தறியாமை, ஒத்த சாயல் உடைய (ஐ,ஐ,மு,மு) எழுத்துக்களைப் பிரித்தறி யாமை எனப் பலவற்றைக் கூறலாம்.

இத்தகைய சிக்கல்கள் நிறைந்தி ருப்பது மொழிப்பாடத்தின் அடைவு மட்டத்தினை உயர்த்துவதற்குப் பெரும் சவால்களாக உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையே. எனினும் திட்டமிட்ட மொழிப்பாடக் கற்பித்தலினூடாக இவற்றினைத் திருத்திக் கொள்ள முடியும். இதற்கு முதற்தேவை மனப்பாங்கு மாற்றம் ஆகும். அதாவது ஆசிரியர் சற்றுத் தியாக சிந்தையுடன் அர்ப்பணிப்போடு பணிபுரியத் தயாராக வேண்டும். அது மட்டுமன்றி மாணவர்களும் தமது பலவீனங்களை ஆசிரியர் சுட்டிக்காட்டும் போது அவற்றை மனங்கொண்டு முறையானதும் தொடர்ச்சி யானதுமான பயிற்சிகளைப் பெற வேண்டும். பெற்றோரும் தமது பிள்ளைகளின் தேர்ச்சி மட்டத்தினை விளங்கிக் கொண்டு செயற் பட வேண்டும். இம்மூவரில் ஒருவரது ஒத்துழைப்புக் குறைந்தாலும் இச்செயற் பாட்டில் வெற்றிபெறுவது கடினம்.

♣ ♣ ♣

**வியாபாரி ஒருவன் கடையை மூடும்போது வரவு செலவு பார்த்து இருப்புத் திட்டம் கட்டுகிறான். அதுபோல் நீயும் கண்ணை மூடி உறங்கு முன் நீ செய்த புண்ணிய பாவங்களை நிறுத்துப் பார்த்து புண்ணியத்தை இருப்புக் கட்டுவாயாக.**

**- வாரியார்**

**பொய் சொல்லாமல் இருப்பது ஒரு சிறந்த குணம். இந்த ஒரு குணம் ஒருவனிடம் இருக்குமானால் மற்றக் குணங்கள் தாமாகவே அவனிடம் சேரும். சத்தியம் என்பது என்றும் அழிவில்லாதது. சகல தருமங்களுக்கும் இருப்பிடமாகும். சத்தியமே தவம்; சத்தியமே யாகம்; சத்தியமே கடவுள் உள்ளத்தில் உள்ள அஞ்ஞான இருள் நீங்க வேண்டுமானால் உண்மை என்கிற திருவிளக்கை ஏற்ற வேண்டும்.**

**- வாரியார்**

# தக்கோராக்கும் தனிப்பெரும் செல்வம்

*செல்வன். ஜெ. நேசகுமாரன்*
*தரம் 10A*

**"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வமும் சேர்வது நாடு" என்கிறது வள்ளுவம்.**

நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் நல்ல விளைச்சல் நிலங்கள் தக்கோராகிய சான்றோர், கல்விமான்கள் எடுக்க எடுக்க குறையாத செல்வம் ஆகியன வேண்டும் என்று வள்ளுவம் கூறுவது போன்று அமைவதற்கு வளமான மனித வளம் தேவை. இம்மனித வளத்தின் உன்னதமான உச்சப்பாட்டை ஒட்டி அதியுயர் ஆரோக்கியமான சமுதாயம் கொண்ட நாடானது மலர்வதற்கு மக்களின் கல்வியறிவு கல்வியின் தரம் என்பன மூலவேராக அமைந்துள்ளன.1990 ஆம் ஆண்டிலே தாய்லாந்து நாட்டின் "ஜொம்தியன்" நகரில் நடைபெற்ற "யாவருக்கும் கல்வி" என்பது தொடர்பான மாநாடு கல்வி அபெறலின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

குரு சீட வரன் முறையில் ஆதிகாலங்களில் குருவின் ஆச்சிரமத்திலோ, வீட்டிலோ, மர நிழலிலோ, செவிவழியாகக் கல்வி கற்கப்பட்டது. இக்கல்வியில் மனித வாழ்வில் அகிம்சை சாத்வீகம் போன்ற விடயங்களே கற்கப்பட்டன. அக்காலத்தில் இக்குரு சீட முறைக்கல்வி ஒரு குறித்த வருணாச்சிரமத்திற்கே புகட்டப்பட்டது. இதற்கான நூற்சான்றுகள் ஏராளம். ஐரோப்பியரால் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சு இயந்திர வருகை, காகிதத்தின் அறிமுகம் போன்ற காரணிகள் அனைவரும் நூல்களைக் காணக்கூடிய கற்கக்கூடிய வாய்ப்புக்களை உருவாக்கின.

அக்காலங்களில் ஏற்பட்ட மதப்பூசல்களினதும் போட்டிகளினதும் காரணமாக இடத்துக்கிடம் மிசனரிகள், வித்தியா விருத்திச்சங்கங்கள், திண்ணைப்பள்ளிகள் போன்ற அமைப்புக்கள் உருவாகிக் கல்வி வளர வழிகோலின. இதனால் ஒரு விதமான போட்டி முறைக் கல்வி நாட்டில் வளர வாய்ப்பு ஏற்பட்டது. காலப்போக்கில் இவ்வாறு இயங்கிய தனியார் சமூகமட்ட பாடசாலைகளை அரசு பொறுப்பேற்று நடாத்தத்தொடங்கியது. இதனாற் கல்வியில் ஓர் பெரு வளர்ச்சியும் சமகற்கை சந்தர்ப்பமும் மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாயிற்று.

கல்வியின் பயன் என்பது "ஒருவரை இந்நாட்டுக்குரிய நற்பிரஜையாக்க வழி சமைப்பதாகும்" இன்று நாட்டின் கல்வி முறையில் பாலர் பாடசாலை தொட்டு பல்கலைக்கழகம் வரையிலான மட்டங்களிலும் நவீன கல்வி அணுகுமுறையானது கடைப்பிடிக்கப்படுகின்றது. கல்வி உளவியலாளர்களது பார்வையில் ஓர் சிறாரை "பிரச்சினைக் குழந்தை" என்பதிலும் பார்க்க

"பிரச்சினைகளை உடைய குழந்தை" என்று பார்ப்பது பொருத்தமானது என்கிறார்கள். மேலும் துடினமான ஒரு குழந்தையிலும் பார்க்க பேசாது ஒதுங்கிப் பதுங்கி வாழும் பிள்ளைகளே தமது வளர்ந்த பருவத்தில் பாரிய குற்றவாளிகளாக விரக்தி வாழ்வில் தினம் தினம் மிதப்பவர்களாக ஆகிவிடுவதை ஆய்வு முடிவுகள் உறுதி செய்துள்ளன. ஆதலால் இச்சிறார்களின் சூழலியல் வாழ்வுப்புலம் ஆராயப்பட்டபோது அவர்களின் வீட்டுப்பிரச்சினை, பெற்றோர், ஆசிரியர், சமூகத்தின் பொருத்தமற்ற தொடர்புகளே காரணம் என இனங்காணப்பட்டது.

ஆதலால் எங்கள் சிந்தனை மரபு, உணர்வுநிலை, செயற்பாடு எல்லாமே இவ்வாறான சமூகப் பரிமாற்றத்தின் வழியாகவே எம்மை வந்து சேர்கின்றன. எனவே நல்லதோர் சமுதாய அமைப்பே எல்லாவற்றிற்கும் ஆணிவேராகும். ஆதலால் நாடு சிறக்க நாட்டின் வாழ்வியல் சிறக்க வேண்டும். மனித வாழ்வியல் மேம்பட அனைவரும் கல்வியறிவு உள்ளவர்களாக வேண்டும். இக்கற்றல் சிறந்ததாக அமைய ஆசிரியரும் பெற்றோரும் சமுதாயமும் சூழலும் ஒன்றுபட்டு இயைபானதோர் ஆரோக்கிய மான கல்வியைச் சிறார்கள் பெற உழைக்கவேண்டும். இவ்வாறான முயற்சி நம்சமுதாயம் நாகரீக உலகில் காலடி பதிக்க வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

♣ ♣ ♣

## வெற்றிக்கான வழிமுறையின் சுருக்கம்
## (A Crash Course for Success)

- ✷ வெற்றிபெற விளையாடுங்கள் - தோல்வியைத் தவிர்க்க அல்ல.
- ✷ பிறரின் தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.
- ✷ உயர்ந்த ஒழுக்கமுள்ளவர்களோடு சேருங்கள்.
- ✷ சிரமப்படாமல் ஏதாவது பலன் கிடைக்காதா என்று எதிர்பார்த்திருக்காதீர்கள்.
- ✷ நீண்டகாலத் திட்டங்கள் பற்றியே எப்போதும் சிந்தியுங்கள்.
- ✷ உங்களது பலத்தை மதிப்பீடு செய்து அதன்படியே திட்டமிடுங்கள்.
- ✷ ஒரு பரந்த, தொலைநோக்குக் கண்ணோட்டத்துடனேயே முடிவெடுங்கள்.
- ✷ உங்களது நேர்மையை ஒருபோதும் விட்டுக்கொடுத்துவிடாதீர்கள்.



"உங்களால் வெல்லமுடியும்"

- ஷிவ் கெரா

# விழுதில்லா விருட்சங்கள்

*செல்வி. பூ ஜெயமலர்*
*ஆசிரியை*

"அப்பாடா!......." என்று பெருமூச்சு விட்டவாறு சாய்வு நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டேன். பெரும் பாரச்சுமை யொன்றை இறக்கிவைத்துவிட்ட ஆறுதல். "இண்டையிலையிருந்து எப்பன் ஆறுதல் சொந்த பந்தங்களிட்டை போய் சுகதுக்கம் விசாரிக்க வேணும், நண்பர்களிடம் போக வேணும் கோயில் குளங்களைத் தரிசிக்க வேணும் நல்ல படங்கள் ஏதும் போட்டுப் பாக்க வேணும் வீட்டுக்கும் எனக்கும் தேவையான பொருளுகள் சிலது வாங்க வேணும் புத்தகங்கள்இ பள்ளிக்கூடச் சாமான்கள் சில வாங்கி ஆயத்தம் செய்ய வேணும் வீட்டிலையே இருந்து வயதான பெற்றாருக்கு ஏற்ற சாப்பாடுகள் என்ரை கையாலையே செய்து குடுத்துப் பணிவிடை செய்து கவனிக்க வேணும்." இவ்வாறு வேலைப்பகிர்வுப் பட்டியல் நீண்டது. இருபது ஆண்டுகளாக இதே சீவியம் தான். சில வேளைகளில் உடல்அலுப்பும், உளச்சோர்வும் ஏற்படும் போது என்னடா சீவியம் என்று சலிப்புத் தோன்றிய போதும் ஒவ்வொரு ஆண்டுகளிலும் கிடைக்கும் நன்மாணாக்கர் களின் ஊக்கம்மிக்க கற்றலும், ஆற்றல்களின் வெளியீடும், அவர்களுக்குக் கிடைக்கும் வெற்றிகளும், பாராட்டுக்களும் புத்தூக்கி யாகி மீண்டும் இயக்கிவிடும்.

ஆவணிமாத வெயில் வீதியில் நடப் போரை வறுத்தெடுத்தது. அந்த வெயிலையும் பொருட்படுத்தாது எனது வீட்டிலிருந்து 3மைல் தொலைவில் உள்ள பரீட்சை மண்டபத்துக்குச் சென்று பரீட்சை வினாத் தாளைப் பார்த்து அதன் தரத்தை மதிப்பிட்ட போது நான் கற்பித்த 60 மாணவர்களின் முகங்களும் அவ்வினாத்தாளில் தெரிந்தது.

கலகலவென்று சிரிக்கும் கரன் முகத்தைச் சுழித்தான்.

வினோத் முகத்தில் சலனமில்லை. சிந்து சிரித்தவாறே கூர்ந்து பார்க்கிறாள்... இப்படி ஒவ்வொரு முகமும்...... அறுபதில் இருபதாவது டீக்குத் தேறும். சிலர் போடர்லை நிப்பினம். அடிமட்டத்திலை நிக்கிறவைக்காக எத்தினை பாடுபட்டனான்? அந்தப் பத்திலை ஒரு நாலு தேறினால்! அதுதான் வெற்றி!

போனவருஷம் நடைபெற்ற பாராட்டு விழாவிலை கிடைத்த அன்பளிப்புக்களின் தொகை கிட்டத்தட்ட 25ஆயிரம் தேறும். அந்த விழாவில் சித்தி பெற்ற பிள்ளைகளின் பெற்றார் அடைந்த சந்தோஷத்தை விட் அவ்வன்பளிப்புத் தொகை முழுவதையும் என்னிடம் கற்ற ஏழை மாணவர்களின் கல்விக்காகஇ நன்கொடையாக வழங்கும் போது அப்பிள்ளைகளும் பெற்றோரும் அடைந்த மகிழ்ச்சியே எனக்கு மிகுந்த சந் தோசமாகும். அதனால் இம்முறை கிடைக்கும் அன்பளிப்புக்களை யார்யாருக்கு வழங்கு வது என்று கற்பனை செய்தவாறே வீட்டுக்கு

வந்து அமர்ந்த எனக்கு, என்னை அறியாமலே கண்கள் இடுக்கின. வழமையாக இவ் விடத்தில் படுத்திருந்தால் நல்ல குளிர் காற்றுத் தழுவிச்செல்லும். அது ஒரு தனிச்சுகம்.

முற்றத்தில் நின்ற மாமரத்தில் இலை தெரியாத காய்கள். சிறிய தேங்காய் அளவில் ஒவ்வொரு காயும். சில காய்களை அணில் கொந்தியதால் செம்மை நிறம் வெளிப்பட்டுத் தெரிந்தது. கிளிகளின் கீச்சிடும் ஆரவாரம். மாமரக்கொப்பி லிருந்து ஒரு கயிறு குசினிக்குள் இருந்தது. வயதான போதும் அதைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்ட எனது தாயார் அக் கயிற்றை இழுத்ததும் தகர டப்பாக்கள் கலகலக்க கிளிகள் ஆரவாரித்துப் பறந்தன. அணில்கள் சற்றுத் தூரம் ஓடி விட்டு திரும்பிப் பார்த்தன. எமது வீட்டுப் பூனை யும் தனக்கு ஒரு அணிலாவது கிடைக்காதா? என்று அங்கலாய்த்துக் கொண்டு, ஏமாற் றத்துடன் உள்ளங்காலை நக்கி நக்கி முகத்தைத் துடைத்துக் கொண்டது.

“ஐயா! வாத்தியார் ஐயா......! இந்த மாங்காயள் நல்லாமுத்திப்போச்சு. விலைக்குத்தாறியளே? மரத்தோடை வாங் கிறம்...” ஒரு மாம்பழ வியாபாரி தெரு வில் நின்றவாறே கேட்டான். “இல்லை நாங்கள் விக்கயில்லை. எங்களுக்கு வேணும். தம்பிக்கு இதெல்லாம் விக்கிறது பிடிக்காது......” வேப்பமரத்தடியிற் கட்டிலில் படுத்திருந்த அப்பா!

“வாத்தியாருக்கு மனிசி மக்களும் இல்லை. தாய் தேப்பனும் வெறும் கிழடுகள். உவ்வளவு மாங்காயையும் வைச்சு என்ன செய்யப்போகினம்? ஏழையெளியதுகள் உழைக்கட்டும் எண்டு நினைக்காயினம். கஞ்சத்தனம் தான்” வந்தவன் ஏமாற்றத் துடன் பிதற்றுகிறான். ஏதோ வேற்றூர்க் காரன் போலும் என்று மனம் ஆறுதல டைகிறது.

ஒவ்வொரு ஆண்டும் நிரம்பக் காய்த் தாலும் இந்த ஆண்டு போல் ஒருபோதும் காய்க்கவில்லை. வழமையாக எனது பெற்றோரைக் கவனிக்கும் லட்சுமியின் கணவன் பொன்னுச்சாமி தான் மாங்காய் பறிப்பான். இன்றைக்கும் தான்! அம்மா, கவனமாக பட்டை மூலம் பறிக்கப்பட்ட காய்களைத் தரம்பிரித்து பக்குவமாக வைக்கோலும் வேப்பிலையும் போட்டு பழுக்க வைத்தா. 1500க்கு மேலை வரும். லட்சுமிக்கான பங்கு, என்னிடம் கற்க வரும் பிள்ளைகளுக்கான பங்கு, நான் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்களுக் கான பங்கு, அருகிலுள்ள சிறுவர் இல்லத் துக்கான பங்கு, முதியோர் இல்லத்துக்கான பங்கு, அயலில் உள்ள சிறுவர்களுக்கான பங்கு என அம்மாவும் லட்சுமியுமாக பகிர்ந் தார்கள். சிலரது பங்கு பொன்னுச்சாமி யிடம் கொடுத்தனுப்பப்பட்டது. சிலரது லட்சுமி கொடுத்தார். என்னோடு சேர்ந்த வர்களுக்கு! நானே கொடுத்தேன்.

“வாங்கோ சேர்.... நீங்கள் தந்தால் தான் இப்படிச் சுத்தமான மாம்பழம். சந்தையிலை எல்லாம் மருந்தெல்லே.” எனது சக ஆசிரியர்களின் சந்தோசத்தில் ஒரு திருப்தி. “இந்த வருஷக் காத்துக்கும்

விழாமல் நிண்டதே? எங்கடை வீட்டை எத்தினை மரம் அடியோடை சாய்ஞ்சு போச்சு? எல்லாம் நல்ல பயன் தரு மரங்கள் தான்" சக ஆசிரியர்களின் பேச்சில் சற்று வயிற்றெரிச்சலும் தெரிந்தது. சில்லென்று வந்த காற்றில் கிளைகள் அசைய அதனூடே வந்த சூரியக்கதிர்கள் முகத்தில் சுள்ளிட விழித்துக்கொண்டேன். கண்ணெதிரே அந்த மாமரம்! கிளைவிட்டு அடுத்த போகத்திற்கான அறுவடையைத் தருவதற்காகத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டது.

45 வயதான எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து இந்த மாமரம் நிற்கிறது. எவ்வளவு காய்த்தாலும் ஒன்றுகூடப் பணத்திற்கு விற்றதில்லை. என்னோடு சேர்த்து நாம் ஆறு பிள்ளைகள். எம்மிடம் வரும் சின்ன வயது நண்பர்கள் எல்லோரும் விளையாடியதுஇ ஊஞ்சல் கட்டி ஆடியதுஇ ஏன் மரம் ஏறக் கற்றுக் கொண்டதுகூட இந்த மாமரத்தில்தான். எல்லோருக்கும் அம்மாவே தன் கைப்பட அரிந்து தருவா.

உறவினர்களுக்கு ஓலைப்பெட்டிகளில் அடுக்கித் தந்து விடுவா. அயலில் உள்ள கோயில்களில் அபிஷேகம் என்றால் அங்கே எமது மாம்பழத்தைக் காணலாம். இப்போது உறவினர் பலர் ஊரைவிட்டு வெளியேறி விட்டனர். புதிதாய்ப் பலர் அயலவர் ஆகினர். கோவில்களுக்குப் பதிலாக முதியோர் சிறுவர் இல்லங்கள். எனது சிந்தனைகளை மறுப்பவர் யாருமில்லை. ஐந்து உடன்பிறப்புக் களும் கூட அண்ணாந்து பார்க்கும் மாளிகை களில் அகதிகளாய். அதனால் பகிர்ந்து கொள்வதற்கு எங்கள் மூவரைத் தவிர யாருமில்லை.

இப்போது அந்த மாமரமும் நானும் ஒரேமாதிரித் தான் என்று ஒரு சமன்பாடு விழுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பருவ காலம் வந்ததும் பூத்துக் காய்த்துக் கனிகளைத் தருகிறது. தனக்காக ஒன்றைக்கூட அது எடுத்ததில்லை. எக்காரணம் கொண்டும் சலித்துக் கொண்டதும் இல்லை. இம்முறை ஏற்பட்ட புயலின் போது எத்தனை பெரிய விருட்சங்கள் பாறி விழுந்தன?. விழுதுவிட்ட ஆலமரங்கள் கூட அடியற்று விழுந்தன. எங்கடை வீட்டு மாமரம் விழாதது அதிசயம் தான். உண்மைதான் அது தன்னைத் தாங்க எந்த விழுதுகளையும் உருவாக்கிக் கொள்ளவில்லை. பயனை எதிர்பாராது விளைச்சலை மட்டும் அறுவடையாக்கிக் கொண்டிருந்தது.

"அம்மா! நானும் உங்களோடை பத்து வரியமா நிக்கிறன். ஒரு மாம்பழம் கூட நீங்க காசுக்கு வித்து நானறியன். அதுவும் தர்ம சாலையளுக்குக் குடுத்து உதவு கிறியள். அதனாலைதான் கடவுளாப்பாத்து இந்த மரத்தை விட்டு வைச்சிருக்கிறான். ஏனென்றால் இப்பிடியான தருமங்கள் தொடர வேணும் எண்டதுதான் கடவுள் சித்தமும் போல." என்று லட்சுமி, அம்மாவுடன் பேசியதை நினைவுபடுத்திக் கொண்டேன். விருட்சங்கள் விழு தில்லாமல் இருக்கலாம், ஆனால் வேர் இல்லாமல் ஏது?.

அடுத்த போகத்திற்காகத் தன் போசனை களைப் பெருக்கிக் கொண்டு தயார்ப்படுத்திப் பொலிவு பெற நின்ற மாமரத்தைப் பார்த்த தும் என் வேலைப்பகிர்வுப் பட்டியலில் பல பின்தள்ளப்பட எனது பாடம் சார்ந்த பொருட் களின் பட்டியலையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன் புத்தகக்கடையை நோக்கி.

விழுதில்லா விட்டாலென்ன? விருட் சங்களாகவே இருந்தே தரும் விளைச்சலை விரும்பாதவர் இருக்கமாட்டாரே!. விழுதுகள் விருட்சத்தைத் தாங்கிக் கொள்ளலாம் ஆனால் விளைச்சலைத் தருவதென்னவோ விருட்சங்கள் தான்!!!.

♣ ♣ ♣

கடமையைச் செய்வதுதான் உனது பணி. எந்த விதத்திலும் அதன் பலன்கள் மீது உனக்கு அதிகாரம் இல்லை

**- பகவத்கீதை**

எவ்வளவுதான் மகிழ்ச்சிகரமாக இருப்பினும் எதிர்காலத்தை நம்பாதே. இறந்தகாலம் இறந்தவைகளைப் புதைக்கட்டும். செயற்படு உயிருள்ள நிகழ்காலத்தில் செயற்படு. உறுதியான உள்ளத்தோடும், கடவுள் மீது நம்பிக்கை வைத்தும் செயற்படு.

**- லாங்பெலோ**

எது அழகாக இருக்கிறதோ, அது நல்லது; எவர் நல்லவரோ, அவர் விரைவில் அழகானவராகவும் மாறிவிடுவார்.

**- சாப்பியோ**

படித்தல் ஒருவனை முழுமையானவனாக்குகிறது. கூடிப்பழகுவது, ஒரு ஆயத்த மனிதனாக்குகிறது. எழுத்தோ ஒருவனை சரியான வனாக்குகிறது.

**- பேக்கன்**

பகுத்தறிவுக்குச் செவிசாய்கும் மனிதன் தன்னை இழந்துவிடுகின்றான். தன்னை அடக்கியாள முடியாத அனைவரையும் பகுத்தறிவு அடிமை யாக்குகிறது.

**- பெர்னாட்ஷா**

# கல்லூரியின் வளர்ச்சிப்பாதையில் இன்று நாம் காணும் அதிபர்

***திருமதி. இந்திரா தவநாயகம்***
*பகுதித்தலைவர்,*
*(பழைய மாணவி)*

எமது அதிபர் திரு. வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் அவர்கள் அதிபர் பதவியில் இக்கல்லூரிக்குப் புதியவரே அன்றி இக்கல்லூரியின் மைந்தன். இவர் பத்து வருடங்கள் இக்கல்லூரியில் கல்வி கற்று பின் பத்து வருடங்கள் ஆசிரியராகவும் சேவையாற்றியுள்ளார். தான் பிறந்து வளர்ந்த கிராமத்துக்கே மீண்டும் வருகை தந்து பணிபுரியும் பெருமை பெற்றவர். இவரை சுழிபுரம் வாழ் மக்கள் சிறந்த மண்ணின் மைந்தனாக வாழ்த்துகின்றனர்.

யான் இவரிடம் கல்வி கற்ற மாணவி என்ற வகையில் இவரின் கல்விப்புலமையை நன்கு அறிவேன். இறை சித்தம் இவரது அதிபர் சேவையும் எமது கல்லூரிக்கு கிடைக்க வேண்டுமென்றிருந்தது. முன்பு கடமையாற்றிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இருந்து எத்தனையோ சிரமங்கள், அழுத்தங்கள் மத்தியில் நமது கல்லூரிக்கு அதிபராக பணியாற்ற வந்தமை இக்கல்லூரிக்குக் கிடைத்த நற்பேறாகும்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் வாசகத்திற்கு அமைவாக எமது அதிபர் தன்னாலான அளப்பரிய பணியை எமது கல்லூரிக்கு ஆற்றிக்கொண்டிருக்கிறார். இவருடைய வருகையினால் கல்லூரி அன்னை நாளுக்கு நாள் புதுப்பொலிவுடன் விளங்குகிறாள் என்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

எமது முன்னாள் அதிபர் திருமதி. அ. வேலுப்பிள்ளை அவர்கள் தனக்குப்பின் இக்கல்லூரியை யாரிடம் ஒப்படைப்பது, செயற்றிறன் மிக்க ஒரு அதிபரே இக் கல்லூரியைப் பொறுப்பேற்க வேண்டும் எனத் தியானித்தார். அவரின் உயர்வான எண்ணத்திற்கு அமைவாக இக்கல்லூரி அன்னைக்கு அறிவு, ஆற்றல், ஆளுமை நிறைந்த ஒரு அதிபரைப் பெற்றுள்ளோம்.

இவர் காலத்தின் தேவை கருதியும் இளம்தலைமுறையினரின் எதிர்காலச் சுபீட்சம் கருதியும் மெல்லக்கற்கும் மாணவர்களை கல்வியில் நாட்டம் பெற வைக்க வேண்டும் என்ற நோக்குடன் ஆசிரியர்களை மேலும் வினைத்திற னுடையவர்களாகச் செயலாற்றும் வண்ணம் ஊக்குவித்து, மாணவர்களின் ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் செயல் வீரன்.

தனது செயற்றிட்டங்களில் வெற்றி பெறு மளவிற்குப் பாடசாலைச் சமூகத்தினரை உதவும் கரங்களாக்கி அவர்களின் ஆதர

வுடனும், சுறுசுறுப்புடனும், சிக்கனமாகவும், புத்திசாலித்தனமாகவும், கடமையுணர்வுடனும் எடுத்த கருமத்தை உரிய காலத்தில் நிறைவேற்றி வைக்கும் நோக்குடன் பாடசாலை வளர்ச்சிப் பாதையில் இரவு பகல் பாராது தன்னை முற்று முழுதாக அர்ப்பணிக்கும் கரும வீரன் ஆவார்.

மைதானத்தில் இறங்கினால் தான் ஒரு அதிபர் என்பதை மறந்து மாணவர்களுடன் சேர்ந்து அவர்களுள் ஒருவராய்ச் செயற்படுவார். எமது மாணவர்கள் எந்த ஒரு போட்டி நிகழ்வுகளுக்குச் செல்லும் போதும் வாழ்த்தி வழியனுப்புவதுடன் மாணவர்களையும் ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தும் நோக்கோடு அவ்விடங்களில் பிரசன்னமாகி இருப்பது அதிபர்களுக்கு ஒரு முன்மாதிரியான செயலாக அமைவதை நாம் காண்கின்றோம். 2011 ஆம் ஆண்டு மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பெருவிளையாட்டுக்களான, பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டம், பெண்களுக்கான எல்லே மற்றும் 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் போன்ற நிகழ்வுகள் அடுத்தடுத்து வவுனியாவில் நடைபெற்றன. அந் நிகழ்வுகள் ஒவ்வொன்றுக்கும் அவ்விடத்திற்குச் சென்று மாணவர்களுடன் வெற்றிகளைப் பகிர்ந்து கொள்வது மட்டுமல்லாது, வெற்றி பெற்ற அணியினரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியைக் கொண்டாடும் செயல் பாடசாலைச் சமூகத்தை தன் குடும்பமாகவே கருதும் மனப்பாங்கை நிரூபிக்கிறது.

மாணவர்கள் சம்மந்தமான பிரச்சினைகளை அணுகும் போது அவர்கள் உளவியல் ரீதியில் பாதிப்படையாது, நட்பு ரீதியாக அணுகி மாணவர்கள் தாமே தமது குறைகளை உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் நெறிப்படுத்தும் ஒரு உளவியல் சார்ந்த அதிபராவார். வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் கல்வியானது வறுமையின் காரணமாக தடைப்படக் கூடாது எனும் அடிப்படையில் முன்னாள் அதிபர் பாடசாலைச் சமூகத்தினரிடம் இருந்து பெற்றுக் கொண்ட செயற்றிட்டங்களை தொடர்ந்து எமது அதிபர் மேற்கொள்வது எமது மாணவர்களுக்குக் கிடைத்த நற்பேறாகும். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் எனப்பலருடனும் சிறந்த உறவைப்பேணுவதில் இவர் அக்கறை கொண்டவர். வெளிநாடுகளில் வாழும் அதிபரின் சகபாடிகள் மற்றும் அதிபரிடம் கல்வி பயின்ற பழைய மாணவர்கள் தாமாக முன்வந்து கல்லூரியை முன்னேற்றும் பல திட்டங்களை முன் வைத்ததுடன் பாடசாலையின் ஆக்கப்பணிகளிலும் ஈடுபட்டுள்ளமை அதிபரின் தொடர்பாடல் திறனால் கிடைத்த வெற்றிகளாகும்.

2011 ஆம் ஆண்டு பாடசாலை அபிவிருத்திச்சங்கக் கூட்டத்திற்கு மிகக் கூடுதலான பெற்றோர் பங்கு கொண்டமை அதிபரின் நிர்வாகத் திறமையை எடுத்தியம்புகின்றது. எமது கல்லூரிக்கு முகாமைத்துவ உதவியாளர் இல்லாதவிடத்தும் அலுவலக நடைமுறைகளை தானே

முன்னின்று செயற்படுத்தும் தனித்துவமான பண்பு அவரது முகாமைத்துவத்திறனை புலப்படுத்துகிறது. தன்னலமே கண்ணா யிருக்கும் இந்நாளில் சமூக நலனில் மிகுந்த ஆர்வம் கொண்டு தன் வீடு மறந்து கல்விக்கூடத்தில் தன் வாழ்விற் கூடுதலான நேரத்தை அர்ப்பணித்து வாழ்ந்து கொண்டிருக்கும் எமது அதிபரின் சேவை போற்றுதற்குரியது.

**சமீப காலத்தில் கல்லூரி வரலாற்றில்...**

- பழைய மாணவர் சங்கம் கனடா கிளையின் அனுசரணையுடன் சிவபாத சுந்தரனார் கேட்போர் கூடம் நவீன மயப்படுத்தப்பட்டது.

- வைத்திய கலாநிதி ஆ.காந்தநேசன் அவர்களினால் வழங்கப்பட்ட நிதி உதவியினால் அலுவலகம் புனரமைக் கப்பட்டது.

- செல்வன். ஸ்ரீகாந்தன் சுபாங்கன் அவர்களினால் சிரேஸ்ட மாணவ முதல்வர்களுக்கான மேலங்கிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

- மாணவர்களுக்கான (ஆண்) கழுத்துப் பட்டி வழங்கப்பட்டது. அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலையை அடையாளப்படுத்தும் காலுறை வழங்கப்பட்டது.

- கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டியில் செல்வி. கௌசிகா ஸ்ரீதாமோதரராஜா தனி நடிப்பு நிகழ்ச்சியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார்.

- கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் செல்வி. லாவண்யா சயந்தன் தனிநடன நிகழ்ச்சியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று வரலாற்றில் சாதனை படைத்துள்ளார்.

- புல்லு வெட்டும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. திரு. மு.சுதர்சன் (கனடா) இதற்கான நிதியை வழங்கினார்.

- எமது கல்லூரியில் முதற் தடவையாக இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் மரதன் ஓட்டப் போட்டி நடாத்தப்பட்டது. வெற்றியாளர்களுக்கான பணப்பரிசில் களை திரு.இ.ஸ்ரீரங்கன், திரு.ஜெ.பிரதீபன், திரு.ந.நந்தீஸ்வரன், திரு.ச.சந்திர குமார், திரு.தி.றொபேட் ஆகிய பழைய மாணவர்கள் வழங்கியுள்ளனர்.

- பழைய மாணவர் திரு.கி.சொற்பன லிங்கம் அவர்கள் வழங்கிய நிதியுதவி யினால் குடிநீர் விநியோகம் திருத்த வேலைகள் செய்யப்பட்டடன. அத் துடன் Fax (தொலைநகல்) இயந்திர மும் அவரால் வழங்கப்பட்டது.

- பழைய மாணவி செல்வி பா.சந்திர வதனி அவர்களினால் பாடசாலைக் கான புதிய மணி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

- திரு அ.நித்தியானந்த மனுநீதி (அவுஸ் திரேலியா) அவர்கள் வழங்கிய நிதி உதவியுடன் ஆசிரியர்களுக்கான வாகனத்தரிப்பிடம் அமைக்கப்பட்டது.

- உயர்தர மாணவ மன்றத்தின் நிதி யுதவியுடன் பாடசாலையின் முன்புறம் அழகுபடுத்தப்பட்டது.

- மாகாண கல்வி அமைச்சின் நிதி உதவியுடன் கணித மூலவள நிலையம் அமைக்கப்பட்டது.

- பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஈ.சரவணபவன் அவர்களினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி மூலம் ஒரு இலட்சம் ரூபா வுக்கான விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- உள்ளக வீதிகள் பழையமாணவர் களான திரு.இ.விஜயநாதன் (கனடா), திரு.சி.ரவிசங்கர்(லண்டன்) ஆகி யோரின் நிதி உதவியுடன் முழுமை யாகச் சீரமைக்கப் பட்டன.

- ஆசான் திரு.சு.ஞானச்சந்திரமூர்த்தி (பழையமாணவர்) அவர்களால் கல்லூரிப்பெயர் வளைவு வெள்ளி எழுத்துக்களால் உருவாக்கப்பட்டது.

- மாகாணக்கல்வி அமைச்சிடம் இருந்து உயரம்பாய்தல் மெத்தையும் உபகர ணங்களும் பெறப்பட்டன.

- இலங்கைத்துடுப்பாட்டச் சங்கம் நடாத்திய தோற்பந்து துடுப்பாட்டப் போட்டிகளில் 15 வயது பிரிவு அணி வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிறந்த நான்கு அணிகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது. இவ்வணிக்கான செலவுகளை திரு.த.கமலநாதன் (லண்டன்) பொறுப்பேற்றிருந்தார்.

- புதிய மேலைத்தேய வாத்தியக்கருவி கள் கல்லூரிப்பழைய மாணவர் சங்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப் பட்டது.

- பழைய மாணவர் கு.வினோதன் (லண்டன்) சிவபாதசுந்தரனார் கேட்போர் கூடத் தளபாடங்களுக்காக உதவினார்.

- மாகாண மட்ட விளையாட்டு போட்டி களுக்கான போக்குவரத்துச் செலவு களுக்கு பஹ்ரேன் திரு.ந.தேவசுதன் அவர்கள் உதவினார்.

- மெய்வன்மைக்கான வெற்றிக் கிண்ணங்கள் சங்கானை மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டது.

- கல்லூரியின் அபிவிருத்திக்கு ஹொலன்ட் திரு.க.விஜயச்சந்திரன், அவுஸ்திரேலியா திருமதி.உஷாதேவி கௌரீஸ்வரக்குருக்கள், ஜேர்மனி திருமதி.கலாவதிதேவி மகேந்திரன் ஆகியோர் உதவினர்.

- அரபு நாடு திரு.நி.நிஷாந்தன் பூப்பந் தாட்ட விளையாட்டு விருத்திக்கு உதவினார்.

- மெல்போர்ன் பழையமாணவர் சங்கம், பொறியியலாளர் திரு.ந.சுதாகரன் தேசியமட்ட விளையாட்டுப்போட்டி களுக்குச் செல்வதற்கான செலவுகள் வழங்கி உதவினர்.

- அமரர் திரு.க.தவத்துரை குடும்பத்தின ரால் மாணவர்களுக்கு காலணிகள், துவிச்சக்கரவண்டிகள், கற்றல் உப கரணங்கள் வழங்கப்பட்டது.

- உதைபந்தாட்ட வீரர்களுக்கு கோலவு டையை 2000ஆம்ஆண்டு விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் உதவி னார்கள்.

- மாகாண, தேசிய மட்ட பெண்கள் பெருவிளையாட்டுக் குழுவினருக் கான சத்துணவு திரு.இ.ஸ்ரீரங்கன் அவர்கள் வழங்கினார்.

- வறிய மாணவர்களின் கற்றல் உப கரணங்கள் பெற திரு. N.T.V.இராஜ லிங்கம் அவர்கள் மற்றும் திரு.க. செந்தில்நாதன் அவர்கள் (அவுஸ்திரே லியா) நிதி வழங்கினார்.

- மாவட்ட, மாகாண, தேசிய மட்ட விளையாட்டுக்களில் பங்கு கொண்ட மாணவர்களின் செலவீனங்களுக்கு கனடா வாழ் பழைய மாணவர்கள் திரு.எஸ்.குகன், திரு.ரீ.ரூபமனோ கரன், திரு.எஸ்.சிவச்செல்வன், திரு. கே.யசோதரன், திரு.செ.கருணை ராசா, திரு.கே.பாலச்சந்தர், பிரான்ஸ் பா.சுமன் மற்றும் திரு.ஈ.சரவணபவன் (பா.உ) நிதி உதவினார்கள்.

- தபேலா இசைக்கருவி பெறுவதற்கு லண்டன் திரு.பா.மோகனகுமார் நிதி வழங்கியுள்ளார்.

- கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியில் விசேட நாட்டுக்கூத்து (எச்சங்கள்) மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

- கல்வி அடைவுக்கான விசேட செயற் றிட்டத்திற்கு பழைய மாணவன் திரு இ.விஜயநாதன் (கனடா) நிதியுதவி வழங்கியுள்ளார்.

- பழைய மாணவன் திரு. N.T.V. இராஜ லிங்கம் அவர்களினால் (அவுஸ்ரே லியா) குளிர்சாதனப்பெட்டியும், குடிநீர் குளிராக்கியும் அன்பளிப்புச் செய்யப் பட்டது.

- மாகாண மட்ட பெருவிளையாட்டுக் களில் கடந்த வருடம் போல் இவ்வரு டமும் மென்பந்து துடுப்பாட்ட பெண்கள் அணி மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முதலிடம் பெற்றது.

- மாகாண மட்ட பெருவிளையாட்டுக் களில் ஆண்களுக்கான 15 வயதுப்

பிரிவினருக்கான கரப்பந்தாட்ட அணி வெற்றியீட்டி வரலாற்றில் முதற் தடவையாக தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றியது.

- மாகாண மட்ட பெருவிளையாட்டுக் களில் முதற் தடவையாகப் பங்கு கொண்ட பெண்கள் எல்லே அணி முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியது.

- பெண்கள் எல்லே அணியினருக்கான கோலவுடை செல்வன் திருக்குமார் சுகிர்தன் அவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

- கல்லூரியின் 135ஆவது ஆண்டு நிறைவினை நினைவுபடுத்தும் வகையில் T.Shirt அறிமுகப்படுத்தப்பட்டது.

- மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டியில் 110m சட்டவேலி பாய்தலில் செல்வன்கு.ஜெயக்குமார், செல்வி த.நிதுஜா, செல்வி.சி.ஜெயரஞ்சினி, செல்வன். இ.நிறோஜன் ஆகியோர் முதலாம் இடத்தையும், செல்வி. சி.டிலானி இரண்டாம் இடத்தையும், செல்வி. பா.ரஜிதா ஈட்டி எறிதலில் முதலாம் இடத்தையும், செல்வி. செ.சுகன்யா தட்டெறிதலில் முதலாம் இடத்தையும், செல்வன். கு.ஜெயக்குமார் 400m சட்டவேலி பாய்தலில் முதலாம் இடத்தையும், செல்வி. சி.ஜெயரஞ்சினி முப்பாய்தலில் இரண்டாம் இடத்தையும், செல்வி. த.நிதுஜா நீளம் பாய்தலில் இரண்டாம் இடத்தையும், முப்பாய்தலில் மூன்றாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டபோட்டியில் பங்குபற்றினர்.

- மாகாணமட்ட ஆங்கிலப் போட்டிகளில் சொல்வதெழுதல் நிகழ்வில் வெற்றி பெற்ற செல்வி. தே. காயத்திரி தேசிய மட்டத்தில் பங்குகொள்கின்றார்.

எமது அதிபர் குறித்தும், சமீப காலத்தில் கல்லூரி வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்வுகள் குறித்தும் எழுதக் கிடைத்த சந்தர்ப்பத்திற்கு ஆண்டவனுக்கு மேலான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு "நீதிமான் என்றும் அசைக்கப்படுவதில்லை" என்ற வேதாகம வாக்கியத்துடன் நிறைவு செய்வதில் அகமகிழ்வடைகின்றேன்.

*'வாழ்க அவர் தம் பணி*
*வளர்க விக்ரோறியா அன்னை'*

♣ ♣ ♣

**இவருக்கு ஏன் சிலை வைக்கப்பட்டிருக்கிறது என்று மக்கள் கேட்பதைக் காட்டிலும், இவருக்கு ஏன் சிலை வைக்கப்படவில்லை என்று கேட்பதையே நான் விரும்புகின்றேன்.**

**- மார்கஸ் கேட்டா**

# மௌன தவமுனிவர் அளவெட்டி
# திரு.பொ.கைலாசபதி B.Sc.

***நாரந்தனையூர் ஆ. சபாரத்தினம்***
*ஓய்வு பெற்ற அதிபர்*

ஏகலைவனைப் போல் இவரது உயர்ச் சிக்குச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியே வித்திட்டது எனக்கூறுவதில் நான் மிகவும் பெருமை அடைகின்றேன்.

திரு.பொ.கைலாசபதி அவர்கள் 1902ஆம் ஆண்டு ஜுன் மாதம் 9ஆம் திகதி அளவெட்டியிற் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் பொன்னம்பலம். பொன்னம்பலம் அவர்கள் கிராமத்தில் நன்கு அறியப்பட்ட ஒரு பிரமுகராக விளங்கினார். பொதுக் காரியங்களில் நல்ல அக்கறையுள்ளவராக விளங்கினார். அதனால் அவரது வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு மடம் கட்டப்பட்டு அதில் வேதா ரணியக்குருக்கள்மார் மூலம் தேவாரப் பண்ணிசை பழக்கப்பட்டு வந்தது. கைலாச பதியவர்களும் அங்கு பண்ணிசை பழகி வந்தார். செக்கச்சிவந்த திருமேனியும் அந்தணச்சிறுவர் போன்ற தோற்றமும் கொண்ட கைலாசபதியவர்களை குருக்கள் மார் மடியில் அமர்த்திப் பண் கற்பித்த தாகக் கூறுவர்.

இவர் பண் முறையிற் கைதேர்ந்தவராக விளங்கினார். இவர் தமது ஆரம்பக் கல்வியை தமது அயலிலுள்ள ஆசிரியர் களிடமே கற்றார். ஏழாவது வயதில் அளவெட்டியிலுள்ள அமெரிக்கமிசன் பாடசாலையிற் சேர்ந்து இரண்டாம் வகுப்பு முதல் மூன்று ஆண்டுகள் கற்றார். தமது உறவினரிடம் ஆங்கிலக்கல்வியைக் கற்றுத்தேறினார். 1912ஆம் ஆண்டு தொடக்கம் சிவானந்தையரிடம் இரவில் ஆங்கிலம் கற்றார். தருக்க சஸ்திரத்தில் விற்பன்னரும் பெருங்கவிஞருமாகிய ஐயரவர்கள், தமிழ்க் கல்வியே மனிதனை உய்விக்கும் என நம்பி 'நன்னெறி' வெண்பா நாற்பதையும் மனனம் செய்யச் சொன்னார். இவருக்கு அத்துறையில் நாட்டம் செல்லா மையால் படிக்கச் செல்வதை நிறுத்திக் கொண்டார். பின் அருணோதயாக் கல்லூரியிலும், அளவெட்டி ஞானோதயா வித்தியாசாலையிலும் கற்றார்.

அயலில் வேறு உயர் பாடசாலைகள் இல்லாதபடியால் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் ஆங்கலம் கற்றார். இவர் ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு வகுப்பில் 1916இல் சேர்ந்த போது திரு.சி.சுவாமிநாதன் அவர்கள் அதிபராக இருந்தார். லண்டன் மற்றிகுலேசனில் படித்த மேதை திரு.இரத்தினசபாபதி ஆசிரியரும் இவர் திறமையைக் கண்டு லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்கான கணிதம் முழுவதையும் கற்பித்தார். 'வயது போகிறது பணமும் செலவாகிறது இன்னும் நான்கு பாடங்களைக் கற்றால் லண்டன் பரீட்சை எடுக்கலாம்' என ஆலோசனை

கூறினார். கைலாசபதிக்கும் அது சரியெனப்பட்டது.

1918இல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் 'விலோபி சிமோல்' என்பவர் அதிபராக இருந்தார். அங்கு கைலாசபதி யின் நண்பர் சிலர் கல்வி கற்றுக் கொண்டி ருந்தனர். அவர்களுடன் சேர்ந்து வார இறுதிநாட்களில் கைலாசபதி அவர்களும் மெற்றிக்குலேசன் வகுப்பிற் கற்றார். 1921ஆண்டு ஜூன்மாதம் அப்பரீட்சைக்குத் தோற்றி முதலாம் வகுப்பிற் சித்தியடைந் தார். மிக இளம் வயதில் இப்பரீட்சையில் இவர் சித்தியடைந்தமையைப் பலரும் பாராட்டினர். விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராக இருந்த சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் 1927இல் கைலாசபதி யவர்களை விக்ரோறியாவில் ஆசிரியரா கச் சேர்த்துக் கொண்டார். அக்காலத்தில் கைலாசபதியிடம் கற்ற மாணவர் சிலர் பின் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் அவரிடம் பயிற்சி பெற்றனர். கைலாசபதி அவர்களின் பெருந்தன்மையை உணர்ந்த சைவப்பெரியார் அவர்கள் அவரை எப்பொழுதும் 'தனது மாணவன்' என உரிமையோடு கூறுவார்.

கைலாசபதியவர்கள் B.Sc. சித்திய டைந்தவுடன் சைவப்பெரியாரின் சிபார்சின் படியும், இந்து போட் இராசரத்தினம் அவர்களது கேள்விப்படியும் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையிற் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். பேராசிரியராகவும் உபஅதிபராகவும் முப்பது வருடகாலம் அங்கு கடமையாற்றி ஓய்வு பெற்றார். அவரிடம் கல்விகற்ற பல்லாயிரக்கணக் கான மாணவர்கள் இன்றும் அவரைத் தெய்வமாகப் போற்றுகின்றனர்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கைலாசபதி யவர்களுடன் சைவாசிரிய பயிற்சிக்கலா சாலையிற் கற்பிக்கும் போது மிகவும் நட்புரிமை பூண்டொழுகியவர். இருவரும் கருத்துப்பகிர்வு செய்வதுண்டு. அக் காலத்தில் பண்டிதமணி அவர்கள் கைலாசபதியவர்களின் சிந்தனைகளை முப்பத்தொரு கொப்பிகளில் எழுதி வைத்துள்ளார். அதிபர் சுவாமிநாதன் அவர் களின் மகன் பேராசிரியர் சுசீந்திரராசா அவர்கள் அவற்றை நூலுருவாக்கினார். 1994இல் 50 பிரதிகள் வெளிவந்தன. வெளி வாசகர்களுக்கு அந்நூல் கிடைத்திலது. அந்நூல் பலருக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லை என்ற குறையைப் போக்க ஏழாலையூர் பண்டிதர் மு.கந்தையா அவர்கள் 'சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி' என்ற பெயரில் 600 பக்கங்களில் எழுதினார். மனு முதலிய வர்கள் எழுதியவற்றை ஸ்மிருதி என அழைப்பதைப் போல இதையும் அழைக்க லாமா என வினவியவர்களுக்கு 'இது தமி ழீன்ற தலைக்குழவி' இத்துடன் நோக்கு வதற்குத் தமிழில் வேறு நூல் இல்லை. சமஸ் கிருதத்தில் அமைந்த ஸ்மிருதிகளின் போக்கு வேறு. இது வேறு. அவற்றை இத் துடன் ஒப்பிட முடியாது எனக்கூறிவிட்டார்.

கைலாசபதியவர்கள் ஒரு கலைக் களஞ்சியம். என்ன பாடத்தில் என்ன

சந்தேகம் என்றாலும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அவரைக் கற்பித்த வர்கள், அவரிடம் கற்றவர்கள், அவரோடு தொடர்புகொண்டவர்கள் யாவரும் புண்ணிய ஆத்மாக்களே. அவர் ஒரு தரிசன வேதி. கைலாசபதி அவர்களின் நூற்றாண்டு விழாக்குழுவினர் நான்கு நூல்களை வெளியிட்டனர். தனிப்பட்ட சிலர் அவரது நல்லுபதேசங்களைச் சிறுநூல்களாகப் பிரசுரித்தனர்.

இக்காலத்தில் சமயக்கல்வி குறைந்ததே நாட்டின் சீரழிவுக்குக் காரணம் என வாய் ஓயாமற் பேசிக்கொண்டிருக்காது இருக்கும் நூல்களைக் கற்பதும், கற்றபடி ஒழுகுதலும் நல்லோர் கூட்டம் பெருக வாய்ப்பளிக்கும். கைலாசபதியுடன் தொடர்புடைய கல்லூரிகள் இயன்றவற்றைச் செய்யலாம். அருணோதயாக் கல்லூரி நூற்றாண்டுவிழா மலரில் சில கட்டுரைகள் வெளிவந்தன. ஏனைய கல்லூரிகளும் இவ்வகையிற் செயற்படுவது மிகவும் ஏற்புடையதுதாகும்.

*"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்"*

♣ ♣ ♣

தொலைதூரத்தில் மகிழ்ச்சியைத் தேடுபவன் முட்டாள். அறிவாளி தனது காலடியிலேயே அதை வளர்க்கிறான்.

**- ஜேம்ஸ் ஓபன்ஹாம்**

ஏழைகளுக்கு இரக்கம் காட்டுபவன், கடவுளுக்குக் கடன் தருகிறான்.

**- பைபிள்**

பாபத்தில் விழுவது மனிதனைப்போல்; அதிலே அமிழ்ந்திருப்பது பிசாசைப் போல, அதற்காக வருந்துவது ஏசுவைப் போல; எல்லாப் பாவங்களையும் விட்டொழிப்பது கடவுளைப் போல!

**- லோகு**

மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான்; ஆனால் எங்கும் கட்டுண்டு இருக்கிறான்.

**- பேக்கன்**

நாம் செல்வச் செழிப்பில் இருக்கையில் நமது நண்பர்கள் நம்மை அறிகிறார்கள், கஷ்டத்தில் நாம் அவர்களை அறிகிறோம்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள்



## பாடசாலை அபிவிருத்திக்குழு நிர்வாகசபை உறுப்பினர்கள்



# வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும்
# Bank And Other Financial Institutions

***திரு. இ. கைலைவாசன்***
*பிரதி அதிபர்*

**அறிமுகம்**

நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் ஈடுபடுகின்ற அமைப்புக்கள் வங்கிகளும் நிதி நிறுவனங்களும் என அழைக்கப்படுகின்றன. இந்நிதி நிறுவனங்கள் நான்காக வகைப்படுத்தப்படுகின்றன.

1. உத்தரவுப் பத்திரம் பெற்ற வணிக வங்கிகள்
2. உத்தரவுப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகள்
3. விசேட நிதி நிறுவனங்கள்
4. பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

**உத்தரவுப் பத்திரம் பெற்ற வணிக வங்கிகள்**

நடைமுறைக்கணக்கு, சேமிப்புக்கணக்கு, நிலையான வைப்புக்கணக்கு என்பனவற்றில் பொதுமக்களின் வைப்புக்களை ஏற்றல், அவற்றைப் பாதுகாத்தல், வாடிக்கையாளர் கேட்கும் போது அவர்களுடைய கணக்கில் உள்ள தொகையினை மீள வழங்குதல், கடன் வழங்கல், அபிவிருத்தித் திட்டங்களில் முதலிடுதல், வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்ற மத்திய வங்கியால் வழங்கப்படும் உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுள்ள நிறுவனங்கள் ***உத்தரவுப் பத்திரம் பெற்ற வணிக வங்கிகள்*** என அழைக்கப்படுகின்றன. இவ்வங்கிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

***1. உள்நாட்டு வங்கிகள்***

i. இலங்கை வங்கி
ii. மக்கள் வங்கி
iii. வரையறுத்த ஹட்டன் நஷனல் வங்கி
iv. வரையறுத்த சம்பத் வங்கி
v. வரையறுத்த செலான் வங்கி
vi. கொமேர்ஷல் பாங்க்ஒவ்சிலோன் லிமிட்டட்

***2. வெளிநாட்டு வங்கிகள்***

i. இந்தியன் ஓவசீஸ் வங்கி
ii. ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா
iii. இந்தியன் வங்கி
iv. வரையறுத்த ஹபீப் பாங்க்
v. த கொங்கொங் அன்ட் சங்காய் பாங்க் கோப்பறேசன் லிமிட்டட்

### உத்தரவுப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகள்

சேமிப்புக்கணக்கு, நிலையானவைப்புக்கணக்கு என்பனவற்றில் பொதுமக்களின் வைப்புக்களை ஏற்றல், அவற்றைப் பாதுகாத்தல், வாடிக்கையாளர் கேட்கும் போது அவர்களுடைய கணக்கில் உள்ள தொகையினை மீள வழங்குதல், கடன் வழங்கல், அபிவிருத்தித் திட்டங்களில் முதலிடுதல், போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்ற மத்திய வங்கியால் வழங்கப்படும் உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுள்ள நிறுவனங்கள் உத்தரவுப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகள் என அழைக்கப்படுகின்றன.

i. தேசிய சேமிப்பு வங்கி
ii. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
iii. ஊவா அபிவிருத்தி வங்கி
iv. செலிங்கோ சேவிங் பாங்க் லிமிட்டட்
v. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

### விசேட நிதி நிறுவனங்கள்

வைப்புக்களை ஏற்றல், கடல் வழங்குதல் போன்ற வங்கிக் கருமங்களில் ஈடுபடாது வணிகத்திற்குத் தேவைப்படும் விசேட சேவைகளை வழங்குவதற்காக உருவாக்கப்படுகின்ற நிறுவனங்களே விசேட நிதி நிறுவனங்கள் என அழைக்கப்படுகின்றன.

1. வணிகர் வங்கி
2. குத்தகைக் கம்பனி
3. முயற்சியாண்மை மூலதனக் கம்பனி
4. காப்புறுதிக் கம்பனி

### பதிவுசெய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்

வைப்புக்களை ஏற்றல், நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற வணிகக் கருமங்களில் ஈடுபடுவதற்கு மத்திய வங்கியில் அனுமதிமதிப் பத்திரத்தைப் பெற்றுள்ள வரையறுத்த பொதுக் கம்பனிகள் பதிவுசெய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் என அழைப்பப்படுகின்றன.

i. த பினான்ஸ் கம்பனி லிமிட்டட்
ii. சென்றல் பினான்ஸ் கம்பனி லிமிட்டட்
iii. பாட்லீட் பினான்ஸ் லிமிட்டட்
iv. சிங்கர் பினான்ஸ் (லங்கா) லிமிட்டட்
v. ஆர்ப்பிக்கோ பினான்ஸ் கம்பனி லிமிட்டட்
vi. இன்டஸ்றியஸ் பினான்ஸ் லிமிட்டட்

### வைப்புக்களை ஏற்றல்

நிதி நிறுவனங்களின் பிரதான சேவை வைப்புக்களை ஏற்பதாகும். இவ்வைப்புக்களில்

1. சேமிப்புக் கணக்குகள்
2. நிலையான வைப்புக் கணக்குகள்
3. நடைமுறைவைப்புக் கணக்குகள் என்பன முக்கியமானவை.

## சேமிப்புக் கணக்கு *Saving Account*

பணத்தைச் சேமிப்பதற்கும், தேவையானபோது மீளப் பெறுவதற்கும் தனிப்பட்ட கணக்காகவோ வணிகக் கணக்காகவோ சேமிப்புப் கணக்குகள் பேணப்படலாம். வைப்பாளர்களுக்கு வட்டியும் பணப்பாதுகாப்பும் வழஙகப்படுகிறது. கணக்கை ஆரம்பிக்கும் போது சேமிப்பாளருக்கு சேமிப்புக் கணக்குப் புத்தகம் வழங்கப்படுகிறது. சேமிப்புக் கணக்கிலிருந்து பணத்தை மீளப் பெறுவதற்கு மீள எடுத்தல் படிவத்தை (Withdrawal Slip) பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

## நிலையான வைப்புக் கணக்கு *(கால வைப்புக்கள்) Fixed Deposit Account*

குறிப்பிட்ட தொகைப் பணத்தை குறிப்பிட்ட காலத்திற்கு வட்டி வருமானத்தைப் பெறும் நோக்கோடு வைப்பிலிடல் நிலையான வைப்பு எனப்படும். தனிப்பட்ட கணக்காகவோ வணிகக் கணக்காகவோ நிலையான வைப்புக் கணக்குகள் பேணப்படலாம். வைப்பாளர்களுக்கு கூடிய வட்டியும் பணப்பாதுகாப்பும் வழங்கப்படுகிறது. கணக்கை ஆரம்பிக்கும் போது வைப்பாளருக்கு நிலையான வைப்புச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. அவசர தேவைகளின் போது வைப்புச் சான்றிதழைப் பிணையாக வைத்து குறித்த வீதத்தொகையைக் கடனாகப் பெறலாம்.

## *Current Account*

காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காகப் பேணப்படும் கணக்கு நடைமுறைக் கணக்கு எனப்படும். தனிப்பட்ட கணக்காகவோ வணிகக் கணக்காகவோ நடைமுறைக் கணக்குகள் பேணப்படலாம். வைப்பாளர்களுக்கு கணக்கை ஆரம்பிக்கும் போது காசோலைப் புத்தகமொன்று வழங்கப்படும். காசோலை இதழ்களைப் பயன்படுத்தியே கணக்கிலிலுள்ள பணத்தை மீளப்பெறமுடியும்.

### நடைமுறைக் கணக்கொன்றைப் பேணுவதால் கிடைக்கும் அனுகூலங்கள்

1. காசோலை (Cheque) மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல்
   i. இலகு ii. பாதுகாப்பு
   iii. விரைவு iv. கொடுக்கல் வாங்கலை உறுதிப்படுத்தல் (சட்டரீதியானது)
2. வங்கி மேலதிகப்பற்று வசதியைப் பெற்றுக் கொள்ளல்
3. வருமதிகளை வசூலிக்கக்கூடிய வசதி
4. நிலையியற் கட்டளைகளைச் செயற்படுத்தும் வசதி

### காசோலையுடன் சம்பந்தப்படும் நபர்கள்

i. பணம் பெறுவோர் (Payee) ii. கட்டளையிடப்படுபவர் (Drawee) - வங்கி
iii. கட்டளை பிறப்பிப்பவர் (Drawer)

**நடைமுறைக் கணக்குடன் தொடர்பான கட்டணங்கள் (கழிப்பனவுகள்)**

i. காசோலைப் புத்தகக் கட்டணம்
ii. தண்டக் கட்டணம்
iii. வங்கிக்கட்டணம்
iv. முத்திரைக் கட்டணம்
v. மேலதிகப்பற்று வட்டி
vi. காசோலை திருப்பி அனுப்பும் தபாற்கட்டணம்

**காசோலையொன்றை வரையும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்**

i. திகதி
ii. தொகை (எண்ணிலும் எழுத்திலும்)
iii. கையொப்பம்
iv. அடியிதழ் குறிப்பு
v. குறுக்குக் கோடிடல்

**காசோலையில் குறுக்குக் கோடிடல்**

**பொதுமுறைக் குறுக்குக் கோடிடல் *(General Crossing)***

1. கைமாறத் தகாதது
2. பெறுவோன் கணக்கு மட்டும்
3. கைமாறத் தகாதது ரூபா.10000 வரை மட்டும்

**சிறப்பு முறைக் குறுக்குக் கோடிடல் *(Special Crossing)***

1. இலங்கைவங்கி
2. இலங்கைவங்கி கைமாறத் தகாதது
3. பெறுவோன் கணக்கு மட்டும் மக்கள் வங்கி சங்கானை

**காசோலையைப் புறக்குறிப்பிடல் அல்லது சாட்டுதல் *(Endorsing A Cheque)***

1. வெற்று முறை புறக்குறிப்பிடல் (Blank Endorsement)
2. வரையறையிட்ட புறக்குறிப்பிடல் (Restrictive Endorsement)

**காசோலை மறுக்கப்படும் சந்தர்ப்பங்கள்**

i. எதிர்காலத் திகதியிட்ட காசோலை
ii. காலங்கடந்த காசோலை
iii. கணக்கில் போதிய பணமில்லாதிருத்தல்
iv. கணக்கிலுள்ள பணத்தைச் செலுத்த முடியாதிருத்தல்
v. காசோலையை முறைப்படி சமர்ப்பிக்காமை
vi. காசோலை தெளிவில்லாதிருத்தல்

**வங்கிக் கூற்று *Bank Statement***

வங்கி நடைமுறைக் கணக்கைப் பேணி வரும் கணக்கின் உரிமையாளருக்கு வங்கி குறித்த கால இடைவெளியில் அக்கணக்கு தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் விபரத்தைக் குறித்து அனுப்பி வைக்கும் கூற்று வங்கிக் கூற்று என அழைக்கப்படுகிறது.

### *வங்கிக் கூற்றிலிருந்து அறியக்கூடிய தகவல்கள் :-*

1. காலத் தொடக்கத்தில் வங்கியில் இருந்த மீதி
2. கால எல்லைக்குள் வரவு வைக்கப்பட்ட உருப்படிகள்
3. கால எல்லைக்குள் செலவு வைக்கப்பட்ட உருப்படிகள்
4. கால இறுதியில் வங்கியிலுள்ள மீதி

### *வங்கிக் கூற்றின் வரவுப் பக்கத்தில் காணப்படும் உருப்படிகள் :-*

1. கொடுப்பனவுக்கு வழங்கப்பட்ட காசோலைகள்
2. நிலையியற் கட்டளைக்கமைய செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள்
3. வசூலிக்கப்பட்ட வங்கிக் கட்டணங்கள்

### *வங்கிக் கூற்றின் செலவுப் பக்கத்தில் காணப்படும் உருப்படிகள் :-*

1. வைப்பிலிட்ட பணம்
2. வசூலான காசோலைகள்
3. வங்கிக்கு நேரடியாகக் கிடைத்தவை

### **வங்கிக்கணக்கிணக்கக் கூற்று** *Bank Reconciliation Statement*

காசேட்டு வங்கி மீதிக்கும், வங்கியினால் அனுப்பி வைக்கப்படும் வங்கிக்கூற்று மீதிக்கும் இடையே வேறுபாடு தோன்றுமிடத்து அவ்விரு மீதிகளையும் தற்காலிகமாக இணங்க வைப்பதற்காகத் தயாரிக்கப்படும் கூற்று ***வங்கிக்கணக்கிணக்கக் கூற்று*** என அழைக்கப் படுகிறது.

காசேட்டின் வங்கி நிரலில் ***சொத்துக்களுக்கான*** இரட்டைப் பதிவுத் தத்துவத்தின்படி கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படும். ஆனால் வங்கியின் பக்கமாக நோக்கும் போது வாடிக்கையாளர் வைப்புக் செய்யும் தொகை வங்கிக்கு ஓர் பொறுப்பாகும். எனவே வங்கி தனது புத்தகங்களில் வாடிக்கையாளனுடைய வைப்பைப் ***பொறுப்புத்*** தொடர்பான தத்துவத்திற்கு அமைவாகவே பதிவு செய்யும். ஆகவே வங்கிக்கூற்றில் வரவு வைக்கப்பட்ட தொகை பொறுப்புக் குறைதல் அல்லது வைப்புக் குறைதல் எனவும், வங்கிக் கூற்றில் செலவு வைக்கப்பட்ட தொகை பொறுப்புக் கூடுதல் அல்லது வைப்புக் கூடுதல் எனவும் கருதப்படுகிறது. வங்கிக் கூற்றின் வரவுமீதி மேலதிகப் பற்றாகும். வைப்பை விட அதிகமாக வாடிக்கையாளர் பெற்றிருப்பின் அது மேலதிகப் பற்றாகும். செலவுமீதி சாதகமான மீதியாகும்.

### *காசேட்டின் வங்கிமீதிக்கும் வங்கிக்கூற்றின் மீதிக்கும் இடையிலான தொடர்பு:-*

இரண்டும் ஒரே மீதியாக இருத்தல் வேண்டும் வங்கிக் கூற்றின் வரவிலுள்ள மீதி காசேட்டில் செலவிலும், வங்கிக் கூற்றின் செலவிலுள்ள மீதி காசேட்டில் வரவிலும் இருத்தல் வேண்டும். ஆனால் மீதிகள் பெரும்பாலும் வேறுபட முடியும்.

| வங்கிக் கணக்கு | வங்கிக் கூற்று |
|---|---|
| 1. தனது வங்கி நிரலில் வரவிலும், செலவிலும் வாடிக்கையாளரால் எழுதிக் கொள்ளப் படுகிறது. | 1. தனது புத்தகங்களில் வாடிக்கையாள ருடைய கணக்கில் வங்கியினால் எழுதிக் கொள்ளப் படுகிறது. |
| 2. வங்கி வைப்புக்கள் வரவிலும், மீளப் பெறுதல்கள் செலவிலும் பதியப் படுகிறது. | 2. வாடிக்கையாளரின் வைப்புக்கள் செலவிலும், அவர்களது மீளப் பெறு தல்கள் வரவிலும் பதியப் படுகிறது. |
| 3. வங்கிக் கணக்கின் சாதகமான மீதி வரவிலும், பாதகமான மேலதிகப் பற்று மீதி செலவிலும் காணப்படும் | 3. வாடிக்கையாளருக்குச் சாதகமான மீதி செலவிலும், பாதகமான மேலதிகப் பற்று மீதி வரவிலும் காணப்படும். |

**வங்கிக்கூற்று மீதியும் காசேட்டு மீதியும் வேறுபடுவதற்கான காரணங்கள்:–**

1. பிழைகள் 2. விடுபடுதல்கள் 3. காலவேறுபாடுகள்

**பிழைகள்**

கூட்டலின் போதும், பதிவு செய்தலின் போதும் வங்கியினால் அல்லது வாடிக்கையாளனினால் இழைக்கப்படுகின்ற தவறுகளாகும்.

**விடுபடுதல்கள்**

பெரும்பாலும் வங்கிக் கூற்றுக் கிடைக்கும் வரை கணக்குரிமையாளன் அறிந்திராத தகவல்கள் காசேட்டில் பதியப்படாதுள்ளது.

1. வங்கி அறவிட்ட கட்டணங்கள்.
2. வங்கியில் நேரடியாகக் கிடைத்தவை.
3. நிலையியல் கட்டளைக் கொடுப்பனவுகள்
4. மறுக்கப்பட்ட காசோலைகள் என்பன காசேட்டில் பதியப்படாதிருக்கும்.

**காலவேறுபாடுகள்**

காசேட்டில் பதிவு செய்ய எடுக்கும் காலத்திற்கும், வங்கி பதிவு செய்ய எடுக்கும் காலத்திற்கும் இடையிலான இடைவெளி காலவேறுபாடாகும். இதனை இரு பகுதிகளாக நோக்க முடியும்.

1. வங்கியில் வைப்புச் செய்ய அனுப்பப்பட்ட காசோலைகள் யாவும் காசேட்டில் வரவு எழுதப்பட்ட போதிலும் தீர்வையாகாத காரணத்தால் வாடிக்கையாளரின் கணக்கில் செலவு வைக்கப்படாதிருத்தல். இக்காசோலைகள் ***வசூலிக்கப்படாத காசோலைகள்*** என அழைக்கப்படுகின்றன.

2. வணிகத்தால் பிறப்பிக்கப்பட்ட காசோலைகள் காசேட்டில் செலவில் பதியப்பட்ட போதிலும் அக்காசோலைகள் மாற்றலுக்கு வங்கியில் சமர்ப்பிக்கப்படாதிருத்தல். இக்காசோலைகள் ***மாற்றப்படாத காசோலைகள்*** என அழைக்கப்படுகின்றன.

**வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிப்பதற்கான நோக்கங்கள்**

1. காசேட்டில் ஏற்பட்ட தவறுகளை இனம் காணல்.
2. வங்கிக் கூற்றிலுள்ள தவறு களைக் கண்டறிதல்.
3. மாற்றப்படாத காசோலைகளை இனம் காணல்.
4. வசூலிக்கப்படாத காசோலைகளைக் கண்டறிதல்.
5. வங்கியின் நேரடி வசூலிப்புக்கள், நிலையியல் கட்டளைக்கிணங்கச் செலுத்திய கொடுப்பனவுகள், வங்கி அறவிட்ட கட்டணங்கள் என்பவற்றை இனம் காணல்.
6. காசேட்டுமீதியையும் வங்கிக்கூற்று மிதியையும் ஒப்பிட்டு திருத்திக் கொள்ளல்.

**வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கும் படிமுறை**

1. குறித்த தினத்தில் காசேட்டு வங்கி நிரலிலுள்ள மீதியைச் செம்மையாக்குதல்.
2. வங்கி இணக்கக் கூற்றைத் தயாரித்தல்

**கற்பித எண்களுடன் வங்கி இணக்கக்கூற்றொன்று தயாரித்தல்**

2011 மார்ச் மாத வங்கிக் கூற்றும், காசேட்டின் வங்கி நிரலிலான பதிவுகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**வங்கிக் கூற்று**

| **திகதி** | **விபரம்** | **வரவு** | **செலவு** | **மீதி** |
|---|---|---|---|---|
| 2011 | | ரூபா | ரூபா | ரூபா |
| Feb28 | மீதி | | | 9000 |
| Mar03 | 1024 | 1600 | | 7400 |
| 03 | காசோலை | | 1000 | 8400 |
| 05 | 1025 | 2000 | | 6400 |
| 05 | 1023 | 2000 | | 4400 |
| 06 | காசோலை | | 6400 | 10800 |
| 10 | காசோலை | | 1000 | 11800 |
| 14 | 1026 | 4400 | | 7400 |
| 20 | 1027 | 2600 | | 4800 |
| 20 | காசோலை | | 7400 | 12200 |
| 28 | 1028 | 3600 | | 8600 |
| 28 | பங்கிலாபம் | | 8000 | 16600 |
| 30 | காசோலைப் புத்தகம் | 250 | | 16350 |
| 30 | வங்கிக் கட்டணம் | 100 | | 16250 |

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | கா. இல | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 2011 | | ரூபா | 2011 | | | ரூபா |
| Mar 01 | மீதி | 8000 | Mar 03 | காசு | 1024 | 1600 |
| 04 | மாதவன் காசோலை | 6400 | 05 | பற்று | 1025 | 2000 |
| 08 | தர்மன் காசோலை | 1000 | 10 | குலசேகர | 1026 | 4400 |
| 18 | புனிதன் | 7400 | 15 | ஶ்ரீதரன் | 1027 | 2600 |
| 21 | தயானந்த | 2800 | 28 | காசு | 1028 | 3600 |
| 28 | ஆனந்தன் | 2200 | 29 | மனோகரன் | 1029 | 3800 |
| 30 | கருணாகரன் | 1400 | 30 | சம்பளம் | 1030 | 3400 |
| | | | 30 | எழுதுகருவி | 1031 | 2400 |
| | | | 31 | மீதி | | 5400 |
| | | 29200 | | | | 29200 |
| Apr 01 | மீதி | 5400 | | | | |

முந்திய மாதத்திலிருந்து கிடைத்த மேலதிகத் தகவல்கள் :

1. கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 2000
2. கைத்தேறாத வைப்புக்கள் ரூபா 1000

**வங்கி இணக்கக்கூற்று தயாரித்தல்**

காசேட்டு வங்கி நிரல்

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 2011 | | ரூபா | 2011 | | ரூபா |
| Mar 01 | மீதி | 5400 | மார்ச் 25 | காசோலை புத்தககட்டணம் | 250 |
| 30 | பங்கிலாபம் | 8000 | 30 | வங்கிக் கட்டணம் | 100 |
| | | | 31 | மீதி | 13050 |
| | | 13400 | | | 13400 |

2011 மார்ச் 30 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| காசேட்டின் படி வங்கி மீதி | | 13050 |
| கூட்டு: சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் இல 1029 | 3800 | |
| இல 1030 | 3400 | |
| இல 1031 | 2400 | 9600 |
| | | 22650 |
| கழி: செலவு வைக்கப்படாத வைப்புக்கள் :- தயானந்த | 2800 | |
| ஆனந்தன் | 2200 | |
| கருணாகரன் | 1400 | (6400) |
| வங்கிக்கூற்றின் படி வங்கி மீதி | | 16250 |

♣ ♣ ♣

# நினைவுகளுடன் என் அதிபர்

*செல்வி.த. பாதுஜா*
*தரம் 13(2011)*

இன்முகம், இனிய வார்த்தை,
எளிமை, நற்பண்பு, தூய்மை,
புன்சிரிப்பு, பொறுமை,
தன்னடக்கம், வாய்மை,
தன்னலமற்ற சிந்தை,
தாய்மையின் வடிவம்
இக்கல்லூரியின் ஒருவர்
இவர் தான் திருமதி வேலுப்பிள்ளை.

அதிபர் நல்ல ஆசான்
அறநெறியின் காவற் தெய்வம்
தூய மதியினர்
எதற்கும் அஞ்சா மனத்தினர்
மாட்சி மிக்கார்
அடக்கம் என்னும்
நிதியுளார் நிகரிலார்.
நெஞ்சுளார், நிறைவுளார்.

கடமையில் ஞாயிறு ஒப்பார்
கண்டிப்பில் அரசனொப்பார்
அடக்கத்தில் இமயமொப்பார்
அன்பினில் அன்னை ஒப்பார்
அம்பிகை வடிவமொப்பார்
கொள்கையர் ஒழுக்கத்தாலே
புடமிட்ட பொன்னை ஒப்பார்
பள்ளிக்கே புகழ் படைத்தார்.
ஆணவம் சிறிதுமில்லா
அன்பினர் ஆகையாலே
மாணவர் நெஞ்சந்தன்னில்
மாண்புடன் வாழுகின்றார்.
பேணருஞ் சிறப்பு மிக்க
பெரும்புகழானார்
பண்புத்தூணென உயர்ந்து நிற்கும்
மதிப்புக்குரிய அருந்தவப் பேறே வாழ்க.

♣ ♣ ♣



எனது திறமையை அடைய நான்
எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தேன்
என்பதை மக்கள் அறிந்தால், இதெல்லாம்
ஒரு அதிசயமாகவே தோன்றாது!
**- மைக்கல் அஞ்ஜலோ**



# RECALLING THE MEMORIES

***Mrs.S.Thevarasa***
*Teacher of English*

I am delighted to share my sweet memories of this famous holy school with you. It's a great privilege to me to achieve an opportunity to be a Victorian of mother Victoria.

I stepped this school in 1970 to follow my education from grade seven. I was in amazement to see the unique environment of the school. It was a wonder to see the opened classrooms, the students with coloured dresses, some with bare footed and some with slippers. When I was wondering about this situation, some friends said that there weren't any strict and regulations in our costumes.

My imaginations flowed over the past to my former school. What an enormous school I studied! Holy convent with four storeys, with classrooms shut. We had all types of facilities. When I was in amazement about my present school, my friends often reminded me like this, "Don't compare Malaysia with Ceylon".

Yes, I was born in Malaysia and returned to my native land in 1969, after the death of my father. But I was happy to land where my parents were born.

I became a teacher of English in 1985. After serving the outstation I came back in 1992 to serve the children of Victoria.

I happened to meet my teachers who taught me and I floated in the air in happiness.

Yes the principal of the school was my honorable teacher who taught me Biology and Hygiene. He welcomed me with smiling placid face. He was a successful teacher of Biology in the O/L and A/L classes. We all know Mr.S.Padmanathan a very amiable and loveable science teacher. He was an excellent gentleman very strict disciplinarian and the students were afraid of him. He will be ever in the realm of my heart.

Next Mr.S.Chandrapalan a great intellect who built up the school at his foremost. I have never seen him getting angry and rebuking any students. He gained the respect of all students, with his personality, simplicity and subtle sense of humour.

Then I was under our madam Mrs.A.Veluppillai a great intellect, who

was honoured by all the students, teachers and even the society.

First I met her as an excellent teacher in Botany. She was very soft, kind and generous with the pupils. She had the capacity to rebuke students in the most inoffensive way and a kind smile. She was a deeply god-fearing woman. No vanity, no jealousy, no idling were born with her. She played the roles of a mother, sister and even as a servant to our society. All these principals' dedication enhanced the school to the present utmost position.

It has been 19 years since I came to this school. Our honourable and respected madam Mrs.A.Veluppillai being as the principal for eleven years on the breast of Victoria did her work to the utmost satisfaction. She was a kind hearted woman who had success of her pupils at heart.

I consider a great esteem for having an opportunity to be under the administration of Mr.V.Srikanthan, the present principal of Victoria College. He is also an intellect who performs his deeds straight for wardly. He was both an old student and the teacher of the school. During his period the performance of this school, vivid that the school will soon attain the goal, which everyone expects. His enthusiasms, curiosity and his untiring efforts will surely make him attain his target. No doubt, he will uplift the school successfully to his foremost. May the almighty grant him the healthy life.

I would like to recall the memories of my English teachers, when I was a student Mrs.R.Visuvalingam a nice charming lady with long hair but short and thin is still pictured in my mind. She taught me English in grade seven. She was an ideal teacher.

Then in grade Eight I met a short, active and a loveable teacher who was Mrs.S.Sellathurai. She acted as a teacher of 'Guides'. She was a disciplinarian who was more concerned about character building of her students, which is the goal of education. Thousands of Victorians living all over the world bear testimony of her contribution in this regards.

Thanks to the dedicated services of teachers like Mr.A.M.Spencer who maintained very high standard in English. Mr.A.M.Spencer was an ideal teacher. His work was not confined to the classrooms alone. His all round contribution to the life of the school particularly in the co-curricular sphere is an integral part to assess his performances. He taught government as a subject. Punctuality was a trade mark of Mr.A.M.Spencer. However busy he might be in the office he was never late to his classes. His punishments to reform his students were well appreciated by his pupils.

It is said that Mr.A.M.Spencer was the one who commenced the A/L lunch in 1965.

Thank god that I got an opportunity to be in his arms at grades ten and eleven. I think the blessings and benedictions of theirs (My English teachers) have raised me to be an English teacher. I assure that I'll follow their steps to enhance the knowledge of English Victorians. It is said, a good teacher explains, a superior teacher demonstrates, but a great teacher inspires. Mr.A.M.Spencer had been an inspiration to all of us. He no longer exists but we are certain that the work he commenced will go on forever. His memory is ever green in the realm of my heart.

Being a Victorian, I wish that my school Victoria College will shine forever and forever. May the almighty grant the glory and grandeur to "My Victoria".

♣ ♣ ♣

**Be not the slave of your own past. Plunge into the sublime seas, dive deep and swim far, so you shall come back with self-respect, with new power, with an advanced experience that shall explain and overlook the old.**


**Ralph Waldo Emerson**





**Subdue your appetites, my dears, and you've conquered human nature.**

**Charles Dickens**



# ஏன் அதிகளவில் தொலைக்காட்சி பார்க்கக்கூடாது?

*செல்வி. ஸ்ரீ. நிறோசனா*
*க.பொ.த உயர்தரம் (2013)*
*விஞ்ஞானப்பிரிவு*

இன்று அநேக இளைஞர்களாலும் சிறுவர்களாலும் பகிரப்படும் ஓர் அனுபவ மாகத் தொலைக்காட்சி பார்த்தல் அமைந் துள்ளது. பொதுமக்களை இலகுவில் அடையக்கூடியதும், மனதைக் கவரும், மலிவானதுமான ஒரு ஊடகமாகத் தொலைக்காட்சி காணப்படுகிறது. அந்தவகையில் இன்று உலகில் உள்ள முக்கியமான பொதுமக்கள் ஊடகங்களில் ஒன்றாகத் தொலைக்காட்சி மிளிர்கின்றது. ஆனால் வருந்தக்கூடிய விடயம் என்ன வெனில் மக்கள் நன்மை பெறக்கூடியவகை யில் இவ் ஊடகமானது பயன்படுவதில்லை என்பதேயாகும். இன்றைய அநேக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆக்கபூர்வ மானதாக, அறிவுபூர்வமானதாக இருப்ப தில்லை. மாறாக இவற்றினால் வேறு பல நன்மை பயக்கக்கூடிய செயற்பாடுகளைச் செய்வதற்குரிய மக்களின் நேரம் வீணடிக் கப்படுகின்றது. அத்தோடு அவர்களின் உளவிருத்தியிலும் எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது

அதிகளவு நேரத்தினை தொலைக் காட்சி பார்ப்பதற்கு செலவிடக்கூடாது என்பதற்கு நான் முன்வைக்கும் காரணம் அநேகமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அறிவுபூர்வமானதாக இருப்பதில்லை. இன்று நாம் தொலைக்காட்சியில் பார்க்கும் படங்கள், தொடர்கள், காட்சிகள் என்பன வன்முறை, பாலியல், போதைப் பொருட்பாவனை போன்ற நிகழ்வுகளை மையப்படுத்தியே அமைகின்றன. இவை பார்வையாளர்கள் மத்தியில் தவறான கருத்தினை உருவாக்குவதுடன் அவர் களைப் பிறழ்வான நடத்தைகளில் செல்லவைக்கின்றன. அதனைவிட சிறுவர்களின் மீது இதன் தாக்கம் மோசமான விளைவுகளை ஏற்படுத்து கின்றது. அவர்கள் பெண்கள் பலவீனமா னவர்கள், பிரச்சினைகளை பணத்தாலும் வன்முறையாலும் தீர்க்கமுடியும், போர்கள் தவிர்க்க முடியாதவை போன்ற கருத்துக் களுடன் வளர்ப்பதற்கு வழிசமைக்கிறது

இரண்டாவது காரணம் தனக்கும் சமூ கத்திற்கும் நன்மை பயக்கும் நடவடிக்கை களில் ஈடுபடுத்தக்கூடிய மக்களின் நேரம் தொலைக்காட்சி பார்ப்பதில் வீணடிக்கப் படுகின்றது. அவ்வாறு வீணடிக்கப்படும் நேரத்தினை உடற்பயிற்சி செய்தல், வாசித்தல், நண்பர்களுடனும் குடும்பத்தின ருடனும் உரையாடுதல், ஆரோக்கியமான வாழ்விற்குரிய நட வடிக்கைகளுக்கு பயன்படுத்துதல் போன்ற அர்த்தமுள்ள செயற்பாடுகளுக்குப் பிரயோகிக்கமுடியும்.

மூன்றாவது காரணம் மக்களுடைய உளவிருத்தியில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதேயாகும். பல விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளின்படி அதிகமாகத் தொலைக்காட்சி பார்த்தல் சிறுவர்களுடைய அறிவுத்திறன் விருத்தியில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தோடு வயதானவர்களை உளஆற்றல் சிதைவிற்கும் இட்டுச்செல்கின்றது. இதனால் நீண்டகாலப்போக்கில் கிரகித்தல், நினைவுபடுத்தல் போன்ற செயற்பாடுகளில் அவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

இன்று தொலைக்காட்சியானது உடல் ரீதியிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. முக்கியமாக கண் பார்வை குறைவடைதல், ஞாபகசக்தி குறைவடைதல், தலை சம்பந்தமான நோய்கள் ஏற்படுத்தல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. தொலைக்காட்சியை நாம் ஒரே இடத்தில் இருந்தே பார்ப்பதால் எமது உடலுக்கான உடற்பயிற்சி குறைவடைகிறது. இதனால் உடற் சுறுசுறுப்பு குறைவடைகிறது. அன்றாட செயற்பாடுகள் தடைப்படுகின்றன, உடற் பருமன் அதிகரிக்கின்றது. தொலைக்காட்சியில் இருந்து வரும் கதிர்வீச்சுக்கள் எமது உடலைப் பாதிக்கின்றன.

முடிவாக பல தொலைக்காட்சி நிகழ்வுகள் அறிவுபூர்வமானதாக இருப்பதில்லை. பலநன்மைபயக்கும் காரியங்களில் ஈடுபடுத்தக்கூடிய நேரம் வீணடிக்கப்படுகின்றது. மக்களின் உளவிருத்தியில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பன போன்ற காரணங்களினால் அதிகமாக தொலைக்காட்சி பார்ப்பதனைத் தவிர்க்கவேண்டும். அதற்காக முற்றுமுழுதாக தொலைக்காட்சி பார்த்தலை நிறுத்தவேண்டும் எனக்கருதவில்லை. அதனை நிதானத்துடன் செய்யவேண்டும். தொலைக்காட்சி என்பது ஒரு வளமாகும். செயற்றிறனுடனும், பகுத்தறிவுடனும் நாம் அதிலிருந்து சரியான பொருத்தமான நிகழ்ச்சிகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதற்கு கற்றுக் கொள்ளவேண்டும்.

♣ ♣ ♣

வெற்றியாளராக ஆவதற்கு முயற்சிப்பதைவிட
பண்புடையவராக முயற்சியுங்கள்.

- அல்பேர்ட் ஐன்ஸ்டீன்

# அரும் தவச்செல்வி

*செல்வி. சி. மலைமகள்*
ஆசிரியை

Fill my heart with full of love
Draw a pad with ink of moon
Pack a passage of rose with my hand and
Knocked her door to say my thoughts

திருமுகம் நோக்கில் புன்முறுவலொன்றிருக்கும்
வருமுகம் கோணா அவர் வகைமொழி அமையும்
தலைமைத்துவம் அவர் தனிநடையில் மிளிரும்
தட்டிக்கொடுக்கும் அவர் தனித்திறனாலே
தானாக எல்லா வேலையும் நடக்கும்

தாவரவியலில் தனிச்சிறப்புப் பெற்று அத்துறையில்
தன்னிகரற்று தலைநிமிர்ந்திருந்தார்
MEd பட்டத்துடன் SLPS உம் சேர
இணையற்ற ஆற்றலுள்ள தலைவியாகத் திகழ்ந்தார்
எளிமையான ஆங்கிலத்தில் சரளமாகக் கதைத்ததால்
இசுறு திட்ட இணைப்பாளர் இன்னும் அவரை மறக்கவில்லை

பழந்தமிழ் புலமையுடன் புதிய ஆங்கிலமும் சேர
புரட்சிக் கவி பாரதியின் புதுமைப் பெண்போலானார்
ஆளை மயக்கும் அழகுத்தோற்றம்
அருள் சொரியும் அவர் பார்வை
அறிவைக் கவரும் பொருள் ஞானம்
நல் மதிப்பைக் கொடுக்கும் எளிமைத்தோற்றம்

நாளெல்லாம் கேட்க வைக்கும்
நல்லறிவு நிறை பேச்சாற்றல்
இன்றுள்ள நம் இளையோருக்கு - அவர்
ஓர் இணையற்ற எடுத்துக்காட்டு
இச்சிறப்புக்கள் நிறையப்பெற்ற
நாற்குணமுள்ள புதுமைப்பெண் புதிதல்ல
அருந்தவச்செல்வியே அவ்வருமைச் செல்வி

இவரே விக்ரோறியாவின் வரலாற்றில் என்றும்
அரும் தவச் செல்வி.

♣ ♣ ♣

# இந்து சமயம் காட்டும் வாழ்வியல்

***திருமதி. ஜெயசோதி மதிவதனன்***
*ஆசிரியை*

மனிதனின் வாழ்வியலில் கலந்து விட்ட ஓர் அம்சமே சமயம் ஆகும். பாமரனை பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தை சமயம் என்று குறிப்பிடலாம். நம்மை முன்னேற்றி மேல் நிலைக்கு அழைத்துச் செல்வதே நல்லொழுக்கம். நம்வாழ்வைக் கேவலப் படுத்தி கீழ் நிலைக்கு இழுத்துச் செல்வதே தீயொழுக்கம். மிருக இயல்பு, மனித இயல்பு, தெய்வீக இயல்பு என்ற மூன்று குணங்களால் மனிதன் உருவாக்கப்பட்டவன். மனிதனிட முள்ள தெய்வீகத் தன்மையை வளர்க்கக் கூடியதுதான் நல்லொழுக்கம். மனிதனிட முள்ள மிருக குணங்களை வளர்ப்பதுதான் தீயொழுக்கம். எனவே மனிதனிடமுள்ள மிருக இயல்பை அழித்து விட்டு மனிதத்தன்மை மிகுந்தவனாக மாற்றி தெய்வீக நிலைக்கு உயர்த்துவதன் மூலம் அவனை ஸத் சித் ஆனந்தமாக மாற்றுவதே இந்து சமயம் காட்டும்வாழ்வியல் எனலாம். இதனாலேதான் இந்து சமயம் அன்பையும் பண்பையும் வலியுறுத்தி மனிதனை பக்குவப்படுத்தி நல்ல மனிதரை உருவாக்குகின்றது என ஆன்றோர் கூறுகின்றனர்.

மனிதனை நன்மனிதனாக்கி அவனை தெய்வீக நிலைக்கு உயர்த்தும் குறிக்கோளை உடைய இந்து சமயம் மனிதனின் அன்றாடச் செயல்களிலும் கவனம் செலுத்தி அவனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சொல் கிறது. மனிதனின் அன்றாட கடமைகளில் வைகறைப் பொழுதில் துயில் எழுதலை வலியுறுத்தும் இந்து சமயம், துயில் எழுந்தவுடன் அவரவர் உள்ளங்கைகளை முதலில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறுகிறது. ஏனெனில் உள்ளங்கையின் அடிப்பாகத்தில் பார்வதியும் மத்தியில் சரஸ்வதியும் மேற்பாகத்தில் லக்ஷ்மியும் அமைந்திருப்பதாக சொல்லப்படுவதே யாகும்.

வைகறை எழுந்து உள்ளங்கையை தரிசனம் செய்த பின்பு காலைக் கடன்களை முடிக்க வேண்டும். இதன் மூலம் மனிதர் அனைவரும் தந்த சுத்தி செய்து உடல், உளம் என்பன புத்துணர்வும் புத்தாக்கமும் பெற்று சமநிலை அடையப்பெறுவர். பின்னர் வைகறைப் பொழுதில் நீராடுதல் வேண்டும். ஏனெனில் விடியற்காலம் உஷாக்காலம் எனப்படுகின்றது. விடியற் காலத்திற்குரிய தெய்வமாக உஷை குறிப்பிடப்படுகின்றாள். உஷை தோன்றிய பிறகே சூரியன் உதயமாகின்றான். இந்த நேரத்தில் உஷையின் செழிப்பான கிரணங்கள் பூமியை நோக்கி வருவதால் நீர் வெது வெதுப்பாக இருப்பதுடன் மனித உடலின் காந்தத்தன்மையை வளர்ப்பதுடன் சகல பாவங்களும் விலகி உடல் நலமும் பெற்று புதுப் பொலிவு கிடைக்கிறது என இந்து சமயம் விளக்கம் தருகிறது. திரு வெம்பாவை மார்கழி மாதத்தில் கொண்டா டப்படுவதும் உடல் நலம் கருதியேயாகும்.

மார்கழி மாதத்தில் ஓடும் ஆற்று நீரில் அல்லது குளத்தில் குளிப்பதன் மூலம் உடலில் காந்தத் தன்மை அதிகரித்து நோய் எதிர்ப்புத் தன்மை பெருகும். மார்கழி மாதத்தில் சூரிய உதயத்திற்கு முன்பு குளிப்பது எல்லா வகையிலும் நன்மை தரு கிறது. மேலும் மார்கழி மாதத்தில் ஓசோன் வாயுப்படலம் அதிகமாக காணப்படுவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். ஆற்று நீரும் குளத்து நீரும் சந்திர கிரணத்தால் காந்த அலைகள் பெற்றிருப்பதால் சூரிய உதயத்திற்கு முன் நீராடுவதன் மூலம் காந்த ஆற்றல் மனிதனுக்கு கடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் இறை வழிபாட்டிற்கு உகந்த காலம் காலை ஆகும். இரவு உறங்கும் பொழுது மனம் அமைதியாகத் தெளிந்து இருக்கும். தொடர்ந்து வரும் காலைப் பொழுதில் செய்யப்படும் இறை வழிபாடு வெள்ளைத்துணியில் சாயம் பூசியது போல தெளிவாகப் படியும் என்று கூறப்படுகிறது.

திருநீறு அணியும் முறை பற்றிக்கூறும் சதகப் பாடல்

**"பக்தியொடு சிவசிவா என்று திருநீற்றைப்**
**பரித்து கையால் எடுத்துப்**
**பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியோடு**
**பருத்த புயமீதில் ஒழுக**
**நித்தமும் விரல்களால் நெற்றியில் அழுந்தலுற**
**நினைவாய்த் தரிப்பவர்க்கு**
**நீடு வினை அணுகாது தேக பரிசுத்தமாய்**
**நீங்காமல் நிமலன் அங்கே**
**சித்தியொடு நித்தம் விளையாடுவன் முகத்திலே**
**தாண்டவம் செய்யும் திரு**
**சஞ்சலம் வராது பரகதி உதவும் இவரையே**
**சத்தியம் சிவம் எனலாம்**
**மத்தினிய மேரு என வைத்து அமுதினைக் கடையு**
**மால் மருகனான முருகா**
**மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு**
**மலைமேவு குமரேசனே"**

எனக்குறிப்பிட்டு விளக்குகிறது.

இறை வழிபாட்டில் மாத்திரமன்றி உணவு முறைகளிலும் கூட இந்துசமயம் பல நெறிமுறைகளை வகுத்துக் கூறுகிறது. வாழையிலையில் சாப்பிட்டால் சருமதாது வின் பளபளப்பும் சுக போகங்களும் கிடைக் கும். மந்தாக்கினி, துர்ப்பலம், ஷணவாதம், சிலோத்துமம், அரோசகம், பித்த சோபம் ஆகியன நீங்கும் எனக் கூறப்படுகிறது.

அடுத்து உணவு முறை பற்றி நோக்கும் போது, சந்தியா காலத்தில் நாம் இரவுச் சாப்பாடு (சாதம்) சாப்பிடக்கூடாது எனக் கூறப்படுகிறது. இடது கையை ஊன்றிக் கொண்டும் சாப்பிடல் ஆகாது. மேலும் நீண்ட ஆயுட்காலம் வாழ கிழக்கு முக மாகவும், சத்தியத்தை விரும்பி பின் பற்ற வடக்கு முகமாகவும், புகழுடைய தெற்கு முகமாகவும் உட்கார்ந்து சாப்பிடல் வேண்டும். எள் சம்மந்தப்பட்ட உணவுகள், நெல்லிக்காய், தயிர் இரவில் சாப்பிடுதல் கூடாது. முதலில் கால் வயிறு நீர் சாப்பிட்ட பின் அரைவயிறு உணவு சாப்பிட்டு பின் மீண்டும் நீர் அருந்தினால் உடல் எடை கூடாமலும் நல்ல தேக ஆரோக்கியத்து டனும் நீண்ட காலம் வாழ முடியும் என இந்து நூல்கள் குறிப்பிடுகின்றன.

உணவு பற்றிக் குறிப்பிட்ட இந்து சமய நூல்கள் புத்தாடை அணியும் நாள்களையும் குறிப்பிடுகின்றன.

**"கறைபடா ஒளிசேரும் ஆதிவாரம் தனில்**
**கட்டலாம் புதிய சீலை**
**கலை மதிக்காகாது பலகாலும் மழையினிற்**
**கடிது நனைவுற் றொழிதரும்**
**குறைபடாது இடர் வரும் வீரியம் போம் அரிய**
**குருதி வாரம் தனக்கு**
**கொஞ்ச நாளிற் கிழியும் வெற்றிபோம் புந்தியில்**
**குரு வாரமதில் அணிந்தால்**
**மறைபடாது அழகுண்டு மேன்மேலும் நல்லாடை**
**வரும் இனிய சுக்கிரற் கோ**
**வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு**
**வாழ்வு போம் மரணமுண்டாம்**
**அறைகின்ற வேதாகமத்தின் வடிவமாய் விளங்கும்**
**அமலனே அருமை மதவேள்**
**அனுதினமும் மனதில் நினை தரு சதுர கிரிவளர்**
**அறப்பளீசுர தேவனே"**

என்ற பாடல் உணர்த்தி நிற்பதைக் குறிப்பிடலாம்.

புத்தாடை அணிதல் பற்றிக் குறிப்பிட்ட இந்து சமயம் எண்ணெய் தேய்த்து நீராடுவதற்குரிய நாளும் முறையும் பற்றி பின்வரும் பாடல் மூலம் உணர்த்துகின்றது.

**"அருக்கன் எண்ணெய் அழகு அழிக்கும்**
**அணியாம திங்கள் ஆகாது**
**திருக்காம் செவ்வாய் உயிர் போக்கும்**
**செய்ய புதற்குப் பொருள் உண்டாம்**
**கருத்தை அழிக்கும் கவின் வியாழன்**
**கைப்பொருள் போக்கும் கன வெற்றி**
**பெருக்கு முண்டாம் சனி எண்ணெய்**
**பேணி முழுக வல்லீரே"**

என்ற செய்யுள் சனி நீராடுதலையே மிகச் சிறந்தது எனக் கூறுகிறது. அத்துடன் மயானம் சென்று வந்தவரும் தலைமுடி வெட்டிக்கொண்டவரும் எண்ணெய் தேய்த்து ஒருபோதும் முழுகக் கூடாது.

இந்து மதமானது மனித வாழ்வில் வளமுடன் வாழ்வதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை கூறி நெறிப்படுத்திய துடன் மனித குலத்திற்கு ஏற்படக்கூடிய 4448 நோய்களையும் அந்நோய்களைக் கண்டறியும் வழிமுறைகளையும் தெளிவாக நாடி சாஸ்திரத்தின் மூலம் குறிப்பிட்டுள்ளது. நல்ல ஆரோக்கியமுள்ள ஒருவனின் உடல் நிலையை விளக்க,

**"வழங்கிய வாதம் மாத்திரை ஒன்றாகில்**
**தழங்கிய பித்தம் தன்னில் அரைவாசி**
**அழங்கிய கபத்தான் அடங்கியே காலோட்டில்**
**பிழங்கிய மூவருக்கும் பிசகொன்றும் இல்லையே"**

என்ற திருமூலரின் நாடிக் கருத்து நல்ல உடலின் நாடி எடையை அறிவிக்கிறது. அதாவது நல்ல உடல் நிலையுடைய ஒருவருக்கு வாதம் -1 ஆகவும் பித்தம் ½ ஆகவும் கபம் ¼ ஆகவும் இருத்தல் வேண்டும். என அறியலாம்.

**"காணவே இரவினிலே வாதம் ஓடில்**
**கனமான சளி இருமல் இரைப்பும் உண்டாம்".**

என்பதனால் இரவு நேரத்தில் வாத நாடி துடிப்பாக ஓடினால் அம் மனிதனுக்கு சளி, இருமல், இரைப்பு முதலிய கப நோய்கள் உண்டாகும் என அறிய முடியும். செவ்வாய் கிழமையில் வாத நாடி ஓடினால் அவருக்கு சுரம் உண்டாகும். என்பதனை

**"நாணவே செவ்வாயினில் வாதம் ஓடில்**
**நன்மையுள்ள சுரமது தான் அனுகும்"**

என்று நாடி சாஸ்திரம் குறிப்பிடும். சனிக்கிழமை வாத நாடி ஓடினால் குளிரும் ஜன்னியும் உண்டாகும். என்பதை

**"தோணவே மந்தனிலே வாதம் ஓடில்**

**துனிந்த தொரு சீதளமும் ஜன்னி எய்தும்".**

எனக் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். வியாழக்கிழமையிலே வாத நாடி ஓடினால் விலா எலும்புகளிலும் தேகம் முழுவதும் வலி உண்டாகும் என்பதனை

**"வேணவே வியாழத்தில் வாதம் ஓடின்**

**விலாவொடு தேகம் எல்லாம் வலியுண்டாம்"**

என்பதன் மூலம் உணரலாம்.

இவ்வாறு இந்து மதம் மனித வாழ்விய லோடு ஒன்றுபட்டு நின்று வாழும் இந்து மதமாக வளர்ந்து வருகிறது.

## Black Light

மின்காந்த திருசியத்தில் உள்ள கட்புல ஒளியின், வீச்சுத் தவிர்ந்த கட்புலனாகா மின்காந்த அலைகள் பிரதானமாக UV / IR கதிர்களைக் குறிக்கும்.

செய்முறையில் அமைக்கப்படும் கரும் ஒளி (Black light) முதல் UV ஆகும். இது ஊதா நிறமுடையதாத் தோன்றும். உண்மையில் இங்கு UV வீச்சில் உள்ள கதிர்ப்புக்கள் மிக அதிகமாகவும், ஊதா நிறம் சார்ந்த கட்புலப்பகுதி மிகவும் சொற்ப அளவும் உருவாகுவதனாலேயே இது ஊதா நிறமுடையதாகத் தோற்றும். உண்மையில் முதல் பிறப்பிக்கும் UV கதிர்களை அவதானிக்க முடியாமல் இருக்கும். இதனைக் கண்டுபிடித்தவர் Willium H.Byler.

**உங்கள் வாழ்க்கையின் எந்தச் சவாலையும் பூரணமாக வெற்றி கொள்ளத் தேவையான அனைத்துத் திறன்களும் உங்களிடம் அமையப் பெற்றுள்ளது. உங்களிற்குத் தேவையானது எல்லாம் அடையவேண்டும் என்ற ஒரு தேவையேயாகும்**

# உதவி செய்து வாழ்வோம்

செல்வி. பா. மதுவந்தி
தரம் 10A

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வள்ளுவர் வாக்குக்கமைய மனிதன் நல்லபடி வாழ்வதற்கு நல்ல மனப்பாங்கு உடையவனாக இருக்க வேண்டும். அப்படி வாழ வேண்டுமெனில் அர்ப்பணிப்புள்ள உதவி செய்யும் சேவை மனப்பாங்குடைய மனம் வேண்டும். அப்படிப்பட்டவனே தன்னையும் பிறரையும் மகிழ்வாக வைத்திருப்பான்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பதற்கிணங்க சிறுவயதில் பழகும் பழக்கம் நிரந்தரமாக இடம்பெற்று விடும். குழந்தைப் பருவத்தில் வீட்டில் பிறருக்கு உதவி செய்தலின் பெருமை பற்றிப் பெற்றோர் எடுத்துரைத்தால்தான் பிள்ளைகளும் உதவும் மனப்பாங்குடையவர்களாக வளர முடியும்.

உலகில் ஆதரவற்றவர்கள், நோயாளர்கள், ஊனமுற்றவர்கள் என்று பல வகைப்பட்டவர்கள் பிறரின் உதவியை நாடி நிற்கின்றனர். ஆதரவற்றோர் என்னும் போது பிள்ளைகளால் கைவிடப்பட்டோர், சிறு வயதிலே பெற்றோர்களை இழந்தவர்கள், மற்றும் போர்க்காலச் சூழலில் உறவுகளை இழந்தவர்கள் எனப் பல வகைப்படுவர். இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான உணவு, உடை, தங்குமிட வசதிகள் போன்றவற்றை அளிக்க வேண்டும். இவர்களுக்குப் பண உதவி செய்ய முடியவில்லை எனினும் எம்மால் இயன்ற உடல், உள உதவிகளை வழங்க வேண்டும். மற்றும் சிறுவர் காப்பகம் முதியோர் இல்லம் போன்றவற்றை அமைத்து அவர்களுக்குத் தேவையான கல்வி, போசனம், மருத்துவம் போன்றவற்றை இலவசமாக வழங்க வேண்டும். அத்துடன் அவர்களுக்கு நல்லதொரு நிலையை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் மனத்தில் வாழ்வதற்கான நம்பிக்கையை வளர்க்க வேண்டும். இது பிறருக்கு உதவும் வகைளில் ஒன்றாகும்.

**"நண்பாற்றார் ஆகி நயமிலவே செய்வார்க்கும்**
**பண்பாற்றல் ஆதல் கடை"**

என்று வள்ளுவர் கூறியதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவர் தமக்கு உதவி செய்யாது தீமையே செய்பவர்களாக இருந்தாலும் அறிவுடைய நல்லோர் உதவி செய்வார்களேயன்றி தீங்கு செய்ய மாட்டார். பிறர் தமக்கு உதவி செய்யாவிட்டாலும் நல்ல குணமுடையவர்கள் அவர்களுக்கு ஆபத்து வரும்போது தாமாக முன்னின்று உதவுவார்கள். இது அவர்களின் நல்ல பண்பாகும்.

நலிவுற்றோர், ஊனமுற்றோர் என்பவர்களுக்கு எமது இச்சைக்கு இயன்றளவு உதவிகளை வழங்க வேண்டும். அவர்களின்

அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தேவையான உபகரணங்களையும் மருந்து முதலியவற்றையும் வழங்குவது அவர்களுக்குச் செய்யும் மிகப்பெரிய உதவியாகும்.

எம்மைப் போன்ற மாணவர்கள் ஒருவருக்கொருவர் உதவும் மனப்பாங்குடன் பழகுவார்களானால் சிறந்த சமுதாயம் உருவாகும். பாடசாலையில் எம்மோடு உறவாடும் சக நண்பர்களுக்கு உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு உதவுவதன் மூலம் சகோதரத்துவமும், சமாதானமும் வளரும். ஆணவம், சுயநலம் என்பன எம்மை விட்டகன்று பரந்த மனப்பாங்கு உருவாகும்.

தனக்கென வாழாது பிறர்கென வாழும் பொழுதே உண்மையான உதவி செய்யும் மனப்பாங்கு உள்ளவர்கள் உருவாகின்றனர். "அரிது அரிது மானிடராதல் அரிது". எனவே மானிடப் பிறவியை எடுத்த நாம் பிறருக்கு உதவி செய்து பிறர் துயர் நீக்கி பிறந்த பலனை நிறைவு செய்ய வேண்டும்.

♣ ♣ ♣

உண்மையை அடக்கி, பூமிக்குள் புதைத்து விட்டீர்களானாலும் அது வளரவே செய்யும். அதுமட்டுமல்ல, அது வெடித்து எழும் சமயம் எல்லாவற்றையும் தூள் தூளாக்கும். மகத்தான வெடிப்பு சக்தியை அடையவே செய்யும்.

**- எமிலிே ஜோலா**

"உலகைத் துறந்தீர் உருவைத் துறந்தீர்
மலையைப் பிளந்துவிட வல்லீர் - இலகுபுகழ்
ஞானம் தவம் கல்வி நான்கும் துறவீர்
ஆனந்த மையா ஹரீ"

**- சுப்பிரமணிய பாரதியார்**

உழைப்பு இல்லாத நம்பிக்கை வீணானது;
வியர்வை சிந்தி உழைத்து உண்ணக்கடவாய்
உழைக்காதவன் உண்ணவும் கூடாது.

**- பைபிள்**

# ஏன்?

*திருமதி க. குலநாயகம்*
*ஆசிரியை*

எத்தனை நீர்ப்பீடனங்கள்
அத்தனையும் ஒழிந்தது
எத்தனை இன்பங்கள்
அத்தனையும் அழிந்தது.
எத்தனை கனவுகள்
அத்தனையும் பொய்த்தது
எத்தனை துன்பங்கள்
அத்தனையும் நிலைத்தது.
ஏன்....? பீடித்தது
ஆட்கொல்லி HIV

**விடிவு காண மாட்டாயா?**

HIV சிறைப்படித்தது
உடல் உருக்குலைந்தது.
உள்ளம் ஊமையானது
உறவுகள் பிரிந்தன.
ஊரெல்லாம் கிசுகிசுப்பு
அலங்கோலம் ஆகிவிட்டேன்.
வித விதமாய் விந்தைகள் செய்யும்
விஞ்ஞானமே....!
இதற்கு ஓர் விடிவு காண மாட்டாயா?

♣ ♣ ♣

# A SALUTE TO OUR VICTORIA COLLEGE TEACHERS

***Miss. T. Tharani***
*Grade 10[A]*

Generous tributes to you gratefully we pay
For your good health with pious prayers we say

For many years teacher you have been
And in fastening education you are keen

Your service is a game of relay
In this society a big role you've to play

You do your duty with a devoted heart
And there by you do well in your part

You seem to us as a ladder
Education department appreciate your ardour

You always motivate us to learn
With your prizes and praises we earn

You kindly take of our attitude
Today we express our deep gratitude

To salute you, we all fall in aline
To wish by heart to be of fine

♣ ♣ ♣

# வாழ்வை வளமாக்க வள்ளுவத்தை வாசிப்போம்

*திருமதி. கோ. தேவசுதன்*
*ஆசிரியை*

இறைவன் பூமியில் மக்களைப் படைத்ததே சான்றோனாக வாழ்ந்து சாதனைகள் படைக்கவும் வாழ்க்கையில் வெற்றி பெறவுமே ஆகும். அதற்கு நாம் எமது அறிவை விருத்தி செய்வதும் நற்பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதும் அவசியமாகும். இன்று எத்தனையோ தகவற்தொடர்புச் சாதனங்கள் வந்துவிட்டபோதும் இன்னமும் அறிவை வளர்ப்பதிலும் நற்பழக்கவழக்கங்களை வளர்ப்பதிலும் நல்ல நூல்களை வாசிப்பது முக்கியம் பெறுகின்றது.

சிறுவயதிலிருந்தே வாசிக்கும் பழக்கத்தைக் கடைப்படித்து வந்தால் மொழியாற்றல் விருத்தியாகும். பாடங்களிற் சிறப்படையலாம். வாழ்க்கை முழுவதும் மகிழ்வாய் இருக்கக் கூடிய வழிகளைக் கண்டு கொள்ளலாம். எனவே நிகழ்கால, எதிர்கால முன்னேற்றங்களுக்குப் பயன்தரும் நல்ல நூல்களைத் தேடி வாசிக்க வேண்டும். வாழ்வில் ஏற்படும் தோல்விகள் சோர்வுகளைப் போக்கவும் நூல்கள் உதவுகின்றன.

இன்றைய தகவற்தொழில்நுட்ப யுகத்தில் இணையத்தளங்கள் மூலம் சகல துறை சார்ந்த தகவல்களையும் பெறுக்கொள்ளலாம் என்பது உண்மைதான். அதேநேரம் இணையத்தளங்கள் மூலம் தகவல்களைச் சேகரித்து அவற்றைத் தமது சுய ஆக்கங் கங்கள் போல் தமது பெயருடன் நூல் வெளியிடுபவர்களும் தாராளமாக உள்ளனர். இணையத்தளங்கள் தகவல்களைப் பெற உதவுகின்றனவேயொழிய எழுத்தாற்றல், அறிவு விருத்தி, பேச்சுவன்மை, மன அமைதி என்பவற்றைப் பெற்றுத்தரமாட்டா. இவற்றைத் தாராளமாகத் தரக்கூடியவை நல்ல நூல்களும் கருத்தூன்றிய வாசிப்புமே. இதனாற்றான் நல்ல நூல்களே நல்ல நண்பர்கள் என்று பெரியோர் கூறினர்.

அந்த வகையில் எல்லோரும் இலகுவில் கற்றுத் தெளியக்கூடிய வளமான வாழ்வுக்கு உதவக்கூடிய நூல் திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள் ஆகும். அதன் அவசியம் அறிந்தே பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரை திருக்குறளின் சில பகுதிகளேனும் கற்பிக்கப்படுகின்றது. இது பரீட்சையை நோக்கிக் கற்க வேண்டிய நூல் அல்ல. ஒவ்வொருவரும் தன் வாழ்நாள் முழுவதும் கற்கவும் பின்பற்றவும் வேண்டிய நூலாகும். ஆனால் மேடைகளிற் பேசப்படுமளவுக்கு எல்லோராலும் படிக்கப்படுவதில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

மனித சமுதாயம் முழுவதற்கும் என்றென்றும் வழிகாட்டி நிற்கும் இந்நூல் எழுத்துக்களை மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஓதுவதற்கு எளிதாய், உணர்தற்கு அரியதாய், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பதாய், அறம், பொருள், இன்பம் என்னும் புருடார்த்

தங்களைப் பற்றிக் கூறுவதாய் அமைந்துள்ளது. தமிழருக்குக் கிடைத்த தனிப்பேறான இந் நூல் இன்று உலகச் சொத்தாக விளங்கு கின்றது. ஏன் தமிழ் இன்று வளர்ந்து, வாழ்ந்து, நிலைத்திருக்கிறது என்றால் அதற்குக் கார ணம் கூட இத்திருக்குறளேயாகும். இதனைக் கற்காதிருப்பவன் மனிதனாகவே முடியாது.

உள்ளதை உள்ளவாறு உலகிற்கு உணர்த்தும் உயரிய இந்நூல் தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் கொள்ள வும் தள்ளவும் வேண்டியவை எவை? என வலியுறுத்துகின்றது. வாழ்க்கையில் நன்மை பயப்பனவற்றை எடுத்துக்காட்டி இவற்றைச் செய் என்றும் தீமை பயப்பன வற்றை எடுத்துக்காட்டி இவற்றைச் செய் யற்க என்றும் அறிவுறுத்துகின்றது.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பது என்ற சிறப்புமிக்க தேசியப்பண்பை எடுத் துக்காட்டியுள்ளது. சாதியால், தொழிலால், செல்வத்தால் பிளவுபட்டுப் பல குழுக்களா கப் பிரிந்து பாழ் செய்யும் உட்பகையை வளர்த்து அல்லற்படும் மக்களுக்கு ஒன்று பட்டு வாழ வழிகாட்டியுள்ளது. பொதுவுடை மைக் கொள்கைக்குரிய அடிப்படைக் கருத் துக்களை எத்தனையோ ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பே அறத்தின் அடிப்படையில்

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322)**

எனக் கூறியுள்ளது.

ஒரு சொல்லைப் பலமுறை கையாண்டு கற்போர் மனத்தில் கருத்தை நன்கு பதிய வைக்குமாறு சுவைபட அழகாக வலியுறுத்து கின்றது. மக்கள் பயனில்லாதவற்றைப் பேசிக் காலத்தையும் ஆற்றலையும் வீணாக்காது பயனுள்ளவற்றை மட்டுமே பேசி ஆற்றலை மேம்படுத்த வேண்டும் என்கின்றது.

**"சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்" (200)**

என்ற இக்குறளில் "சொல்" என்ற பதம் ஐந்து தரம் வருவது அவதானிக்கத் தக்கதாகும். இவ்வாறு பலகுறள்களைக் காணமுடிகிறது.

இன்று சமூக உறவில் உற்றார், உறவினர், அயலவர்களைக் காட்டிலும் நட்பு முக்கியம் பெறுகிறது. ஒருவர் தனக்குரிய நட்பினை எவ்வாறு தேடிக்கொள்வது? திருக்குறளை நாடினாற் போதும். அங்கே

**"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகை நாடி மிக்க கொளல்" (504)**

என்ற குறள் என்ன கூறுகின்றது. நாம் நட்புக் கொள்ளக்கருதியவரிடம் உள்ள நற்குணங் களையும் குறைகளையும் ஆராய்ந்து பார்த்து நற்குணம் மிகுந்திருப்பவரையே நட்பாக்கிக் கொள்ள வேண்டும். இன்று எத்தனை பேர் இவ்வாறு நடந்து கொள்ளு கின்றனர்?. காரணம் அவர்கள் திருக் குறளைக் கற்றிருக்கமாட்டார்.

திருக்குறளில் வள்ளுவப்பெருந்தகை யாரையும் போற்றியோ தூற்றியோ பேசவில்லை. ஆனால் பல புலவர்களும் அறிஞர்களும் திருக்குறளின் பெருமையைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

**"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்"**

எனப் புலவர் இடைக்காடனார் கூற ஒளவை யார் அதற்கும் ஒருபடி மேற்சென்று

**"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்"**

என்றார். பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என வள்ளுவனைப் பெற்றதால் அவன் பிறந்த நாடே பெருமையடைகின்றதாகக் கூறியுள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

**"வானுக்குச் செங்கதிர் ஒன்று–புனல்**
**வண்மைக்குக் காவிரி ஒன்று – நல்ல**
**மானத்தைக் காத்து வாழ் என்னும் –இந்த**
**வையத்திற்கு ஒன்று – திருக்குறள்"**

என்றார். மதுரைத் தமிழ் நாகனார்.

**"எல்லாப் பொருளும் இதன்பால் உள –இதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லை"**

என்றார். புலவர் கவுணியார் "திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் ஓதுவோர் நாவுக் கின்பம், கேட்போர் செவிக்கின்பம், சிந்திப்பவர் உள்ளத்திற்கின்பம்." என்றார். புலவர் கபிலர் "தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட பனையளவு காட்டும் படித்தால்" என வியந்து போற்றியுள்ளார். ஔவையார் நல்வழியில் ஏழு சிறந்த நூல்களைக் குறிப்பிடுகையில்

**"தேவர் குறளும் திருநான்மறை முடியும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் –கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவாசகமென்றுணர்"**

என்று முதல்நூலாகத் திருக்குறளைக் கூறியுள்ளமையைக் காணலாம். கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை

**"வள்ளுவன் தந்த திருமறையைத் –தமிழ்**
**மாதின் இனிய உயிர்நிலையை**
**உள்ளம் தெளிவுறப் போற்றுவோமே–என்றும்**
**உத்தமராகி ஒழுகுவோமே"** என்றார்.

இவ்வாறு தமிழ்ப்புலவர்கள் மட்டுமன்றி 'அல்பேட் சுவைட்சர்' என்னும் வெளிநாட்ட றிஞர் "மக்கள் யாவரையும் முழு மனித னாக்கும் தமிழ்மறையைப் போன்று சிறந் தோங்கும் இலக்கிய நூல் இவ்வுலகில் வேறொன்றுமில்லை" என்றாரெனின் குறளின் பெருமை விளங்குமன்றோ. இத்த கைய சிறப்புக்கள் மிக்க திருக்குறளை மக்கள் படிப்பதன் அவசியம் புரிகிறதல்லவா?

மாணவர்களும் கற்றறிந்த அறிஞர் பெருமக்களும் பல்வேறுதுறைகளைச் சார்ந்தவர்களும் தாந்தாம் நோக்கும் வித மாக குறள் அமைந்துள்ளதென உரிமை பாராட்டுகின்றனர். பொருளாதாரம் கற் போருக்கு பொருளாதார நூலாகவும், சட்டத்துறையில் ஈடுபடுபவர்க்குச் சட்ட நூலாகவும், அரசியற்துறையில் ஈடுபடு வோருக்கு அரசியல் நூலாகவும், அனை வருக்கும் அறநூலாகவும் விளங்குகிறது.

இன்றைய அவசர உலகத்திற்குப் பொருந்துவது போன்று இருபத்தியிரண்டு எழுத்துக்கள் தொடக்கம் நாற்பது எழுத் துக்கள் வரை சிக்கனமாகப் பயன்படுத்தி ஏழு சீர்களைக் கொண்டு ஒன்றேமுக்கால் வரியில் இத்தனை சிறப்புக்களை வேறு யாராலும் கூறியிருக்க முடியாது.

இத்தகைய சிறப்புக்கள் மிக்க திருக் குறளை எமது ஓய்வுநேர நண்பனாக்கி நல் லுறவு கொண்டு அதன்படி நடப்போமாயின் நாமும் நன்கு வாழ்ந்து நம்மைச் சூழ்ந் தோரையும் வாழவைத்து மகிழமுடியும். வளமான வாழ்வுக்கு வள்ளுவம் கைகொ டுக்கும் என்ற உண்மையை உணர்ந்து அதனை நன்கு கற்றுப் பயன் பெறுவோம்.

♣ ♣ ♣

# இலங்கைச் சிற்பக்கலையின் சுதேசக்கலை மரபு

***திருமதி. ஜெயா செல்வச்சந்திரன்***
*ஆசிரியை*

ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் தொடர்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்த மக்களது நம்பிக்கைகள் எண்ணங்கள் சிந்தனைகள் என்பவை மூலம் கலை வடிவமைப்பைப் பெறுவது சுதேசக்கலை மரபு ஆகும். பின்னர் அம்மண்ணிற்கு வெளியே இருந்து வந்திருக்கக் கூடிய பண்பாட்டுச் செல்வாக்குக்குட்பட்டு ஒரு சுதேச நிலையைப் பெறுகிறது. இவ்வகையில் இலங்கைச் சிற்பக்கலை மரபில் சுதேசியத் தன்மையைப் பற்றி ஆராய்வோமானால், இலங்கைச் சிற்பக்கலையானது சில தனித்துவமான அம்சங்களுடன் கூடிய வரலாற்றுத்துறை கொண்டதாகும். இதன் தொன்மையை அறிவதற்கு அகழ்வாராய்ச்சி, மானிடவியலாளராய்ச்சி என்பன உதவுகின்றன. தென்னாசியாவைப் பொறுத்தவரையில் சமய அடிப்படையிலான கலைமரபுகளே பெரிதும் வளர்ச்சி பெற்று மக்களால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம். இந்தியாவை எடுத்துக் கொண்டால் கூட கட்டடக்கலை, சிற்பம், ஓவியம், இசை, நாடகம் போன்றவை யாவும் மக்களுடைய வாழ்க்கை முறையை சமய வாழ்வின் இயல்பினை வெளிப்படுத்துவதாகவே வளர்ச்சி பெற்றருந்தன.

இலங்கைத்தீவில் வளர்த்தெடுக்கப்பட்ட கலை மரபுகள் கூட இந்தியப் பெருநிலப்பரப்பில் வளர்ச்சி பெற்றிருந்த கலைக்கோலங்களுடனேயே மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தன. இந்தியப் பெருநிலப் பரப்பிலே சமயக் கோட்பாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியை மையமாகக் கொண்டே கலை வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களானது இலங்கைத் தீவினையும் பாதித்திருந்ததனைக் காணலாம். இதனால் தென்னிந்தியப் பெருநிலப்பரப்பினை அண்மித்திருந்த இலங்கையில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட வம்ச அரசியல் மாற்றங்களினூடாக கலை வளர்ச்சி வெளிப்பட்ட முறைகளிலும் இந்தியப் பண்புகள் வெளிப்படுத்தப் பட்டு சென்றிருப்பதனைக் காணலாம்.

இலங்கைத்தீவின் கலை மரபுகள் யாவும் இந்து, பௌத்த மதங்களின் செல்வாக்கிற்குள் கையடக்கப்படுத்தப்பட்ட நிலையில் வளர்த்தெடுக்கப்பட்டிருப்பினும் தனித்துவம் வாய்ந்த சில சிற்பக்கலை மரபு சுதேசியத் தன்மையுடன் தோற்றுவிக்கப்பட்டிருந்தமையைக் காணலாம். இச் சுதேசியக் கலை மரபுத்தன்மை கொண்டமையான சிற்பங்கள் பல பௌத்த கட்டடக்கலையின் கூறுகளில் காணப்படும் உபபிரிவுகள் பலவற்றில் காணப்படுகிறது. அந்த வகையில் பௌத்த மதக் கட்டடமாகிய ஸ்தூபியோடு சேர்ந்த கட்டட பாகங்களான வாயிற் படிக்கட்டு,

வாகல் கடம், சந்திர வட்டக் கற்கள், படிகக்கட்டு, படிக்கட்டு கைவரிசைகள், துவாரபாலக வடிவங்கள், நாககுள்ள வடிவ காவற்கற்கள் போன்றவற்றிலே இலங்கைச் சிற்பங்களிற்குரிய அதே சுதேசியத் தன்மையைக் காணலாம்.

இலங்கையின் சிற்பக்கலை வரலாற்றிலும், பௌத்த சமயக்கலை வரலாற்றிலும் இடம்பெறும் பிரதான கலைச் சிற்பங்களாக காட்சியிருப்பவை நாகதுவார பாலகர் வடிவங்களாகும். இலங்கையின் கலை மரபிலே தனித்துவமாக அமைந்த இந்த நாகதுவார பாலகர்களின் தோற்றமானது திரிபங்க நிலையில் தலையில் மூன்று அல்லது ஐந்து தலைமுறை நாகத் தலைகள் குடைவிரித்த நிலையில் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். துவாரபாலகர் இரு மருங்கிலும் முறையே வலது கரத்தினில் நிறை குடத்தை (full pot)அல்லது நீர்க்கலசத்தினை தாங்கிய வகையில் சித்திரிக்கப்பட்டிருப்பதும் செழிப்புத் தெய்வக் கொள்கையினை எமக்கு எடுத்துக்காட்டுகிறது. இச்சிற்பத் தொகுதி வெளிப்படுத்தப்பட்ட கூட்டத் தொகுதியைப் பார்க்கும் பொழுது தென் இந்தியாவில் நடுகல் காட்டியுள்ள முறைமையை நினைவுகூருகிறது. இவ் நாக துவாரபால வடிவங்களை அநுராதபுர கால தூபிகளான இரத்தினப் பரசாத மாளிகை, தூபராமை, யேத்தவனராம, அபயகிரி முதலியவற்றில் காணலாம். நாகதுவார பாலகர்களது முதல் தோற்றத்தினை எகிப்திய நாகரிகத்தில் சமய வடிவங்களிலிருந்தே நாம் முதலில் கண்கிறோம். எகிப்திய பிரமிட்டுக்கள் மம்மியை வைத்திருக்கும் சுரங்க அறை வாசலில் இரு மருங்கிலும் இந் நாக பாலகர்களை ஒத்த வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மத்திய தரைக்கடல் நாகரிகத்து ஓர் அம்சமாகவே அங்கு நாகபாலகர் வடிவங்கள் எகிப்திய சிற்பக்கலை மரபுடன் இணைந்து கெண்டிருந்தன. அவை பின்னர் கிரேக்க, வாணிப மார்க்கங்களினுடாக தென்னாசியாவை வந்தடைந்திருந்தன. புவன வாணிபர்களால் எடுத்துவரப்பட்ட கலைவடிவங்களுள் பாவை விளக்கும், பறக்கும் நாகபாலர் வடிவங்களும் உள்ளடங்கும். கி.மு 5ம் நூற்றாண்டளவில் இவ்விரு கலை வடிவங்களும் தென்னாசியாவை வந்தடைந்தன. அவையே பின்னர் பௌத்த வாணிப மையங்களான காந்தபுரம், மதுரா, நாகர் சுனகொண்டா, அமராவதிப் பகுதி, காஞ்சி போன்ற மையங்களை ஜவனவாணிப காலங்களினூடாக சென்றடைந்து கொண்டன. அவ்வழியே அமராவதி – இலங்கை மார்க்கங்களினூடாக கந்தரோடை, அனுராதபுரம் போன்ற சர்வதேச வாணிப மையங்களையும் சென்றடைந்தன. இதன் விளைவே இலங்கையில் நாம் காணும் நகர துவார பாலகர் வடிவங்களாக அமைந்தன.

இத்துவாரபாலக வடிவங்கள் குறியீட்டளவில் செழிப்பு (fertility) தெய்வ வடிவமாகவும், தாய்மையின்மையமாகவும் விளங்கும். இச்சிற்பங்கள் இலங்கைக்கேயுரிய தனித்துவமான அலங்காரச் சிற்பக் கலை வனப்பிற்குரிய ஓர் ஊடகமாகவும் மாற்றம் பெற்றுக் கொண்டிருந்தது குறிப்

பிடத்தக்கது. ஆரம்ப கால நாகதுவார பாலகர்களினது வடிவங்கள் யாவும் நீர் நிறுவனங்கின் அயலிலே நாட்டல் பெற்றிருந்தன. அவை யாவும் ஐந்து தலை நாகபாம்பொன்றின் விரிந்த தலையினுள் அமைக்கப்பட்டவையாகக் காணப்பட்டன. வேறு சில அசைவுத் தன்மையைக் கொண்டு பாம்பின் உடற்பகுதி எட்டுப் போல வளைக்கப்பட்டு ஐந்து தலைகளும் விரிந்த நிலையிலும் சட்டகத் தொகுதிக்குள் செதுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதனை அனுராதபுரகால புராதன குளங்கள் மூலம் கிடைக்கப் பெற்றவை சான்று பகர்கின்றன.

இதனை உற்று நோக்கும் போது புராதனகாலத்தின் நீர்வளத்தைப் பாது காக்கும் பொருட்டு நாகபாலக்கற்கள் அமைக்கப்படடிருக்கலாமெனக் கருதப் படுகிறது. அத்துடன் பௌத்த சமய வருகையின் பின்னர் பௌத்த தூபிகளி முகப்பில் செதுக்கபபட்ட நாக துவார பாலகர் வடிவங்களில் மனித உருவம் மிகப்பெரியதாகவும், பாம்பின்தலை மிகச்சிறியதாகவும் சித்தரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைக்கேயுரிய பௌத்தக் கட்டடக்கலைக் கூறுகளுள் சுதேசக் கலைமரபின் தன்மையைக் கொண்டு விளங்கும் சிற்பத்தொகுதியாக சந்திர வட்டக்கற்கலை விளங்குகிறது. இச்சந்திர வட்டக்கல்லானது ஒரு பௌத்த வழி பாட்டுத்தலத்தின் வாயிலிலோ அல்லது ஸ்தூபியின் வாயிற் படிக்கட்டின் கீழ்ப் பாகத்தில் அமைக்கப்படும் அரை வட்ட வடிவமுடையதாகக் காணப்படும் ஒரு கற்பலகையை சந்திர வட்டக்கல் என அடையாளம் காண முடியும். பௌத்த சிற்பவியலில் பெருவழக்காகவுள்ள இச்சந்திர வட்டக்கல் ஆதியில் இந்தியா விலிருந்து வந்து இலங்கையில் சுதேசியத்தன்மையுடன் சிறப்பாக வளர்ச்சி பெற்ற சிறப்புமிக்கதோர் கலை அம்சமாகும். இதனை மதிக்காமல் விட்டதால் இக்கலைமரபானது இந்தியாவில் அற்றுப் போனதாகக் கருதப்படுகின்றது. இலங்கையின் சந்திரவட்டக்கல் வளர்ச்சியினை நோக்கும் முன்பு இக்கலை மரபின் சிறப்பியல்பை அறிவது சிறப்பானதாகும்.

இக்கலைமரபானது இந்தியக்கலை மரபில் தோற்றம் பெற்றுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. தென்னிந்தியாவில் பிரபலமான பௌத்த மையங்களாக விளங்கிய நாகர்ச்சுன கொண்டா, அமராவதி ஆகிய இடங்களில் எவ்வித அலங்கார செதுக்கல் வேலைப்பாடுகளும் இன்றி வெறுமையான கற்தட்டங்களாக (composite stones) தோற்றுவிக்கப்பட்டிருந்தன. நாகச்சுளாவில் காணப்படும் சந்திர வட்டக்கல் கற்தூண்களையுடைய கற்தட்டமாவே இணைத்து வைக்கப்பட்டுள்ள தன்மையைக் காணலாம்.

இதனையொத்த சந்திரவட்ட படிக்கல் ஒன்று கந்தரோடையில் கண்டுபிடிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இது எவ்வித செதுக்கல் வேலைப்பாடுகளுமின்றி ஆரங்களுடன் கூடியவையாக

காணப்படுகின்றது. இலங்கையிலுள்ள சந்திரவட்டக்கல்லில் மிகப் பழைமை வாய்ந்தது மிகுந்தலையிலுள்ள சந்திர வட்டக் கல்லாகும். இதுவும் கந்தரோடை சந்திரவட்டக்கல்லை ஒத்ததாக காணப் படினும் பிரதான வேறுபாடு என்னவெனில் மிகிந்தலையிலுள்ள சந்திர வட்டக்கல்லின் உட்பகுதி முழுவதுமாக பிராமி வடிவம் தீட்டப்பட்டுள்ளது என்பதாகும். சில வரலாற்றாசிரியர்கள் அவ்வடிவத்தின் தன்மையைக் கொண்டு அச்சந்திர வட்டக் கல்லானது கி.மு 6ம் நூற்றாண்டுக்குரிய தென மதிப்பிட்டுக் கொள்வதையும் அறியமுடிகின்றது.

இலங்கையில் கிடைத்த சந்திரவட்டக் கல்லின் பிரதான இயல்புகளை நோக்கும் போது இலங்கையிலே தான் அவை மிகவும் நெருக்கமான முறையில் பல வளைய ஆரைச் சிறைகளாக்கப்பட்டு, ஒவ்வொரு வளைய ஆரைச் சிறையிலும் அலங்கார சிற்ப வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். மைய ஆரைச்சிறையில் தாமரைப்பூ இதழ்களைக் கொண்டு முதலில் அன்னம் அடுத்து யானை, எருது, குதிரை, சிங்கம் என ஒரே ஆரைச் சிறையில் அசையும் மிருக வடிவங்களும் அதனையடுத்து கொடிப்பின்னல் வரிசை என அடுக்கடுக்காய் செதுக்கப்பட்டுள்ளதனைக் காணலாம். தீ நாக்குகளின் வடிவம் சந்திர வட்டக்கல்லில் வெளி விளிம்பில் செதுக்கப்பட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கதாகும். இவை யாவற்றையும் புடைப்பு சிற்ப முறையில் அசைப்பதனூடாக சிற்பியானவன் மிருகங்களின் ஓட்ட வேகத்தினை துல்லியமாக உயிர்த்துடிப்புடன் செதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையின் சந்திர வட்டக் கற்களில் அனுராதபுர காலத்து சந்திர வட்டக்கற்கள் மிகவும் நுண்கலை ரீதியாக அலங்கார வேலைப் பாடுடையனவாகும். ஆனால் பொல நறுவைக் காலப்பகுதி சந்திர வட்டக் கற்கள் இதிலிருந்து மாறுபட்ட தன்மையைக் கொண்டிருக்கின்றன. அதாவது பொல னறுவைக் காலப்பகுதி சோழ மன்னின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தமையால் எருது ஆனது சிவனுடைய வாகனம் எனக் கருதி அதனை சந்திரவட்டக்கல்லிலிருந்து நீக்கியதுடன் இக்காலப்பகுதியில் ஒவ்வொரு மிருகமும் ஒவ்வொரு ஆரைச்சிறையில் செதுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சோழர் கால சந்திரவட்டக்கல் (பொலநறுவை வட்டதாகே) கண்டிய காலப்பகுதியில் சந்திர வட்டக்கற்கள் யாவும் அலங்காரத் தன்மை குறைந்தும், இலட்சணை வடிவிலும் செதுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் சந்திரவட்டக்கற்கள் தூபராமை, அபயகிரி தாதுகோபம், பொலனறுவை வட்டதாகே, மகாசேனன் மாளிகை, மிகுந்தலை சைத்தியம், ருவான் வெலிசாய தாதுகோபம், அனுராதபுர ராணி மாளிகை, அனுராதபுர புனித வெள்ளரசு மரக்கிளை (Bo-Tree temple) கோயில் போன்ற இடங்களில் பொதுவாக மிருகங்கள் இடமிருந்து வலமாக

ஒன்றன்பின் ஒன்றாக செல்வதைப் போலக் காணப்பட, பொலநறுவைக் கால சந்திரவட்டக்கற்களில் மிருக அணி வரிசை வலமிருந்து இடமாகச் செல்கின்றது. இதில் அனுராதபுரத்தில் காணப்படும் ராணி மாளிகை (Queen pavilion) சந்திரப் படிக்கல் வலமிருந்து இடமாக மிருக வரிசை அசைவது போலவும் இலங்கை யிலுள்ள சந்திரவட்டக் கற்களை மிகவும் அழகியல் தன்மை வாய்ந்ததான ஆரைச் சிறைகளைக் கொண்டு விளங்குகின்றது.

இவ்வாறாக சந்திர வட்டக் கற்கள் எவ்வாறு நாகபால வடிவங்கள் இலங்கைக் கேயுரிய பண்பாட்டு அம்சங்களுடன் கூடிய சுதேசக் கலை மரபுகளுடன் தோன்றி வளர்ந்ததோ அதேபோல தனித்துவமான சுதேசக்கலை வனப்புடன் அமைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சிற்பக்கலை வரலாற்றில் பௌத்த மதஸ்தூபிகளின் பட்டிடப்பகுதி களில் இடம்பெறும் ஒரு அங்கமாகிய வாசற்புறத்தில் அமைக்கப்படும் பூரண கும்பமும் இலங்கை சிற்பக்கலை மரபில் நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இலங்கை பௌத்த தூபியின் வாசற் புறங்களில் இவை முழு உருவிலும் புடைப்புச் சிற்ப வடிவிலும் கல்லிலே செதுக்கப்பட்டுள்ளன. மகாவம்சத்திலும் சத்தாதீசன் மகாதூபி யில் இத்தகைய மலர் நிறைந்த பூரண கும்பம் வைத்தான் எனக் கூறப்படுகின்றது. இதிலிருந்து மலரைக் கையிலேந்திய, நீர் நிறைந்த பூரண பரணவிதான குறிப்பிடு கின்றார்.

மேற்குறிப்பிட்ட சந்திரவட்டக் கற்கள், நாகபால வடிவங்கள், நாகக்கற்கள், பூரண கும்பம் என்பன பற்றி நோக்குமிடத்து இவையனைத்தும் சமுத்திரங்களின் முதல்வர்கள் என சாகவாகனர் காலத்தி லேயே ஆந்திரக் கலை மரபின் அடிப்படை யில் இச்சிற்பங்கள் சிறந்த முறையில் எழிலுருவம் பெற்றது. சமுத்திரவியலை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் கலை பரிமானம் பெறுவதனையும் இங்கு அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு தோற்றம் பெற்ற கலை மரபுகள் இலங்கை யிலே சுதேசியத் தன்மையுடைன் பல்வேறு படிநிலை வளர்ச்சியூடாக பல சிறப்புக் களைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வாறு இலங்கைச் சிற்பவியலின் சுதேசக் கலைமரபானது பிறநாட்டு கலை விழுமியங்களோடு போட்டி போட்டு தனக்குரிய, இலங்கைத் தேசத்திற்குரிய ஒரு இனத்துவ அடையாளமாக" பிரதி பலிக்கின்றது.

♣ ♣ ♣

⌖ **நல்ல சிந்தனைகள், உயர்ந்த எண்ணங்கள் மனவலிமைக்கு ஆக்கம் தரக்கூடியன.**

⌖ **தீய சிந்தனைகள் தாழ்ந்த எண்ணங்கள் மனவலிமையைச் சிதைக்கக் கூடியன.**

# CANCER

*Miss. T. Vijith*
*Grade 11[A]*

## Introduction

Cancer is a group of more than one hundred diseases marked by abnormal and harmful growth of cells. Cancer can develop in any tissue in the body. Some types of cancer remain in the tissues where they started. Some cancers travel in the blood or lymph fluids. They move to other parts of the body that are far from the original site. When cancer spreads to distant tissues, it is said to have metastasized.

## Symptoms of cancer

The symptoms of cancer vary according to the type of tissue affected by the disease a person with lung cancer. For example might have a cough that doesn't get better with medical treatment. A woman with breast cancer might feel a lump in her breast. Blood in the stool may be a sign of cancer in the intestines or the colon.

## Some types of cancer

There are many types of cancer in the world. There are over one hundred different kinds of cancer. Some types are common.

### 1. Breast cancer

One in 8 American Females will develop breast cancer during her life. Woman whose female relatives had or have the disease are at an increased risk of developing breast cancer also who have child by age30 are lese likely to develop the disease than child less women.

### 2. Prostate cancer

Prostate cancer is the most common cancer in men. One in eleven American men will get the disease. Most cases of Prostate cancer occur in men over the age of 65. In these situations the disease often develops slowly in their 40s and 50s also get the disease but it grows more rapidly in men in this age group.

### 3. Lung cancer

This is common to both men and women over 85% of people with lung cancer develop the disease because they smoke.

### 4. Skin cancer

It is the most common type of cancer in the United States. About 600,000 new cases of this kind of cancer occur in the United States of America each year. Most skin cancer is caused by harmful radiation from the sun and the lights used in tanning booths.

## Treatment for Cancer

There are three basic kinds of treatment for cancer. One common method of cancer treatment is to use drugs that destroy cancer is known as chemotherapy.

Another form of cancer treatment is radiation, which uses energy waves to destroy cancerous tissue. Radiation is often used to treat some forms of thyroid cancer.

Third treatment is surgery. Surgery involves removing the cancer cells and near by tissue that the cancer may have affected surgery is commonly used to treat skin cancers.

♣ ♣ ♣

This is the moment when we must build on the wealth that open markets have created, and share its benefits more equitably. Trade has been a cornerstone of our growth and global development. But we will not be able to sustain this growth if it favors the few, and not the many.

**- Barack Obama**

Anger and intolerance are the enemies of correct understanding.

**- Mohandas Gandhi**

And oftentimes, to win us to our harm,
The instruments of darkness tell us truths,
Win us with honest trifles, to betray's
In deepest consequence.

**- William Shakespeare**, *"Macbeth", Act 1 scene 3*

# கல்வியும் நவ குடியேற்றவாதமும்

*திரு. பொ. சுதாகரன்*
*ஆசிரியர்*

உலக மேடையில் இலங்கைத் தமிழனுக்கு முகவரி கொடுத்த மிக உன்னதமான உயிர் "கல்வி" ஆகும். பண்டையகாலம் முதல் குருகுலக் கல்வியாக **"வையத்துள் வாழ் வாங்கு வாழ"** வழிகாட்டிய கல்வி, ஆங்கிலேயர் காலத்தில், "பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை வாழ வைக்கும்" கல்வியாக மாறலாயிற்று. இத்தகுபோக்கால் "சுதேசியம் சிதைவதைக்" கண்ணுற்ற தேசியத் தலைவர்கள் தத்தம் இன, மத, மொழிகளைப் பாதுகாக்க "தேசிய மறுமலர்ச்சியை" உருவாக்கி அதில் பாரிய வெற்றியும் கண்டனர். 1948ற்கு பின் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு கல்விசார் மாற்றங்கள் வந்தாலும் அவை எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. அண்மைக் கால கல்விப் போக்கு எம்நாட்டு மூளைசாலிகளை வெளியேற்றும் அல்லது அந்நிய நாடுகள் இவர்களைக் கொள்ளையடிப்பதற்கு ஊக்குவிக்கும் காரணிகளாகவே உள்ளது. இத்தகு நிலை பொருளாதார ரீதியில் எம்மை "இலவு காத்த கிளியாக்கியுள்ளது." இத்தகுபோக்கினை மாற்றி எமது நாட்டின் விருத்திக்கு பயன்படும் கல்விச் சமூகமாக எம்மை ஆக்கிக் கொள்வதற்கு மேற்கொள்ளக்கூடிய சில நடவடிக்கைகளை அடையாளப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கைத் தீவில் பன்நெடுங்காலத்திற்கு முன் குருகுலக்கல்வி தளைத்தோங்கி காணப்பட்டது. அதில் மனிதவாழ்க்கை மாணவநிலை, இல்லறநிலை, வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்காக வகுக்கப்பட்டது. இதில் மாணவநிலை ஏனைய நிலைகளுக்கு அத்திபாரமாக கருதப்பட்டு "வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியை" குருவானவர் தான் வாழ்ந்து காட்டியும், மாணவர்களை வாழப்பழக்கியும் வந்தார். குறிப்பாக இவ்வுலக வாழ்க்கைக்கு தேவையான பொருளை எவ்வாறு தேட வேண்டும்? அதை எவ்வாறு செலவு செய்ய வேண்டும்? மறுவுலக வாழ்க்கைக்கு எவ்வாறு அத்திபாரம் இட வேண்டும்? உண்மைப்பொருள் எது? அது எங்கு காணப்படுகின்றது? அதன் குணங்கள் எவை? என பரந்துபட்டரீதியில் வேதாகம கருத்துக்களின் அடிப்படையில் ஆராயப்பட்டன. இதனால் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயனுறுதி மிக்க இளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் எமது பண்டைய கல்விச் சமூகம் வெற்றி கண்டது என்றால் மிகையாகாது.

இந்நிலை உலகவரலாற்றின் போக்கால் மாற்றம் அடையலாயிற்று. அதாவது 1453ஆம் ஆண்டு சிலுவை யுத்தங்களால் நலிவுற்ற பொருளாதாரத்தை மீள கட்டியமைக்கமுடியாது திண்டாடிய ஐரோப்பியர், அதை மீட்பதற்கு "நாடு காண் பயணத்தை" கருவியாகப் பயன்படுத்தினர். அதாவது தம்மை தோற்றகடித்த முஸ்லீம்

களை பழிவாங்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கையை இன்றும் கூட எடுத்து வருகின்றனர். அதன் ஓர் அங்கமாக முஸ்லீம்களின் வர்த்தகத்தை முறியடிக்கும் நோக்கில் கீழைத்தேச நாடுகளைக் கைப்பற்றினர். இந்தவகையில் இலங்கைக்கு வந்த ஐரோப்பியர்கள் வரிசையில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அரசியல், பொருளாதாரம், கலாசாரம் என பல்வேறு துறைகளில் இன்றுவரை காணப்படுகின்றது. அதில் கல்வியின் செல்வாக்கை நோக்குகையில், 1796இல் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் 1815ல் மலையகத்தைக் கைப்பற்றி, தமது நிர்வாக நடவடிக்கையை 16பிரிவுகளாக வகுத்து, ஆட்சி செய்ய முற்பட்டனர். இங்கிருந்து கிடைக்கும் வருமானத்திலும் பார்க்க நிர்வாகச் செலவு அதிகமாக இருந்தமையால், அதனைப் பிரித்தானியப் பாராளுமன்றம் கண்டித்ததை அடுத்து, இலங்கைக்கு வருகை தந்த கோல்புறூக் கமறன் ஆணைக்குழு பல்வேறு சிபாரிசுகளை முன்வைத்தது. அதில் நிர்வாகச் செலவைக் குறைப்பதற்காக ஆங்கிலேய நிர்வாகி களுக்குப் பதிலாக சுதேசிகளுக்கு (தமிழ், சிங்கள மக்களுக்கு) ஆங்கிலத்தைப் போதித்து நிர்வாக நடவடிக்கையில் ஈடுபடுத்தினர். அரச உயர் பதவிகளை விரும்பிய எமது மக்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறி ஆங்கிலக் கல்வியைக் கற்று மேலைத்தேச பண்பாடுகள், பாரம்பரியங்களை பின்பற்ற ஆரம்பித்தனர். குறிப்பாக இங்கு ஆங்கிலக்கல்வியைக் கற்ற எம்மின மக்கள் பிரித்தானிய குடியேற்றம் பரவியிருந்த அனைத்து நாட்டிற்கும் உயர்பதவி வகிக்கச் சென்றனர்.

மேற்கூறிய இத்தகுபோக்கால் எமது சுதேசிய கலாசாரம் சிதைவடைவதாகக் கருதிய "சுதேசியத் தலைவர்கள்" தத்தம் இன, மத விழுமியங்களைப் பாதுகாக்க "தேசிய மறுமலர்ச்சியை" உருவாக்கி பாரிய வெற்றியும் கண்டனர். ஆங்கிலேயர் எவ்வாறு அரச ஆதரவோடு ஆங்கிலக் கல்வியையும், தமது கலாசாரத்தையும் முன்னெடுத்தார்களோ, அதேபோன்று எம்தேசியத் தலைவர்கள் தம் சொந்தப் பணத்தில் கல்விச் சாலைகளை நிறுவினர். அந்தவகையில் சைவத் தமிழ் மக்களின் "பத்தொன்பதாம் நூற்றாண்டின் விடிவெள்ளி" என அழைக்கப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 1853ல் வண்ணார்பண்ணை ஆங்கிலப் பாடசாலையை (இன்றைய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) அமைத்தார். சேர் பொன் இராமநாதன் அவர்களும் பரமேஸ்வராக் கல்லூரியையும் (ஆண்கள் பாடசாலை, தற்போதைய யாழ் பல்கலைக் கழகம்), இராமநாதன் பெண்கள் கல்லூரியையும் (கன்னியாஸ்திரி கல்லூரி) அமைத்தார். இதேபோன்று முஸ்லீம் மக்கள் மத்தியில் அறிஞர்.எம்.சி.எம்.சித்திலெப்பை மருதானையில் சாகிராக் கல்லூரியையும் கண்டியில் சித்திலெப்பை கல்லூரியையும் அமைத்தார். சிங்கள மக்கள் சார்பில் அமெரிக்கரான கொன்றி ஸ்டீன் ஒல்கொட் அவர்கள் ஆனந்த, நாளந்தா, தர்மராஜா மகிந்த கல்லூரிகளையும் ஆரம்பித்தார். இவர்களைப் போன்று எமது ஊரைச் சேர்ந்த அமரர் [illegible] முதலியார் அவர்கள் தன் சொந்தக் காணியில் சொந்தப்பணத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை நிறுவி எமது பிரதேசத்தின் கலை, கலாசாரத்தை பேணினார் என்றால் சாலப்பொருந்தும்.

1948ற்கு பின் இலங்கையின் கல்விப் போக்கானது எம் நாட்டின் அபிவிருத்தியை மையமாகக் கொண்டமையால் மேலைத் தேச நாடுகளின் விருப்பிற்கு ஏற்ப (உலக வங்கி) அவர்களின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கைகளாகவே காணப்படு கின்றன. அதாவது ஏற்கனவே இலவசக்கல்வி முறை அறிமுகப்படுத்தினாலும் **S.W.R.D.** பண்டாரநாயக்கா 1956இல் தாய்மொழிக் கல்வி, கட்டாயக்கல்வி என்பவற்றை நடை முறைப்படுத்தியமை பாரிய திருப்புமுனை யாகும். ஆனாலும் கல்விக்கொள்கையில் பாரிய மாற்றத்தினை நாடு வேண் டி நிற்கின்ற போதிலும் கல்விக்கொள்கை வகுப்பாளர்கள் அதை சரியாக விளங்கிக் கொள்ளவில்லை. 1958ல் நடைமுறைக்கு வந்த தனிச்சிங்கள சட்டமும் பிற்போக்கான தொன்றாகவே கருதப்படுகின்றது. பல ஆண்டுகளுக்குப் பின் 1972ல் "கல்வியில் புதிய பாதை" என்னும் மகுடத்தின் கீழ் "தொழில் முன்னிலைப் பாடங்களுக்கு" முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இப்பாதையில் அபிவிருத்தியை நோக்கிக் கல்வி செல்கையில் உயர்கல்வியில் (பல் கலைக்கழக அனுமதியில்) தரப்படுத்தல் செயற்பாடு ஒரு பிற்போக்கானதாகவே காணப்பட்டது. ஆனாலும் ஒப்பீட்டளவில் "கல்வியில் புதிய பாதை" துரித அபிவிருத்தி நோக்கில் மிகவும் பயனுறுதி வாய்ந்த தாகவே இருந்தது. ஆனால் இதன் துர்ப் பாக்கியம் என்னவெனில் "அது நீண்ட காலம் நடைமுறைப்படுத்துவதற்கிடையே 1989ல் நடைமுறைக்கு வந்த "கல்வி வெள்ளை அறிக்கை" அதைப் பொருத்தப் பாடு அற்றதாக ஆக்கியது. எனினும் கல்வி வெள்ளையறிக்கையும் கல்விப் பாதையில் வெற்றி பெறவில்லை.

எமது கடந்த காலக் கல்விக்கொள்கை கள் மூளைசாலிகளை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு மூலகாரணமாக அமைந்துள்ளது. குறிப்பாக இதனை அக, புற விசைகள் என நோக்கலாம். அக விசை களாக அல்லது மூளைசாலிகளை வெளி யேற்றும் தள்ளுவிசைகளாக எம்நாட்டு வளங்களான கடல், பனை, தென்னை, தேயிலை, இறப்பர் கனியவளம், இரத்தினம், மாணிக்கம் போன்றவற்றை ஆய்வு ரீதி யாக உயர் தொழில்நுட்பத்தை புகுத்தி புதிய உற்பத்திகளை மேற்கொள்ளாமல் மாறாக மேலைத்தேச வளங்களை ஆய்வு ரீதியாக கற்றல் மேற்கொள்வதற்கு அந் நாட்டிற்கு எம்மூளைசாலிகளை வெளி யேற்றுகின்றது. இது மட்டும் அல்லாமல் நாம் கற்ற உயர்கல்விக்கு ஏற்ற வேலை வாய்ப்பு (வேலைபோதாமை) இல்லாமை, சமூக ஏற்றத்தாழ்வுகள், உள்நாட்டு யுத்தம், இன மத ரீதியான பாகுபாடு, துறைசார் நிபுணத்துவக் கல்வி இல்லாமை என்பன வலுவான அகவிசைகளாக தொழிற்படு கின்றன. பல்வேறு தரப்பட்ட புலமைப்பரி சில்கள், துறைசார் நிபுணத்துவக் கல்வி, திறமைக்கு முதலிடம், உயர்ந்த கவர்ச்சிகர மான, நாகரீக வாழ்க்கை, தனிமனித சுதந் திரம், பல்வேறுபட்ட வாழ்க்கை வசதிகளும் கடன்களும் என்பன வலுவான மேலைத் தேச நாடுகளின் இழுவிசைகளாகக் காணப் படுகின்றன. எனவே இவற்றில் இருந்து விடுபட்டு எமது நாட்டை மூளைசாலிகளை

கொண்டு வளப்படுத்தும் சில செயற்பாடு களை விரைவாக அடையாளப்படுத்தி உலக அரங்கில் எமது நாட்டை மிளிர்விக்க வேண்டியுள்ளது.

தற்காலக் கல்வியின் நடைமுறை யானது குறிக்கோள் இல்லாதவொன்றாக அதாவது எவ்விடத்திற்கு சென்றடைய வேண்டும் என்று தெரியாத நெடுந்தூரப் பயணிபோல் அவசர அவசரமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையை மாற்றி எமது உள்ளூர் மூலவளங்களை ஆய்வு செய்து நவீன உலக சந்தைக்கேற்ப அவற்றை வடிவமைத்து எமது நாட்டையும் அச்சுறுத் தும் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியுள்ளது. அதாவது வடபகுதி யின் பனைவளத்தை உதாரணமாக எடுக்கையில் அதன் அதிக உயரம் அதன் பயனை எட்டாக் கனியாக்கியுள்ளது. எனவே பயிரின் வேரினைக் கட்டுப்படுத்து வதன் மூலம் உயரத்தைக் குறைக்கலாம் எனும் தாவர உயிரியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியோ, அல்லது "நனோ" தொழில்நுட்பத்தின் ஊடு பாரமற்ற சுருக்கும் ஏணியையோ அல்லது "கைரோலிங்" தொழில்நுட்பத்தையோ பயன்படுத்தி இலகுவாக அதன் பயனைப் பெறமுடியும். பனையில் இருந்து பெறப்படும் "பதநீர்" இயற்கையான இரசாயனம் அற்ற ஒரு குளிர்மையான குடிபானம் ஆகும். இதனை ஒழுங்காகப் பதப்படுத்தி வெளிநாட்டுச் சந்தைக்கு அனுப்ப முடியும். பனங்காயில் இருந்து எடுக்கப்படும் "பனாட்டும்" அவ் வாறே பலதரப்பட்ட சுவையூட்டிகளைச் சேர்த்து "பனங்கன்ரோஸ்" என அறிமுகப் படுத்த முடியும். இது மட்டும் அல்லாது பனையின் ஓலைச்சார்வில் செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு உலக சந்தை யில் நல்ல கேள்வி உண்டு. இச்சார்வு ஓலை களை நவீன முறையில் சாயமூட்டி நன்றாக பதப்படுத்தி புதிய அலங்காரப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். பனை மரத்தின் வைரத்தில் ஊன்றுகோல்கள், குடைப்பிடி கள், சிறிய ரக இருக்கைகள் என்பவற்றை யும் செய்ய முடியும். இவ்வாறு பனையில் மட்டுமன்றி ஏனைய வளங்கள் தொடர் பாகவும் இத்தகு முறையில் சிந்தித்தால் எமது நாட்டையும் பொன்குவிக்கும் செல்வந்த நாடாக மாற்ற முடியும்.

இதே போன்று எமது நாட்டின் மூன்றில் இரண்டு பங்கு உலர் காலநிலைக்குட்பட்ட பற்றைக் காடுகளாக உள்ளது. இவற்றில் உலர் தன்மையை தாங்கி வளரக்கூடிய தாவரவகைகளை இனங்கண்டு அவற்றை பயிரிடமுடியும். அது பொருளாதார ரீதி யில் பயன்மிக்கதாக இருக்கும். எமது நாட்டின் பிரதான வளங்களில் ஒன்று தரைக்கீழ் நீராகும். இதனைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி நாம் சிந்திக்காமல் சீமெந்துப் போர்வையால் நிலத்தை மூடுவ தோடு மழைநீரை கால்வாய்கள் அமைத்து கடலுக்கு அனுப்பி வருகின்றோம். முன்னைய காலத்தில் வளவினை சுற்றி வரம்பு கட்டி மழைநீரைத் தேக்கினர். அதாவது மழை நீரானது மண்ணின் நுண் துளைகள் ஊடாக கீழிறங்கி நீரை உட்புக விடாது பாறைமேல் தேக்கி நிற்கின்றது. இத்தகு நீரையே நாம் நிலத்தை துளையிட்டு கிணற்று அல்லது குழாய்க் கிணற்று நீராக

பெற்றுக் கொள்கின்றோம். இதனைப் பாதுகாப்பதாயின் மழைநீர் பொசிந்து செல்வதற்கான மார்க்கத்தை நாம் தடைசெய்வதை நிறுத்த வேண்டும் அதுபற்றி சிந்திக்கும் பொழுது நிலத்தில் கட்டப்படும் அனைத்து கட்டடங்களும் குறைந்த பட்சம் இருமாடிகளாக இருக்க வேண்டும். அடித்தளக் கட்டடத்தின் தூண்கள் மட்டுமே நிலத்தில் உள்ளவாறு அமைவதோடு ஏனைய பகுதி சீமெந்து இடப்படாது நீரை அகத்துறிஞ்சும் வகையில் மென்மையாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும் அல்லது நீரை கீழே பொசிய விடக்கூடிய ஊடகத்தை பயன்படுத்த வேண்டும். கீழ்தளம் ஈரத்தன்மையானதாக காணப்படின் கொடிவகைத் தாவரங்களை அவற்றில் நட்டு தூண்வழி அவற்றை வளர்த்து அவற்றில் பயன்தரு தோடை மற்றும் ஏனைய பயிர்களை ஒட்டு செய்வதன் மூலம் அதிக பயனைப் பெறமுடியும். இத்தகு வகையிலும் பாலைவனமாகும் எமது நாட்டை பாதுகாக்கவேண்டும்.

எனவே இவற்றைத் தொகுத்து நோக்கும்போது, எளிமையான தன்னிறைவுப் பொருளாதாரத்தில் வாழ்ந்த நாம், ஐரோப்பியர்கள் எமது நாட்டைக் கைப்பற்றி எமது அரிய வளங்களான யானை, யானைத்தந்தம், கறுவா போன்ற வளங்களை சுரண்டியதோடு தாய் நாட்டிற்குத் தேவையான பெருந்தோட்டப்பயிர்களை இங்கு மலிவான கூலியில் பயிரிட்டு (கோப்பி, தேயிலை, இறப்பர்) தத்தம் நாட்டை வளப்படுத்தினர். இதனையே நேரடியான குடியேற்றவாதமென வகைப்படுத்தும் வரலாற்று ஆசிரியர்கள் ஐரோப்பியநாடுகள் மறைமுகமாக இன்றும் கீழைத்தேய நாடுகளைச் சுரண்டுவதை நவகுடியேற்றவாதமாகச் சுட்டிக் காட்டுகின்றனர். இந்த வகையில் எமது நாட்டின் மூலப்பொருட்களை மலிவாகப் பெற்று எமது மூளைசாலிகளைப் பயன்படுத்தி அவற்றை முடிவுப்பொருட்களாக மாற்றி எம்மிடம் சந்தைப்படுத்தி அதிக இலாபத்தைப் பெற்று வருகின்றனர். இத்தகு நிலையை மாற்றி நவகுடியேற்றவாதத்திலிருந்து விடுபட்டு எமது மூளைசாலிகளை நாம் பாதுகாக்க வேண்டும். இத்தகு சிந்தனையில் அவர்களை வளர்த்தெடுத்து அவர்களுக்குரிய கௌரவத்தைக் கொடுத்து அவர்களையும் நாட்டையும் கட்டியெழுப்புவோம்.

♣ ♣ ♣

- ஒருவரது உள்ளக்குமுறல்கள்; எதிர்பாராதெழுந்த ஏமாற்றங்கள்; தொடர்ந்துவந்த தோல்விகள்; போன்றவற்றை உள்ளம் திறந்து பேசி உள்ளச் சுமைகளைக் குறைத்துக் கொள்ள உற்ற நண்பனே தேவை.
- ஒவ்வொருவரும் குற்றமனப்பான்மையையும், அச்சமனப்பான்மையையும் பெறாமல் மாசற்றமனதைப் பெறவேண்டுமானால் உங்கள் நடவடிக்கை எதிலுமே ஒளிவு, மறைவு இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

# 1999 - 2010 க.பொ.த. சாதாரண தர, க.பொ.த. உயர்தர சிறந்த பெறுபேறுகள்




செல்வி ம. றோசல்யா
1999 - க.பொ.த. சா.தரம்
10D



செல்வி கு. சொரூபிகா
2005 - க.பொ.த. சா.தரம்
10A




செல்வி ப. பிரதீபா
2003 க.பொ.த. உயர்தரம்
3A - முகாமைத்துவம்
யாழ். பல்கலைக்கழகம்




செல்வன் க. கிரிதரன்
2005 க.பொ.த. உயர்தரம்
3A - முகாமைத்துவம்
கொழும்புப் பல்கலைக்கழகம்




செல்வி ச. சுகன்யா
2005 க.பொ.த. உயர்தரம்
3A - முகாமைத்துவம்
யாழ். பல்கலைக்கழகம்




செல்வன் வே. கஜேந்திரன்
2006 க.பொ.த. உயர்தரம்
3A - பொறியியல்
மொறட்டுவப் பல்கலைக்கழகம்




செல்வன் கி. சஞ்சீவன்
2007 க.பொ.த. உயர்தரம்
3A - பொறியியல்
மொறட்டுவப் பல்கலைக்கழகம்




செல்வன் கு. கணரூபன்
2005 க.பொ.த. சாதாரண
தரம் 10A
2008 க.பொ.த. உயர்தரம்
3A - பொறியியல்
மொறட்டுவப் பல்கலைக்கழகம்



செல்வன் ச. விஜயகுமார்
2008 க.பொ.த. உயர்தரம்
3A - கலை
யாழ். பல்கலைக்கழகம்



செல்வன் ப. பிரகாஷ்
2009 க.பொ.த. உயர்தரம்
3A - மருத்துவம்
கொழும்புப் பல்கலைக்கழகம்




செல்வன் து. விஸ்வராஜ்
2009 க.பொ.த. உயர்தரம்
3A - முகாமைத்துவம்
யாழ். பல்கலைக்கழகம்



செல்வி கா. தர்மசுகி
2010 க.பொ.த. உயர்தரம்
3A - சட்டம்
யாழ் பல்கலைக்கழகம்



செல்வி ச. லாவண்யா
2010 – தமிழ்மொழித்தினம்
தேசியமட்டம்
தனிநடனம் – முதலாமிடம்



செல்வன் சி. சிவபாலன்
2010 – மெய்வன்மை
மாகாணமட்டம்
சட்டவேலி பாய்தல் – முதலாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.



செல்வி தே. காயத்திரி
2011 – English day
மாகாணமட்டம்
Dictation – இரண்டாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றவுள்ளார்.




செல்வி வி. டிலானி
2011 – மெய்வன்மை
மாகாணமட்டம்
சட்டவேலி பாய்தல் – மூன்றாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.




செல்வி செ. சுகன்யா
2010, 2011 – மெய்வன்மை
மாகாணமட்டம்
தட்டெறிதல் – முதலாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.

# மாகாணமட்ட, தேசியமட்ட வெற்றியாளர்கள்
# 1999 - 2011



செல்வன் த. பிரபாகரன்
1999 - தமிழ்மொழித்தினம்
சிறுகதை ஆக்கம்
தேசியமட்டம் - முதலாமிடம்


செல்வி வை. ரஞ்சினி
2009 - தமிழ்மொழித்தினம்
தனி இசை
மாகாணமட்டம் இரண்டாமிடம்






செல்வி த. சில்வியா
2009 - English day
Copy writting
மாகாணமட்டம் - இரண்டாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.

செல்வி க. யசோதா
2009 - English day
Copy writting
மாகாணமட்டம் - மூன்றாமிடம்






செல்வி ஸ்ரீ. கௌசிகா
2010 - English day
Solo Acting
மாகாணமட்டம் - முதலாமிடம்



செல்வி சி. கோபிகை
2010 - மெய்வன்மை
மாகாணமட்டம்
குண்டெறிதல் - முதலாமிடம்
தட்டெறிதல் - மூன்றாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.

செல்வன் மா. தினேஸ்குமார்
செல்வன் சு. சுதர்சன்
செல்வன் இ. தனுசன்
செல்வன் இ. கிருஷ்ணவினோகரன்
செல்வன் ந. ஜெயச்செந்தூரன்
2010 - மெய்வன்மை - மாகாணமட்டம்
4 x 100 அஞ்சல் - மூன்றாமிடம்



செல்வன் கு. ஜெயக்குமார்
2011 - மெய்வன்மை - மாகாணமட்டம்
110m சட்டவேலி பாய்தல் - முதலாமிடம்
400m சட்டவேலி பாய்தல் - முதலாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.


செல்வன் கோ. கிரிசாந்
செல்வன் இ. நிரோஜன்
செல்வன் ச. சிந்துஜன்
செல்வன் அ. தனுசன்
செல்வன் கி. பிரசாந்
செல்வன் கு. சஜீவன்
2011 - மெய்வன்மை - மாகாணமட்டம்
4 x 100 அஞ்சல் - மூன்றாமிடம்



செல்வி த. நிதுஷா
2010 – மெய்வன்மை – மாகாணமட்டம்
சட்டவேலி பாய்தல் – மூன்றாமிடம்
2011 – மெய்வன்மை – மாகாணமட்டம்
சட்டவேலி பாய்தல் – முதலாமிடம்
முப்பாய்ச்சல் – இரண்டாமிடம்
நீளம் பாய்தல் – மூன்றாமிடம்
தேசிய மட்டத்தில் பங்குபற்றினார்.

செல்வி பா. ரஜிதா
2011 – மெய்வன்மை
மாகாணமட்டம்
ஈட்டி எறிதல் – முதலாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.






செல்வன் இ. நிரோஜன்
2011 – மெய்வன்மை
மாகாணமட்டம்
சட்டவேலி பாய்தல் – முதலாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.

செல்வி சி. ஜெயரஞ்சனி
2011 – மெய்வன்மை – மாகாணமட்டம்
சட்டவேலி பாய்தல் – முதலாமிடம்
நீளம் பாய்தல் – இரண்டாமிடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.






செல்வன் நா. நிலூஜன்
2010 – மெய்வன்மை
மாகாணமட்டம்
சட்டவேலி பாய்தல் – மூன்றாம் இடம்
தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.




**2011இல் வடமாகாண பெருவிளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்ற பெண்கள் எல்லே அணியினர்.**



**2010, 2011 வடமாகாண பெருவிளையாட்டுப் போட்டிகளிலே முதலிடம் பெற்ற பெண்கள் மென்பந்துத் துடுப்பாட்ட அணியினர்.**




**2011இல் வடமாகாண பெருவிளையாட்டுப் போட்டிகளிலே மூன்றாம் இடம் பெற்ற 15 வயதுப்பிரிவு கரப்பந்தாட்ட ஆண்கள் அணியினர்**



**2011இல் வடமாகாண தமிழ்த்தினப் போட்டிகளில் விசேட கூத்து முதலிடம் பெற்ற குழுவினர்.**

# AN IDEAL TEACHER

*Miss.B.Rubini*
*Grade 10A*

A Teacher is the builder of the nation. So he should know the needs of the country. Teachers should make their pupils unselfish. They can do this if they are themselves unselfish.

An Ideal Teacher should not stick to the subject which he teaches. He should be able to take the children away from subject when there is a need. He should teach them the ways of life.

A Teacher should be affectionate. He should understand the problems of the children. If he rules with authority, children will not like him. Children will not take interest in the subject. A child can be won only by the affection not by authority.

A good teacher should never discourage a child. Some children take the criticism of the teacher to the heart. The child loses confidence. Such a child can never make progress in life. If the Teacher encourages him the child will take interest in studies.

Children respect only those teachers who know their subject. So an Ideal Teacher must master his subject thoroughly. If a child does not respect the teacher, the child will not obey him.

An Ideal Teacher should set an example before his students. He should be regular and punctual. He should not do what he expects from the children not to do.

Our nation will be great if teachers and mothers are ideal. Teachers should be able to sacrifice themselves. They should work without selfishness. Teacher's duty is to help and serve.

♣ ♣ ♣

> ➢ ஆர்வம் மிக்கவர்கள் தாங்கள் ஏற்கனவே அறிந்த விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் மேலும் மேலும் விஷயங்களைச் சேகரிப்பதிலேயே மகிழ்ச்சி கொள்வார்கள்.
> Creatures whose main spring is curiosity will enjoy the accumulating of facts for more that pausing at times to reflect on those facts.
>
> **- *Clarence Day***

# ஆவர்த்தன அட்டவணை

*திருமதி க. குலநாயகம்*
*ஆசிரியை*

### பல்லவி

வேதியல் விஞ்ஞான விந்தையின் தாயியல்
பிரித்தானியாவின் பிள்ளையாய் மிளிரும் இரசாயனம் -என்னும் *(வேதியல்)*

### அனுபல்லவி

எண்கூட்டமும் ஏழாவர்த்தனமும் பெற்று
அலோகம் உலோகம் என்று அறிஞரால் பெயர் பெற்ற *(வேதியல்)*

### சரணம்

தோபரைனர் என்ற தோமிலார் மும்மூன்று கூட்டம் ஆக்கினார்
அட்டம சுரவிதி ஆக்கியே நியூலண்டும் ஓர்விதி கூறினார்.
திணிவெண்ணை ஏறுவரிசையிலாக்கி மெண்டலீவ் மெல்லவே சொல்லினார்
அணுவெண்ணை ஏறுவரிசையிலாக்கி மோஸ்கியும் புதுவிதி பேசி *(வேதியல்)*

பன்னீரொன்பது மூலகங்கள் அவற்றின்
பதிவிடம் சொல்வதே ஆவர்த்தன அட்டவணை
எட்டுக் கூட்டத்தைச் சொல்லிடுவோம் விஞ்ஞான
ஏற்றங்கள் கண்டு வாழ்ந்திடுவோம்.

கார உலோகக் கூட்டத்திலே
லிதியம் சோடியம் பொற்றாசியம்
றுபீடியம் சீசியம் பிரான்சியம் என்று
ஆறுபேர் அடுக்காய் வாழுகினம்.

ஈராம் கூட்டம் காரமண் உலோகம்
பெரிலியம் மக்னீசியம் கல்சியம்
மூன்றாம் கூட்டத்தில் ஈரியல்புடைய
அலுமினியம் கலியம் இன்டியம்

நான்காம் கூட்டத்தில் சிலிக்கன் காபன் என்னும்
இராட்சத சாலகம் ஆபரணம்
ஐந்தாம் கூட்டத்தில் பொஸ்பரசு அது
ஆசனிக் அந்திமணி பிஸ்மத் என்றாகும்.

ஒட்சிசன் கந்தகம் அலோகமாய்
செலேனியம் ரெலேனியம் போலிகளாய்
பொலோனியம் உலோகம் ஆகி நின்று
ஆறாம் கூட்டத்தை அலங்கரிக்கும்.

திண்மம் திரவம் வாயுவெனச்
சிறப்புக்கள் கொண்டவர் ஏழாவர்
அலசன் புளோரின் குளோரின் புறோமின்
அயடீன் அஸ்ரரைன்

பூச்சியக் கூட்டமாய் வந்து நின்று
இராச்சியம் செய்திடும் ஓரணு வாயுக்கள்
ஈலியம் நியோன் ஆகன் கிறிப்டன்
செனன் றேடன் எட்டாமவர்.
இத்தனை கூட்டத்தைக் கற்று விட்டால்
இரசாயனம் இனிக்கும் விஞ்ஞானமாம்
அத்தனையும் சொல்லும் வேதியல் இதை
ஆக்கித் தந்த மோஸ்லி வாழ்கவே.

♣ ♣ ♣

# HOW I GET READY TO SCHOOL?

***Miss.C.Chaminy***
*Grade 9A*



SLOWLY SILENTLY NOW THE SUN
SHOW HIS FACE TO THE WORLD
BIRDS MAKES NOICES AND
I WAKE UP BY MY PARENTS VOICES
I GO TO THE WELL TO
TAKE A BATH WELL
I PRAY THE GOD AND
I WEAR THE UNIFORM
I GO TO THE KITCHEN TO
EAT MY BREAK FAST
I WEAR MY BAG
ON MY BACK
I WEAR WHITE SOCKS
WITH TWO COLOUR STRIPS
AND I WEAR
A PAIR OF WHITE SHOES
I SAY GOOD BYE
TO MY PARENTS
THEY GIVE ME
THREE TIMES KISSES
I ALONG THE ROAD
WHILE I WALK
I SING A SONG!

♣ ♣ ♣

# THE IMPORTANCE OF ENGLISH

*Miss. S. Jesintha*
*Grade 10[A]*

A language is a systematic means of communication by the use of sounds or conventional symbols. It is the code we all use to express ourselves and communicate to others. It is a communication by word of mouth. It is the mental faculty or power of vocal communication. It is a system for communicating ideas and feelings using sounds, gestures, signs or marks. Any means of communicating ideas, specifically, human speech, the expression of ideas by the voice and sounds articulated by the organs of the throat and mouth is a language. This is a system for communication. A language is the written and spoken methods of combining words to create meaning used by a particular group of people.

Language, so far as we know, is something specific to humans, that is to say it is the basic capacity that distinguishes humans from all other living beings. Language therefore remains potentially a communicative medium capable of expressing ideas and concepts as well as moods, feelings and attitudes.

A set of linguists who based their assumptions of language on psychology made claims that language is nothing but 'habit formation'. According to them, language is learnt through use, through practice. In their view, 'the more one is exposed to the use of language, the better one learns'.

Written languages use symbols (characters) to build words. The entire set of words is the language's vocabulary. The ways in which the words can be meaningfully combined is defined by the language's syntax and grammar. The actual meaning of words and combinations of words is defined by the language's semantics.

The latest and the most advanced discoveries and inventions in science and technology are being made in the universities located in the United States of America where English language is the means of scientific discourse.

We can make use of English to promote our worldview and spiritual heritage throughout the globe. Swami Vivekananda established the greatness of Indian view of religion at the world conference of religions in Chicago in 1893. He addressed the gathering in impressive English. Many

spiritual gurus have since converted thousands of English people to our spirituality by expressing their thoughts and ideas in masterful English. English has thus become an effective means of promoting Indian view of life, and strengthening our cultural identity in the world.

Generally, Standard English today does not depend on accent but rather on shared educational experience, mainly of the printed language. Present days, English is an immensely varied language, having absorbed material from many other tongues. It is spoken by more than 300 million native speakers, and between 400 and 800 million foreign users. It is the official language of air transport and shipping; the leading language of science, technology, computers, and commerce; and a major medium of education, publishing, and international negotiation. For this reason, scholars frequently refer to its latest phase as World English.

♣ ♣ ♣

- நம்பிக்கை என்பது மெதுவாக வளரும் செடி

  Confidence is a plant of slow growth.

  ***- Earl of chattam***

- பண்பாடு என்பது நாம் அறிந்தவற்றிலும் கேட்டவற்றிலும் உள்ள மிக உயர்ந்தவற்றை அறிவது அதன் மூலம் மனிதப் பண்பின் சரித்திரத்தையும் அறியமுடியும்.

  Culture, the acquainting our selves with the best that has been known and said in the world and thus with the history of the human spirit.

  ***- Arnold.***



# VICTORIA COLLEGE

***Miss. S.Sivananthy***
*Grade 9A*

| | | |
|---|---|---|
| V | - | Victory |
| I | - | Innovative |
| C | - | Creativity |
| T | - | Talented |
| O | - | Originality |
| R | - | Respect |
| I | - | Initiative |
| A | - | Aesthetic |

| | | |
|---|---|---|
| C | - | Communication |
| O | - | Obedient |
| L | - | Loyalty |
| L | - | Leadership |
| E | - | Enthusiasm |
| G | - | Gratitude |
| E | - | Encouragement |

♣ ♣ ♣

# கலாவதி (சிறுகதை)

*செல்வி. க. சிதம்பரபாலினி*
*தரம்* 11A

கலாவதி மூச்சு இரைக்க தனது வீட்டை நோக்கி ஓடிவந்தாள். அதை வீடு என்று சொல்வதை விட சிறு கொட்டில் என்றே சொல்லலாம். ஏனெனில் அதன் தோற்றம் அவ்வாறே இருந்தது. அவள் ஓடி வந்த வேகத்திலேயே படலையைத் தள்ளித் திறந்து கொண்டு பின் வளவுக்குள் நின்ற தாயைப் பார்த்து.

"அம்மா அம்மா இங்க வாங்கோ. நான் என்ன கொண்டந்திருக்கிறன் எண்டு பாருங்கோ" எனக் கூக்குரலிட்டாள். அவளது தாயும் என்னவோ ஏதோ என எண்ணியபடி அவ்விடம் வந்து "என்னத்துக்கு இப்படி உயிர் போறமாதிரி கத்திறாய்" என வினாவினார்.

"அம்மா எனக்கு பாவோதல் போட்டியில மாகாண மட்டத்தில் முதலாம் இடம் கிடைச்சிருக்கு. இந்தாங்கோ.... இந்த சேர்ட்டிபிக்கற்றைப் பாருங்கோவன்... இந்தாங்கோவன் வேண்டிப் பாருங்கோவன்"

"பிள்ளை உதுகளை விட்டிட்டு படிக்கிற வழியைப்பார். நானும் ஏதோ படிப்பில தான் இடம் கிடைச்சிருக்காக்கும் எண்டு நினைச்சன் . கொலசிப்பும் வருது..." என்று கூறிவிட்டு தன் வேலைகளை கவனிக்கச் சென்று விட்டாள். செந்தாமரையைப் போலிருந்த கலாவதியின் முகம் திடீரென வெளுத்தது.

"என்ன? இந்த அம்மா எவ்வளவு சந்தோசமாய் கொண்டந்து காட்டுறன். அதிபர், ரீச்சர் எல்லாம் எப்படி பாராட்டினவை. சேர்ட்டிபிக்கற்றுகள் எல்லாம் பத்திரமாய் வைச்சிருக்க வேணும். வளர்ந்த பிறகு வேலை எடுக்க இவை உதவும் எண்டு சொன்னவை. அட வீட்டில ஒரு பெட்டியும் இல்லை என நினைத்தபடி, மறுபடியும் தன் தாயிடம் வந்து "அம்மா என்ர இந்த சேட்டிபிக்கற்றையும் இதற்கு முதல் எடுத்தவைகளையும் வைக்க ஒரு பெட்டி தாங்கோ" அவளது தாய் "பெட்டி தான் இப்ப இல்லாத குறை. நாங்க இருக்கிற துக்கே அல்லாடுறம் சும்மா அங்காலை போ" என்றாள்.

கலாவதியின் மனம் நொந்தவாறு ஓலையால் வேயப்பட்ட தறப்பாழினால் சிறு அறைபோல் வடிவமைக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்று ஒரு சிறு பாக்கிற்குள் இருந்த சேட்டிபிக்கற்றுகளுடன் இதையும் வைத்தாள்.

"என்ன... இந்த அம்மா இப்படி ஏசுறா?.. ஆனா அம்மா சொல்லுறதும் சரிதான் இந்த வீட்டுக்கே இப்படி சீவியம் நடத்துறது. கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அம்மாவிடம் நான் இப்படிக் கேட்டிருக்கக் கூடாததுதான்" என மனதுக்குள் எண்ணியபடி தன்னைத் சமாளித்துக் கொண்டாள்.

மறு நாள் அவள் பாடசாலை முடிந்து வீதியால் வரும் வேளை வீதியின் ஒரு பக்கத்தில் குப்பைகள் வைக்கப்பட்டி ருந்தன. அதில் ஒரு பழைய சூட்கேசும் இருந்தது. பார்க்க ஓரளவு பரவாயில்லா மல் இருந்தது. கலாவதி அந்தப் பெட்டியை எடுத்துவந்து அதைத் துடைத்து அதிலே தனது சான்றிதழ்களை பக்குவமாக வைத்தாள்.

அன்றிரவு குடித்துவிட்டு வந்திருந்த தன் தகப்பனைப் பார்த்தபடி நின்ற கலாவதி தன் மனதுக்குள் சீ... ஏன் என்ர வாழ்க்கை மட்டும் இப்படி? அப்பா என்னை படிக்கவும் விடுறாரில்லை. என்ர வயதொத்த பிள்ளை களெல்லாம் எப்படி அப்பவோட சந்தோச மாய் இருக்கினம். இவர் காலையில வெளிக்கிட்டுப் போனால் இருட்டின பிறகு குடிச்சுப்போட்டு வந்து நிப்பார்" என எண்ணி வேதனைப்பட்டாள்.

இவள் தினமும் தனது தாயை "ஏனம்மா எங்களுக்கு மட்டும் வடிவான வீடில்லை. வளவில்லை மற்ற ஆக்கள் மாதிரி நாங்கள் இருக்கேலாதோ" என ஏக்கத்துடன் கேட்பாள். தாயும் பதில் கூறாது மௌனமாகி விடுவாள்.

கலாவதியின் தாயும் மகளை ஏசினாலும் இரவிலே அவள் நித்திரை கொள்கையில் அவள் அழகைப் ரசிப்பதும், அவள் வாங்கிய சான்றிதழ்களை இடையில் எடுத்து ஆசையுடன் பார்ப்பாள். ஆனால் அதில் உள்ளவற்றை வாசிக்கத் தெரியாது. பின் மனதுக்குள் "எண்டாலும் என்ர பிள்ளை கெட்டிக்காரிதான். இத்தனை எடுத்து வைத்திருக்கின்றாள். இப்ப இடம்பெயர்ந்து வந்திருக்காட்டி அங்க சொந்த ஊரில சந்தோசமாய் இருந்திருப்பம் கையில உள்ள காசெல்லாம் போனதால தானே உந்தாளும் குடிக்கத்தொடங்கினது. எல்லாம் என்ர விதி" என நொந்து கொள்வாள்.

இவ்வாறு நாட்கள் நகர்ந்தன. கலாவதியும் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிகளை ஈட்டி வந்தாள். ஒரு நாள் அவளது வகுப்பாசிரியர் "பிள்ளை கள் நாளைக்கு கல்வித் திணைக்களத்தில இருந்து அதிகாரிகள் வருகினம். அதால நீங்கள் போட்டிகளில் பங்குபற்றி கிடைச்ச சேட்டிபிக்கற்றுகளைக் கொண்டு வாங்கோ" எனக் கூறினார். இதைக் கேட்ட மாண வர்கள் "எங்களை விட கலாவதியிடம் தான் கனக்க இருக்கு. என்ன ரீச்சர்? அவதான் எல்லாப் போட்டிகளிலும் எடுக்கிறவ. நாங்கள் எங்களிட்ட இருக்கிற இரண்டைத்தான் கொண்டுவர வேண்டும்." என்றனர். இதைக் கேட்ட கலாவதிக்கு தலைகால் புரியவில்லை எப்போது தான் வீட்டை போவேன் என எண்ணியபடி இருந்தாள்.

பாடசாலை விட்டதும் ஒரே ஓட்டமாக வீட்டுக்குச் சென்று தனது ஆசிரியர் கூறியதையும் சக மாணவர்கள் தன்னைப் பற்றி புகழ்ந்ததையும் ஒரே மூச்சாக தனது தாய்க்கு கூறி முடித்தாள்". பின் ஓட்டமாக தன் அறைக்குள் சென்று தன் பெட்டியைத் தேடினாள். அதை ஆவலோடு திறந்தவள்,

ஒரு கணம் திகைத்தாள். அதற்குள் இருந்த அவளது சான்றிதழ்கள் உருக்குலைந்த நிலையில் கறையான்களினால் அரிக்கப் பட்டிருந்தது.

கலாவதி "ஐயோ.... ஐயோ" எனக் கதறினாள். ஆனால் அக்கதறல் அவளது தாயின் காதில் விழவில்லை. ஏனெனில் ஏற்கனவே அரிக்கப்பட்டிருந்த தன் வாழ்வை நொந்தபடி, நாளைய பொழுதினை எப்படி கழிப்பது என்பதை அவள் எண்ணியபடி இருந்தாள்.

*(யாவும் கற்பனையே)*

♣ ♣ ♣

- தன்னம்பிக்கை சாதிக்கப்படுகிறது. பொறுமை மதிக்கப்படுகிறது. சகிப்புத்தன்மை வெற்றி பெறுகிறது.
- நல்லதோ கெட்டதோ அவர்களுடைய செயலின் விளைவுகள் அவர்களிடமே திரும்பிவரும்.
- எப்பொழுதும் அன்பான சொற்களைப் பயன்படுத்துங்கள்; நண்பர்கள் பெருகுவார்கள்.
- அனைத்து மனிதர்களும் நான் நல்லவன் அல்லன் என்ற உணர்வால்; தாழ்வு மனப்பான்மையால் வருந்துகிறார்கள்.
- திக்கல், கொன்னை, ஓரப்பார்வை, இடக்கைப் பழக்கம் முதலிய நுண்தசைக் கோளாறுகள் பெண்களைக் காட்டிலும் ஆண்களில் மிகுதி.
- மனதில் அமைதி நிலைக்கவேண்டுமானால் மனம் வலிமையாக இருக்கவேண்டியது முக்கியம். வலிமைமிக்க மனதில் சஞ்சலத்திற்கு இடமில்லை.
- ஓர் அரக்கனின் பலம் உங்களிடம் இருந்தால் அது அருமையான விஷயந்தான். ஆனால் ஒரு அரக்கனைப்போல நீங்கள் நடந்துகொண்டால் அது கொடூரம்.
- நீங்கள் நீங்களாகவே இருங்கள். இன்னொருவனின் நிழல் ஆகிவிடாதீர்கள். சுயஆற்றல், சுயசிந்தனை உடையவராய் இருங்கள்.
- மனோசக்தியைப் பயன்படுத்தாமலே துருப்பிடிக்கவும் விடக்கூடாது. தவறான வழிகளில் பயன்படுத்தவும் கூடாது.

# THE VALUE OF TEACHERS

*Miss. G.Lavanya*
*Grade 10A*

Teaching is considered as a noble profession. Teachers are the backbone of the society. We can't make civilized, decent society without teachers. A teacher's task is very difficult. He or she has to get up early and prepare his lessons for the day. They hold a distinguished position in the society. They are highly respected not only by the students but also by their parents and others. A teacher has the responsibility of producing good learned citizens. Teachers are directly or indirectly involved in the development of a country. A student spends most his time with the teachers. So he stands the standard of the student and teaches them accordingly. A teacher is like a ladder on which all climb and go to the top. But the teacher remains at the bottom.

The bright future of a student is totally depends on his or her teacher. Many teachers treat their students like their own children. They give good advice and guidance to make them good citizen. In the past, Guru - Syria tradition was maintained. A student performed the house hold chores at Guru's house and learned his lessons.

In the modern world some grown up students do not listen to the advice of the teachers and don't give due respect to them. At the same time some teachers do not take much attention in their work. Their only aim is money making. This type of teachers are unfit to do teachers and they do not teaching have good reputation in the society. A devoted teacher is always respected and revered by his faithful students.

♣ ♣ ♣

- செயல் அறிவினைப் புலப்படுத்த வேண்டும்.
  Action should culminate in wisdom
  **- *Baguuad Gita.***

- பொறுப்புக்கள் மிகுந்தவன் தன் எடை எவ்வளவு என்பதைக்கூட அறிந்திருக்க மாட்டான்.
  A really busy person never knows how much he weights.
  **- *Edgar Watson***

# THE IMPORTANCE OF SUCCESS

*Miss. R. Karthikayini*
*Grade 9A*

All men and women want to be successful but only a few can achieve it. It comes only by hard work and perseverance. If one is not prepared to put in hard work. One shouldn t expect to be successful. Unless one tries, one cannot succeed.

To know the value of time is also important to achieve success. It is said that time is gold. Loss of time means loss of opportunity a part from hard work, a successful person knows how to manage time. Life is short and one must not waste time. There is much to be done and one must make the best use of time.

It is also important to have a direction in life and to know our goal. We should choose our career very carefully. Instead of doing what others want us to do, we should see what interests us and what we are good at. It is important to choose a path and focus on it completely.

Some times, even of one is not very talented; one can succeed through determination and hard work. We have no control over luck or circumstances. But we certainly have control over how much hard work we can put in. We should do our best in every situation and not worry about the result. Usually that takes care of it self.

♣ ♣ ♣

- இருக்கவேண்டிய இடத்தில் இருக்கும் அழகு எல்லாவற்றையும் அழகாக்கும்.
  Beauty kept in its place, makes all things beautiful.
  **- *Santayana***

- ஒருவனின் நடத்தை அவனது உருவத்தைப்பிரதிபலிக்கும் கண்ணாடி.
  Behavior is a mirror in which everyone displays his own image.
  **- *Goeth***

- சில புத்தகங்கள் வெறுமனே ருசி பார்க்கப்படவேண்டியவை. மற்ற சில விழுங்கப்பட வேண்டியவை. மிகச் சில புத்தகங்களே மென்று தின்று ஜீரணிக்கப்படவேண்டியவை.
  Some books are to be tasted, others to be swallowed and some few to be chewed and digested.
  **- *Bacon***

# Mrs. Arunthavachelvy Velupillai

***K. Arunasalam***
*(Former Principal)*

Mrs. Selvi Velupilla, has not only been acclaimed as a good school administrator by her contemporaries and Education Department Officials but has found an important place in the long line of Principals who administered the College during the last one hundred and thirty five years. To assess her importance as a Principal it is necessary to go to the past history of the College. The school had its ups and downs and during Principal Selvi's time it was a story of going up and up.

It is also appropriate to refer to some of the great Principals during its early history who laid strong foundations for the school. One obvious personality was the founder principal Mudaliyar Mackenzie Kanagaratnam. It may be a surprise to many to refer him as the founder principal as the fact was little known. I myself who wrote the history of the college at the request of Mr Sivasubramaniuam patron of the Canada O.B.A left it out. It was because all references to him in contemporary newspapers, magazines and books which I dug out at the Colombo archives did not refer to him as Principal. Now it is confirmed. In fact all the founders of schools prior to 1900 were the Principals themselves of the schools they founded. This was true of William Nevies, father of Nevies Seladurai who was a founder of the school in Mainstreet Jaffna. It was this school, Advocate Nagalingam converted into Jaffna Hindu and shifted to Vannarponnai. It was so not only with Chirstian Schools but Hindu schools as well. Ambalavananavalar who found Vaddcotta, Hindu was its first principal. Kandiah Upathiyar who found Skandarvarodhya and Arunalasa Chattampiyar who found Alaveddy Anunodhya were Principals themselves.

Thus, there is no doubt now that Mackenzie Kanagaratnam was its first Principal from 1876 till 1896. It was in this year he brought Willoughy Small from India to be Principal. He continued as founder manager – He lived to a ripe old age – and handed over the management to his son Chellappah, the great soul who devoted 40 years of his entire life to this job. Kanagaratnam had his education at Batticotta Seminary and studied subjects like English literature, Tamil, Christianity and they say Sidhanada. There is a doubt whether Siva Sithatha was taught a subject but students were made to acquaint this subject as there were great men who knew it, one was Principal Reveran Hoisington. Rev Jebanesan

confirms in this book that Hoisington translated the difficult text of Sidhananda – Sivagnana Potham into English. As a teacher at Jaffna Central also during Arumuganavlar times he would have studied Sidhanda from Navalar. An issue of The Jaffna Central magazine of 1907 refers to Brown Sinathambi the headmaster and Mackenzie when Rev Percival was Principal.

We should remember that although he had a Christian name – Meckanzie he was never a Christian. All students of Batticotta Semenary had to take the name of their Patron, who financially supported them. And he was lucky to find employment at Central, when the principal was Rev Percival who was a liberal and who did not insist on him to be a Christian. But when a new principal came he and the headmaster Brown Sinathamby who too remained a Hindu were asked to take Baptism if they were to continue. But Arumuganavalar would not allow them. Thus they had to give up teaching at Jaffna Central and find new jobs. It was at this time Navalar persuaded both of them to put up Hindu English Schools. Kanagaratnam was able to do so only in 1876. He founded the Chulipuram Hindu English School which became Victoria College in 1899 or so. Kanagaratnam having studied at Batticotta Semenary and taught at Jaffna Central was eminently fitted to be principal there. He was successful principal too. He attracted all the Hindu students – maybe small in number – who wanted to study through the English medium in the higher classes in Jaffna district. Thus he made his school the leading Hindu school in the island then.

His successor Willoughy Small who was a Cambridge university graduate and had studied in a public school in England. He wanted to make Victoria also a public school like ETON rugby or Harrow and introduced features found in a public school – House Captains, assemblies, examinations, journal (Victoria) and even cricket. The Jaffna Hindu Centenary Magazine says that they played a cricket match with Victoria in 1899 or so. His character certificates were considered more valuable than the London Matriculation Certificate and found employment for many in Malaysia.

But his successor Saiva Periyar Sivapadasundram upset the public school system. He introduced the guru shisya system as found the Nalantha University of ancient times. This way he was able to make his students to go to great heights in life both in Sri Lanka and in Malaysia. His students worshipped him as Guru throughout their lives. Those in Sri Lanka included C Logonathan (World Bank), Namashivayam, N Saban former principal Jaffna Hindu, Krishna Pillai former principal Union College, Register Chinnyah and many more.

These early principals were a class by themselves. They were great intellectuals who achieved fame in life and served humanity in other ways too. It is not fair to compare Principal Selvy with them. They lived in an entirely different time when the schools expectations were totally different.

But considering the school administration of the other principals during whose time the school went "up." Principal Selvy was not second to any of them. Her achievements were as great as that of any previous Principal who belonged to the group who put the school "up." There was all round development during her time, with the help of Alumini Associations and also grants from the Government she acquired lands and put up buildings. As far as examination results were concerned it was I who for the first time send students in numbers to the Universities, and during her period the students who entered the Universities were many more. It was I who made two teams to be district champions in Soccer for the first time in the school's history but failed badly in cricket. Selvy was able to make the girls Cricket team district champions in cricket and they just missed the all Island championship. Cricket is considered the game of elite schools and this makes Victoria to come in line with the leading schools in the island. Thus during her time there was progress in all activities and this gives her a very important place in the history of Victoria College.

She has now retired with the satisfaction of having done her best for the school. We must also thank her husband Mr. Vellupillai for giving her all support. I wish her a long and happy retired life.

## Mr. V. Srikanthan

I am very happy that Mr V Srikanthan has taken up duties as principal of Victoria. I knew him when he was a teacher there. I was then principal. I found him to be a very good teacher. He was very efficient. He was hard working and devoted to his work. He was very much interested in the development of the school he gave me cooperation.

At Sandilipay Hindu he proved himself to be a good principal. That school progressed in every was during his tenure as principal. That school community loved him and would not allow him to come over to Victoria. I am glad that he listened to my advice and made the right choice. The school community of Victoria will give him all support. I am sure he will be a good principal here just as he was a good teacher. Definitely he will also find an important place in the long line of principals who served this institution. I wish him well.

♣ ♣ ♣

# நன்றிகள்...

எமது கல்லூரியின் நூற்று முப்பத்தைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தச் சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றது. இம்மலர் வெளியீட்டிற்குக் காரணமான அனைவரையும் நினைவு கூர்ந்து நன்றி தெரிவிப்பது முக்கியமானதாகும்.

வாழ்த்துக்களை வழங்கி வாழ்த்திய பெரியோர்களுக்கும் மலரினை மெருகூட்டுவதற்கு ஆக்கங்களைத் தந்துதவிய அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் –

ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா அலுவலர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், முன்னாள் அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் –

இம்மலர் சிறப்புடன் வெளிவருவதற்கு அகமகிழ்ந்து வாழ்த்துக்களையும், விளம்பரங்களையும் உவந்தளித்த பெருந்தகையோர்க்கும் –

பல்வேறு வேலைப்பளுக்கள், இடர்கள் என்பவற்றிற்கு மத்தியில் இம்மலரினைச் சிறப்பாக வடிவமைத்து உரிய காலத்தில் தந்துதவிய **ANDRA** நிறுவன உரிமையாளர், அங்கு கடமையாற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் –

குறிப்பிடவேண்டிய ஆனால், குறிப்பிடத்தவறிய, குறிப்பிடத்தக்க பெருமக்கள் அனைவருக்கும் மலர்க்குழு சார்பில் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மலர்க்குழு**
யா/ விக்ரோறியாக் கல்லூரி.



ச்
ம்

கு

ர்,
ல
ன்

ம்,

ச்
கு

ள்
க்

ழு
ரி.

ANDRA Printers T.P 021 2228929